
AR
461

ஸ்ரீ

ஸ்ரீ பேரருளாளன் அருளிச் செயல் கைங்கர்ய சபை


காஞ்சீபுரம்-3



அஸ்து ஸ்ரீஸ்தாகஸ்தூரீ வாஸாவாலிதோரஸே
ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்:

ஆண்டு மலர் – 1986

With best compliments from



BENGAL MARINES (P) LTD

41, Venkatanarayana Road,

T. Nagar, Madras-600 017.

ஸ்ரீ

To

Mr. M.N. Krishna
moorthy Bl
14, Embar Naidush
Villivakkam

From

P.B.R. Varadhy

பேரருளாளன் பெருந்தேவித்தாயார்

திருவடித் தாமரைகளில் இம்மலரினை பக்திபூர்வகமாக

சமர்ப்பிக்கின்றேம்.


ஸ்ரீ

With best compliments from

BENGAL MARINES
(P) LTD
41, Venkatanarayana Road,
T. Nagar, Madras-600 017.

ஸ்ரீ





திவ்யாவயவ ஸௌந்தர்ய திவ்யாபரண ஹேதயே
தந்தாவல கிரீசாய தேவராஜாய மங்களம்.

ஸ்ரீ பேரருளாளன் அருளிச் செயல் கைங்கர்ய சபா

காஞ்சிபுரம்.



மங்களாசாஸனம்



ஸ்ரீ :

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீவானமாமலை
ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மங்களாசாஸனம்

இக்காலத்திற்கு எந்தவிதமாயுள்ள பொதுக்காரியங்களுக்கும் ஸபை தேவையாகவே உள்ளது. அதிலும் திவ்ய தேசங்களில் எம்பெருமான்களுக்குக் கைங்கர்யங்கள் செய்வதற்கு ஸபை அத்யாவசியமாக உள்ளது. எம்பெருமான்கள் தங்களுடைய பலவிதமாயுள்ள கைங்கர்யங்களுக்கு இக்காலத்தில் பலரைத் திருவுள்ளம் பற்றினாலும் திவ்ய பிரபந்த மங்களாசாஸனத்திற்கு தாம் ச்ரோதாவாய், மணவாள மாமுனிகளை வக்தாவாக நியமித்து ஒரு ஸம்வத்ஸரம் திவ்ய பிரபந்தங்களை பரிகரங்களோடு திருச்செவி சாற்றியருளி அதற்கு ப்ரத்யுபகாரமாக "ஸ்ரீசைலேச" தனியன் அருளிச் செய்து மணவாள மாமுனிகளை ஸத்கரித்தார். அந்த எம்பெருமானுடைய பரம கிருபையினாலே எங்கும் எல்லா க்ஷேத்ரங்களிலும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களைக் கொண்டே திவ்ய பிரபந்தம் திருச்செவி சாற்றுகிறார். அந்த பாக்யம் நமக்கே உள்ளது. அதைக் காப்பாற்றி அவனுடைய கிருபைக்கு பாத்ரர்களாக ஆகக்கடவோம். மேலும் அபிவிருத்திக்காக பாடசாலையும் அவச்யம், பேரருளாளன் முதலான எம்பெருமான்கள் திருவுள்ளம் உகந்து, கடாக்ஷித்து மேற்படி ஸபையை விசேஷ த்ரவ்யம் உடைத்தானதாக கிருபை செய்து, மேற்படி கைங்கர்யங்களையும் திருவுள்ளம் பற்றியருள வேணும் என்று பிரார்த்திக்கிறோம். ஆஸ்திகர்கள் அனைவரும் மேற்படி சபைக்கு தங்களாலான திரவ்ய சகாயங்களைச் செய்து, எம்பெருமான் கிருபைக்கு பாத்ரர்களாகவேணும். பேரருளாளனும் இந்த ஸபையின் நிர்வாகஸ்தர்கள் இதில் பங்கு கொள்ளுமவர்கள் மற்றும் அனைவருக்கும் ஆயுராரோக்யாதி எல்லா ஸ்ரேயஸ்ஸுக்களையும் அருளவேணுமென்று எம்பெருமானை பிரார்த்தித்து நாமும் மங்களாசாஸனம் பண்ணுகிறோம்.

வேணும் மங்களாசாஸனம்

சுபமஸ்து

ஸ்ரீ ராமானுஜன்

வானமாமலை
அக்ஷய வருஷம்
ஆவணி மாதம்
22—8—86

மங்களாசாஸனம்





ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருக்குறுங்குடி ஸ்ரீ பேரருளாள ராமானுஜ ஜீயர் ஸ்வாமி மங்களாசாஸனம் :

ஸர்வேச்வரனை நோக்கி அனந்த விரதம் நோற்று பெற்றவர்களைப் போலன்றிக்கே நம்பியை யாஸ்ரயித்தாயிற்று இவரை பெற்றது. " உடைய நங்கையார் நம்பியை யாஸ்ரயித்து ஆழ்வாரை திருவயிறு வாய்த்தார் என்று ப்ரஸித்தமிறே " என்று, திருவாய்மொழி ஈட்டில் ஸ்ரீ ஸ்வாமி நம்பிள்ளை அருளியிருக்கிறார். அதன்படி ஸ்ரீ ஸ்வாமி நமமாழ்வாராக அவதரித்தவர் நங்கள் கோல தென்திருக்குறுங்குடி வைஷ்ணவ நம்பியே.

ஸ்வாமி ஆழ்வாராக அவதரித்து பகவத் விஷயமான திருவாய்மொழி முதலான நான்கு பிரபந்தங்களை " தானே அருளிச் செய்தார் " மற்றுமுள்ள ஆழ்வார்கள் ஸ்ரீ ஆண்டாள் போல்வார்கள் அருளிய அருளிச் செயல்கள் மறைந்து போயிருந்ததை ஸ்ரீமந் நாதமுனிகள் பிரார்த்தனையைக் கேட்டு திருவுள்ள முகந்து ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வாரான திருக்கோலத்தில் எல்லா அருளிச் செயல்களையும் " நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் " என்றபடி நாலாயிரத்தையும் அருளினன். இப்படி அருளிச் செய்தவன் பேரருளாளனை நம்பியே !

இவ்விதம் இருந்தும் " ஈன்ற முதல்தாய் சடகோபன்-மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன் " என்றபடியுள்ளவரான இராமானுசன் பக்கல் பேரருளாளனை தென்குறுங்குடி நம்பியும், பேரருளாளனை ஸ்ரீ தேவப் பெருமாளும் ஸச்சிஷ்யர்களாக நின்று ஆட்செய்தார்கள் என்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மிகவும் ப்ரஸித்தம்.

மற்ற திவ்ய தேசங்களில் அருளிச் செயல்களும் கோஷ்டிகளும் எவ்விதம் நடந்து வந்தாலும் ஸ்ரீ தேவாதிதேவனை தேவப் பெருமாள் நித்திய வாசம் செய்யும் கச்சி அருளிச் செயலுக்கும் கோஷ்டிகளுக்கும் முதன்மை இடம் பெற்றது பிரஸித்தம்.

இப்படியுள்ள அருளிச் செயலின் நித்திய கைங்கர்யத்துக்கு காலதேசத்தை அநுசரித்து சம்பாவனை செய்து வருகிறதும் மேற்கொண்டும் நிரந்தரமாக சம்பாவனை செய்ய வேண்டும் என்ற எண்ணங் கொண்டும், இவையவர் பலராலும் பெரியவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டுவரும் சபையின் கைங்கர்யத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களால் மிகவும் போற்றப்படும் ஸ்ரீ தேவப் பெருமாளும் பெருந்தேவித் தாயாரும் மிகவும் உகப்பர்கள் இப்படிப்பட்ட அருளிச் செயல் கைங்கர்ய சபை மேலோங்கி அருளிச் செயல்களையும், அதன் கோஷ்டிகளையும் திவ்ய தேசங்கள் பூராவும் பரவச் செய்து கைங்கர்ய ஸ்ரீயைப் பெற்று சபை ஓங்கி வளர வேண்டும் என்று பேரருளாளனை ஸ்ரீவைஷ்ணவ நம்பியின் திருவடிகளில் பிரார்த்தித்துக் கொண்டு மங்களாசாஸனம்.

திருஜீயர் மடம்
திருக்குறுங்குடி
7—9—86

ஸ்ரீ ராமானுஜன்



மங்களாசாஸனம்

ஸ்ரீ :

ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி
ஸ்ரீ கோவிந்த ராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி
மங்களாசாஸனம்

'ஸ்ரீ பேரருளாளன் அருளிச் செயல் கைங்கர்ய ஸபை' பெருமாள் கோவிலில் நிறுவப்பட்டுள்ளதென்றும், தேவப் பெருமாளுக்கு அருளிச் செயலோதும் கைங்கர்யத்தைச் செய்து வருகின்ற அத்யாபக ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸத்காரம் செய்வதும், மேன்மேலும் அத்யாபகர்களை உருவாக்க உதவி செய்யும் வகையில் திவ்யப்ரபந்த பாடசாலை ஒன்றை நிறுவி நடத்துவதும் இச்சபையின் உத்தேச்ய மென்றும், இவையிரண்டும் முடிந்த வரையில் ஒரு வருஷ காலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றனவென்றும் ஸபையின் காரியதரிசி யான ஸ்ரீமான். கோ க.அ. அந்தாழ்வான் நமக்குத் தெரிவித்துள்ளார். இது கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

பெரும்பாலும் மற்ற திவ்ய தேசங்களில் நித்யப்படிக்கு உதவ, நித்யாநுஸந்தாநம மட்டும் அதிகரித்த அத்யாபகர்களே போதும். தேவப்பெருமாளுக்கு 'அருளிச் செயற்பித்தன்' என்னும் திருநாமம் பிரசித்தமாக அமைந்துள்ளதற்கு ஏற்ப அவர் ஸந்நிதியில் தினந்தோறும் நாலாயிர க்ரமத்தில் திவ்யப்ரபந்த ஸேவை தொன்று தொட்டே ஏற்பட்டுள்ளதனால் நாலாயிரமும் வல்ல அத்யாபக ஸ்வாமிகள் பலர் இங்கு நித்யப்படிக்கே இன்றியமையாமல் தேவைப் படுகிறார்களென்பது தனிப்படச் சொல்ல வேண்டுவதொன்றல்ல

ஆகையால் அத்தகைய அத்யாபக ஸ்வாமிகள் பலர் உருவாகும் படியும், அதற்கு வேண்டியவளவில் நிதியுதவியைப் பெற்று இச்சபை தனது குறிக்கோள்களைச் செவ்வனே நிறைவேற்றுமபடியும், அர்த்திகார்த்த பரிதான தீக்ஷிதரான பேரருளாளப் பெருமாள் பேரருள் புரிய வேணுமென்று, திருவேங்கடத்துறை செல்வனுடைய பூவார் கழல்களில் பணிந்து வேண்டி நிற்கிறோம்.

திருமலை
24-8-86

ஸ்ரீ ராமாநுஜ :



ஸ்ரீ :

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ காஞ்சி வாதிகேசரி
அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமி
மங்களாசாஸனம்

மங்களாசாஸனம்

CAMP : HUBLI
18-8-86

MESSAGE

Prayers to Lord Pranathartihara of Sri Hastisaila

MAY SWEET LORD BLESS
THE SUCCESS OF SRI
ARULICHEYAL AND THE GOSHTI
AS WELL AS THE KAINKARYA
SREE THROUGH SOUVENIR
NITYASREE & NITYA MANGALAM.

மங்களாசாஸனம்





ஸ்ரீ :

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீயதிராஜ ஜீயர் ஸ்வாமி மங்களாசாஸனம்

நமஸ்தே ஹஸ்திசைலேச ஸ்ரீமந் அம்புஜலோசன
சரணம் த்வாம் ப்ரபன்னஸ்மி ப்ரணதார்த்திஹராச்யுத.

ஆழ்வார்களின் அமுதமான அருளிச்செயலின்
அத்புதரக்ஷணை நிரந்தர சபையின்
ஓராண்டு பூர்த்திக்கு ஒரு மங்களாசாஸனம்.

பர, வியூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரத்துள் நாம் இவ்வுலகில் அனுபவிக்க ப்ராப்தமாவது அர்ச்சாவதார மொன்றே. அவ்வர்ச்சை திருமேனிகள் எண்ணிறந்தன வாகிலும் கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் என்றன்றே வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. பரத்வத்தை வேதமும், வியூஹத்தை ஸ்ரீ பாஞ்சராத்ரமும், விபவத்தை இதிஹாசங்களும், அந்தர்யாமித்வத்தை ஸ்ம்ருதிகளும் பேசுகின்றன. அர்ச்சாவதாரத்தை அனுபவிக்க ஆழ்வார்களது திவ்யப்ரந்தங்களே பேருதவி புரிகின்றன. எனவே திவ்யப் பரபந்தங்கள் அர்ச்சாவதார வேதமென்று குலாவப்படுகின்றன. ஆயின் கோயில், திருமலை, பெருமாள் கோயில் இம்மூன்று திவ்ய தேசங்களுள்ளும் நம்மாழ்வார் முதற் பிரபந்தத்தின் (திருவிருத்தத்தின்) முதற்பாட்டில் "இமையோர் தலைவா" என்றும், சரமப்ரபந்தமான திருவாய்மொழியின் முதற் பாட்டில் "அமரர்களதிபதியென்றும்" தேவப்பெருமாளை யன்றே பரவினர். "துயரறுசுடரடி" பேரருளாளனுடைய திருவடியே என்றன்றே மேலும் அவர் பாடினர். இத்தகு பெருமை வாய்ந்த தேவப்பெருமாள் அருளிச்செயலில் ஆசையுடையவனென்றும், பரமரஸிகனென்றும் நம்முடைய பூர்வர்கள் சொல்லிப் போந்தார்கள். அருளிச்செயல் இசையிலே மகிழ்ந்தன்றே அருளாளன் எம்பெருமானரை திருவரங்கர்க்குத் தாரை வார்த்து, தர்சனத்தை ரக்ஷித்தான். எம்பெருமானரும், "ஏவிக்கூவிப் பணிகொள்ள வேணும்" என்று தம்முடைய மடத்தை இடித்துத் தள்ளிவிட்டு வந்து திருவடிகளிலே விழ்ந்த சிறுமாமனிசரான அருளாளப் பெருமாள் எம்பெருமானுர்க்கு, அவரை சிஷ்யனுக்கித்தந்த தம்முடைய நித்ய திருவாராதனத்தில் எழுந்தருளியிருக்கும் பேரருளாளனுக்குத் தாம் புரிந்து வந்த திருவாராதன கைங்கர்யத்தையன்றே கொடுத்தார்!

எம்பெருமானுரைக் காத்து, ரக்ஷித்து, அவரது பக்கல்துணை நின்ற பேரருளாளனது பெருமை பேசப்புக்கால் அது பாரதமாம். அவனது சன்னிதியில் அருளிச்செயல் புரியும் கைங்கர்யம் சாலவுழகியதன்றே! பகவதனுபவ வைகல்யம் பிறந்தால் ப்ராயச்சித்த ஸாத்யமன்று என்றன்றே ஆழ்வானும் அருளினார். பகவதனுபவம் அருளிச்செயலைக் கொண்டேயன்றே அனுபவித்தல் வேண்டும். அருளிச் செயலை ஓதி ஓதுவித்தல் வேண்டும் என்றன்றே எம்பெருமானுரும் தம் அந்திம தசையில் கட்டளையிட்டது. இப்படிப்பட்ட அருளிச்செயலனு சந்தானம் தேவப்பெருமாள் சன்னிதியிலே குறைவற நடைபெற்று வந்தாலும் பின்னுரும் அனுபவிக்கவேண்டும் என்ற நல்ல நோக்கங்கொண்டு சபையொன்று ஏற்படுத்தியதில் பரமானந்தம் அடைகிறோம். பகவதனுபவத்தோடு பாகவத கைங்கர்யமும் புரிய வேண்டும் என்று பேரவா கொண்டு காலதேச வர்த்தமானங்களின் பலனுகத் தம்மால் நித்யப்படியிலே அந்வயிக்க முடியாவிட்டாலும், பலனை எதிர்பாராது கைங்கர்யம் புரியும் அத்யாபகர்களுக்கு கிஞ்சித்காவது ஸம்பாவனை மூலம் கௌரவிக்க முயன்று வருவது கண்டும் பேருவகை அடைகிறோம்.

ஓடித்திரிந்து, பாடிப்பரவிய ஆழ்வார்களின் அமுத வெள்ளத்தை நம் சிறார்களுக்கு இள வயதிலேயே ஊட்டி, கைங்கர்யத்திற்கு ஆளாக்க வேண்டுவது நம் கடமையென்றுணர்ந்து திவ்யப்ரபந்த பாடசாலையொன்றும் தொடங்கி நடந்து வருவது கண்டு மகிழ்கிறோம். ஸ்தனங்கள் இல்லாத ஸ்த்ரீகளைப் போலே காணும் ஊமையல்லாத வைஷ்ணவன் அருளிச் செயலில் அந்வயியாதொழிகை என்றிறே ஆச்சான்பிள்ளையும் அருளியது. ஊமையல்லாத வைஷ்ணவன் அருளிச்செயல் அனுசந்தானத்திலே அந்வயியாதொழிகை எம்பெருமான் அனுபவிக்கத் தகுதியற்றவனுகி விடுகிறனே!

கடைசியாக ஒரு வ்ருத்தாந்தத்தைக் விக்ஞாபித்து முடித்துக் கொள்கின்றேன். நம்பிள்ளை தேன்கொள்சோலை தாஸருடைய திருமாளிகையிலே ஐஸ்வர்யத்தைக் கண்டு ப்ரீதராயிருக்க "இதுக்கு அடியென்?" என்று யதிராஜதாஸர் நம்பிள்ளையை வினவ, நம்பிள்ளையும்—இந்த ஸம்ஸார ஸுகந்தான் மூன்று வகைப்படும்— ஸம்ஸாரத்தில் ஐஸ்வர்யத்தைக் கொண்டு அடையும் இன்பம் மூன்று வகைப்படும்.

1. இவ்வின்பத்தை தனக்கு என்று நினைத்து அனுபவிப்பது—இதனுல் அவனுக்கு ஆத்ம நாசமே விளையும். இது நரகானுபவத்தை ஒத்தது.
2. ஐஸ்வர்யத்தை தனக்கும் எம்பெருமானுக்கும் என்று நினைத்து அனுபவிப்பது-சிறு துளி விஷம் கலந்த பாற்குடம் போலே, தனக்கு என்னும் அஹங்காரம் கலந்திருக்கையாலே "ஸ்வர்க்கேऽபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி: (வி. பு. 6-5-50) எனப்பட்ட ஸ்வர்க்க ஸுகத்தைப் போன்றது. புண்ணியம் குறையக் குறைய ஸ்வர்க்க சுகமும் இழந்து விடுகிறோம் என்று கவலைப்பட்டுக்கொண்டே அந்த ஸ்வர்க்க ஸுகத்தையும் அனுபவிக்க முடியாவண்ணமிருப்பது.
3. எம்பெருமானுக்கும் அவனடியார்களுக்குமே என்று எண்ணிச் செல்வத்தைப் பயன் படுத்துவது ஆத்மாவை உய்விப்பதாகையாலே குறை சிறிதுமில்லாமல் பரமபதத்தில் பரார்த்தானுபவ கைங்கர்யங்களையடையவதை ஒத்தது—என்று அருளிச்செய்தார்.

ஆக நம்முடைய செல்வம் எம்பெருமானுக்கும் அவனடியார்களுக்குமே என்றெண்ணி இச்சபையை ஆரம்பித்து நடத்தி வருபவர்களுக்கும், அதற்கு ஸகலவிதத்திலும் உசாத்துணையாக இருந்து வருபவர்களுக்கும் இச்சபை தனது ஒராண்டு மலர் வெளியிடவிருக்கும் சமயத்தில் அடியேன் தலையல்லால் கைமாறிலேன் என்று ஸவிநய விக்ஞாபனம்.

அருளிச்செயல் கைங்கர்யம் சிறந்தோங்கவும், அருளிச்செயல் வல்லார்கள் உருவாகவும் பாடுபடும் இச்சபை மேலும் வளர்ந்து தனது பணியில் வெற்றிபெற யானுய்த் தன்னைத்தான் பாடிய பேரருளாளன் பெருந்தேவித் தாயார் அருள்பாலிக்க வேண்டி "தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் பூண்டவன்பாளன் இராமானுசனது திருவடிகளைத் தலைமேற் கொள்கிறேன்.

அனேக மங்களாசாஸனங்கள்.

ஸ்ரீ வரதயதிராஜ ஜீயர்
ஸ்ரீ யதிராஜ ஜீயர் மடம்
மடாதிபதி.
ஸ்ரீ பெரும்பூதூர்.

With best compliments from

RELIANCE INDUSTRIES LIMITED

Manufacturers & Processors of :

Knitted & Woven Fabrics

&

Polyester Filament Yarn

" VIMAL " is the Registered
Trade Mark of

RELIANCE INDUSTRIES LIMITED

Registered Office :


3rd Floor, MAKER CHAMBER IV.
222, NARIMAN POINT
BOMBAY - 400 021
INDIA



The power that keeps you moving

Lucas Battery

Lucas Indian Service Limited
6 Patullo Road, Mount Road, Madras 600 002.
Branches: Bangalore . Bombay . Calcutta . New Delhi . Guwahati . Kanpur
Patna . Jaipur . Ahmedabad Bhubaneshwar . Hyderabad . Indore . Jalandhar . Pune



Fresh and glowing with new Hamam!

Discover the magic of new Hamam.
The soap your family has always loved.
Now with more freshness and glow than ever before.
Breathe in its soft, fresh new fragrance.
Enjoy its rich, luxurious lather.
New, evergreen Hamam.
For the fresh and glowing feeling..

HAMAM
The family soap.

Rich, creamy lather. Fresh, lasting fragrance.

A TATA PRODUCT

CLARION/B/T/11/103

GRAMS : 'GREENBIRD'

Phone : Off. 27571, 20744, 29577
Res : 841598

A. V. KANNIAH NAIDU & CO.,

(Licensed Custom House Agents L. No. R. 24)
SHIPPING, CLEARING & TRANSPORTING AGENTS

Office :
180, N.S.C. Bose Road,
MADRAS-600 001.

Residence :
3, Thandavaraya Mudali St,
Triplicane, MADRAS-600 005.

WITH BEST COMPLIMENTS FROM :

Talbros Automotive Components Limited

Manufacturers of :
GASKETS AND SHIMS
AUTOMOTIVE & INDUSTRIAL APPLICATIONS
22 B. SIDCO INDUSTRIAL ESTATE
AMBATTUR, MADRAS - 600 098

Phone : 652778, 652773, 653699
Telex : 41 - 6349 TACL IN
Grams : 'GASKETS' MADRAS.

With best compliments from

BIMETAL BEARINGS LIMITED

232, Race Course Road,

COIMBATORE - 641018

CLEVITE

Manufacturers of Thinwall Engine
Bearings Bushings and Thrust Washers

MADRAS ★ COIMBATORE ★ HOSUR



Compliments from

SRI A. K. SINGARACHARIAR

Triplicane



ஸ்ரீ :

கைங்கர்யஸ்ரீ

காஞ்சிபுரம் ஸ்ரீ பேரருளாளன் அருளிச்செயல் கைங்கர்யசபையின் தலைவன் என்ற முறையில் இச்சஞ்சிகை நிறுவப்பட்டதன் அவசியத்தை அன்பர்களுக்குச் சுருக்கமாய் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வைணவ திவ்ய தேசங்களுள், சார்வ பௌமரான எம்பெருமானாரால் கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் ஆகியவை விசேஷமாகப் போற்றப் பட்டது. இவற்றினுள்ளும் ''தென்னத்தியூர் கழலிணைக் கீழ் பூண்ட அன்பாளன்'' என்று பெயர் பெற்று தமிழ் வேதமாகிய அருளிச்செயலை சம்ரக்ஷித்த இதத்தாய் ராமாநுசன், உகந்து கைங்கரியம் செய்த திவ்யதேசம் காஞ்சிபுரியாகிய பெருமாள் கோயில்.

வேதமே எம்பெருமானைக் காணுமல் ''யதோ வாஸோ நிவர்த்தந்தே: அப்ராப்ய மனஸா ஸஹ'' என்று திரும்பிவிட்டது. இதையே கலியனும் பார்த்தன் பள்ளி எம் பெருமானைப்பாடும் பதிகத்தில் ''நான்மறைகள் தேடி என்றும் காண மாட்டாச் செல்வ னென்றும்'' என்று பாடா நின்றார். ''பேரருளாளன் பெருமை பேசக் கற்றவனு'' கிய கலியனே இங்ஙனம் அருளிச்செய்ய, என் போன்ற மந்தமதிகள் அவ்வாறு இழியப்புக் கால் சுழலிலே மாட்டி ஒருக்காலும் கரை ஏற ஒண்ணுது.

இவ்வாறு ''உயர்வற உயர்நலம் உடையவனுகிய அயர்வறும் அமரர்கள் அதிபதி யாம்'' பேரருளாளன் திவ்யபிரபந்தத்தின்பால் கொண்ட ஈடுபாடு நாம் சொல்லி அறியவேண்டியதில்லை. அவ்வாறுன ஈடுபாட்டினுலன்றே, அரங்கன் அனுப்பிய அரையரின் அருளிச்செயலின்பால் ஆருக்காதல் கொண்டு எம்பெருமானரை தியாகம் செய்ய, தியாக மண்டபம் என்ற பெயர் இந்த திவ்ய தேசத்திற்கு வந்து புகுந்தது.

இத்துணை சிறப்பு வாய்ந்த அருளிச்செயல் பெருமையைப்பற்றி மாமுனிகள் பரக்கப் பேசியபின் வேறொருவர் இவ்விஷயத்தில் இழியப்புகுதலும் ஸாகஸமே.

ஆக பேரருளாளன் பெருமை பேசவோ, அருளிச்செயல் பெருமை பேசவோ இயலாதாகையால் சபையின் கைங்கர்ய விஷயத்தைக் குறித்து எழுதப்புகுகிறேன். மய்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச்செயலில் மயங்கிய தேவராஜனின் இத்திருச்சன்னிதியில் திவ்யப்ரபந்த கோஷ்டியின் பெருமையும் சொல்லிற்கடங்காது. "கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்று அருளிச்செயல் வேறு எந்த திவ்யதேசத்திலுமில்லாத அளவு அசாதாரணப் பொலிவோடு இங்கு விளங்குகின்றது.


"மெய்யடியார்தம் ஈட்டம் கண்டிடக்கூடுமேல் அது காணும் கண் பயனுவதே" என்றும் "சேறுசெய் தொண்டர் சேவடி செழும் சேறு என் சென்னிக்கணிவனே" என்றும் குலசேகரருரைத்தனபோலும், "கூறிய நூலோதி வீதி வாழியென வருந்திரளோ வாழ்த்துவார்தம் மலரடி என் சென்னிககு மலர்ந்த பூவே'! என்றுரைத்ததுபோலும் எம்பெருமானே மங்களாசாஸனம் செய்து பல்லாண்டிசைப்பார் நம்போல் சேதனருக்கு பரம உத்தேஸ்யர் ஆவர், அவர்கள் பக்கல் கிஞ்சித்தேனும் சம்பந்தம் கொள்வது பரம உத்தேச்யமாகும். மேலும் பகவத் கைங்கர்யத்தைக் காட்டிலும் பாகவத கைங்கரியமே விசேஷமானது என்கிறபடியால் "உன் தொண்டர்கட்கே அன்புத்திருக்கும்படி" என்று பல்லாண்டு பாடுவார்க்கு இயன்றளவு சௌகர்யம் செய்யவேணும் என்று நினைத்து இச்சபை துவங்கப்பட்டது.


இவ்வாறான நோக்கத்தில் செயல்படுகையில் பாகவதர்களுக்கு அநேகவிதமாக தொண்டு செய்யலாமெனினும் அனைத்திற்கும் முதன்மையாக செய்யக்கூடியது லௌகீகமான அர்த்த ஸாதனமே. பிற ஜீவனோபாயமெதையும் கொள்ளாது, இக்கைங்கரியத்தினிலேயே ஈடுபட்டிருக்கும் இறையடியார்க்கு யதாசக்தி அர்த்தோபாயமாக உதவிசெய்ய இச்சபை பிரயத்தனப்பட்டு வருகிறது. தவிரவும் கலியின் கொடுமையாலும், ஜீவனோபாயம் தேடியும் அன்பர்கள் பலர் வெளியூர் போய்விட்டதால், விசேஷ உதஸவாதிகளைத் தவிர நித்தியபடி கைங்கரியத்திற்கு லோபம் வந்துவிடுமோ என்று அஞ்சி இளஞ்சிறுர்க்கு அருளிச்செயலில் பயிற்சியளிக்க ஒரு பாடசாலை நிறுவப்பட்டு, அவர்களுக்குச் சிறுகச்சிறுக அருளிச்செயல்களில் ஆஸக்தை உண்டாக்க வழி செய்யப்பட்டு, விசேஷ சமயங்களில் யாதோசிதம் சம்பாவயுஷம் செய்யப்பட்டு வருகின்றது.

இங்ஙனம் பல்லாண்டு பாடுவார்க்கு அநேக தொண்டு செய்யவேணுமென கடலினும் பெரியதாய் அவா இருப்பினும், லௌகீகார்த்தம் ஸம்பந்தப்பட்ட விஷயமாகையால் சிறுகச்சிறுகவே நம் நோக்கத்தைப் பூர்த்தி செய்யமுடிகிறது. இத்தகைய ஒரு கைங்கரியம் உறுப்பினர்கள் சந்தாவினுல் மட்டுமே நிறைவடையாதாகையால் தரும சிந்தையுடைய தனிகர்களும், தர்மஸ்தாபனங்களும், மடாதிபதிகளும் இயன்ற அளவு நிதி வழங்கினுல், அதன் மூலம் ஒரு நிரந்தர வைப்பு உண்டாக்கி, அதனின்று கிடைக்கும் வட்டியையும் இக்கைங்கர்யத்திற்கு பயன்படுத்தலாம். நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

ஆஸ்திகர்கள் இக்கைங்கர்யத்திற்கு இயன்ற அளவு சகாயித்து பேரருளாளன் அருளுக்குப் பாத்திரமாகும்படி பிரார்த்திக்கிறேன். தேவபிரான் அறியும் என்றும் அவனே பூர்த்திசெய்வன் என்றும் நிர்பரோ, நிர்பயோஸ்மி என்று அவனிடம் ஒப்படைத்து நிற்கின்றேன்.

T. E. S. R. **லக்ஷ்மி நரஸிம்மாச்சாரியார்**
தலைவர்.
ஸ்ரீ பேரருளாளன் அருளிச்செயல் கைங்கர்ய சபை.
காஞ்சிபுரம்.





ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

பட்டு ஜரிகை சேலைகள், பாவாடை, சோளி
தினுசுகள் வாங்க விஜயம் செய்யுங்கள்

ராம் அண்டு கோ.,

164, காந்தி ரோட், காஞ்சிபுரம்-1.
போன் நெ. 2544 & 2314

For Pure Silk Sarees

RAM & CO.,

164, Gandhi Road,
KANCHIPURAM-1.

Phone No. 2544 & 2314

With Best Compliments From

COROMANDEL GARMENTS LTD.,

Leading Exporters of Readymade Garments
and
Winners of Many awards
for
Outstanding Export performance
also
Manufacturers of Uniforms
to
Defence Organisations & Public Sector Undertakings.

COROMANDEL GARMENTS LTD.,
21, Industrial Estate,
Ambattur, MADRAS-600 058.

PHONE : 652266, 652366, 652684 | Grams : SHIRTS, MADRAS-58 | Telex : 41 7864 CGL IN

SUNDARAM-ABEX LIMITED

MANUFACTURERS OF

"SUN - ABEX"

Brake Linings & Clutch Facings for
Heavy / Medium / Light Commercial Vehicles,
Passenger Cars, Vans, Jeeps, Tractors & Mopeds

Regd. Office :

180, MOUNT ROAD,
MADRAS - 600006

Factory & Administrative Office :

PADI,
MADRAS - 600050

Phone: 653201 Grams: 'SUNABEX' Telex: 041-7569

Branches at:

JULLUNDUR, ❖ NEW DELHI, ❖ CALCUTTA
BOMBAY ❖ JAIPUR
KANPUR & PONDICHERRY.

Food Becomes More Appetising
When Prepared With
"Rising Sun Brand"

MAIDA SOOJI AND ATTA

★

Manufactured by :

CENTURY FLOUR MILLS LIMITED

Indian Chamber Buildings
First Floor, Esplanade,
Post Box No. 1674,
MADRAS-600 108

★

GRAMS : "CENTURY"

PHONE :
OFFICE : (2Lines) 562043
MILLS : 661701

P. Govindaswamy
Managing Director.

With best compliments from

**
*

LEO REAL ESTATES

(REGD.,)

(House - Site Promoters)

8/1, (Upstairs) Madley Road,
T. NAGAR,
MADRAS - 600 017.

Phone : 443979 Grams : 'LEOREALS'

திருமலை



அலர்மேல்மங்கை உறை மார்பன்

By A WELL WISHER



ஸ்ரீ:

மஹாவித்வான்

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

தேவப்பெருமாளைப்பற்றி ஸாதித்திருப்பனவற்றின்

திரட்டு

தேவப்பெருமாள் திருவவதரித்த வரலாறு

முன்பு, நான்முகக் கடவுள் திருமாலைக் காணவேண்டித் தவங்கள் புரிந்தனன். ஆயினும், எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளில் நிலைகொள்ளாமல் வெவ்வேறு விஷய இன்பங்களில் பதறியோடுகின்ற தனது நெஞ்சை அடக்கியாள முடியாமல் வருத்தங்கொண்ட அந்த நான்முகன் இன்னது செய்வதென்று தெளியப் பெருமல் திகைத்திருக்குமளவில் ஆகாயத்தில் நின்றும் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது; அதாவது:—'பிரம! ஆயிரம் அச்வமேதங்களை அனுஷ்டித்தால்தான் சித்தசுத்தி பெற்றுத் திருமாலைக் கண்கூடாகக் காணப்பெறுவாய்; விரைவில் திருமாலைக் காணவேண்டி ஆயிரம் அச்வமேதயாகமனுஷ்டிக்கும் தாமதத்தைப் பொறுக்கில்லாயாகில், தொண்டை நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று அவ்விடத்தில் அயமேத வேள்வியியற்றி எம்பெருமானை உகப்பிப்பாயாக; அங்கு ஒரு கருமம் செய்தாலும் அஃது ஆயிரமுகமாகிப் பயன் பெறுவிக்கும்; இஃது அந்த க்ஷேத்ரத்திற்கு உற்றபெருமை' -என்று. இந்த ஆகாயவாணியைக் கேட்டுப் பரமானந்தமடைந்த பிரமன் மேருமலையுச்சியில் நின்று உடனே எழுந்து ஸத்ய வ்ரதக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து அங்குத் தவமுனிவர் சூழ்ந்த திருவநந்த ஸரஸ்ஸையும் அதனருகில் திகழும் திருவத்தி மாமலையையும் நோக்கியுவந்து அத்திருக்குளக்கரையிலேயே தூயவேள்விபுரியத் துணிவுகொண்டான். நினைத்த போதே எதையும் அற்புதமாக நிருமித்து முடிக்க வல்லவனை விச்வகர்மாவை யழைத்து 'ஸ்ரீ ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி இவ்விடத்திலேயே யாகசாலையை அமைத்திடுவாயாக; மணிமாடங்கள் சூழ்ந்தயகாயதொரு நகரத்தையும் நிருமிப் பாயாக' என்று கட்டளையுமிட்டனன். அப்போதே விச்வகர்மா ஸ்ரீ ஹஸ்திகிரியை நாற்சதுரமாக்கி அதனருகில் அச்வமேத யாகசாலையை அமைத்துத் *தடமாமதிள் சூழ்ந்தழகாய கச்சிப்பதியையும் விரைவில் நிருமித்தனன். பிறகு வேள்வியைக் காண விருப்பத்துடன் வந்து சேர்ந்த அந்தரத்தமரர்கள் கூட்டங்களும் இயக்கரும் விச்சாதரரும் கின்னரரும் கந்தருவரும் முதலாயினோர் தந்தமக்குரிய விடுதிகளில் சார்ந்தனர். இந்திரன் முதலிய தேவர்களாலும், விச்வாவஸு முதலிய கந்தருவர் களாலும், விரோசனன் முதலிய அசுரர்களாலும், மணிபத்ரன் முதலிய யக்ஷர்

களாலும், வஸிஷ்டர் முதலிய மாமுனிகளாலும், அரம்பை முதலிய அப்ஸரஸ்ஸுக்களாலும், ஜநகன் முதலிய சக்ரவர்த்திகளாலும், மற்றும் பல்வேறு பெரியோர்களாலும் நெருக்கமுற்றது காஞ்சிமாநகர்.

பின்னர், யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்கள் சேகரிக்கப்பட்டு, ரித்விக்குக்களும் திரண்டன்ராக, வேள்விபுரிய ஸஜ்ஜனுய் நின்ற விரிஞ்சனே நோக்கி ப்ருஹஸ்பதியானவர், 'திசைமுகனே! உனது தருமபத்தினியான ஸரஸ்வதியின்றி வேள்வி நடைபெருதாதலால் அவளே இங்கு அழைக்க முயல்வாய்' என்றனர். பிறகு பிரமன் வஸிஷ்டமுனிவனே நோக்கி முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினுல் என்மீது கறுக்கொண்ட ஸரஸ்வதியானவள் ஸரஸ்வதீநதியைச் சென்று சேர்ந்து அங்குத் தவம்புரிந்துகொண்டிராநின்ருள்; அவளே நீ இப்போது நல்வார்த்தைகளினுலுலகப்பித்து இங்கழைத்துவரவேணும்' என்றனன். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட வஸிஷ்ட மாமுனிவன் ஸரஸ்வதீ தீரத்திற்கு விரைந்து சென்று வாணியை வணங்கித் துதித்து, 'தாயே! காஞ்சிமாநகரில் அச்வமேத வேள்வியியற்ற விரும்பிய அம்புயத்தோன் உமது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்ருராதலால் ஆங்கு விரைந்து எழுந்தருளவேணும்; ஸத்யவ்ரத ஷேத்திரத்தில் அந்த வேள்வியை நீர் குறையற நிறைவேற்றி யருளவேணும்' என்று கைகூப்பிக் கூறினன். இது கேட்டதும் மிக்க சினங்கொண்ட ஸரஸ்வதியானவள் பழைய மனஸ்தாப ஹேதுக்களைச் சொல்லி இப்போது நான் வரமுடியாதென்றுரைக்க, வஸிஷ்டர் மீண்டு வந்து நான்முகனிடம் செய்தியறிவித்தார். அதனையுணர்ந்த ஸகல மஹர்ஷிகளும் நான்முகக் கடவுளே நோக்கி, 'ஸரஸ்வதி இங்கு வரப் போகிறதில்லையென்பதறிந்தோம்; அதனுல் ஒரு குறையுமில்லை; ஸாவித்ரி முதலிய மற்றை மனைவியரை உடன்கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம்' என்றனர். அங்ஙனமே செய்வதாக இசைந்த திசைமுகனுர் ஸாவித்ரி முதலிய மனைவியருடன் கூடி யஜ்ஞஸங்கல்பஞ் செய்துகொண்டு அச்வமேத தீக்ஷையை வஹித்துக்கொண்டார். வேள்வியதிசயங்களைக் காணவந்து குழுமியிருக்கின்ற தேவாஸுரர் முதலிய அனைவர்க்கும் தக்கவாறு மரியாதை செய்ய அந்தணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அவ்வண்ணமே ஸத்காரம் செய்யஎழுந்து தகுதி நோக்கித் தேவர்களுக்கு முதல் மரியாதை செய்தனர். அதுகண்டு பொருமை கொண்ட அசுரர்கள் உடனே ஸதஸ்ஸில் நின்று எழுந்து வெளியேறி, அமரர்களை அவமதிக்கவெண்ணி அமர்புரிய ஆலோசிக்கலாயினர். போர்புரிவதே பொருத்தமானதென்று துணிந்த அவ்வசுரர்களை நோக்கி அவர்களில் தலைவனுன விரோசனனென்பான் சிறிது விமர்சித்து இங்ஙனம் விளம்பினன். ''அசுரர்காள்! மேல்விளைவ தறியாமல் நீங்கள் சடக்கெனச் செய்யத்துணிந்த இந்த யுத்த ஸந்நாஹத்தை நிறுத்திக்கொள்வது நன்று; விரைந்து விளக்கிலே விழும் விட்டில்களுக்கு நேரும்கதி தான் நமக்கும்நேரும்; பிறருடையவும் நம்முடையவும் பலாபலன்களை ஆராயாது ஸாதிக்கத் திடீரென்று போர்புரியப் புகுவது பெருந்தீங்காகவே முடியும்; எளிய உபாயத்தினுல் தகுந்ததைப் பராக்ரமத்தினுல் ஸாதித்துக்கொள்ளக் கருதுவ'து புத்திமான்களின் பணியல்ல; இப்போது எனக்குத் தோன்றுவதொரு உபாயத்தை உரைக்கின்றேன் கேண்மின்; இந்த நான்முகக்கடவுள் தனது மூத்த மனைவியாகிய ஸரஸ்வதியைத் துறந்து வேள்வியியற்றத் தொடங்கியிருக்கின்றமையால் நாம் ஸரஸ்வதியிடம் சென்று சினமூட்டி அவளைக்கொண்டு வேள்வியைக் கெடுத்தல் மிக எளிதாகும்'' —என்று. இதுகேட்ட அசுரர்களனைவரும் நன்றுநன்றென்று நவின்று அப்பொழுதே புறப்பட்டு ஸரஸ்வதி பக்கலிற் சென்று, தங்களுக்குள்ள மாயச்செயல் வல்லமையினுல் அசுரவுடல் நீத்து அந்தண வேடம் பூண்டு வாணியை வாயார வாழ்த்தி நின்றனர். அவ்வாழ்த்துதலால் அகமகிழ்ந்த அவள், நீங்கள் வந்த காரியமென்னென்று வினவ, தங்களுக்கு ஸதஸ்ஸில் அவமரியாதை நடந்ததென்பதைச் சிறிதும் வெளியிடாமலே இங்ஙனம் மொழிந்தனர்; —''மேன்மை தங்கிய கலைமகளே! தீய மதிகொண்ட சிலமுனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவன் முக்கிய மஹிஷியான உம்மைத் தவிர்த்து மற்றை மஹிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனன்; மிகவும் அநீதியான இந்தச் செய்தியை நாங்கள் பொறுக்க கில்லோம்; இதனை உம்மிடத்து விண்ணப்பஞ் செய்யவே வந்தோம்; எவ்வகையினுலாவது அந்த வேள்வி நடைபெருதவண்ணம் தடைசெய்தீராகில் உம்மிடத்து அன்பு பூண்ட எமக்கு மகிழ்ச்சியாகும்,,—என்று.

இதுகேட்ட ஸரஸ்வதி அடக்கவொண்ணுத சீற்றத்தை யேறிட்டுக்கொண்டு, நான்முகனுர் செய்யும் நல்வேள்வியைப் பங்கம் செய்யப்பாரித்து, ஸஹ்யமலையினின்று கிளம்பி வேகவதியென்னும் நதியாகப் பெருகி ஸத்யவ்ரதக்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனள்: அந்த நதியின் பெருக்கு பயங்கரமான விசையுடனே பெருகி வருகின்ற பெருவெள்ளமானதைக்கண்ட யாகசாலையிலுள்ளாரனைவரும் திடுக்கிட்டு இன்னது செய்வதென்று தோன்ருமல் மிகவும் வியாகுலப்பட்டனர். 'ஸ்வாஹா ஸ்வாஹா, என்று சொல்லிக்கொண்டிருந்த வாசகங்கள் 'ஹாஹா ஹா ஹா' என்று மாறிவிட்டன. வேள்வி காணவந்த ஸகல ஜனங்களும் வருந்தியேங்கி யஜமாநனுகிய நான்முகனைத் தஞ்சமாக அடைந்து 'எம்மைக் காத்தருளவேணும், எம்மைக் காத்தருளவேணும்' என வேண்டிக்கொண்டவளவிலே, பிரமன் யோகத்ருஷ்டியினுல் 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து, ஸ்ரீமந் நாராயணனது திருவருளாலேயே இப்பெருந்துயரம் தொலையவேணுமென்று துணிந்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம்பெலாம் கண்ணநீர்சோர அப்பெருமானைக் குறித்து வாயாரத் தோத்திரஞ்செய்ய, அந்தத் தோத்திரத்தினுல் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான், ஏற்கெனவே உபநிஷத்துக்கள் தன்னை ஸேதுவாக ஒதியிருப்பது பொருள் பெற்றதாம்படி, ''சதுமுகனுர் வேள்விதனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங்கதியுடைய வேகவதிக்கணையாக வந்துதித்தோய்!'' என்றும் ''அணியாக வேகவதி அலையோடு கொண்டோடி ஆலிக்க அணையாக் கிடந்த களதாளே'' என்றும் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்தைத் தடைசெய்யவல்ல அணையாக சயனித்துக் கொண்டருளினன். அந்தத் திருப்பள்ளித்திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச்செல்ல மாட்டாமல் திகைத்து நின்றனள். பிரமனும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் எம்பெருமானுடைய திருவருளை நோக்கி மிக வியந்து வாயார வாழ்த்தி வணங்கி நின்றனர். நதியுருவாக வந்த ஸரஸ்வதியும் அவ்வளவிலே தனது ஆர்ப்பாட்டங்களெல்லாம் அடங்கப்பெற்று எம்பெருமானுடைய நியமனத்தினுல் அந்தர் வாஹினியாய்ச் சென்று கடல் சேரலுற்ருள்.

யதோக்தகாரியென்று திருநாமம் பூண்ட அப்பெருமானது தென்புறமாகச் செல்லலுற்ற வேகவதியை வஸிஷ்டர் முதலியமுனிவர்கள் பிரமனது சொற்படி வந்து வணங்கி, ''தாயே! ஸரஸ்வதியே! யாகசாலையில் இனியாகிலும் வந்து சேர்ந்து நாதரோடுகூடிக் களித்திருந்து இப் பெருவேள்வியை நிறைவேற்றி யருளவேணும்'' என்றும் வேண்டிக்கொள்ள, அவளும் நதியில் நின்றும் விரைந்தெழுந்து நான்முகக் கடவுளோடு சேரலுற்றாள்.

அச்வமேதயாகத்திற்கு உண்டான இடையூறு தொலைந்து ஸரஸ்வதியும் வந்துசேர்ந்து ஒருகுறையுமின்றி வேள்வி நடைபெறுவதாயிற்று. நிபுணரான வஸிஷ்டர் வேள்விச் சடங்குகளைக் குறையொன்றுமின்றியே அடைவுபட நடை பெறுத்திப்போந்தனர். ப்ராப்தமான காலத்தில் வேள்விக் குதிரையின் வபையை யெடுத்து அக்நியில் ஹோமம் செய்தவளவில், மங்கலவாத்தியங்கள் முழங்காநிற்க, வேதகோஷம் விம்மி வளராநிற்க, விண்ணுலகில் நின்றும் பூமாரி சொரியாநிற்கப் பரம பவித்திரமான புண்யகோடி விமானம் அக்நிமத்தியில் நின்றும் தோன்ற, அந்த விமானத்தினுள்ளே பேரருளாளப்பெருமாளென்னும் ஸ்ரீவரதராஜன் *கோல மாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் நீலமேனியனுய் *மின்னு நூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும் மன்னுபூணும் நான்கு தோளுமுடைய னுய் *சங்கினேடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாயொன்றி னேடுங் கூடினவனுய் *பூந்தண்மாலைத் தண்டுழாயும் பொன்முடியும் வடிவும் பாங்கு தோன்றும் பட்டும் நாணுமாய் *தொக்கசோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும் தக்கதாமரைக் கண்களுமாய் *குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு வென்னலாம்படி நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனியோடே *தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் பூநைந்ததண்ணந்துழாய் மாலையனுய்க் காட்சி தந்தருள, அந்தஸேவையை நான்முகனிட்டாரடங்கலும் கண்டு ஆனந்த மென்னும் அமுதக்கடலில் ஆழ மூழ்கினர். ஆக இவ்வளவும் புராண வரலாறு.

மணவாளமாமுனிகள் ஸாதித்தருளின தேவாதிராஜமங்களமென்கிற மங்க ளாசஸனஸ்துதி ப்ரசஸ்தி பெற்றது. அதிலொரு ச்லோகம் கேண்மின்;-

''அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே,
ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம்.''

நான்முகனுக்கு அபேக்ஷித ஸம்விதாநம் செய்தருளினது போலவே இன்றைக்கும் ஸகல ப்ராணி வர்க்கங்களுக்கும் அபேக்ஷிதங்களான பலன்களை அருள் செய்பவரும் ஆச்ரிதர்களின் அநிஷ்ட நிவ்ருத்திகளையும் செய்தருள்பவரும் எனக்குத் தலைவருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு என்பது இதன் தாற்பரியம்.

வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் மணியான வானவர் கண்ணன் அருளிச் செயலின்பால் ஆதரம் பெருக நிற்குமவன் என்பதைச் சிறிது காட்டுவோம்.

தேவப்பெருமாளுடைய திவ்யப்ரபந்த வ்யாமோஹம்

எம்பெருமானுர் காஞ்சீபுரியிலே தம் அடிபணிந்த பலபல சிஷ்யவர்க்கங் களுக்கு உபயவேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போராநிற்கையில், நம்பெருமாள் ஸன்னிதியில் தர்சநநிர்வாஹகர் ஒருவருமில்லாத குறைதீர இவரை அவ்விடத்திற் கெழுந்தருளச் செய்யவேணுமென்று பாரிப்புக்கொண்ட கோயில்முதலிகள் ஓர் ஸதுபாயம் கண்டனர்:— பேரருளாளப் பெருமாள் ஆழ்வாரருளிச்செயல்களிலே போரவும் பித்தராயிருப்பாராகையாலே நம் அரையரைக்கொண்டு பாட்டுக் கேட்பித்து உகப்பித்து வரப்ரஸாதமாக ஸ்ரீராமாநுஜரைப் பெற்று இங்கே யெழுந் தருளப் பண்ணிக்கொண்டு வரலாமென்று.

அக்காலத்து, இசைபாடி விண்ணப்பஞ்செய்வதில் மிகவல்லவராயிருந்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸன்னிதிக்கு விடைகொண்டு இக்காரியத்தைச் செவ்வனே தலைக்கட்டிக்கொண்டு வரும்படி பெரியபெருமாள் நியமித்தருள, அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேரருளாளன் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து அங்குள்ள வரந்தரும் பெருமாளரைய ரையும் திருக்கச்சி நம்பியையும் முன்னிட்டுக்கொண்டு தேவப்பெருமாளைத் திருவடி தொழுது*அத்திபூரான் புள்ளூர்வான் *என்னெஞ்சமேயான்*துணிவினியுனக்குச் சொல்லுவன்* உரந்தருமெல்லணைப் பள்ளிகொண்டான் முதலான பாசுரங்களைத் தேவகானத்திலேயிட்டுத் தேவப்பெருமாள் திருவுள்ளம் நீர்ப்பண்டமாயுருகும்படி செவிக்கினிதாகப் பாடிக்கொண்டிருக்கையில் தேவபிரானும் திருவுள்ளம்பூரித்து 'வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்குப் போரவுகந்தோம்; நீர் எது கேட்டாலும் தரக்கடவோம்' என்று ஒருகாலுக்கிருகால் உறுத்தியருளிச் செய்ய, அரையரும் அருகேயிருந்த இளையாழ்வாரைக் காட்டி நம் இராமாநுசனே நம் பெருமாளுக்குத் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, அதுகேட்டுத் தேவப் பெருமாள் திடுக்கிட்டு ஒன்றுந்தோன்றுமே நிற்க, சொன்னசொல் தவருதே தந்தருளவேணுமென்று அரையர் வேண்ட ''நம்மிராமாநுசனைத் தவிர மற்றதைக் கேளுமென்று நாம் முதலிலேயே சொல்லத்தவறினேம்; நம் இழவுக்கு இனி வருந்திப் பயனில்லை; சொற்படியே இராமாநுசனைப் போகவிட வேண்டியதே'' என்று துணிந்து, ''அரையரே! நம்மை இங்ஙனே வஞ்சித்து ஸர்வஸ்வமும் கொள்ளைகொள்ள வந்தீர்போலும்; நாமும் உமது வஞ்சனையிலே அகப்பட்டோம்; இனி என் செய்வது? விரும்பினபடியே கொண்டுபோகக் கடவீர்'' என்று தேவப் பெருமாள் விடைகொடுத்தருள, அன்றே அப்போதே ஸ்வாமியெம்பெருமானுர் தமது சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்டு அரையரை முன்னிட்டுக்கொண்டு நம் பெருமாள் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து *தெண்ணீர்ப் பொன்னியிலே தீர்த்தமாடி ஆஹ்னிகங்களை முடித்துக்கொண்டு அரவணைமேல் பள்ளிகொண்ட முகில் வண்ணனைக் கண்ணுரக்கண்டு 'அடியேன்மீது இப்படியும் அருள்வெள்ளம் பெருகுவதே! என்று ஈடுபட்டு நிற்கையில், பெரியபெருமாள் தமது திருப்பொலிந்த சேவடியை இவரது சென்னிமேல் பொறித்து ''இளையாழ்வீர்! *பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்கிற உபயவிபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம், இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணி

கொள்ளக்கடவீர்'' என்று நியமித்தருளியாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு உடையவர் என்கிற திருநாமம் வழங்கி வந்தது. (உடையவர்—உபய விபூதியையும் தம் கையிலே யுடையவர் என்றபடி.) இங்ஙனே பெரியபெருமாளுடைய பேரருளைப் பெற்றதும் அருகேயிருந்த பெரியநம்பியை நோக்கிப் பெரியார்க்கு ஆட்பட்டக் கால் பெருத பயன் பெறுமாறு வரிவாள்வா யரவணைமேல் நம்பெருமாள் காட்டினரேயென்று பாசுரஞ்சொல்லி தேவரீருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற கோயின்மையாலே பெரியபெருமாள் அடியேனை இப்படி விஷயீகரித்தருளினர் என்று ஆனந்தக்கண்ணீர் பெருகநின்று விண்ணப்பஞ்செய்ய, பெரியநம்பியும் ''*கலியுங் கெடுங் கண்டுகொண்மினென்று அன்று ஆழ்வாரருளிச்செய்த எதிர் காலச்செய்தி இன்று பலிக்கக்கண்டோம்; நல்லது; இனி பெருமாள் நியமனப்படியே இவ்விடத்துப் பணிகளெல்லாம் பாங்காகப் பார்த்தருளீர்'' என்றருளிச்செய்ய, அன்றுமுதலாகவே ''தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே'' என்கிற வாழ்த்து அந்வர்த்தமாம்படி அனைத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் குறையற நடைபெறுமாறு சேமஞ் செய்தருளிவந்தார்.

தேவப்பெருமாளுடைய திவ்யப்ரபந்த வ்யாமோஹ விஷயமாக மற்றொன்றுங் குறிக்கொண்மின்.

வையங்கண்ட வைகாசித் திருநாளில் கண்டருளும் வாஹனங்களுங்கூட திவ்ய ப்ரபந்த ஸேவைக்கு அநுகுணமாகவே ஆதிகாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதையும் விவரிப்போம்.

வைசாகோத்ஸவ வாஹனக்ரமங்கள்

முதல்நாள் காலை வாஹனஸேவை ஒன்றுமில்லை. திருப்பல்லாண்டு தொடக்கம் கேட்டருள்வதற்காக வாஹனாரோஹணத்தைத் தவிர்த்து ஸேவை ஸாதிக்கிற க்ரமம். மாலை ஸிம்ஹ வாஹனம்; அப்போது பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து ஸேவை; அதில்* என்தொண்டைவாய்ச் சிங்கம் வா* என்று எம்பெருமானைச் சிங்கமாக வரும்படியழைத்த பாசுரம் வருவதால் அதைநோக்கிச் ஸிம்ஹ வாஹன ஸேவை.

இரண்டாந்திருநாள் காலை *ஞானச்சுடர் விளக்கேற்றினேன்* என்று ஞான நூலைக் கொடுப்பதாகத் தொடங்கி * மறையாங்கென வுரைத்தமாலை* என்று எம் பெருமானும் ஜ்ஞான ப்ரதானம் பண்ணினதைச் சொல்லுகிற இரண்டாந்திருவந்தாதி ஸேவையாகையாலே, அன்னமாய் நூல் பயந்த அருளாளனுக்கு அன்ன வாஹனஸேவை அமைக்கப்பட்டது. அன்றியும், முதல் நாளிரவு பெரியாழ்வார் திருமொழி ஸேவை முடிவுபாகத்தில் * பின்னிவ்வுலகினில் பேரிருள் நீங்க, அன்று அன்னமதானனே* என்று வருதலால் அதைக்கொண்டும் உடனே ஹம்ஸவாஹன ஸேவை மிகவும் பொருத்த மாயிற்று. அன்று மாலை பெரியாழ்வார் திருமொழி இரண்டாம்பத்து ஸேவையில் *அரவணையாயாயரேறே அம்மமுண்ணத் துயிலெழாயே—இன்னுமுச்சி கொண்டதாலோ * என்று ஸூர்யோதய ப்ரஸ்தாவம் பண்ணிக் கண்ணனே யெழுப்புகிற பாசுரம் வருகையாலே ஸூர்யப்ரபை வாஹனம் அமைந்தது. இரவிலே ஸூர்யப்ரபையாவதற்கு இதுவே நிமித்தம்.

மூன்றாந்திருநாள் காலை மூன்றாந்திருவந்தாதி ஸேவையில் * பொலிந்த கருடன் மேல்கொண்டகரியான் கழலே * என்று வருதலால் கருடவாஹனஸேவை அமைந்தது. அன்றிரவு பெரியாழ்வார் திருமொழி மூன்றாம்பத்து ஸேவையில் * அடங்கச்சென்றிலங்கையை யீடழித்த அனுமன் புகழ்பாடி* என்றும் * சீராருந் திறலனுமன் தெரிந்துரைத்தவடையாளம்* என்றும் சிறிய திருவடி ப்ரசம்ஸை வருதலால் சிறியதிருவடி வாஹனஸேவை அமைந்தது.

நான்காந்திருநாள் காலை நான்முகன் திருவந்தாதி ஸேவையில் *ஆங்கார வாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவணையான் * என்றும் *விரித்துரைத்தவெந் நாகத்துன்னை* என்றும் ஆதிசேஷனுடைய ப்ரஸ்தாவம் வருதலாலும் *வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு * என்று வைகுண்டநாதன் திருவடிகளில் அவ்வாழ்வார் பாசுரம் பாடினதாகச் சொல்லுகையாலும் சேஷவாஹனத்தில் பரமபத நாதன் திருக்கோலஸேவை அமைந்தது. அன்றிரவு பெரியாழ்வார் திருமொழி நான்காம்பத்து ஸேவையில் *நளிர்மாமதியைச் செஞ்சுடர் நாவலிக்கும் * என்று சந்திரனுடைய ப்ரஸ்தாவம் பண்ணியிருக்கையாலே சந்த்ரப்ரபை வாஹனஸேவை அமைந்தது.

ஐந்தாந்திருநாள் காலை திருவிருத்தம் ஸேவை ஆழ்வார் தாமானதன்மையை விட்டு நாச்சியார் திருக்கோலம் பூண்டு அருளிச்செய்த திவ்யப்ரபந்தமதுவாகையாலே அதற்குச் சேரப்பேரருளாளன் நாச்சியார் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதிக்கிறபடி. திருவிருத்தம் என்பதற்கு, திரு—நாச்சியாருடைய, விருத்தம்—வ்ருத்தாந்தம் என்று பொருள். நாச்சியார் திருக்கோலம் பூண்ட ஆழ்வாருடைய செய்திகளைச்சொல்லும் ப்ரபந்தமென்றபடி. இதற்கு மிகவும் பொருத்தமாகவே அன்று நாச்சியார் திருக்கோலம் அமைந்தது. வேறு காரணமில்லை. அன்றிரவு யாளிவாஹனஸேவை ஏற்பாடு செய்திருக்கிறவர்களின் அபிப்ராயத்தை ஆழ்ந்து பார்க்கையில் வெகு ஆச்சரியமுண்டாகிறது. திவ்யப்ரபந்தங்களில் யாளியைப் பற்றின பேச்சுக்கள் சிலவிடங்களில் வருகின்றன. எங்கு வருகின்றனவென்று பார்த்தால் பெரிய மலைகளை வருணிக்கு மிடங்களில்தான் வருகின்றன. அஹோபிலம் திருவேங்கடம் திருமாலிருஞ்சோலை பதரிகாச்ரமம் என்னுமித்தலங்களை வருணிக்கும்போது தான் யாளிகளைப்பற்றிப் பேசுவது வழக்கம்;*நன்மணி வண்ணனூர் ஆளியுங் கோளரியும்* *செங்கனிவாளி யிட்டிறைஞ்சும்* இத்யாதி பாசுரங்கள் காண்க. ஐந்தாந்திருநாளிரவு திவ்யப்ரபந்த ஸேவையில் பதரிகாச்ரம மார்க்கத்திலுள்ள தேவப்ரயாகை யென்கிற கண்டமென்னுங் கடிநகர்ப் பாசுரங்களும், * துக்கச் சுழலையைச் சூழ்ந்துகிடந்த * என்று தொடங்கித் திருமாலிருஞ்சோலைப்' பாசுரங்களும் *சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையான் பாசுரங்களும் ஸேவிக்கப்படுவதால் அந்த திவ்யதேசங்களுக்கும் யாளிக்குமே ஸம்பந்தமுள்ளதென்றுகொண்டு யாளிவாஹன ஸேவையை அப்போது ஏற்படுத்தினர்கள். இவ்வளவு ஆழ்ந்து ஏற்பாடு செய்தவர்களின் புத்தி சாதுரியம் மிகவும் மெச்சத் தக்கதாக வுள்ளது.

ஆருந்திருநாள் காலை திருச்சந்தவிருத்தம் ஸேவை. அதில் *ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனுயமாயனே * என்றும் *ஆயனுகி ஆயர்மங்கைவேயதோள் விரும்பினுய்* என்றும் *ஆனேகாத்தொரானேகொன்று அதன்றியாயர் பிள்ளேயாய் ஆனேமேய்த்தி ஆநெயுண்டி* என்றும் *ஆதியாகி ஆயனய மாயமென்ன மாயமே * என்றும் கொள்ளே கொள்ளேயாக கோபாலக்ருஷ்ண ப்ரசம்ஸை வருதலால் அதற்குச் சேர கோபாலக்ருஷ்ணன் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதிக்கிறபடி. அன்றிரவு யானேவாஹனஸேவை. அதுநாச்சியார் திருமொழி ஸேவைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்தது. நாச்சியார் திருமொழியில் * மங்கலவீதி வலஞ்செய்து—அங்கு ஆனேமேல் * என்கிற பாசுரம் ஸேவிக்கப் படுவதற்குப் பொருத்தமாகவே இது அமைந்தது. இதில் மற்றெரு விசேஷமும் கவனிக்கவேண்டும்; அதாவது— ஆனேவாஹனப் பாசுரமாக மேலேயெடுத்துக் காட்டின பாட்டில் *குங்குமமப்பிக்குளிர்சாந்தம் மட்டித்து* என்று சூர்ணபிஷேகம் சொல்லியிருக்கையாலே இதுவும் அன்று காலை வைதிகச் சடங்காக நடத்தப்பட்டு வருகிறது.

ஏழாந்திருநாள் திருத்தேர். திருமங்கையாழ்வார் திருத்தேர்ப் பிரபந்த மாகத் திருவெழுகூற்றிருக்கை ஸாதித்தது உலகமறியும். அது ரதபந்தத்தில் அமைந்தது. அந்த திவ்யப்ரபந்த ஸேவைக்குச் சார்பாக ரதோத்ஸவம் வெகு பொருத்தமாக அமைந்தது. திருத்தேர் நிலே சேர்ந்தபின்பு பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளுகையில் திருமடல் முடிந்தபின் நாச்சியார் திருமொழியின் சேஷம் ஸேவிப்பது வழக்கம். *கருப்பூரம்நாறுமோ* என்கிற ஒரு பதிகம் ஸேவித்து முடிப்பார்கள். அதில் *செங்கண்மால் தன்னுடைய வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய்* என்கிற பாசுரம்வருவதை நோக்கி அன்று பகலில் *திருப்பாய்ந்தாடித் திருமஞ்சனமென்று நடத்தப்பட்டு வருகிறது.

அன்றிரவு திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி திவ்யப்ரபந்தத் தொடக்கம். அவ்வாழ்வாருடைய சரிதையிலுள்ள வேடுபறிகதைக்கு அநுகுண மாகவே பாதி வழியில் திருமங்கையாழ்வாரை யெழுந்தருளப்பண்ணி அவர்க்கு மரியாதைச் சிறப்புகள் நடத்தி திவ்யப்ரபந்தத் தொடக்கம் செய்வது நாளேக்கும் வழக்கத்திலுள்ளது. *ஆடல்மாவல்லன் கலிகன்றிக்காகவே பெருமாளும் ஆடல்மா வென்னும் குதிரைவாஹனம் கண்டருள்வது.

திவ்யப்ரபந்தங்களில் ஆழ்வார்களுடைய அநுபவப்ரகாரங்களில், நாச்சிமார் கள் எம்பெருமானே வெறுத்துத் தள்ளுதல் [மட்டையடி] என்பது ஒரு விலக்ஷணா நுபவம். நம்மாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் இது விஷயமாக மூன்று பதிகங்கள் பாடியுள்ளார்கள். இவ்வநுபவம் ஒன்பதாநாள் காலையில் ஒரு நாடகமாக அபிநயம் செய்யப்பட்டு வருகிறது. பெருமாள் தனியே யெழுந்தருளிப் பட்டிமேய்ந்து வருவதாகவும், நாச்சிமார்கள் இவரை உள்ளே புகவொட்டாமல் தடுப்பதாகவும் நடந்துவருவது ஆழ்வாரநுபவமேயாகும்.

மறுநாள் திருவாய்மொழி ஆயிரத்தையும் கேட்டருள்வதற்காகப் பன்னிரண்டு திருவாராதனங்கள் கண்டருளி இரவு இராமானுச நூற்றந்தாதிக்காக சிசிரோபசாரப் புறப்பாடு கண்டருளி உத்ஸவஸமாப்தியாகிறது. ஆக இப்படிகளே ஊன்றி நோக்குமளவில் திவ்யப்ரபந்த ஸேவையை யநுஸரித்தே வாஹனப் புறப்பாடுகளில் நியதி ஏற்பட்டிருக்கின்றதென்பது கல்வெட்டாகத் தேறும்.

இப்படி நாம் நிரூபணம் செய்வதைக் காண்கின்ற பிறர் ஸஹஸா ஒரு வார்த்தை சொல்லி விடக்கூடும்; பெருமாள் வாஹனஸேவைகள் கொண்டருளுகிற படிக்குத் தகுதியாக இவர்கள் திவ்யப்ரபந்த ஸேவைகளே அமைத்துக் கொண்டார் களேயல்லது, திவ்யப்ரபந்த ஸேவைகளுக்குத் தகுதியாக வாஹனஸேவை ஏற்படுத்தப்படவில்லே— என்று. இது பொருத்தமான வார்த்தையாகாது; திவ்ய ப்ரபந்த ஸேவை இஷ்டமானபடி பொறுக்கிப்பொறுக்கி யெடுத்து அமைத்திருக்க வில்லே; காலே வேளேகளில் இயற்பாஸேவை வரிசையாகவும், மாலே வேளேகளில் முதலாயிரம் ஸேவை வரிசையாகவும் நடந்துவருவதால், வாஹன ஸேவை களுக்குத் தக்கபடி பாசுர ஸேவையை அமைத்துக் கொண்டதாகச் சொல்வதற்கு அவகாசமேயில்லே. இதர திவ்யதேசங்களில் வாஹனக்ரமங்கள் வேறுவேறு விதமாக இருப்பினும், தேவப்பெருமாள் ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கென்றே இட்டுப் பிறந்தவராதலாலும், அந்த ஸ்ரீஸூக்தியில் வ்யாமோஹம் காரணமாகவே உடையவரையும் இழந்தவராதலாலும் இத்தேவப்பெருமாள் ஸன்னிதி ஸம்பந்தப் பட்டவரையில் நாமிங்கு நிரூபித்த திவ்யப்ரபந்தப் பொருத்தங்களும், ஏற்றங் களும் அசைக்கமுடியாதவை.

———

அருளாளன் அருளாழிப் புட்கடவும்
அழகைப் பற்றிய பழம்பாடல்

தரள முத்துமணிதிவள நற்பவளம்
அருண ரத்னவகை சாத்தியே
சங்குசக்கரமு மங்கையிற்றிகழ
மங்கைபாகனர னேத்தவே

நரருமொத்தமர ரிரளுமேத்துநர
வாகனன் வருணனிந்திரன்
நடுவுணன்மறைகொள் முனிவர்வானவர்
குணுலமிட்டு நடமாடவே

வரைகளில் பெரியவடகிரிக்குமிசை
மரகதக்குவடு போலவே
வரதர்கச்சிநகர் வருதனித்தெருவில்
தென்கலேக்கழகு பொழியவே

அரவுதித்தமணி மகுடமுற்றவொரு
பணிபிணக்குடன் மிழற்றவே
கனகமொத்ததொரு வடிவமொத்திவரும்
கருடனில் பவனி வருவரே.

—யதிந்த்ர ப்ரவண ப்ரபாவம்

PHILIPS

When the design
is Philips
you can see it
in the details.

Philips Mixer-Grinder.


Contact your nearest authorised Philips Dealer

CLARION/B/P/197/102

நெடுமரம் கோயில்

Compliments from

P. T. SUNDARAVARADAN



ஸ்ரீ :

பேரருளாளன் பெருமை

ஸ்ரீ. உ.வே. அக்காரக்கனி

தி. அ. அனந்தாழ்வான்.

காரிஸுதாத்மய : பூஜ்ய தமைர்யோ
யாமுந முக்கயைச் சாமிததீபிஸ்
ஸம்ஸ்துத தேவோ வாரண நாதோ
வாமநரூபேணுத்ர விபாதி.

பேரருளாளன் பெருமை பேசி எண்டிசைக்கும் விளக்காகி நிற்கும் சிறுமாமனிசர் திருவாணை தலைசூடித் திருத்தாள் வணங்கிப் பக்தியில்லாத வென்பாவி நெஞ்சால் முயல்கின்றனன் அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந் திடவே. பிழைப்பராகிலும் அடியார் சொல் பொறுப்பது பெரியோர் கடனன்றே!

பேரருளாளனைப் பற்றி இருளார் விஜனயேன் எழுதும் பேறு பெறுவதே! ஆம். இளந்தெய்வமன்றிது, 'இதுமிக்க பெருந்தெய்வம்' என்று பேரருளாளனைப் போற்றுவர் புனிதர். திவ்ய தேசங்களுள் தென்னரங்கம், வடவேங்கட மாமலை, குண பாலமதயானை மாமலை (கிழக்கிலுள்ள ஸ்ரீ ஹஸ்திகிரி) மேல் திசை நின்ற திருநாரணனூர்புரம் என்று மிவையே வைட்டணவர் எல்லியுங்காலையும் திசை கைகூப்பியேத்தி உளங்கொள் பீடுடையன. இந்நான்கினிலும் முன்னம் திசை முகன் படைத்த வரந்தருமாமணி வண்ணன் தன் பெருமை பேசுவான் புகில் நம் பரமன்றே! ஆழ்வார்கள் மூவர் பேரருளாளன் என்னும் மதுரவாற்றில் ஆழ்ந்தார்கள் என்பதை முந்துறவுரைக்கேன். தேவப்பெருமானைப் பற்றியதாக அருளிச் செயலில் ஒரு பாசுரம் கூடக்கிடையாது என்பர் சிலர் ஒளியிலாமா தவனை (ஒளிக்கு இருப்பிடமான சூரியனை) ஒளியிலாதவனுக (ஒளியற்றவனுக) உரைப்புதொக்கும்.

(1) பூதத்தாழ்வார் :- கடலினை கலந்திடுகங்கையும் தூயபெருநீர் யமுனையும் நாடிங்கையாளும் (நாமங்கையாள் - ஸரஸ்வதி நதி) கூடுவது போன்று பொய்கையார் பூதத்தார் பேயாராகிய தீர்த்தர் முவரும் தீர்த்தனுல களந்தானுடைய பொய்கை வேலிப் பூங்கோவலூரிலே தவமாமுனிவர் திருமாளிகை இடைகழியிலே மழைக்கன்று ஒதுங்கினர். அந்த ஓரிரவில் இந்நிலவுலகினிருள் நீங்கச் செந்தமிழாரண விளக்கு முந்தையாழ்வார்களால் மாயனுல் நெருக்குண்டபோது ஏற்றப்பட்டது. ஆம்! மனக்கூறிருட்கோர் இன் விளக்கு நந்தா விளக்கான நாரணனைக் காட்டியது. மாமலராள் தன்னெடு மாயனைக் கண்டார் தமிழ்த் தலைவர். அது நிற்க, பூதத்தார் பேருளாளனைப் பரவிய திறமினிக் காண்போம். என்னெஞ்ச மேயானென் சென்னியான் தானவனை வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன் - முன்னஞ்சேயூழியா னூழி பெயர்த்தா னுலகேத்தும் ஆழியான் அத்தியூரான்.

முகில் வண்ணன் முந்நீர் ஞாலம் படைத்ததும் இருள்தரு மாஞாலத்தே வந்து பிறந்ததும் இவை போல்வனவும் பிறவும் முன்னம் பாரிக்கும் அவன் சீர்மைக்குச் சேருமன்றே. அவனுடைய அவாவைப்பற்றிப் பூதத்தார் ஓதுவது கரும்பினின் சாறு போலப் பருகத்தகும். இப்பாசுரத்தின் அப்பிள்ளையுரைப்பகுதி வருமாறு :-

அக்காலத்தின் (=விபவாவதார காலத்திற்கு) பிற்பட்டாரையும் ரக்ஷிக்கைக்காகத் திருவத்தியூரிலே வந்து நின்றருளின நீர்மையில் ஏற்றத்தை யுடையவன். இடவகைகளிகழ்ந்திட்டு என்கிறபடியே இந்த திருப்பாற்கடல் திருவத்தியூராகிற இடங்களை உபேக்ஷித்து ஸௌபரி போகார்த்தமாகப் பல வடி வெடுத்தாப்போலே என்னை அநுபவிக்கைக்காகப் பல வடி வெடுத்துக் கொண்டு நிலை பேரான் என்னெஞ்சத்து என்னும்படி என்னுடைய வ்ருதயத்திலே பொருந்தி நித்யவாஸம் பண்ணுநின்றான். தலைமேலதாளினைகள் என்னும்படி என்னுடைய உத்தமாங்கத்திவம் விரும்பி வர்த்தியா நின்றான் ஒருவன் அபிநிவேசம் இருக்கும் படியே! என்று விஸ்மிதராகிறார்".

எம்பெருமான் ஆழ்வாரைப் பெறுதற்பொருட்டுச் செய்தவற்றைக் கீழ்ப்பாசுரங்களிலே காணலாம். அவன் பெற்ற ப்ரகாரத்தை இப்பாசுரத்திலே அருளினர். எம்பெருமானுடைய வருளே தனமாக முளைத்துக் களர்ந்த தம்முடைய பரபக்தியானது பரஜ்ஞாந தசாபஞ்சமாம்படி பரிபக்வமாய் வளர என்பது அப்பிள்ளையுரையவதாரிகையில் திகழ்வதாம். தனக்கடிமை பட்டது என்னும் பாசுரத்தில் (16) சேதனனுடைய மனமாகிய மேட்டு நிலத்திலே மண்டிக்கிடக்கும் அவித்யை முதலான புதர்களை அழித்து ருசி என்னும் விதையை விதைத்து அது

வளர்தற்பொருட்டுத் தன் திருக்கல்யாணகுணங்களைப் பொழிவான் பரமன் என்றும் அருளிச் செய்வர். ருசி விளைந்தவுடன் மனத்துள்ளான் (பா. 28) என்றபடி ஆழ்வார் திருவுள்ளத்தே உறைபவன் ஆனான். ருச்யுத்பாதகனும் தானே ப்ராப்தியைப் பண்ணிக்கொடுப்பானும் தானே யன்றே. "நகரிழைத்து" என்று (பா. 4) தமது நெஞ்சையே பெருமானுக்குக் கோயிலாக ஆழ்வார் அடைத்தார் அன்றே! அக்கோயிலில் வந்து நின்றான் தன்னைப் பற்றியவர்களை இதர விஷயங்களில் ஆசையற்றவர்களாக அவன் செய்வன் "பயின்ற தரங்கம்" (பா. 46) பாசுரத்தின் அவதாரிகையில் "இப்படி தன்னை ஆச்ரயித்தவர்கள் இதர போகங்களின் லாபாலாபங்களால் வரும் விகாரமற்றுத் தன்னைச் செறிந்து அநுபவிக்கையாகிற இந்நிலைவு இவர்களுக்கு உண்டாம்படி பல திருப்பதிகளிலும் அவன் வருந்தி க்ருஷி பண்ணின படியை அருளிச்செய்கிறார் (ஆழ்வார்) என்பர் அப்பிள்ளை. அவன் முயற்சி பலித்து அவன் மேவியுறை கோயிலிலே ஈடுபடுவர். "வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு." (பா. 53) என்று உடனே பிரான் ஆழ்வார் திருவுள்ளத்தை விரும்ப, ஆழ்வார் "என் உளத்தே வருவதற்கு பாலாலயமாகக் கொண்ட திருப்பாற்கடலைக் கைவிடாதே, தெற்குத் திருமலையைக் கைவிடாதே, பெரிய திருமலையைக் கைவிடாதே, என்று ப்ரார்த்திப்பர். (பா. 54) அவன் செய்ததென்ன? ஆழ்வார் தம் பாசுரம் [(95) என்னெஞ்ச மேயான்] சித்திரம் போலக் காட்டும். ஜகதாசார்ய ஸ்வாமியின் தீபிகையுரைப்பகுதி வருமாறு: திருவாய் மொழியில் 'இவையு மவையுமுவையும்' என்ற திருவாய் மொழியில் ஆழ்வார் தம்முடைய ஒவ்வொரு அவயவத்திலும் எம்பெருமான் வந்து சேர்ந்ததாக அநுஸந்தித்தது போலவே இப்பாட்டிலும் அநுஸந்தேயம் - என்று. ஆகப் பூதத்தாரை முற்றப் பருகியவன் கச்சிப் பெருவரை மாமுகிலாம் பேரருளாளனே என்பதைச் சுருங்கக் காட்டினோம். இதற்கடுத்ததான "அத்தியூரான் புள்ளையூர்வான்" என்று இந்தத் திருத்தலத்துக்கே ஏற்றம் தருமதான பெரிய திருவடி (=கருட) ஸேவையை மங்களா சாஸனம் செய்தருள்வது உணர்க, மேலும் தேவப்பெருமாள் ஸந்நிதியில் பூதத்தாழ்வார் (மூலவர்) என்னெஞ்ச மேயான் - அத்தியூரான் என்பதை உணர்த்தும் வகையில் திருமுத்திரையுடன் ஸேவை ஸாதிப்பதும் குறிக்கொள்ளத் தக்கது.

(2) காரிமாறனும் கரிவரையோனும்: (a) நம்மாழ்வாருடைய முதற் ப்ரபந்தமான திருவிருத்தத்தில் முதற்பாசுரத்தில் இமையோர் தலைவா என்றருளியதற்குச் சேர ஸ்ரீஸ்வாமி தம்முடைய தீபிகையுரையில் ஸாதிப்பதாவது :- தென்னத்தியூரரான பேருளாளப் பெருமாளுக்கு தேவாதிராஜன் என்று திருநாமமாதலால் அவ்வெம்பெருமானை உளப்படுத்தி சரம ப்ரபந்தமாகிய திருவாய் மொழியின் முதற் பாசுரத்தில் அயர்வறுமமரர்

களதிபதி என்றருளிச் செய்தது போல ப்ரதமப்ரபந்தமாகிய இப்பிரபந்தத்தின் முதற் பாசுரத்திலும் எம்பெருமானையே உளப்படுத்தி இமையோர் தலைவா என விளிக்கிறானென்று பெரியோர் பணிக்கும்படி" என்று (b) திருவாய் மொழியின் முதற் பாசுரத்தில் அயர்வறுமமரர்களதிபதி என்றருளிச் செய்தார். திருமொழி யாக்கியான அரும் பதத்தில் "பெருமாள் கோயில் தேவராஜனை அயர்வறுமமரர்களதிபதி என்றருளிச் செய்தாரிறே என்றுள்ளது ஸேவிக்கத் தக்கது [c] திருவாய்மொழி முதற்பத்து முழுதுமே தேவப்பெருமானைப் பற்றிய தென்று வேதாந்தவாசிரியருடைய திருவுள்ளம். த்ரமிடோபநிஷத்ஸாரத்தில் ஐந்தாம் சுலோகத்தில் "பரத்வாத்யைரித்தம் பரிசரணஸக்தோ குணகணை : ப்ரயும் ஸேவா யோக்யம் ப்ரதம சதகே வீக்ஷ்ய வரதம்" என்றருளிச் செய்தது கருதத்தக்கது.[d]தேவப்பெருமாள் ஸந்நிதியில்எழுந்தருளியிருக்கும்நம்மாழ்வார் "……துயரறு சுடரடி தொழுதெழென் மனனே" என்பதற்கிணங்க ஸ்ரீஹஸ்தமுத்திரையுடன் ஸேவை ஸாதிப்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தகும். திருமங்கையாழ்வார் ஆழ்வாரை இங்கு ப்ரதிஷ்டை செய்தார் என்று பெரியோர் ஸாதிப்பர்.

(3) இனி அருளாளனுக்கும் ஆலிநாடனுக்குமுள்ள தொடர்பைக் காட்டுதும். ஆழ்வாருடைய வைபவத்திலும் அவருடைய திவ்ய ஸூக்திகளிலும் நெஞ்சைச் செலுத்துவோமாக.

(1) வைபவம் :- சோழராஜாவுக்கடங்கின சிற்றரசராகவும் படைத்தலை வராகவும் இருந்த நீலனார் (திருமங்கையாழ்வார்) பகுதித்திரவியமெல்லாவற் றையும் (=அரசற்குச் செலுத்த வேண்டிய திறைப்பணம் முழுவதையும்) திருமாலடியார்களைப்பூசிப்பதிலே செலவிட்டு நிற்க, அம்மன்னவனும் கள்ளத்தால் இவரைச் சிறை வைத்த போழ்து பேரருளாளன் இவருடைய கனவில் வந்து தோன்றி (வேகவதீ தீரத்தில்) பொருளிருக்கும் இடத்தை அருளிச் செய்து இதன் மூலம் இவருடைய ப்ரபாவத்தையும் உலகறியச் செய்தான் என்பது குருபரம்பரா ப்ரபாவஸித்தம். வன்சிறையிலவன் வைக்க வாடிநீ முன்துயில வளர்தமிழ்ப் பெரும ! முனநாள் வன்சிறையிலவனுகி வெஞ்சிறையிலவனுகும் வானவர்தம் தனிநாயகம் உன் சிறையை நீக்கிடவும்…" என்று ஆழ்வாரைப் பாடும் வண்ணம் பேரருளாளனருள் பொலியுமன்றே? (வன் சிறையில் அவன் வைக்க=சோழ மன்னன் சிறையில் வைக்க, வன் சிறையிலவனுகி-கம்ஸனுடைய சிறைச்சாலையில் தோன்றியவனுகி, வெஞ்சிறையிலவனுகும்,-வெஞ்சிறைப்புள் என்று போற்றப்பெறும் பெரிய திருவடியின் இறகின் கீழ்வளரும் (அல்லது) . பக்ஷி வாஹநனை தேவப்பெருமாள்.)

(2) ஆரண சாரத்தில் ஆரருளாளன் :- இனி, ஆரணசாரம் என்று குலாவப்படும் பெரிய திருமொழியில் அருளாளன் பெருமை காண்போம்.

சிலர் கருதுவதுண்டு, "போருளாளன்" என்றுற்போன்று அருளிச் செயலில் வருமிடங்களிலெல்லாம் பெருமாள் கோயில் தேவப்பெருமானை விவக்ஷிதராக்கொள்வர்கள் அந்த திவ்ய தேசத்தில் அபிமானம் மிக்கவர்கள் என்று. இங்கு நாம் காட்டு மிடங்கள் அப்படிப்பட்டவையல்ல. பூருவர் அருளிய வற்றையே எடுத்துக் காட்டுவோம்.

(i) "வரந்தரு மாமணி வண்ணனிடம் மணி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி (பெரிய திருமொழி 2-9-3) என்ற விடத்துப் பரமகாருணிகரான பெரிய வாச்சான்பிள்ளை அருள்வது" (வரமித்யாதி) அருளாளப் பெருமாளாய் நின்று ஸர்வாபேக்ஷிதங்களையும் தருகிறவனுக்கு வாஸஸ்தானம்" என்று. இதற்கு அரும்பதவுரை வருமாறு :- "வரந்தருமவனுய் வரதஸ்ஸர்வ பூதானாம் அத்யாபி பரித்ருச்யதே (ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்ம்யம்) என்கிற வரதனுய், மாமணி, சிந்தாமணி போலே ஸர்வாபேக்ஷிதங்களையும் தருகையே ஸ்வபாவமாகவுடை யவனென்று சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றியருளிச் செய்கிறார் 'அருளாளப் பெருமாளாய்' இத்யாதி. அருளாளப் பெருமானென்று தேவப் பெருமாளுக்கு ப்ரஸித்தமான திருநாமமிறே. எம்பெருமானார் யஜ்ஞமூர்த்திக்கு அருளாளப் பெருமாளென்று தேவப்பெருமாளுடைய திருநாமம் சாத்திற்றும் ப்ரஸித்தமிறே.

(ii) பெரிய திருமொழியில் (4-3-10)

"தேனமர் சோலை நாங்கை நன்னகர்வுள் செம்பொன் செய்
கோயிலுனுள்ளே
வானவர் கோனைக் கண்டமை சொல்லும் மங்கையார்
வாட் கலிகன்றி.

இல்விடத்துக்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளும் வ்யாக்யானமாவது…… "திருநாங்கூரிலே செம்பொன் செய் கோயிலினுள்ளே அயர்வறுமமரர்களதிபதி யைக் கண்டமையாய்த்து சொல்லிற்று" என்பது, இங்கு அரும்பதவுரை யாவது "முதற்பாட்டில் பேரருளாளனெம்பிரானை என்று உபக்ரமித்து நிகமத்தில் வானவர் கோனை என்று உபஸம்ஹரிக்கையாலே தேவராஜாபிதாநமுடைய (=தேவராஜனென்கிற திருநாமத்தையுடைய) தேவப் பெருமானைத் தாம் செம்பொன்செய் கோயிலில் கண்டாராக அருளிச்செய்தாரென்று திருவுள்ளம் பற்றி அருளிச் செய்கிறார். அயர்வறுமித்யாதி போக மண்டபத்தை நலமுடையவனென்றும் அருள் கொடுக்கும் படிக்கேழில்லாப் பெருமானை

"அருளினன்" என்றும் கோயில் திருமலைகளில் எம்பெருமானை அநுஸந்தித்தவநந்தரம் பெருமாள் கோயில் தேவராஜனை அயர்வறுமமரர்களதிபதி என்றருளிச் செய்தாரிறே என்று திருவுள்ளம்" இத்யாதியாம்.

ஆக, அருளாளனிடம் அருள்மாரி ஈடுபட்டதைக் காட்டினோமானோம். தேவப்பெருமாள் ஸன்னிதியில் திருமங்கையாழ்வார் தம் திருக்கையில் மணியொன்றினைக் கொண்டவராய் (ரத்நஹஸ்தராய்) ஸேவை ஸாதிப்பது வரந்தருமாமணிவண்ணனருளால் நிதி பெற்றதைக் காட்டுமென்பர்.

இனி, தந்தாவள கிரீசன் திறத்தில் தாழ்வாதுமில் குரவர் தம் ஈடுபாடு பற்றிச் சிறிது விண்ணப்பிக்கிறேன். இம்மலரில் மஹான்கள் அருளிய மாணிக்கங்கள் இது பற்றி ப்ரகாசப்படுத்தும். எனினும் சிறியேனும் ஸத்தை பெறச் சிறிதே விண்ணப்பம் செய்வன்.

(1) அருள் பெற்ற நாதமுனிகள் அருளாளனை மங்களாசாஸனம் செய்தருளியது பற்றிய குறிப்பு பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறுயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலுள்ளது. அ:தாவது :- "வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம், வரதஸ்ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே' என்று சொல்லுகிறபடியே வேகவதியின் வடகரையிலே உத்தமமான கச்சி மாநகரத்திலே கிரிகளில் வைத்துக் கொண்டு மலைகளுக்குள்ளே ச்ரேஷ்டமான ஹஸ்திகிரியின் மேலே புண்யகோடியென்கிற விமாந மத்யத்திலே எழுந்தருளிநின்று ஸர்வசேதநராலும் ஸேவ்யமாநராய் ஸர்வபலப்ரதரான பேரருளாளரையும் ஸேவித்து..." என்பதாம். "செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவரிவர் கொல்!" என்பர் கலியன். "பெருகு மதுவேழம் என்கிறபடியே கல்ப்பற்ற பசுந்தமிழ் பாடும் முதலாழ்வார்கள் அவர்களுக்காச்ரயணீயனை திருவேங்கடமுடையானைப் போலேயும் இரா நின்றார்" என்பது பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளையருளும் வ்யாக்யான ஸ்ரீ ஸூக்தி. திருவேங்கடமுடையானை முதலாழ்வார்கள் பாடியுள்ளமையால் அவனைப் போலத் திருவட்ட புயகரத்தான் ஸேவை ஸாதித்த போது அவர்களுடைய மங்களாசாஸனம் பெற்றவன் என்பது தோன்ற அத் திருக்கோலம் திகழ்ந்தது என்பர் பெரியோர். முதலாழ்வார்களுடைய மங்களாசாஸனத்தை விசேஷித்துப் பெற்றவனன்றே திருவேங்கடமுடையான்! அதுபோல தேவப் பெருமானிடம் ஆழ்வார்களீடுபட்டதைக் கீழே கண்டோம். பரமாசார்யரான சீலங்கொள் நாதமுனிகள் ஈடுபட்டார் என்பதற்கு ப்ரமாணமாகவே குருபரம்பராப்ரபாவ ஸ்ரீ ஸூக்திகளை உதாஹரித்தேனடியேன்.

(2) ஆளவந்தார் ஈடுபாடு பற்றிக் கேண்மின் : "பகவத்ஸ்தோத்ரம் பண்ணுவார்க்கெல்லாம் ஸ்தோத்ர ரத்நம் முதலானைப் போல....." என்பது சது:ச்லோகீ வ்யாக்யானத்தின் அவதாரிகையில் அபயப்ரதராஜ புத்ர ரத்ந ஸ்ரீ ஸூக்தி. ஸ்தோத்ர ரத்நந்தான் எம்பெருமானார் போன்ற ஆசார்யர்களுக்கு பகவத் ஸ்தோத்ரம் பண்ணியருள வழிகாட்டியாயமைந்தது என்றபடி. அத்தகு சிருடைய திவ்ய க்ரந்தம் பேரருளாளனைப் பற்றியது என்பதனை ப்ரமாணம் காட்டுதும். வடமொழியிலமைந்ததான ப்ரபந்நாம்ருதத்தில் ஒன்பதாம் அத்யாயத்தில் முதல் ச்லோகம் வருமாறு :-

"தத : ஸ்ரீரங்க நகரே யாமுநார்யோ யதீச்வர :
தேவராஜம் ஸமுத்திச்ய ஸ்தோத்ரரத்நம் விதாய ச"

என்பதாம். இந்நூலை (ப்ரபந்நாம்ருதத்தை) அரிய முன்னுரையுடனும் அழகிய (தம்முடைய) தமிழுரையுடனும் வெளியிட்டுள்ளார் ஸுதர்சனரான ஸ்ரீ. உ. வே. புத்தூர் க்ருஷ்ணமாசார்யஸ்வாமி. ப்ரக்ருதச்லோகத்தின் உரை. "அதற்குப் பின் யதிகளின் தலைவரான யாமுநாசார்யர் தேவப்பெருமானைக் குறித்து ஸ்தோத்ரரத்நத்தை அருளிச் செய்து"...என்பதாம்.

"யஸ்ய ப்ரஸாத கலயா" இத்யாதி ச்லோகம் ஆளவந்தார் தேவப் பெருமானைச் சரணம் புகுமவராய் அருளிச் செய்ததென்பது விச்வவிதிதமே.

(3) பெரிய நம்பிகள் மதுராந்தகத்திலே ஏரிகாத்த பெருமாள் கோயிலில் திருமகிழடியிலே எழுந்தருளியிருந்து ஸ்ரீ ராமாநுஜர்க்குத் திருவிலச்சினை முதலானவையருளினர். பின்பு நிகழ்ந்தது பற்றிய குருபரம்பராப்ரபாவ ஸ்ரீ ஸூக்திகள் ஸேவிக்கவுரியன. "இளையாழ்வாரும் ப்ரமாணம் எது? ப்ரமேயம் எது? ப்ரமாதாக்கள் ஆர்? என்று பெரிய நம்பியைக் கேட்க, அவரும் மாதவன்பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு என்கிறபடியே ப்ரமாணமும் த்வயமே. ப்ரமேயமும் இத்தால் ப்ரதிபாத்யனும் ஸ்ரீ ஹஸ்திகிரியின் மேலே கையும் திருவாழியுமாய் நிற்கிற பெருமாளே; ப்ரமாதா நீர் தாம். இந்த ப்ரமாணத்தாலே ப்ரமேயத்தை அநுபவிக்க வாரும் என்றருளிச் செய்து..."

(4) திருக்கச்சி நம்பிகளீடுபாடு ஸுப்ரஸித்தம். இன்னிசைக் கச்சேரி வித்வான் பாடிக்கொண்டிருப்பர். ரஸிகர் ஒருவர் கூறுவார். ஹூம்! இந்தப் பாட்டை.....அவாள் பாடவேண்டும்- கேட்க வேண்டும் என்று. இது கிடக்கட்டும். குருபரம்பரா ப்ரபாவத்தில் "....திருக்கச்சி நம்பி பேரருளாளர் திருவடிகளே சரணம்-என்னுமா போலேயும் எம்பெருமானார் கெல்வப்பிள்ளை திருவடிகளே சரணம்என்னுமா போலேயும் ஒருவர்க்கும் இசைந்திராது" என்னும் ஸ்ரீஸூக்தி நெஞ்சை நெகிழ்விக்குமதன்றே?

(5) நம்முடைய தரிசனம் "எம்பெருமானுர் தரிசனம்" என்று நம் பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்த தரிசனம். அவ்வெம்பெருமானுர்க்கு ஆசார்யரான பெரியநம்பிகள் திருவிலச்சினை ப்ரஸாதித்தபோது அர்ச்சாரூபியான தேவப்பெருமாளையும் ப்ரஸாதித்தருளினர் என்பது—

"...தஸ்மை லக்ஷ்மணுர்யாய தீமதே ஆபந்ந ரக்ஷகம் மத்ரம் தாஸ்ய நாமாதிநம் ததா அர்ச்சாரூபம் தேவராஜம் ப்ரததௌ சிஷ்யவத்ஸல : என்பதனுல் போதரும் (11-41, 42. ப்ரபந்நாம்ருதம்)
"காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்டவன்பாளன்" என்று ப்ரபந்ந காயத்ரி ஓதுகின்றதுண்மையல்லதில்லை யென்க.

(6) யதிவரபுநரவதாரபூதரான வரவரமுநிவரர்க்குப் பேரருளாளனிடம் உள்ள ஈடுபாட்டுக்கு அவர் அருளிச்செய்த ஸ்ரீ தேவராஜமங்களம் மற்றும் முக்தக ச்லோகங்கள் ஆகியவை சான்றும். முக்தகம் வருமாறு :-

"ஸ்ரீமத் த்வாரவரம் மஹத்தி பலிபீடாகர்யம் பணீந்த்ர ஹ்ரதம்
கோபீநாம் ரமணம் வராஹ வபுஷம் ஸ்ரீபட்டநாதம் முநிம்
ஸ்ரீமந்தம் சடவைரிணம் தலிரிபும் ஸ்ரீபக்திஸாரம் முநிம்
பூர்ணம் லக்ஷ்மணயோகிநம் முநிவராந் ஆத்யாந் அத த்வாரபௌ,
ஸ்ரீமந் மஜ்ஜந மண்டபம் ஸரஸிஜாம் ஹேதீச போகீச் வரௌ
ராமம் நீலமணிம் மஹாநஸவரம் தார்ஷ்யம் நருஸிம்ஹம் ச்ரியம்
ஸேநாந்யம் கரிபூதரம் ததுபரி ஸ்ரீபுண்யகோட்யாம் ஹரிம்
தந்மத்யே வரதம் ரமா ஸஹசரம் வந்தே ததீயைர் வ்ருதம்"

ஆழ்வாராசார்யர்கள் அநுபவம் ஒருவாறு தலைக்கட்டப்பெற்றோம். பேரருளாளனுக்கமைந்த மற்றும் சில பெருமைகளைப்பேசி விடைபெறுகிறேன்.

(1) எம்பெருமானுர் திருக்கச்சி நம்பிகள் முலமாகத் தேவப்பெருமாளுடைய திருவுள்ளத்தை அறியப்பெற்றுத் தெளிவுற்று ஸ்ரீ பாஷ்யம் ஸாதித்தார் என்பர் பெரியோர்.

(2) ஈடு முப்பத்தாறுயிரப்படியைப் ப்ரவர்த்திப்பித்தவர் தேவப்பெருமாளே என்பது ஈட்டேத்தனியனுலும் (பிள்ளைலோகம்ஜீயர் வ்யாக்யானம் ஸேவிக்க). உபதேசரத்தின மாலையில் 'ஆங்கவர்பால் பெற்ற' என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தாலும் உணரப்படும்.

(3) ரஹஸ்ய ப்ரவர்த்தகனும் பேரருளாளனே. அதாவது அஷ்டாதச ரஹஸ்யங்களையும் அருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர் பேரருளாளப் பெருமாளுடைய திருவவதாரமென்பது ஸ்ரீ வசனபூஷண வ்யாக்யானத்திலே

(அவதாரிகையில்) ஸ்ரீ மணவாள மாமுனிகளால் மணற்பாக்கத்து நம்பிகள் ஐதிஹ்யத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளதன்றே! திருவத்தியூர் வரதருடைய திருவவதாரமென்று பிள்ளைலோகம் ஜீயரும் புகழ்வரன்றே. பிள்ளை யுலகாசிரியர் திருவோணத்தில் திருவவதரித்தவர். தேவப்பெருமாள் திருவோணப் புறப்பாடு கண்டருள்வது இக்காரணம் பற்றியே என்பர் பெரியோர்.

பேரருளாளனுக்குப் பழம்பெருமைதானே? என்ன வேண்டா. நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியிருள் மிடைதரும் இக் காலத்தும் தன்னருளால் யாவரையும் ஈர்க்கின்றன்.

இப்பெருமான்தன் பேரழகிலே ஈடுபட்டவொருவர் கூறினர் : "ஆண்டாள் பேரருளாளனைச் சேவித்திருந்தால் இவர்க்கே கண்ணி (மணமாலை) உகந்தளித் திருப்பாள் என்று.

இருமறையும் பொலியத் தொண்டர்தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த வேழம் வீதியார வந்து 'கஞ்சி வரதப்பா'! என்று நெஞ்சுநெகிழ அழைக்கச் செய்கிறது பன்னூட்டவரையும். திவ்ய ப்ரபந்த வ்யாமோஹமே வடிவான பேரருளாளனுக்குத் தொண்டு பூண்டமுதமுண்ணும் பெரியோருடைய நியமனத்தால் அவன்தன். பெருமைக் கடலில் சில திவலைகளை விண்ணப்பித்தேன். குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருளப் ப்ரார்த்திக்கின்றேன்.

அத்தத்தில் வந்த அருளாளா நின்னபய
அத்ததைக் காட்டி அருளாயோ-அத்தத்தை
மேவும் இளங்கனியே மேலாய் மலர்மார்பா!
தேவஉளங்கனிந்தே.

(...அச்யுத பதாம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹத : என்பதை ஸ்மரிப்பிக்கும் வகையில் ருக்மவதி விருத்தத்தில் தொடங்கி "என்னெஞ்சமேயான்" தன்னை நினைவூட்டும் வெண்பாவிலே விண்ணப்பம் தலைக்கட்டப் பெற்றேனடியேன்).



With best compliments from

SAVERA HOTEL



69, Dr. Radhakrishnan Road,
MYLAPORE,
MADRAS - 600 004.

திருநாராயணபுரம்



செல்வநாரணன்

P. B. R. Varadachy

ஸ்ரீ :



அருளிச் செயல் பெருமை

ஸ்ரீ உ. வே. கோயில் பிரதிவாதி பயங்கரம்
ராமாநுஜாச்சாரியார் ஸ்வாமி
(ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதி
அத்யாபகர்)

'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்' என்று உபயவிபூதி நாதனை எம்பெருமானுக்கு நித்யவிபூதி லீலாவிபூதி இரண்டும் உரியனவாயிருந்தாலும் நித்யவிபூதியிற் காட்டிலும் இருள்தருமா ஞாலம் எனப்படுகின்ற இந்த லீலாவிபூதியினிடத்திலேயே அதிகமான ப்ரீதி செல்லாநிற்கும். தமக்கு நல்ல படுவான பலபிள்ளைகளிருப்பினும் முடம், கூன் முதலான பாடமமற்ற பிள்ளைகள் பக்கலிலேயே தந்தையின் இதயம் பதிந்து கிடக்குமாப்போலேயாயிற்று இது. இதனைக்கொண்டே 'கடல் ஞாலத்து அளிமிக்கான்' என்றார் ஆழ்வார். இத்தகைய ஆதரத்தினால் பரமகாருணிகனான ஸர்வேச்வரன் இவ்விருள்தருமா ஞாலத்தில் 'அலை நீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல்' ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபடுகிற சேதனர்கள் தன்னை அறிந்து ஆட்பட்டு உய்ந்துபோம்படி 'கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்தான்' என்கிறபடியே சாஸ்த்ரங்களைக் காட்டிக்கொடுத்தான். தானே ஸ்ரீராமக்ருஷ்ணாதியவதாரங்களைப் பண்ணி அறிவிலா மனிசர்களின் கண்காணநின்று தன் அனுஷ்டானங்களாலும் உபதேசாதிகளாலும் திருத்தப்பார்த்தான். 'மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து, எங்கள் மாதவனே கண்ணுறநிற்கிலும் காணகில்லா உலகோர்கள்' என்கிறபடியே எம்பெருமானுடைய இவ்வுபாயங்கள் ஒன்றும் பயன் தரவில்லை. அதனால் 'பார்வை காட்டி ம்ருகம் பிடிப்பாரைப் போலே மனுஷ்ய ஜாதியரைக்கொண்டு திருத்தவேணுமென்று பார்த்து- ஆழ்வார்களை அவதரிப்பித்தருளினான். அவ்வாழ்வார்களும் எம்பெருமானாலே மயர்வறமதிநலமருளப் பெற்று தமது பக்தி உள்ளடங்காமல் வழிந்து புறப்பட்ட ஈரச்சொற்களாலே 'ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய பேரும் தாள்களுமே பிதற்ற' என்கிறபடியே லோகமடங்கத் திருத்தி வாழ்வித்தருளினார்கள். அவர்கள் சோதிவாயினின்றும் புறப்பட்ட அவ்வீரச் சொற்களுக்கே 'அருளிச்செயல்' என்பது திருநாமம்.

உலகில் மிகச் சிறந்த ஒன்றைச் சொல்லுமிடத்து 'திவ்யம்' என்ற சொல்லைப் பயன்படுத்துதல் வழக்கமாக உள்ளது. திவ்யமான ததீயாராதனை, திவ்யமான உபந்நியாஸம், திவ்யமான பெருமாள் ஸேவை இத்யாதிகள் பேசப்படுகின்றன. கண்ணபிரான் தன்னுடைய அவதார சேஷ்டிதங்களின் மேன்மையைச் சொல்லும்போது 'ஜந்ம கர்மச மேதிவ்யம்' என்கிறான் பகவத்கீதையில். அந்த திவ்ய சப்தத்தைச் சேர்த்து ஆழ்வார்களுடைய அருளிச்செயலைத் 'திவ்யப்ரபந்தம்' என்று வழங்கினர்கள். இந்த வழக்கு ஒன்றே இதன் பெருமையைப் புலப்படுத்தா நிற்கும்.

எம்பெருமான் கீதாசார்யனாய் இருந்து அர்ஜுனனை வ்யாஜமாகக் கொண்டு உலகுக்கு உபகரித்த கீதா சாஸ்த்ரத்தோடு ஒத்ததே ஆழ்வார் அருளிச் செயல் என்பதை 'மனஞ்செய் எல்லையில் ஞானவின்பத்தை" என்று தொடங்கும் சூர்ணையில் ஆதாரங்களோடு எடுத்துக்காட்டி 'அன்றுரைத்த கீதா ஸமமென்னும்' என்று முடிக்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருதயத்தில். அவரே அடுத்த சூர்ணைகளில் 'அது தத்வோபதேசம், இது தத்வதர்சி வசனம் என்று தொடங்கி 'பகவான் ஞானவிதி பணிவகை என்று இவரங்கீகாரத்தாலே அதுக்கு உத்கர்ஷம்' என்றும் 'அந்தமிலாதி அம் பகவன் வணக்குடைத்தவநெறி வழி நின்று' என்றும், 'ஞானவிதி பிழையாமே' என்றும், 'பண்டேபரமன் பணித்த பணிவகையே' என்றும் பரம வைதிகரான இவ்வாழ்வார் அந்த கீதையை ப்ரமாணமாகக் கொள்கையாலேயே கீதைக்கு உத்கர்ஷமுண்டாயிற்று என்கிறார். இதனால் பகவானே சோதிவாய் திறந்து அருளிச் செய்த கீதையினும் மேம்பட்டது ஆழ்வார் அருளிச்செயல் என்பது போதரும்.

இவ்வருளிச் செயலுடையவும் இதை அதிகரிப்பவருடையவும் ஏற்றத்தைச் சொல்லுகிறார் ஆழ்வார் தாமே,

> 'ஏற்கும் பெரும் புகழ் வானவரீசன் கண்ணன் தனக்கு
> ஏற்கும் பெரும் புகழ் வண்குருகூர்ச் சடகோபன் சொல்
> ஏற்கும் பெரும் புகழ் ஆயிரத்துள் இவையுமோர் பத்து
> ஏற்கும் பெரும் புகழ் சொல்ல வல்லார்க்கில்லை சன்மமே'.

என்று. வானவரீசன் கண்ணன் தனக்கு ஏற்கும் பெரும் புகழ், வண்குருகூர்ச் சடகோபனுக்கு ஏற்கும் பெரும் புகழ், ஆயிரத்துக்கு ஏற்கும் பெரும்புகழ், சொல்லவல்லார்க்கு ஏற்கும் பெரும்புகழ் என்று இங்ஙனே இணைத்துப்பலகால் ஸ்ரீகாஞ்சீ அண்ணா ஸ்வாமி உபந்நியாஸம் செய்ததைக் கேட்டிருக்கிறேன் அடியேன். இதனால் எம்பெருமானுக்கும், அவனைக் கவிபாடிய ஆழ்வார்க்கும்,

ஆழ்வார் அருளிய திவ்யப்ரபந்தத்துக்கும், அந்தத் திவ்யப்ரபந்தத்தை ஓதவல்ல அத்யாபகர்களுக்கும் பெரும்புகழ் ஏற்கும் என்றாராயிற்று.

ஆழ்வார் தமது திருவாய்மொழியை முடிப்பதற்கு முன்னமேயே ஒரு வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார். எதிர்காலத்தில் நிகழவிருப்பதொன்றை ஆழ்வாருடைய ஞானக்கண்ணுக்கு எம்பெருமான் இலக்காக்க அதைப்பேசுகிறார். இவ்விருள்தருமா ஞாலத்திலிருந்து சிலபேர்கள் முக்தர்களாய்ப் பரமபதத்தைச் செல்கிறார்கள். அவர்களைப் 'பதியினிற் பாங்கினிற் பாதங்கள் கழுவினர்' இத்யாதிப்படியே எதிர்கொள்கிறார்கள் நித்யஸூரிகள். இரு சாராருக்கும் இனிய சம்பாஷணை தொடங்குகிறது. அது வருமாறு :-

நித்யஸூரிகள்—ஸ்வாமிகளே! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் ?

முக்தர்—நாங்கள் பூலோகத்தில் கோயில், திருமலை, பெருமாள் கோயில் ப்ராந்த்யங்களிலிருந்து வருகிறோம்.

நித்யர்—அப்படியானால் அங்கே திருவாய்மொழி என்றொரு திவ்யப்ரபந்தம் அவதரித்திருப்பதாகச் சொல்லுகிறார்களே? அது உங்களுக்குத் தெரியுமோ?

முக்தர்— ஆஹா தெரியுமே, அது தெரிந்ததனால் தானே நாங்கள் இங்கு வந்தோம்.

நித்யர்— அப்படியானால் அந்தத் திருவாய்மொழியிலிருந்து சில பாசுரங்களைச் சொல்லுங்கள், கேட்போம்.

முக்தர்— ஆஹா சொல்லுகிறோம்; கேளுங்கள்.

அருள்பெறுவா ரடியார்தம் அடியனேற்கு, ஆழியான்
அருள்தருவா னமைகின்றான் அது நமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவியான் வேண்டேன்
மருளொழி நீ மடநெஞ்சே வாட்டாற்றானடி வணங்கே

என்று தொடங்கித் தொடர்ச்சியாகப் பாசுரங்களைச் சொல்லுகிறார்கள். இவற்றைக் கேட்ட நித்யஸூரிகள் உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து "இன்னம் சொல்லாய்! இன்னம் சொல்லாய்' என்று அலுக்காமல் கேட்கிறார்கள். இந்தக் கதை

> காட்டித்தன் கனைகழல்கள் கடுநரகம் புகலொழித்த
> வாட்டாற்றெம் பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன்
> பாட்டாய தமிழ்மாலை ஆயிரத்துளிப் பத்தும்
> கேட்டு, ஆராவானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே

என்னும் அருமைப்பாசுரத்தால் அறியக் கிடக்கின்றது, இங்கு 'இப்பத்தும்கேட்டு' என்பதனால் 'அருள்பெறுவார்' என்கிற பதிகம் மட்டும் கொள்ளப்படுவதன்று. இது உபலட்சணம்; திருவாய்மொழி ஆயிரத்துக்கும் திவ்யப்ரபந்தம் முழுவதற்கும் இது உரியதே.

இனி, திருவாய்மொழியினேற்றத்தை 'நண்ணுவசுரர் நலிவெய்த' என்னும் பாசுரவ்யாக்யானத்தில் 'அவ்யபதேச்யனுக்கு அனந்தரத்திலவன் வார்த்தை, என்று பெரியோர் பணிப்பதைக் கேண்மின்.

நண்ணுவசுரர் நலிவெய்த, 'அவ்யபதேச்யனுக்கு அனந்தரத்திலவன், தமப்பன் செய்ததைக்கேட்டு "இவன் என் செய்தானுன்" என்று கர்ஜித்தான்; 'ஒரு மதிலை வாங்குங்காட்டில் அத்தர்சனம் குலைந்ததோ? திருவாய்மொழி என்றும் ஸ்ரீராமாயணம் என்றும் வலியன இரண்டு மஹாப்ரபந்தங்கள் உண்டாயிருக்க" என்றுணைத்து. இப்படி உகவாதார் நெஞ்சுகக்கும் படியான ப்ரபந்தமாயித்து' என்பது ஈட்டு ஸ்ரீஸுக்தி. இதன் விவரணம்:

பண்டு பட்டரை ஸ்ரீரங்கத்தினின்றும் வெளியேற்றுவித்து பரம விஷ்ணுத்வேஷியாயிருந்து க்ருமிகண்டன் என்று கழுத்தில் கட்டி புறப்பட்டு மாண்டுபோனுன் ஒரு சோழமன்னன், அவனை நம் ஆசார்யர்கள் பெயர் சொல்லவும் கூசி 'அவ்யபதேச்யன்' என்று வ்யவகரித்தார்கள். அவன் மகன் 'அனந்தரத்திலவன்' எனப்படுகிறுன் இங்கு. அம்மன்னன் இறந்தபோது இம் மகன் மிகச் சிறிய வயதினனுய் இருந்தபடியால் இராச்சியத்தை மந்திரிமார்களிடம் ஒப்படைத்து "என் மகன் பெரியவனுனதும் கொடுங்கள் என்று பணித்து மாண்டு போனுன் அவன். பின்மைந்தன் பெரியவனுய் அரசு கட்டிலேறியபோது அமைச்சர்கள் இராச்சியத்தையும் தகப்பன் விட்டுப்போன செல்வத்தையும் அம்மைந்தனிடம் ஒப்படைக்க, மகன் கண்டு "என் தகப்பன் பெரிய செல்வந்தனுய் ஏராளமான நிதி படைத்திருந்தானென்று கேட்டிருக்கிறேனே; இவ்வளவுதானு அவன் வைத்த செல்வம்?" என்று கேட்டான், அதற்கு அவர்கள் "உன் தகப்பன் ஏராளமான செல்வம் ஈட்டியது உண்மையே. ஆனுல் அந்த த்ரவ்யங்களைக் கொண்டு பல சிவாலயங்களைக் கட்டுவித்தான்; பல விஷ்ணுவாலயங்களை இடித்தான்" எனருர்கள், மைந்தன் மிக்க விவேகியாகையாலே "என் தகப்பன் சிவன்கோயில்கள் கட்டினுல் கட்டட்டும். ஆனுல் விஷ்ணுவாலயங்களை இடிக்கச் செல்வத்தைச் செலவிட்டான் என்கிறீகளே? சில விஷ்ணுவாலயங்களை இடித்த மாத்திரத்தில் வைஷ்ணவ தர்சனம் அழிந்துவிடுமோ? ஒரு திருவாய்மொழியும் ஸ்ரீராமாயணமும் உண்டாயிருக்க அம்மதத்துக்கு அழிவுண்டாமோ? இவ்வளவு மதியீனனு என் தந்தை? என்று வருந்தினுன் என்பதாம்.

இன்னுரு சிறிய ஐதிஹ்யம் கேளுங்கள், முன்னுளில் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்த அரையர் ஒருவர் அடிக்கடி வெற்றிலை போடும் பழக்க முடையவராய் இருந்தார். எப்போதும் அவர்கையில் வெற்றிலை பாக்குப்பெட்டி யொன்றிருக்கும். அந்தப் பெட்டிக்குள் ஒரு ஸ்ரீமூர்த்தியையும் (சாளக்கிராமம்) எழுந்தருளப்பண்ணி வைத்திருந்தார். அந்த ஸ்வாமி, வெற்றிலை அமுது செய்யும் வேளைகளில் 'பாக்கு' என்று நினைத்து மறதியினுல் அந்த ஸ்ரீமூர்த்தியை எடுத்து வாயில் போட்டுக்கொள்வர். கடிக்கும்போது அது தெரிந்து உடனே வெளியே உமிழ்வர் தீர்த்தப் பாத்திரத்திலிருந்து சிறிது தீர்த்தம் சேர்த்துத் திருமஞ்சனம் செய்வர். பிறகு கையில் தாளத்தையும் கொண்டு ஒரு பாசுரம் ஸேவிப்பர்; மறுபடி ஸ்ரீ மூர்த்தியை வெற்றிலைப் பெட்டியில் எழுந்தருளப்பண்ணி விடுவர். இதுபோலவே இவர் அடிக்கடி செய்து வருவது வழக்கமாயிருந்து வந்தது. இந்தச் செயலைப் பலகால் கண்ட வேருரு ஸ்ரீவைஷ்ணவர்-அவர் தனிகருங்கூட-"ஐயோ பெருமாளிடம் இப்படி அபசாரப்படுகிறுரே இவர்" எனமனம் நொந்து அந்த அரையரை அணுகி "ஸ்வாமிந்! அந்த ஸ்ரீமூர்த்தியை அடியேனுக்கு எழுந்தருளப் பண்ணித்தரவேணும். அதற்கு விலையாக அடியேன் ஒரு கோட்டை நெல் கொடுக்கிறேன்" என்று பிரார்த்தித்தார். அரையரும் மனமுவந்து "அப்படியே தருகிறேன், கொள்ளுங்கள்" என்று சொல்லி ஸ்ரீ மூர்த்தியை வெற்றிலைப் பெட்டியிலிருந்து எடுத்து அந்த ஸ்வாமியிடம் எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து விட்டார். பெருமானைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீவைஷ்ணவர் மிக்க உவப்புடனே சென்று இவ்வளவு நாள் இந்த அரையர் பட்டு வந்த அபசாரங்களெல்லாம் தீரும்படி அந்த ஸ்ரீ மூர்த்தியை பால், தயிர், நெய் முதலியவற்றுல் திருமஞ்சனம் செய்து, விசேஷமான தளிகைகளும் ஸமர்ப்பித்துத் திருவாராதனம் நடத்திவரத் தொடங்கினர். பெருமானுக்கு இழைக்கப்பட்ட ஒரு பெரிய அநீதியை நீக்கிப் புனிதமாக்கிய திருப்தி அவர் மனத்திலிருந்தது.

ஓரிரு நாட்களுள் அவர் ஒருகனவு கண்டார். எம்பெருமான் அவர் கனவில் எழுந்தருளி, "எனக்கு எதற்கடா இந்த நெய்யும் பிய்யும்? அருளிச்செயல் ஊறியவாயில் பொருந்திக் கிடந்து தேனும் பாலும் அமுதுமாகிய செவிக்கினிய செஞ்சொல்லைப் பலகாலும் கேட்டு மகிழ்ந்திருந்த என்னை இங்குக்கொண்டுவந்து இப்படிப் பாடுபடுத்தி விட்டாயே; என்றருளிச்செய்தார். இந்தக் கனாக்கண்டு அந்த பக்தர் மனங்குலைந்து நடுங்கி "அந்தோ பகவதபசாரம் பாகவதபசாரம் இரண்டும் படநேர்ந்ததே" என்று அனுதபித்து உடனே அந்த ஸ்ரீ மூர்த்தியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அரையரிடம் சென்று, "ஸ்வாமிந்; அடியேன் கனக்க அபசாரப்பட்டேன்; க்ஷமித்தருளவேணும், இந்த ஸ்ரீ மூர்த்தியைத் தேவரீரே ஏற்றுக்கொள்க. இதுவரை சிலபோது வெற்றிலைப் பெட்டியிலும்

சிலபோது தேவரீர் வாயிலுமாகக் கொண்டிருந்தது. இனி அப்படிச் செய்ய வேண்டா; எப்போதும் தேவரீரது வாயிலேயே எழுந்தருளப்பண்ணி வைத்துக் கொண்டிரும்" என்று சொல்லி, முன்னிலும் இரட்டியாக இருகோட்டை நெல்லும் தந்து அகன்றுபோனார் என்பதே அது. இதனால் எம்பெருமானுக்கு அருளிச்செயலில் எவ்வளவு வ்யாமோகம் என்பதும் அருளிச்செயல் வல்லாரிடத்து அவன் கொண்டிருந்த அபிமானமும் தெளிய விளங்குவதன்றே!

மற்றுமோர் அற்புதக் கதைகேளீர்! ஆழ்வார் திருநகரி எனப்படுகின்ற திருக்குருகூர்ப்ராந்த்யத்தில் நிகழ்ந்த ஐதிஹ்யம். நம்மாழ்வார் திருவவதரித்த திருக்குருகூர் தாமிரபர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள திவ்யஸ்தலமாகும். பலகாலம் முன்பு அந்த நதிக்கு எதிர்க்கரையில் வாழ்ந்து வந்த ஒரு நாய் நாள்தோறும் காலை வேளையில் நதியைக் கடந்து இக்கரை வந்து ஆழ்வார் திருநகரித் திருவீதிகளில் அலைந்து திரிந்து அங்கு எறியப்படுகிற எச்சில் இலைகளில் எஞ்சியுள்ள சோறு கறிகளையுண்டு மாலைப்போது வந்தவாறே திரும்பியும் நதியைக் கடந்து தன்னூர்சேரும். இது பழக்கமாக நடந்து வருகிறது. ஒரு நாள் அந்த நாய் வந்து வீதிகளில் எறியப்பட்ட எச்சில்களைத் தின்று ஆற்றில் இறங்கித் திரும்பிக் கொண்டிருக்கும்போது தாமிரபர்ணி நதியில் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. சிறிது சிறிதாக நாய்க்கு வெள்ளம் அண்டாமற் போயிற்று. எவ்வளவு முயன்றும் நாயினால் நீந்தவோ வெள்ளத்தின் வேகத்தைச் சமாளிக்கவோ முடியவில்லை. அது நீர்ப்பெருக்கில் முழ்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் அந்த நாயின் தலை வெடித்து உள்ளிருந்து ஒரு ஜோதிஸ்ஸு கிளம்பி வானத்தில் எழுந்து உயர்ந்து போய் மறைந்தது. இந்த நிகழ்ச்சியை முதலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு பக்தர். ஆஹா! என்ன ஆச்சரியம்! நாய் பரமபதம் சேர்ந்து விட்டது. திருக்குருகூர் வீதி எச்சிலையுண்ட ஸுக்ருதத்தால், 'போனகம் செய்த சேடம் தருவரேல் புனித மன்றே' என்பதைக் கற்றறியாத நாய்க்கும் பரமபதம் கிட்டிற்று.

அந்த பக்தர் உளமுருகிப் பாடினார் ஒரு பாட்டு..

வாய்க்குங் குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபத மளித்தா யந்தநாயொடிந்தப்
பேய்க்குமிடமளித்தால் பழுதோ பெருமான் மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க் கடலே

என்பதே அது.

'நல்லார் நவில் குருகூர்' என்று திருக்குருகூரில் வாழ்பவர்கள் எல்லாரும் பரமஸாத்விகள், 'தொண்டர்க் கமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்' என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தபடி மன்னிய சீர்மாறன் கலை உணவாகப் பெற்றவர்கள்; அதாவது அருளிச்செயல் வல்லவர்கள். அதனாலேயே அவர்கள் அமுது செய்த சேடத்தை உண்ட நாய்க்கு மோக்ஷம் கிட்டியது. இதனால் அருளிச்செயலின் மேன்மை அளவிடற்கரியதென்று புலனுமன்றே?

இத்தகைய ஏற்றங்களையுடைய அருளிச்செயல் யார்யார்க்கு இன்பஞ் செய்யும் என்று கேட்டுக்கொண்டு ஆழ்வார் பாசுரங்களைக் கொண்டே விடையளிக்கிறார் ஆசார்யஹருதயம் அருளிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். 'என்னுத் தமிழர் இசைகாரர் முதற் பத்தர் வானவர் என்னம்மான் பார்பரவென்னும்படி ஸேச்வர விபூதி போக்யமான பாலோடமுதன்ன மென் மொழி முகஞ்செய்தது' என்பது அவர் ஸ்ரீஸூக்தி, இதில் 'என்னுவிலின்கவி' என்பதனால் இது முதலிலே அருளிச்செய்கிற ஆழ்வார்க்கு இன்பந்தருவது என்பது புலனாகிறது. 'பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்' என்றும் 'தூமுதற் பத்தர்க்குத்தான் தன்னைச் சொன்ன' என்றும் அருளிச் செய்தபடியால் தமிழ்ப்புலவர், ஸங்கீத ரஸிகர், பக்திமான்கள் ஆகியோர்க்கு இன்பஞ்செய்வது என்பது புலனாகும். 'கேட்டு ஆரார் வானவர்கள்' என்றதனால் நித்யஸூரிகளுக்குப் பரமபோக்யானது என்பது போதரும். 'பண்ணூர் பாடலின் கவிகள் யானுய்த் தன்னைத் தான்பாடி, தென்னுவென்னும் என்னம்மான்' என்கையாலே ஸர்வேச்வரனுக்கும் போக்யமென்பது பெறப்பட்டது. 'பார்பரவின் கவிபாடும் பரமரே' என்கையாலே பார்முழுவதிலுமுள்ளவர்கள் அநுபவிக்க உரியது என்பது அறியப்படுவதாயிற்று.

இங்ஙனமாய பெருமை வாய்ந்த அருளிச்செயலை ஸ்ரீமந் நாதமுனிகள் திவ்ய தேசங்களில் பெருமாள் திருவாராதனத்துக்கு அங்கமாக ஆக்கி ஸ்ரீவைஷ்ணஸ்வாமிகளைக்கொண்டு அந்தத் திருவாராதன காலங்களிலும் திருவிழாக் காலங்களிலும் பாராயணம் செய்யும்படி நியமித்துள்ளாராக வேணும். அதனாலேயே மிகப் பழங்காலந் தொடங்கித் திவ்ய தேசங்களில் திவ்ய ப்ரபந்த ஸேவாகாலம் ஏற்பட்டுள்ளது. கம்பர் தாமியற்றிய சடகோபரந்தாதியில்,

அந்தமிலா மறையாயிரத் தாழ்ந்த வரும்பொருளைச்
செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும்
தந்தம் விழவு மழகுமென்னும் தமிழ்ர் கவியின்
பந்தம் விழா வொழுகும் குருகூர்வந்த பண்ணவனே?

என்று பாடியுள்ளார். ஆழ்வார் அருளிச்செயல் அவதரித்திரா விட்டால் ஸ்ரீ வைஷ்ணர்களின் பிகதி என்னுகும்? ஆலயங்களில் விழாக்களின் அழகு என்னுகும்? என்று கேட்கின்ருர். அக்காலத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆழ்வார் அருளிச்செயலைக் கற்றே பெருமை பெற்றிருந்தார்கள் என்பதும் ஆலயங்களில் திருவிழாக்கள் திவ்யப்ரபந்த ஸேவாகாலங்களைக் கொண்டே மேன்மை பெற்றிருந்தன என்பதும் புலப்படும்.

திருவாய்மொழியின் கடைசிப் பாசுரவ்யாக்யானத்தில், "ஆழ்வார்க்குப் பின்பு நூருயிரங்கவிகள் போருமுண்டாயித்து; அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசியற்று..."என்பதான ஈட்டு ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. இதனுல் ஆழ்வார் அருளிச்செய்த கவிகளுக்கு ஈடு இணை இல்லை என்பதுணரப் படும். பின்வரும் பழந்தமிழ்ப் பாடல் ஒன்றும் இதனை வலியுறுத்துமாறு காணீர்.

"ஈயாடுவதோ கருடர்க்கெதிரே இரவிக்கெதிர் மின் மினியாடுவதோ
நாயாடுவதோ உறுமிப்புலிமுன் நரிகேசரிமுன் நடையாடுவதோ
பேயாடுவதோ அழகூர்வசிமுன் பெருமானடிசேர் வகுளா பரணன்
ஓராயிரமா மறையின் தமிழின் ஒரு சொற்பொருமோ
உலகிற் கவியே."



'ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல் வாழி"

With best Compliments from :



DYNAVISION LIMITED

Makers of Black & White and Colour Television Receivers

With best compliments from :

SRI MURUGAN FINANCE



30, METTU STREET,
KANCHIPURAM - 631501

With best compliments from



"A WELL WISHER"

With our best wishes

Regd No. 31/83 PHONE: 2788

SRI MAHALAKSHMI
CHIT & FINANCE CORPORATION



92, Munusamy Mudaliar Avenue
(Upstairs)
KANCHIPURAM – 631501

With our best wishes



A.R.S. FINANCE

18, Thirukkachi Nambi Street,
KANCHEEPURAM - 631503

With Best Compliments from

S. K. SENJAN CHETTIAR & SONS.,

TANNERS

17, Commander-in-Chief Road,

MADRAS - 600006

★

PHONE : 470391
473509
471909



Compliments from

V. P. VARADHAN, New Delhi

ஸ்ரீ :

கைங்கர்யத்தின் பெருமை

ஸ்ரீ உ. வே. திருமலை அனந்தாண்பிள்ளை சதாபிஷேகம்
கோவிந்த நரசிம்மாசாரியார் ஸ்வாமி.

கைங்கர்யம் என்னும் சொல்லுக்குப் பொருள் :

ஸ்வாமி திறத்தில் தாஸ பூதன்- 'கிங்கரவாணி கிம் கரவாணி - எத்தைச் செய்வேன் என்று எப்போதும் ஓர் அடிமைச் செயல் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவன் ''கிங்கரன்'' எனப்படுகிறான். அவனின் செயலுக்கு 'கைங்கர்யம்' எனப் பெயர். தமிழில் அடிமைச்செயல், பணிவிடை எனக் கொள்ளலாம்.

தகாத விஷயத்தில் அடிமைச் செயல் துன்பத்தையே பயப்பதால் வெறுக்கத் தக்கதே :

உலகில் உடலைப் பேண எண்ணுபவர்கள் அனைவருமே, அதற்குத் தக்க பொருள் முதலியனவற்றை, அளிக்குமவர்களுக்கு அடிமைகளாய் அடிமைச் செயலில் ஈடுபட்டே உள்ளனர். அவர்கள் அனைவருமே இவ்வடிமைத் தொழிலை உவந்து செய்வதில்லை. கடனே என்றுதான் செய்கிறார்கள். காரணம் - இவ்வடிமைத் தொழில் துன்பத்தையே விளைவிப்பதொன்று. ஆகவேதான் இதனை 'ஸேவாச்வவ்ருத்தி : ஆக்யாதா - அடிமைத் தொழில் என்பது நாயின் செயலெனப்படுகிறது' என்று பெரியோர் இதனை நிந்தனை செய்து கூறுவர்.

வகுத்த விஷயத்தில் அடிமைச் செயல் இன்பத்தையே பயப்பதால் கொள்ளத் தக்கதே :

இவ்வடிமைச் செயலாகிற கைங்கர்யம் ஸ்ரீய: பதியான எம்பெருமான் திறத்திலும், அவன் அடியார் திறத்திலும், தன் ஆசார்யன் திறத்திலும் செய்யப் படுமேயானால் அது 'ஸ்வவ்ருத்தி - தனக்கேற்ற செயல்' எனக்கொண்டாடப்

படுகிறது. இதற்கு முக்கிய காரணம் - ஸ்ரீய: பதியான எம்பெருமானும் அவனைப் பற்றிக் கிடக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களில் ஒருவராய் நமக்கு பஞ்சஸம்ஸ்காரம் ப்ரஸாதித்து வைஷ்ணவருக்கி அறிய வேண்டும் அர்த்தங்களையெல்லாம் அறிவித்த ஆசார்யனும் நமக்கு வகுத்த ஸ்வாமிகளாயிருப்பதேயாம்.

எப்படியெனில், ஒரு பெண்ணுக்கு கணவனே வகுத்த ஸ்வாமி, ஓர் பிள்ளைக்கு தாய் - தகப்பனே வகுத்த ஸ்வாமி என்பது போல. இவர்களிடத்து அன்பிருந்தால் இவர்கள் திறத்து அடிமைச் செயல் இன்பமாகத்தானே உலகில் காண்கிறது.

வகுத்த ஸ்வாமி எம்பெருமானும், அவனடியார்களும், ஆசார்யனுமே :

கணவனும், தாய்தந்தையரும் வகுத்த ஸ்வாமிகளாயினும் அவர்களின் உறவு கர்மமடியாக உண்டான சரீரத்தையிட்டு உண்டானதாகையாலும், அவர்கள் மனைவியும், பிள்ளையும் பணி செய்யும் போதுதான் தங்கள் குறைநீங்கும் குறைவாளர்களாக இருப்பதாலும், ஸத்வம், ரஜஸ், தமஸ் இம் முன்று குணங்களை கொண்டிருக்கும் உடலுடையவர்களாகையாலும் அவர்கள் திறத்தில் அடிமைச் செயல் கைங்கர்யம் செய்பவனுக்குத் துன்பத்தையும் உண்டாக்கிறது. அப்படியல்லாமல் எம்பெருமானும், அவனடியார்களும் ஆசார்யனும் ஒரு காரணமுமின்றியே இச் சேதனனுக்கு வகுத்த ஸ்வாமிகளாகையாலும், தன்படியே இம் முவரும் எல்லாவற்றாலும் நிறைவு பெற்றவர்களாகையாலே, இச் சேதனன் இட்டது கொண்டு உகப்பர்களாகையாலும், எப்போதும் ஸத்வ குணமே தலையெடுக்கப்பெற்றவர்களாகையாலும், இவர்கள் திறத்தில் அடிமைச்செயல் கைங்கர்யம் துன்பம் விளைவிக்காமல் இன்பத்தையே தரும். தவிர, உலகோரும் கொண்டாடும்படியிருக்கும்.

இவர்கள் முவருமே வகுத்த ஸ்வாமிகள் என்பதற்குச் சான்று :

திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்பவை முன்றும் ரஹஸ்யத்ரயம் எனப்படுகின்றன. இவை முன்றுமே எல்லா சேதனர்களுக்கும் கைங்கர்யமே மேலான பயன் என்றோதுகின்றன.

அதில், திருமந்த்ரம் : "இச் சேதநன் ஸ்ரீ: பதியான எம்பெருமானுக்கும், அவனடியார்களுக்கும், தன் ஆசார்யனுக்குமே அடிமைப்பட்டவனுகையாலே இவன் பெற்றிருக்கும் அறிவால் தன்னையும், தனக்குப் பயனையும் உள்ளபடி அறிந்து, ஸ்ரீமானுன நாராயணனுக்கும், அவனடியார்களுக்கும், ஆசார்யனுக்குமே எல்லா அடிமைகளையும் செய்பவனுக வேணுமென விருப்பம் கொள்ளக் கடவன்" எனக் கூறுகின்றது.

த்வயம் என்பது அவ்வடிமையை முன் அறிவித்த முவர் திறத்திலும் பெற பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக் கொண்டு அவனுடன் என்றும் விட்டுப் பிரியாமல் சேர்ந்திருக்கிற ஸ்ரீமந் நாராயணனையே உபாயமாகக் கொள்ள வேணும் என்பதனையும், இம் முவர் திறத்திலும் தான் பண்ணும் கைங்கர்யம் இன்பமாயிருப்பதால் செய்யும் தனக்கு அதில் தனக்கெனவும் ஓர் எண்ண முண்டாகுமாகையால் அதைத் தவிர்த்துத் தரவேணும் எனவும் வேண்டக் கடவன் என்கின்றது.

சரமச்லோகம் : எம்பெருமானே பேற்றுக்கு உபாயமாகப் பற்றும் பற்றுதலின் முறையைக் காட்டுகிறது.

எங்ஙனேயென்னில், எம்பெருமானே உபாயமாகப்பற்றுமவன், எம்பெருமான் ஒருவனைத் தவிர மற்ற யாரையும் - யாதொன்றையும் உபாயமாகக் கொள்ளாமல், அவர்களையும், அவைகளையும், அவைகளில் முன்பு ஏற்பட்டிருந்த பழக்கத்தோடு விட்டே, எம்பெருமானே உபாயமாகப் பற்றவேணும். அப்படிப் பற்றியவனுக்கே, எம்பெருமான் தன்னை உபாயமாகப் பற்றினவன் கோரின பயனைத் தடுக்கும் எல்லா இடையூறுகளையும் தானே போம்படி செய்வான் என்கிறது.

ஆக, இம்முன்று ரஹஸ்யங்களால், ஜீவாத்மாவின் அடிமை நிலையையும் அவனுக்குப் பயன் கைங்கர்யமே என்பதனையும் நாம் அறியலாகிறது.

இனி இக் கைங்கர்யத்தைப் பற்றிச் சிறிது அறிவிக்கிறோம் :

இக்கைங்கர்யம் என்னும் பணிவிடை இதற்கு இட்டுப் பிறந்த சேதனனுல் த்ரிகரண சுத்தியுடன் செய்யப்பட வேண்டியதொன்று. அதாவது ஸ்ரீ: பதியான எம்பெருமான் திறத்திலோ, அவனடியார்கள் திறத்திலோ, தன் ஆசார்யன் திறத்திலோ, பணிவிடை செய்யப்புக்கவன் தன் மனமும், வாக்கும், உடலும் அப்பணிவிடையில் ஒன்றி மனத்தாலும், வாக்காலும், உடலாலும் அப்பணிவிடைகளைச் செய்யவேண்டும்.

மனதால் கைங்கர்யம் செய்யும் வகை :

மனதால் கைங்கர்யம் செய்யும் வகையாவது, முன்பு தெரிவித்தபடி தனக்கு வகுத்த ஸ்வாமிகளான முவருக்கும் "இப்போதுள்ள பெருமை போதாது; மேன்மேலும் ஆயுளாலும், ஆரோக்யத்தாலும், தனத்தாலும், புகழாலும், இன்னம் இவ்வளவில் எவையெவை அவர்களுக்குச் சிறப்பை விளைவிக்குமோ அவைகளெல்லாம் குறைவற நிரம்ப உண்டாகவேணும்" என்று மனத்தால் அளவு கடந்து நினைக்கையாம்.

வாக்கால் கைங்கர்யம் செய்யும் வகை :

வாக்கால் பணிவிடை செய்கையாவது இம் மூவருடையவும், திருமேனியையும், திருமேனிகுணங்களையும், ஆத்மகுணங்களையும் அவைகளை வெளிப்படுத்தும் செயல்களையும், வேதம் முதலான ஸாஸ்த்ரங்களும், ரிஷிகளும் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் எவ்வகையில் காட்டியிருக்கிறார்களோ, அவ்வகையில் அவர்களின் திவ்ய க்ரந்தங்களை நன்கு கற்று, இம் மூவர்களும் உகக்கும்படி, அவர்களின் திருமுன்பும், மற்றையிடத்திலும் தங்கள் தங்கள் அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஒக்கபடி முலத்தை விண்ணப்பிப்பதோ, அர்த்தங்களை விண்ணப்பிப்பதோ, இப்படி ஏதாவது ஒருவகையில் வாக்கால் பேசுவதுதான்.

(தாங்கள் எப்பாஷையிலுலாயினும் நன்றாக விமர்சனையைக் கற்றிருந்தாலும் அவ்வழியில் செல்லாமல் நம் பூர்வர்களின் கவிகளையே, க்ரந்தங்களையே படித்து, சொல்லி, தங்கள் வாக்கை ஸத்தை பெற வேண்டுமே தவிர, புதிதாக கவிகளைப்புனையப்புக்கால், எம்பெருமானுடன் நம்பூர்வர்களுக்குண்டான இணக்கம் நமக்கில்லாமையால், அது சுவை பெறுவது கடினம், உலகமும் அவைகளை அவ்வளவாக ஆதரிக்காது; இது என் அபிப்ராயமே.)

உடலால் கைங்கர்யம் செய்யும் வகை :

உடலால் செய்யப்படும் கைங்கர்யத்துக்கு - பணிவிடைக்கு ஒருவகை தொகையே கிடையாது. கீழ்ச் சொன்ன மூவருடைய உகப்புக்காக அவனவன் பெற்றிருக்கும் உடல்வலிமைக்குச் சேர, தானும் தனக்கு அடங்கிய மற்றையாருமாக ஓர் குடும்பம் முழுதுமே எல்லாம் செய்வதாம். இதில் சிறிது, பெரிது என்று வாசி கிடையாது. இதனை இராயபெருமாள், "தேவரீரும் பிராட்டியும் மலர்த்தாழ்வரைகளில் பிராட்டி கை பிடித்துக்கொண்டு உலாவியருளும். அப்போதும் தேவரீரும் பிராட்டியும் படுத்துக் கண் வளரும் அப்போதும் எல்லா பணிவிடைகளையும் அடியேனுவனே செய்யவேணும். அதில் தேவரீர் அவ்வோ கைங்கர்யங்களில் 'முகப்பே கூவிப் பணி கொள்ளாய்' என்கிறவளவில் அருளப்பாடிட்டு அழைக்க கைங்கர்யம் செய்ய வேணும்" எனப்பெருமாள் பிராட்டியுடன் வனயாத்திரை புறப்படும்போது பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு ப்ரார்த்தித்துப் பெற்றார்.

நம்மாழ்வாரும் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேணுநாம்' எனத் திருவேங்கடமுடையானிடம் எல்லாப் பணிகளும் செய்யவேணுமென்று பாரித்தார். ஆனால் நம்மாழ்வார் எம்பெருமானின் குணங்களை நினைத்தால் 'காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்'

என்கிறபடியே தரித்திருந்து நன்செயல் செய்ய முடியாதவராகையாலே எம்பெருமானைத் தான் அனுபவித்த அனுபவங்களுக்குப் பாசுரமிட்டு வாயார ஏற்றிவாழ்த்தி வாக்கால் மட்டுமே கைங்கர்யம் செய்தார். "ஒழிவில்காலத்துக்கு அடுத்த திருவாய்மொழியான 'புகழும் நல்லொருவன்' என்கிற திருவாய்மொழி நம்மாழ்வார் வாசிக கைங்கர்யம் செய்தபடியைக் காட்டுகிறது என்று காட்டப்பட்டிருந்தாலும் ஆழ்வாருடைய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி இந்நான்குமே மற்றை ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தகளுடன் கூடி எம்பெருமானையே புகழ்வதால் வாசிக கைங்கர்யமே ஆகின்றன.


ஆகவேதான், இன்றைக்கும் எம்பெருமான் ஸந்நிதிகளில் நித்யமாகவும், உத்ஸவ காலங்களிலும், புறப்பாட்டில் எம்பெருமானுக்கு முன்பாக திவ்யப்ரபந்த ஸேவையும், எம்பெருமானுக்கு பின்பாக வேத பாராயணமும், ஆஸ்தானத்தில் திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்த ஸேவையும் ஸ்ரீவைஷ்ணவர்களாலே வாசாகைங்கர்யமாகவே நடந்து வருகிறது.

இவ்விதம் திவ்யப்ரபந்த ஸேவையாலே வாசிக கைங்கர்யம் செய்பவர்களுக்கு 'அத்யாபக ஸ்வாமிகள்' என்றே பெயர் இன்றைக்கும் வழங்கி வருகிறது.

ஸ்ரீ பேரருளாளன் அருளிச் செயல் கைங்கர்ய சபையானது திவ்யப் ப்ரபந்த கோஷ்டியின் ரக்ஷணத்திற்காக துவங்கப்பட்டுள்ளது. இது இக்காலத்துக்கு மிகச் சிறந்த கைங்கர்யம். இக் கைங்கர்யத்தை இதில் உள்ளவர்கள் தந்நலம் கருதாமல் ஒற்றுமையாய் இனி வரும் தலைமுறைகளிலும் பெருமாள் கோயிலில் இக் கைங்கர்யம் இடையறுமல் நடத்தி வரும்படி பெருந் தேவித்தாயாருடன் கூடின தேவப்பெருமாள் பூர்ண கிருபை செய்தருள வேணுமென அத் திவ்ய தம்பதிகளைச் சரணடைந்து நிற்கிறேன்.



திரு அஷ்டபுஜம்



செந்தமிழ் பாடுவார் வணங்கும் தேவன்

With best compliments from r

SRI R. PADMANABHAN, Madras



ஸ்ரீ :

தேவப்பெருமானும் பூதத்தாழ்வாரும்

பேராசிரியர் : ஸ்ரீ. உ. வே.
K.A. மணவாள ஐயங்கார்
M.A., B.O.L. Ph. D.,



காஞ்சிபுரம் என்றாலே தேவாதிராஜனின் கருடஸேவைதான் நம் நினைவுக்கு வரும். வையம் கண்ட வைகாசித்திருநாளில் நடைபெறும் அவ்விழாவுக்கு ஒப்பான ஒரு விழாவை உலகில் வேறு எங்கும் நம்மால் காணமுடியாது. காஞ்சியில் வைகாசித் திருநாளில் பொழுது புலருமுன்பே மேல கோபுரவாயிலில் கருடாரூடனாக காட்சி தந்து நம்முடைய கவலைகளையெல்லாம் களைந்தெறிகிறான் கார்முகில் வண்ணனான வரதன். இக்கருடஸேவையைப் பல லக்ஷக்கணக்கான பக்தர்கள் கண்டு வணங்கிப் பேறு பெறுகின்றனர். தியாகப் பிரம்மம்கூட இக் கருடஸேவையையும் கோபுரதரிசனத்தையும் சிறப்பித்து 'வினதாஸுதவாகன', என்று பாடி அனுபவித்துள்ளார். சோளசிம்மபுரம் தொட்டாச்சாரியார் ஸ்வாமிக்குக் கோபுரத்வாரத்தில் கருடாரூடராகப் பெருமாள் ஸேவை ஸாதித்த வரலாறும் அவர்போற்றிய சுலோகங்களும் மிகவும் பிரஸித்த மானவை. கவி, காளமேகத்தால் பாடப்பெற்ற

'பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் பெருமாள்
இருந்திடத்துச் சும்மா யிராமையினுல் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்'

என்ற நகைச்சுவைப் பாடலும்கருடஸேவையின் பெருமையை நன்கு விளக்கும்,

பல்லவப் பேரரசர் காலம் தொட்டுப் பிற்காலச் சோழர் காலம்வரை ஆட்சி புரிந்த பலவாய அரசர்களும் இப்பெருமானை வழிபட்டுத் தொண்டாற்றியுள்ளார்கள். சோன்றுக் கருணாகரத் தொண்டைமான் கலிங்க வெற்றிக்குப் பிறகு இந்த வரத ராஜப் பெருமானை வணங்கிப் பல திருவாபரணங்களை இப்பெருமானுக்குச் ஸமர்ப்பித் துள்ளான் என்று வரலாற்றுசிரியர்கள் எழுதியுள்ளதைக் கூறலாம். வரதர்கோயில் கல்வெட்டும் இதை உறுதி செய்கின்றது.

'அத்தியூர்வாயா அணிமயிலே போன்ற பொன்தேரான் கச்சிப் பொலிவு' என்று தண்டியலங்காரத்திலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கல்வெட்டுக்களில் அத்தி யூரான் என்றும், அத்தியூராழ்வான் என்றும் இப்பெருமாள் குறிக்கப்பட்டுள்ளார்.

தேவப்பெருமாளுக்கு ஆண்டுதோறும் வைகாசிச்சித்திரை தொடங்கித் திருவோணம் வரை பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. வேண்டுவார்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கும் இவ்வரதராஜனின் பிரம்மோத்ஸவம்தான், உண்மையாக நான்முகக் கடவு ளான பிரம்மாவினால் நடத்திவைக்கப்படும் பிரம்மோத்ஸவமாகும். வைராக்கிய நிதியாக விளங்கிய வேதாந்ததேசிகரும் விஜயநகர மன்னரால் அளிக்கப்பெற்ற பல்லக்கையும் பதவியையும் மற்ற பொருள்களையும் துச்சமாக மதித்து அழியாச் செல்வமான தேவப் பெருமாளையே பிதுரார்ஜிததனம் என்று கொண்டாடிப் பேசியிருப்பனவும் இப்பெரு மாளின் வைபவத்தை நன்கு விளக்குவனவாகும்,

இத்தேவப்பெருமாள் காணும் பிரம்மோத்ஸவத்தின் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளைகளிலும் பல்லாண்டு பாடுவார்களான தென்கலை ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருமாள் வாகன புறப்பாடு கண்டருளும் வேளையில் அவனுடைய கொள்ளமாளா இன்பவெள்ளப் பெருக்கான அழகுக்கும் குணங்களுக்கும் இக்கலிகாலத்தில் என்ன தீங்கு வருமோ என்று அஞ்சி முன்னே நின்று பெரியமிடற்றோசையோடே ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகிற மங்களாசாஸனப் பாடல்களாலே காப்பிட்டு ஸேவிப்பது கண்கொள் ளாக் காட்சியாகும். இந்த அருளிச்செயல் கோஷ்டிக்கும், ஆழ்வார்களுக்கும் என்ன தீங்கு வருமோ என்று அஞ்சியே '' ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி '' என்று விசதவாக்சிகாமணிகளான நம் மணவாளமாமுனிகள் ஆழ்வார்களுக்கும் அருளிச் செயல்களுக்கும் மங்களாசாஸனப்பாசுரம் இட்டார் என்று பெரியோர் கூறுவர்.

இத்தகு ஏற்றம் பெற்ற அருளிச்செயல்களை வழங்கிய ஆழ்வார்களுக்குள்ளே 'பாட்டுக்குரிய பழம் மூவர்' என்று ஏற்றம் பெற்ற முதலாழ்வார்கள் நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த பெற்றிமையோர் என்று மாமுனிகளால் கொண்டாடப் பெற்றவர்கள், அவர்களுள்ளும் நடுவராய்-நாயகமணியாய்த்திகழும் பூதத்தாழ்வார் தென் னத்தியூர் கழலிணைக்கீழ் பூண்டவன்பாளராய் நம்தேவப்பெருமானை மங்களாசாஸனம் பண்ணியுள்ள இரண்டு பாடல்களும் பரமபோக்யமானவை.

தேவாதிராஜனை வரதராஜன் பக்தர்களையெல்லாம் நன்கு பரிபாலனம் செய்வ தனாலேதான் புகழ்பெற்று விளங்குகிறான் என்கிறார் பூதத்தாழ்வார். ஆம்! ''எங்கு முளன் கண்ணன்'' என்று சொன்ன பிரஹ்லாதாழ்வானை பலவழிகளில் துன்புறுத் தினன் இரணியன். அப்படித் துன்புறுத்திய இரணியனுடைய முரட்டுடலை பிளந்து அவனை அழித்துப் பிரஹலாதனுக்கு அருள்புரிந்தான் எம்பெருமான். அவன் வேறு யாருமல்ல, நம் தேவப்பெருமாள்தான் என்கிறார் ஆழ்வார். மேலும் எக்காலத்திலும் இருப்பவனாய் ஸகலவிதமான பொருள்களையும் தோற்றுவிப்பவனாய்த் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பவனுமாவான் என்கிறார். ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரி தனை பேரருளாளன் என் நெஞ்சத்திலும் தலையிலும் எப்பொழுதும் உள்ளான் என்று மகிழ்ந்து மங்களாசாஸனம் செய்துள்ளார்,

என்னெஞ்ச மேயானென் சென்னியான்-தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன்-முன்னம்சே(ய்)
ஊழியானூழி பெயர்த்தான்-உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான் என்பதே அப்பாடல்.

தேவப்பெருமாள் திருக்கைகளில் திருவாழி திருச்சங்கங்களாகிற ஆழ்வார்கள் பொருந்தியிருக்குமழகு தனித்தன்மை வாய்ந்ததன்றே! அந்த அனுபவத்தையுணர்ந்தே ஆழ்வார் 'உலகேத்தும் ஆழியான்' என்று மங்களாசாஸனம் செய்தார்போலும்! 'அஹமேவ பரம்தத்வம்' என்று மார்தட்டிப் பேசுவதுபோலே முன்னே நெறித்த மார்பும் ஆவுலகுக்கும் நான்தான் என்பதைக் காட்டுவான்போலே சற்றுப் பின்னே சாய்த்துச் சாத்திக்கொண்டிருக்கும் திருவபிஷேகமான திருமுடியும் வேறு எந்த பெருமாளிடத்தும் காணமுடியாத காக்ஷியன்றே! ஆதிராஜ்யமதிகம் புவனஞ்ஞும் ஈசதே பிசுநயன் கில மௌலி: என்று கூரத்தாழ்வானும் தேவப்பெருமாளுடைய திருவபி ஷேகமாகிற கிரீடத்தைக் கொண்டாடியுள்ளார்.

ஸ்ரீ ஹஸ்திகிரியின் கீழே நரஸிம்ஹ மூர்த்தியாக ஸேவைஸாதிக்கும் பெருமானை 'தானவனை வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன்' என்றதனால் மங்களாசாஸனம் செய்துள்ளார் என்றும் சொல்லுவதுண்டு.

அடுத்து, அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான்-முத்தீ
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்

என்று இரண்டாவது பாட்டால் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

இப்பாசுரத்தில் புள்ளையூர்வான் என்று ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளவேதான் இப்பெருமாளுடைய கருடோத்ஸவம் இமயம் முதல் குமரி வரை இன்று பிரஸித்தி பெற்று விளங்குகிறது. நாகத்தின்மேல் துயில்வான் என்று திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் மீது பள்ளிகொள்ளும் பெருமானே ஸ்ரீ ஹஸ்திகிரியிலும் ஸேவை ஸாதிப்பதாக அருளிச் செய்துள்ளார். இந்த அருளிச்செயல் நெஞ்சிலே பட்டுத்தான் கூரத்தாழ்வானும் தாமியற்றிய வரதராஜஸ்தவத்தில் '' நீலமேக நிபம் '' என்னும் ச்லோகத்தில் '' அநந்தசயம்த்வாம் '' என்று அருளிச் செய்வதற்கு காரணமாயிற்று என்பர் பெரியோர்

பணிபதி சயநீயாதுத்திதத்வம் ப்ரபாதே
வரதஸதத மந்தர் மாநஸம் ஸந்நிதேயா: என்ற
வேதாந்த தேசிக திவ்யஸுக்தியும் இங்கு நினைக்கத்தக்கது.

இவவிதம் நாகத்தின் மேல் துயில்வானுய் வேதங்களால் விளங்கப்படுவானுய் ருத்திரனுக்கும் ஸ்வாமியாய் விளங்கும் நம் தேவாதி ராஜனை வரதராஜன் ஸ்ரீ ஹஸ்தி கிரியிலே எழுந்தருளியிருக்கிறான் என்று போற்றியுள்ளார் பூதத்தாழ்வார்.


NOT JUST MANUFACTURE OF SUGAR-

A STORY OF WASTE TURNED INTO WEALTH

Sugarcane Yields besides sugar, many alcohol based chemicals and fibrously with bagasse as valuable raw material for paper. Ponni Sugars and Chemicals Limited, the pioneer sugar plant have set up a coal fired boiler in order to release the entire bagasse to the next door paper mill of Seshasayee Paper and Boards Limited for production of paper. Surely a story of waste turned into wealth; advantage both to the buyer and seller.

PONNI SUGARS AND CHEMICALS LIMITED

PALLIPALAYAM, ERODE-638 007.



"மன்னு மதிட்சுற் வேலுக்கை ஆளி"

With best compliments :

Sri. K. S. VARADARAJAN

MADRAS-600 006.



ஸ்ரீ:

"அருளாளனும் ஆழ்வாரும்"



ஸ்ரீ உ. வே. M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M.Phil.
(ஆசிரியர், கீதாசார்யன்)

திவ்யஸூரிகளான ஆழ்வார்களாலே அருளிச்செய்யப்பட்ட திவ்வியப் பிரபந்தங்களிலே மங்களாசாஸனம் செய்யப்பட்ட திருத்தலங்கள் திவ்யதேசங்கள் என்று வழங்கப் பெறுகின்றன. அவை 108 என்று பெரியோர்கள் நிர்ணயித் துள்ளனர். அவைகளுக்குள்ளும் கோயில், திருமலை, பெருமாள் கோயில் ஆகிய மூன்று திவ்யதேசங்கள் முதன்மை பெற்றவை.

ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அனைவரும் மண்டிக்கிடந்து ஈடுபட்ட திவ்ய தேசமாகையாலே 'கோயில்' என்று வழங்கப்பெறுகிற ஸ்ரீரங்கம் முதன்மை பெற்றுள்ளது அனைவருமறிந்தது.

ஆழ்வார்கள் ஒன்பதின்மராலே மங்களாசாஸனம் செய்யப்பட்டதாய் எம்பெருமானாராலே மிகவும் அபிமானிக்கப்பட்டதாய் விளங்கியதாலே 'திருமலை' என்று வழங்கப்பெறுகிற திருவேங்கடம் அதற்கடுத்தபடி இரண்டாவது இடத்தைப் பெறுகிறது.

ஆனால் இந்தவரிசையில், அதிகமான ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்படாத 'பெருமாள்கோயில்' என்று வழங்கப்பெறுகிற காஞ்சீபுரம் மூன்றுவது இடத்தைப் பெற்றது எங்ஙனம் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

இவ்விருள்தருமாஞாலத்தின் அகவிருள் நீங்க சாஸ்த்ரப்ரதானம் பண்ணியருளினன் எம்பெருமான். ஆனால் கண்ணில்லாத குருடர்க்கு விளக்கு பயன்டாததுபோல பகவத்பக்தியாகிற கண்ணில்லாத அறிவிலா மனிசர்க்கு சாஸ்த்ரமாகிய விளக்கு பயன்படவில்லை. கிணற்றில் விழுந்த குழந்தையை

அதனுடைய தாய் தானும் அக்கிணற்றில் குதித்தெடுப்பதுபோல, இந்த ஸம்ஸார ஸாகரத்தில் வீழ்ந்த சேதனர்களைக் கரையேற்றுவதற்காக எம்பெருமான்தானே ராமகிருஷ்ணாதி ரூபேண இவ்வுலகில் குதித்தான். ஆனாலும் பல மூர்க்கர்கள் திருந்தாமல் அவ்வெம்பெருமானையும் தங்களைப்போலவே மனுஷ்யனாகக் கருதி எதிரம்பு கோத்தனர். இது கண்ட, அருளே வடிவெடுத்த எம்பெருமான் திருவுள்ளமிரங்கி, பார்வை வைத்து மிருகம் பிடிப்பாரைப்போலே, ஸஜாதீயர்களைக் கொண்டே இவர்களைத் திருத்த வேணுமென்று பார்த்து இவ்வுலகில் சில பல வ்யக்திகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் விசேஷகடாக்ஷத்தைப்பண்ணியருளினன். இப்படி எம்பெருமானாலே நிர்ஹேதுகமாக 'மயர்வற மதிநலமருள'ப் பெற்றவர்களே ஆழ்வார்கள்.

இப்படி ஆழ்வார்களுக்கு மயர்வறமதிநலம் அருளியவன் எந்த எம்பெருமான் என்ற கேள்விக்கு நம்மாழ்வார் அருளிச் செய்கிறார்:

> **உயர்வறவுயர்நலமுடையவன் யவன், அவன்**
> **மயர்வற மதிநல மருளினன் யவன், அவன்**
> **அயர்வறு மமரர்களதிபதியவன், அவன்**
> **துயரறுசுடரடி தொழுதெழு என்மனனே.**

என்று, தமக்கு மயர்வற மதிநலமருளியவன் அயர்வறும் அமரர்கள் அதிபதியான தேவாதிராஜனே என்றருளிச் செய்வதோடல்லாமல் அவனுடைய துயரறு சுடரடிகளைத் தொழுதெழுமாறு தம்முடைய நெஞ்சுக்கும் நியமிக்கிறார். இதற்கேற்ப இற்றைக்கும் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வார், மற்ற திவ்ய தேசங்களில்போல் ஞானமுத்திரையோடல்லாமல், தம் நெஞ்சைக் குறித்து உபதேசிப்பதாக நெஞ்சிலே கைவைத்துக்கொண்டு எழுந்தருளியிருப்பதை நாம் ஸேவிக்கலாம்.

அழகிய மணவாளனுடைய திருவடிகளை 'பொதுநின்ற பொன்னங்கழல்' என்றும், 'திருப்பொலிந்த சேவடி' என்றும், திருவேங்கடமுடையான் திருவடிகளை 'பூவார்கழல்கள்' என்றும் வழங்குதல்போல தேவப்பெருமாளுடைய திருவடிகளை 'துயரறு சுடரடி' என வழங்குதல் ஸம்ப்ரதாயமாதலால் இப்பாசுரம் தேவப் பெருமாளைப் பற்றியதே என்று ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தமது திவ்யார்த்த தீபிகையுரையில் அருளியுள்ளார்.

வேதாந்தவாரியரும் ''ப்ரதமசதகே வீக்ஷ்யவரதம்'' என்று முதல் பத்து முழுவதும் தேவப்பெருமாளைக் குறித்தே அருளிச் செய்யப்பட்டதாக அருளியுள்ளார்.

ஆக ஆழ்வார்க்கு மயர்வற மதிநலமருளியவன் தேவாதிராஜனை பேரருளாளனே என்பது ஆழ்வார் திருவாக்காலும், ஆசார்யர்கள் திருவுள்ளக்கருத்தாலும் மூதலிக்கப்பட்டதாயிற்று. அவயவியான ஆழ்வார் இங்ஙனமருளிச் செய்தது அவயவ பூதர்களான மற்றையாழ்வார்களுக்கும் சேர்த்தே என்று கொள்ளலாம்.

இப்படி ஆழ்வார்களுக்கு மயர்வறமதிநலமருளி திவ்யப் பிரபந்தங்கள் அவதரிக்கக் காரணமாயிருந்த தேவாதிராஜன் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசமான பெருமாள் கோயில் ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்களுள் மூன்றுவது இடத்தைப் பெற்றதில் வியப்பொன்றும் இல்லை.

மேலும் நம்மாழ்வார் தம்முடைய முதல் பிரபந்தமான திருவிருத்தத்திலும் **''இமையோர்தலைவா மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே''** என்று தேவாதிராஜனை விளித்தே அருளிச் செய்கிறார். இந்தத் திருவிருத்தத்தில் கோயில், திருமலை, பெருமாள் கோயில் ஆகிய மூன்று திவ்ய தேசங்கள் மட்டுமே மங்களாசாஸனம் செய்யப்பட்டுள்ளது குறிக்கொள்ளத் தக்கது. 'பொருநீர்த் திருவரங்கா வருளாய்' (28) 'மாயோன் வடதிருவேங்கட நாட' (10), 'இமையோர் தலைவா' (1) என்று இத்திவ்விய தேசங்களை மங்களாசாஸனம் செய்துள்ளார். (ஹஸ்திகிரியில் பிரமன் செய்த யாகத்திற்கு ஏற்பட்ட இடையூற்றை விலக்கி, அங்கு தேவப்பெருமாள் அவதரிக்கக் காரணமாக இருந்ததால் திருவெஃகா யதோக்தகாரியெம்பெருமானையும் 'கண்ணன் வெஃகாவுது (26) என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். ஆக, கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்ற வ்யவஹாரம் ஏற்படுவதற்கும் நம்மாழ்வாரே காரணம் என்றால் அது மிகையன்று.

ஞானத்தில் தம்பேச்சு, ப்ரேமத்தில் பெண்பேச்சு' என்ற பூருவர்கள் மொழிக்கேற்ப ஆழ்வார் தாமான தன்மையைவிட்டு நாயிகாபாவத்தை அடைந்தபோதும் பேரருளாளனையே நினைந்து உருகுகிறார்.

எம்பெருமானைக் கலந்து பிரிந்தாளொரு பிராட்டி அவனைப் பிரிந்து தரிக்க முடியாமல் பறவைகளைத் தூது விடுவதாக அமைந்துள்ளது ஆழ்வார் அருளிச் செய்த ''அஞ்சிறைய மடநாராய்'' எனும் திருவாய்மொழி (1-4). அதிலொரு பாசுரம் கேண்மின்:

> **அருளாத நீரருளி அவராவிதுவராமுன்**
> **அருளாழிப்புட்கடவீர் அவர்விதியொருநாளென்று**
> **அருளாழியம்மானைக் கண்டக்காலிதுசொல்லி**
> **அருளாழிவரிவண்டே யாமுமென்பிழைத்தோமே.**

தேவாதிராஜனிடத்தில் ஒரு வண்டைத் தூது அனுப்புகிறாள் பராங்குசநாயகி. ''வண்டே! தேவாதிராஜனிடம் நீ சென்று, ''இவளுடைய உயிர் போவதற்கு முன்னே ஒரு நாளாவது பெரிய திருவடியின்மீது ஆரோகணித்து இவள் இருக்கும் வீதி வழியாக எழுந்தருள்வாயாக என்று சொல்வாயாக'' என்கிறாள்.

இது தேவாதிராஜனிடம் விடப்பட்ட தூதுதான் என்று கொள்வது எங்ஙனம் என்ற கேள்வி எழலாம். இங்கே நம்பிள்ளை ஈடுகாண்மின்:

> [அருளாத நீர்] 'ஏதத்வ்ரதம் மம' என்று அருளுகைக்கு ஸங்கல்பித்திருக்குமாபோலே அருளாமைக்கு ஸங்கல்பித்திருக்கிற நீர். 'மயர்வற மதிநலமருளினன்' என்று நெஞ்சுருகிக் கிடக்குமவர் ''அருளாத நீர்'' என்கிறது

என்ன தசாவிசேஷம் என்றறிகிறிலோம். ''அருளாத நீர்'' என்று ஒரு திருநாமம் சாற்றுகிருள்.

ஆழ்வாருக்கு மயர்வறமதிநலம் அருளியவன் அயர்வறும் அமரர்கள் அதிபதியான தேவப்பெருமாள் அன்ரே. அவனுக்கு அருளாளன் என்றும் பெயருண்டு. முன்பு அவ்வருளாளன் தமக்கு மதிநலமருளியதையே நினைத்து நெஞ்சுருகிக் கிடந்தவர், இப்போது அருள்செய்ய வரக்காணுமையாலே வருந்தி நோவுபடுகிருர். அருளையே நிரூபகமாகவுடையவனுக்கன்ரே அருளாளன் என்ற பெயர் தகும். இப்போது அவன் அருள் செய்யாதபடியினல் அவனுக்கு அருளாளன் என்ற பெயர் எதற்கு என்கிருர். அதற்கு எதிர்மறையாக ''அருளாத நீர்'' என்ருரு புதிய திருநாமத்தையும் சாத்துகிருர்—என்கிருர் நம்பிள்ளை. (இது நஞ்சீயர் நிர்வாஹம் என்று இருபத்து நாலாயிரப்படியில் காண்கிறது.) 'அருளாத உமக்கு அருளாளன் என்ற பெயர் எதற்கு?' என்று அருளாளனைத்தானே கேட்கமுடியும்? ஆகவே இப்பாசுரம் அருளாளனை தேவாதிராஜனைக் குறித்ததே என்பதில் ஸந்தேஹமில்லை.

பராங்குசநாயகி வேண்டிக்கொண்டால் அவன் வந்துவிடுவனே என்ருல், அவனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருவதற்குப் பரிகரமுண்டு என்கிருள். அவன்தான் அருளாழிப்புள்ளான பெரிய திருவடி. அவன் மீதமர்ந்து நான் இருக்கும் வீதி வழியாக ஒரேஒரு நாள் சென்ருலும் போதும்; ஜாலகரந்த்ரத்தின் வழியாக அவனை ஸேவித்து உயிர் தரிப்பேன் என்கிருள்.

ஆழ்வாருடைய இந்த அபிலாஷையை வருடந்தோறும் நிறைவேற்றி வைக்கிருன் அருளாளன். தனது ப்ரஹ்மோத்ஸவத்தில் மூன்ரும் நாள் காலை (பெரும்பாலும் அன்றைய தினம் ஆழ்வாருடைய திருவவதார நன்னாளாகவும் அமைந்திருக்கும்) அருளாழிப் புள்ளான பெரிய திருவடிமீது ஆரோகணித்து ஆழ்வார் திருவீதி வழியாக எழுந்தருளி ஆழ்வாருக்கு மரியாதை பஹுமானங்களும் ப்ரஸாதிப்பதை இன்றும் நாம் பெருமாள் கோயிலில் காணலாம்.

எம்பெருமான் தமக்குச் செய்த உபகாரத்தை நினைந்து நினைந்து அவனை வாய்வெருவும்போதெல்லாம் தேவாதிராஜனையே எண்ணி அருளிச் செய்கிருர் ஆழ்வார் என்றவிதை 'எம் வானவரேற்றையேயன்றி மற்ரொருவரையானிலேனெழுமைக்குமே' (3-6-6) என்றும், ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினுலும் தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்'' (6-5-11) என்றும், இன்னும் பலவிடங்களிலும் அருளிச் செய்துள்ள பாசுரங்களைக்கொண்டு நாமறியலாம்.

தம்முடைய பிரபந்தத்தைத் தலைக்கட்டும்போதும் தேவாதிராஜனையே வாய்வெருவுகிருர் ஆழ்வார். ''உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கன்பா என் அன்பேயோ'' (10-10-6) என்று ஆழ்வார் அருளிச் செய்வது தேவாதிராஜனைக் குறித்தே! எங்ஙனமென்னில்: தேவாதிராஜனுடைய தனிக்கோயில் நாச்சியாருக்கு பெருந்தேவி என்பது திருநாமம். இந்தத் திருநாமத்திற்குப் 'பேரருளாளனுடைய பெருமைக்குத் தக்க தேவி என்று பொருள். தேரணிந்த அயோத்தியர்கோன் பெருந்தேவீ என்கிறவிடத்தில் (பெரியாழ்வார் திருமொழி 3-10-4) மணவாள மாமுனிகள் வ்யாக்யானம்:

> திருவயோத்யைக்கு நிர்வாஹகரான பெருமாளுடைய பெருமைக்குத் தகுதியான தேவி. ''துல்யசீலவயோ வ்ருத்தாம் துல்யாபி ஜநலக்ஷணம் ராகவோர் ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணே என்னக்கடவதிறே''. அல்லது ஒருசிறுத்தேவியுண்டாய்ப் பெருந்தேவியென்கிறதன்றே பெருமாள் ஏகதாரவ்ரதராகையாலே.

இதற்குச்சேரப் பேரருளாளனுடைய பெருமைக்குத்தகுந்ததேவி பெருந்தேவி என்று கொள்வது சாலப்பொருத்தமன்ரே! அதைத்தான் நம்மாழ்வாரும் ''உனக்கேற்கும் கோலமலர்ப் பாவைக்கன்பா! என்னன்பேயோ'' என்று உன்னுடைய பெருமைக்குத்தக்கவளான பெருந்தேவிக்கு வல்லபனைவனே! என்ருருளிச் செய்கிருர்.

இப்படி ஆதிமத்ய அவஸானங்களிலெல்லாம் அருளாளனையே வாய்வெருவுமிவர் மற்றதிவ்யதேசத்து எம்பெருமான்களைப்பற்றி அருளிச்செய்யும்போது ஸ்பஷ்டமாக அருளிச் செய்ததுபோல் ஏன் தேவாதிராஜனைப்பற்றியும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்யவில்லை என்ற கேள்வி எழலாம்.

மற்றெவரையும் பற்றிக் குறிப்பிடும்போது ஸ்பஷ்டமாகவே கூறும் ஒரு குலஸ்த்ரீயானவள் தன் நாயகனைப்பற்றிக் கூறும்போது மட்டும் அங்ஙனம் சொல்லாது, குறிப்பாலேயே உணர்த்துவளன்ரே! அதுபோலவே ஆழ்வாரும் மற்ற எம்பெருமான்களை 'அரங்கா' என்றும்' 'திருவேங்கடத்தானே' என்றும் ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருந்தாலும் தன் நாயகனை அத்திகிரி அருளாளனைப் பற்றி அருளிச்செய்யுமிடங்களில் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யாமல் 'இமையோர் தலைவா', 'அயர்வறும் அமரர்கள் அதிபதி', 'வானவரேறு', தேவபிரான்' உனக்கேற்கும் கோலமலர்ப் பாவைக்கன்பா' என்றிப்படிக் குறிப்பால் உணர்த்துகிருர்.

மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்தவர் மங்கையர்கோன். ''ஏன்னெஞ்சத்துள்ளிருந்து இங்கு இருந்தமிழ்நூல் இவைமொழிந்து'' என்று நம்மாழ்வார் தம் திருவாக்காலேயே அருளிச்செய்தபடி இருந்தமிழான திருவாய்மொழியிலே தாம் புலவர் என்பதைத் திருமங்கையாழ்வார் தாமே தம்மை 'இருந்தமிழ்நூற் புலவன்' என்று கூறிக்கொண்டு வெளிப்படுத்துகிருர். ஏறக்குறைய 86 திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்துள்ள மங்கையர்கோன், ஆழ்வார் திருவுள்ளக் கருத்தை அறிந்தவராகையாலே, தாமும் தேவாதிராஜனைப் பற்றி அருளிச் செய்யாமல் ''வரந்தருமாமணிவண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி'' என்றும் ''பிணியொழித்து அமரர் பெருவிசும்பருளும் பேரருளாளன்'' என்றும் குறிப்பால் உணர்த்துகிருர்.

பெரிய திருமடலிலும்கூட காஞ்சீபுரத்து திவ்ய தேசங்களை வரிசையாக

அருளிச் செய்யும்போது

''மன்னு மதிட்கச்சி வேளுக்கை யாளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை வெஃகாவில்
உன்னிய யோகத் துறக்கத்தை ஊரகத்துள்
அன்னவனை அட்ட புயகரத்தெம் மானேற்றை''

என்றருளிச் செய்தவர் ஹஸ்திகிரி தேவாதிராஜனை ஸ்பஷ்டமாக அருளிச் செய்யாமல், அடுத்தபடியாக

''என்னை மனங் கவர்ந்த வீசனை''

என்ருர். உம்மை மனங்கவர்ந்தவர் ஆரென்ன

''வானவர்தம் முன்னவனை''

அவன்தான் தேவாதிராஜன் என்றருளிச் செய்கிருர்.

தவிரவும் ''அங்கமலத்தடவயல் சூழாலிநாடன் அருள்மாரி, அரட்டமுக்கி அடையார்சீயம், கொங்குமலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன், கொற்றவேல் பரகாலன், கலியன்'' என்று தம்முடைய பெருமைகளையெல்லாம் தாமே அருளிச் செய்துகொள்ளுமவர் ஒரு பாசுரத்தில் ''என்னெஞ்சகம் கோயில்கொண்ட பேரருளாளன் பெருமை பேசக் கற்றவன் காமருசீர்க்கலியன்'' என்று இதையே தம்முடைய பெருமையாகக் கூறியது ஆழ்வார் திருவுள்ளத்தை அடியொற்றி யன்ரே!

இவ்வாறு அங்கிப்ரபந்தத்தின் அர்த்தத்தை அங்கப்ரபந்தத்தின் துணை கொண்டு நிர்ணயித்தாலும் தேறுவது ''ஆழ்வார்க்கு ஈடுபாடு பேரருளாளனிடத்திலேயே'' என்பதுதான்.

திவ்யப்ரபந்தங்களை அவதரிப்பித்துக் கேட்க வேணுமென்பதற்காகவே ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலமருளினன் பேரருளாளன். பின்னுளில் எம்பெருமானுர் காலத்தில் இப்பேரருளாளனுக்கு ''பாட்டுப்பிச்சன்'' என்ற ப்ரஸித்தி ஏற்பட்ட வரலாறுகள் குருபரம்பரைகளில் ப்ரஸித்தம். இதுவும் பேரருளாளனுக்கு அருளிச்செயல் மீதுள்ள ஈடுபாட்டையே உறுதிப்படுத்துகிறது. சாதாரணமாக திவ்ய தேசங்களில் காலைத் திருவாராதனத்தில் பெருமாள் திருப்பாவை திருச்செவி சாத்தியருளுவது வழக்கம். இன்றைக்கும் நாலாயிர திவ்யப்ரபந்தத்தை க்ரமமாக வருடம் முழுவதும் நித்யப்படியிலேயே திருச்செவி சாத்தும் திவ்ய தேசத்து எம்பெருமான் தேவப்பெருமாள் ஒருவரே. அடியோமோடும் நின்னேடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு என்று அவ்வருளிச்செயல் கைங்கர்யம் நிரவதிகமாக நடைபெற வேணுமென்று தேவப்பெருமாள் திருவடிகளிலே ப்ரார்த்திப்போமாக!

With best Compliments from



SHARMAA'S
REAL
ESTATES

PALLAVARAM,
MADRAS - 43.

Wheels For

Any Load, Any Road

You Can

Depend on TVS - Dunlop

WHEELS INDIA LIMITED

PADI, MADRAS-600050

With best compliments from :

S. Mohamedali Store

Mfg. of Account, Books School Note Books & Stationers

No. 58, BUNDER STREET,
M A D R A S - 600 001

Manufacturers of Office Note Books and Study Materials

With Best Compliments from :

Standard Steel Rolling Mills

Shanmugapuram PONDICHERRY-10

Office :
161, Bharathy Street,
PONDICHERRY-605 001.


Madras Office :
23, (II FL), Narasingapuram Street,
Mount Road, Madras-2.

Phone : Pondy : 5854, 3106
Madras : 566097

With Best Compliments from


ASSOCIATED MARKETING AGENCIES

"BHARATH BUILDINGS"



93, Anna Road,
MADRAS - 600 002

விளக்கொளி எம்பெருமான்



திருத்தண்காவிலுறையும் விளக்கொளியான்

With best compliments from

SRI S. NATARAJAN. Kumbakonam



ஸ்ரீ:

"பேரருளாளனும் அருள்மாரியும்"

ஸ்ரீ உ. வே.
S. கிருஷ்ணஸ்வாமி
அய்யங்கார்
(ஸுதர்சனர்)
ஆசிரியர்,
ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்



''அருள்மாரி'' எனச் சிறப்புப்பெயர் பெற்ற திருமங்கையாழ்வார் எம்பெருமானது சார்ங்காம்சமாய் அவதரித்தவர். சார்ங்கபாணியான திருக்குடந்தை ஆராவமுதனிடம் இயல்வாகவே ஈடுபாடுடையவர். ஆனால் பெரிய திருமொழியில் ஆராவமுதனைப் பற்றி ஒரு பதிகமோ, ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்களோ பாடவில்லை. ஆயினும் தமது பிரபந்தங்களில் ஆரம்பத்திலும் முடிவிலும் நடுவிலும் ஆங்காங்கே ஆராவமுதனைப் பாடியுள்ளார்.

அதேபோல, கச்சிப் பேரருளாளனை வரதராஜரைப்பற்றி பதிகம் பாடாவிடினும் ஆங்காங்கே பேரருளாளரையும் அவரது பேரருளையும் வியந்து பாடியுள்ளார். அதற்குக் காரணம் திருமங்கை மன்னன் முதலிலேயே அவர் பேரருளுக்கு இலக்கானதேயாகும்.

பேரழகியான குமுதவல்லியைப் புணரவேண்டி அவள் விருப்பப்படி பாகவத தீயாராதனம் செய்து வந்தார் திருமங்கைமன்னன். தமது திரவியம் போதாமல் தாம் சோழப் பேரரசுக்குக் கட்டவேண்டிய பகுதிப் பணத்தையும் தீயாராதனத்துக்கே செலவழித்துவிட்டார். சோழப் பேரரசன் திருமங்கைமன்னனைத் தந்திரமாகச் சிறைப்படுத்தி, திருநறையூர் நம்பி கோயிலில் காவலில் வைத்தான். திருமங்கைமன்னன் அங்கு மூன்று நாள் உண்ணாமலிருந்தார். இப்படி மெய் வருந்தி இளைப்புடன் இருந்த திருமங்கை மன்னனுடைய கனவில் பேரருளாளர் எழுந்தருளி ''உமக்குப் பகுதிக்கு வேண்டிய திரவியம் தருகிறோம், காஞ்சி புரத்துக்கு வாரும்'' என்று அருளிச்செய்தார். இவரும் கனவைப்பற்றிச் சோழ மன்னனுக்கு அறிவிக்க அவனும் இவரைக் காவலுடன் காஞ்சீபுரத்துக்கு அனுப்ப, அங்கு கருணாகரராய், அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதரான வரதராஜரும்

''அஞ்சாதே கொள்ளும்'' என்று வேகவதீ தீரத்திலே தனமிருக்கிற இடத்தை அடையாளம் காண்பித்தார். இவரும் தனத்தை எடுத்து அரசனுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்துவிட்டு, மீதமிருந்த தனத்தைத் ததீயாராதனத் துக்கு உபயோகப்படுத்தினர்.

இப்படித் தம்மிடம் கச்சிப்பேரருளாளரான தேவராஜப்பெருமாள் புரிந்த பேரருளில் ஈடுபட்டுத் தம் பிரபந்தங்களில் ஆங்காங்கே பேரருளாளரைப் பாடி மங்களசாஸனம் செய்தருளினர் திருமங்கையாழ்வார்.


இவ்வண்ணமாக இவர் பேரருளாளர் அருள் வெள்ளத்தை ஆங்காங்கு தேக்கி உலகுய்யச் செய்ததால் அருள்மாரியானர்.

கச்சிப்பேரருளாளன் தன்னிடம் வரம்கேட்கும் தன்னடியார்களுக்கு அவர்கள் அபேக்ஷித்ததைவிட அதிகமாகக் கொடுத்து அருள்மழை பொழிகிறான். அது அருள்மாரியான திருமங்கையாழ்வார் அருளியதன் விஷயமான பாட்டைக் கேட்ட களிப்பினாலேயேயாகும்.

''என் நெஞ்சகம் கோயில் கொண்ட பேரருளாளன் பெருமை பேசக்கற்றவன் காமருசீர்க்கலியன்'' என்று தம்மைக் குறிப்பிட்டுக்கொள்ளும் ஆழ்வார் தமது முதல் பாட்டில் ''உய்வதோர் பொருளால்'' என்னும்சொல்லாலே பேரருளாளரின் அருளைக் குறிப்பிட்டார். நாலாம் பாட்டில் ''ஆழியான் அருளே'' என்றும் ஐந்தாம் பாட்டில் ''சிக்கெனத் திருவருள் பெற்றேன்'' என்றும் அவ்வருளைக் கொண்டாடினர். பெரிய திருமொழி 1-4-4ம் பாட்டில் ''துணிவினி உனக்குச் சொல்லுவன் மனமே தொழுதெழு தொண்டர்கள் தமக்குப் பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளன் எம்பெருமான்'' என்று கச்சிப் பேரருளாளரை வதரியாச்சிரமத்துள்ளானாக அனுபவித்தார். பெரிய திருமொழி 2-9-3ம் பாட்டில் ''வரந்தரு மாமணிவண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி'' என்று பரமேச்சுர விண்ணகரத்தானாக வரதராஜரை அனுபவித்தார். பெரிய திருமொழி 4-3-1ம் பாட்டில் ''பேரணிந்துலகத்தவர் தொழுதேத்தும் பேரருளாளன் எம் பிராணே'' என்று கச்சிப்பேரருளாளரை நாங்கூர் செம்பொன் செங்கோயிலினுள்ளே காரணிமேகம் நின்றதொப்பானாக அனுபவித்தார்.

இப்படி அருள்மாரியான திருமங்கையாழ்வார் கச்சிப் பேரருளாளனை எப்போதும் மனத்தில்கொண்டு ஆங்காங்கே வாயாரப் புகழ்ந்து ஈடுபட்டனுபவித்து ''மின்னுமாமழை தவழும் மேகவண்ணா! விண்ணவர்தம் பெருமானே! அருளாய்'' என்று கரிசைலக்ருஷ்ண ஜலதமான தேவாதிராஜனைத் தமது சரமப் பிரபந்தமான திருநெடுந்தாண்டகத்தின்முடிவிலே பாடித்தலைக்கட்டியருளினர்.

With Best Compliments From:



ANDAVAR
BUS SERVICE

TIRUKOILUR.

SUNDARAM CLAYTON LIMITED.

MANUFACTURERS OF:

1. **Air assist and full air actuation systems for automotive and non automotive applications and elements thereof,**
2. **T V S 50 XL Mopeds; and**
3. **Signalling relays and point machines with related hardware for railway applications.**

FACTORIES

Brakes Division :

PADI,
MADRAS-600 050

Moped and Railway Products Division

"HARITA"
HOSUR-635109

Regd. Office

180, MOUNT ROAD,
MADRAS - 600 006.

BRAKES INDIA LIMITED

PADI, MADRAS-600050.

Manufacturers of :

Brake Assemblies and Hydraulic Brake and Clutch Actuation Systems for CARS, JEEPS, COMMERCIAL VEHICLES, TRACTORS AND TRAILERS IN COLLABORATION WITH

M/s. LUCAS GIRLING LTD., UK.,

Brakes India Girling Heavy Duty Brake & Clutch Fluid to SAE J1703 (f) Specification.

PERMANENT MOULD FERROUS DIE CASTINGS IN TECHNICAL COLLABORATION WITH QUALCAST (DERBY FOUNDRIES) LTD., U.K.,

USE ONLY GENUINE BRAKES INDIA GIRLING SPARES

ALWAYS USE

BRAKES INDIA GIRLING HEAVY DUTY BRAKE & CLUTCH FLUID

for Refilling and Topping up.

With Best Compliments :

PHONE: 653574


SRI VINAYAGA PACKAGING

157, Sidco Industrial Estate
AMBATTUR, MADRAS 600 098.

Manufacturers of :


PRINTED AND UNPRINTED CORRUGATED BOXES, ROLLS, BOARDS AND LINERS.

திரு ஊரகம்



ஊரகத்து நின்ற எந்தை

With best compliments from
M/s. R I



ஸ்ரீ :

அருளாளனுப் ஆளவந்தாரும்



ஸ்ரீ உ. வே. திருநாங்கூர்
பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி

இவ்வுலகில் யாகம் செய்து ஸ்வர்க்கம் பெறவும், பக்தி செய்து மோக்ஷம் பெறவும் தகுதியான இடம் நம்பாரத பூமியேயாகும். ஸ்வர்க்கத்தில் தேவர்கள் ''புண்ணியம் கழிந்ததும் நாம் பூமியில் பிறக்கப்போகிறோம். எவ்விடத்திலே எப்பிறவியிலே பிறப் போமோ தெரியாது. தற்போது பாரதபூமியில் பிறந்து அரோக திடகாத்திரத்துடன் வாழ்ந்துகொண்டு பகவானிடம் பக்திபூண்டு மோக்ஷம்பெற விழையும் மனிதர்கள் மிகவும் பாக்கியவான்கள்'' என்று எண்ணுகின்றனர். இப்படிச் சிறப்புற்ற பாரதபூமியில் தன்னிடம் வஸிப்புதாலேயே மோக்ஷம் தரவல்லவையான நகரங்கள ஏழு உள்ளன அவற்றுள் ''நகரேஷு காஞ்சீ'' என்றும், முத்திதரும் நகரேழினுள் சீரியகச்சி'' என்றும் சொல்லுகிறபடி ''காஞ்சீ நகரம்'' மிகச்சிறந்ததாகும். தன்னிடம் செய்யும் நல்வினைகள் ஒன்று பத்தாகப் பயன்தரவல்லதாகையால் காஞ்சீபுரம் 'ஸத்யவ்ரத க்ஷேத்திரம்'' எனப்படுகிறது. ''தொண்டைநாடு சான்ரோருடைத்து'' எனும் பழமொழிக்கிணங்க சான்ரோர்கள் பலர் தோன்றித் தங்கள் ஞானத்தாலும், அனுஷ்டானத்தாலும் உலகில் மாந்தர்களை நல்வழிப்படுத்தினார்கள். விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்த்து இவ்வுலகில் அனைவரையும் வாழ்வித்த இளையாழ்வார் ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபெரும்புதூரிலே அவதரித்து காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளி பேரருளாளனின் திரு வாராதனத்துக்குப்பாங்காக சாலைக்கிணற்றிலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து ஸமர்ப் பித்தார். ஆளவந்தார் பெருமாள் கோயிலுக்கு (காஞ்சிக்கு) எழுந்தருளி திருக்கச்சிநம்பி இளையாழ்வாரை அடையாளம் காட்ட ''ஆமுதல்வன்'' என்று விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினார். பேரருளாளனிடம் ''தேவரீர் ஸகலபலப்ரதராகையாலே அடியே னுக்கும் இளையாழ்வாராகிற மஹானுபாவன், நம் தர்சன ப்ரவர்த்தகராம்படி விசேஷ கடாக்ஷம் செய்தருளவேணும் என்று தேவரீரை சரணம்புகுந்தேன்'' என்று விண்ணப் பம் செய்தார். பின்பு கோயிலில் (ஸ்ரீரங்கத்தில்) எழுந்தருளி யிருக்கும்போது, பெருமாள்

கோயிலிலிருந்து எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள் மூலமாக இளையாழ்வார் யாதவ ப்ரகாசனைத்துறந்து பேரருளாளர் பக்கல் ப்ரவணராயெழுந்தருளியிருக்கிறார்'' என்று பெரியப்பீதியோடே பேரருளாளன் பெருமையைப் பேசவல்லராய்க்கொண்டு ஸ்தோத்ரத்தை விண்ணப்பம் செய்தார். அது ''ஸ்தோத்ரரத்னம்'' எனப்ரஸித்தி பெற்றது. தமது சிஷ்யரான பெரியநம்பியிடம் ஸ்தோத்ரத்தை அனுசந்திக்கச் செய்துகொடுத்து பெருமாள் கோயிலுக்குப்போய் இளையாழ்வாரை அழைத்துவந்து நம்மோடே சேர்க்க வேணும் என்று நியமித்து அனுப்பினர். பெரியநம்பியும் பெருமாள்கோயிலுக்கு எழுந்தருளி இளையாழ்வார் எழுந்தருளும் வழியில் ஸ்தோத்ரரத்னத்தை அனுஸந்திக்கக் கேட்ட இளையாழ்வார் மிகவும் ஈடுபட்டு ஸ்தோத்ரம் அருளிச்செய்த ஆளவந்தாரை ஸேவிக்க விருப்பம் கொண்டு பெரியநம்பியுடன் கோயிலுக்கு எழுந்தருளினர். ஆளவந்தார் சரமதசையில் சிஷ்யர்களுக்கு முடிவாக உபதேசம் செய்தருளும்போது ''திருமந்த்ரார்த்தம் போகமண்டபமான கோயிலிலெழுந்தருளியிருக்கும் நம்பெருமாள், சரமச்லோகார்த்தம் புஷ்பமண்டபமான திருமலையில்—திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் திருமலையப்பன். மந்த்ரரத்னம் என்னும் த்வயார்த்தம் த்யாக மண்டபமான பெருமாள் கோயிலில் காஞ்சியில் அத்திகிரியில் எழுந்தருளியிருக்கும் தேவாதிதேவனை பேரருளாளன்'' என்று உபதேசித்தருளினர் மந்த்ர ரத்னார்த்தமான எம்பெருமானுக்கு ஸ்தோத்ரரத்னம் அருளிச்செய்தது பொருத்தமேயன்றே. ஆளவந்தார் அருளிய சதுச்லோகீ வரதவல்லபையான பெருந்தேவி விஷயம் என்பது ஸுஸ்பஷ்டமாகும். இப்படி ஆளவந்தார் மிக ஈடுபாடு கொண்ட பேரருளாளன் உகக்கும்படியான பேரருளாளன் அருளிச்செயல் கைங்கர்யஸபை மேன்மேலும் வளந்து விளங்குமாறு வரதனை வேண்டுகிறேன்.

ஸ்ரீ:



தேவப்பெருமாள் விஷயமாக ஆளவந்தாரருளிச் செய்த

முக்தகம்

———

ஆளவந்தார் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளிய காலத்தில் யாதவ ப்ரகாசரிடத்து வேதாந்தம் பயின்றுகொண்டிருந்த எம்பெருமானரை ''ஆமுதல்வன் இவன்'' என்று கடாக்ஷித்து, உடையவர் ஸித்தாந்த ப்ரவர்த்தகராக ஆகவேணுமென்று பேரருளாளனுடைய திருவடிகளிலே கீழ்க்கண்ட ச்லோக மூலமாக ப்ரபத்தி பண்ணினரென்று பெரியோர் பகர்வர்.

யஸ்ய ப்ரஸாதகலயா பதிர: ச்ருணோதி
பங்கு: ப்ரதாவதி ஜவேந ச வக்தி மூக:,
அந்த: ப்ரபச்யதி ஸூதம் லபதே ச வந்த்யா
தம் தேவமேவ வரதம் சரணம் கதோஸ்மி!!

பொருள்:

பேரருளாளனுடைய அநுக்ரஹம் செவிடனைக் கேட்க வைக்கும்; முடவனை ஓட வைக்கும்; ஊமையைப் பேசவைக்கும்; குருடனைக் காண வைக்கும்; மலடியும் மக்களைப் பெறவைக்கும்; இப்படிப்பட்ட அநுக்ரஹம் செய்தருள வல்ல பேரருளாளனைத் தஞ்சமாகப் பற்றுகிறேன்.

ஆளவந்தார் திருவடிகளே சரணம்.

ஆளவந்தார் (பெருந்தேவித்தாயார் விஷயமாக) அருளிச் செய்ததாக வழங்கும் ச்லோக ரத்னம் வருமாறு:

''ஆகாரத்ரய ஸம்பந்நாம் அரவிந்த நிவாஸினீம்
அசேஷ ஜகதீசித்ரீம் வந்தே வரத வல்லபாம்''

———

ஸ்ரீ:



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

தேவப்பெருமாள் விஷயமான ஸ்தோத்ரங்கள்

திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்த

தேவராஜாஷ்டகம்

தனியன்

ஸ்ரீமத்காஞ்சீமுநிம் வந்தே கமலாபதிநந்தநம்,
வரதாங்க்ரிஸதாஸங்க ரஸாயநபராயணம்

தேவராஜதயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணமுத்தமம்,
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்.

———

நமஸ்தே ஹஸ்திசைலேச ஸ்ரீமந்! அம்புஜலோசந,
சரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்தி ஹராச்யுத. (1)

ஸமஸ்தப்ராணி ஸந்த்ராணப்ரவீண! கருணேல்பண!
விலஸந்து கடாக்ஷாஸ் தே மய்யஸ்மிந் ஜகதாம் பதே. (2)

நிந்திதாசாரகரணம் நிவ்ருத்தம் க்ருத்யகர்மண:,
பாபீயாம்ஸம் அமர்யாதம் பாஹி மாம் வரதப்ரபோ! (3)

ஸம்ஸாரமருகாந்தாரே துர்வ்யாதிவ்யாக்ரபீஷணே,
விஷயக்ஷுத்ரகுல்மாட்யே த்ருஷாபாதபசாலிநி. (4)


புத்ரதாரக்ருஹ க்ஷேத்ர ம்ருகத்ருஷ்ணும்பு புஷ்கலே,
க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ்தத:. (5)

அஜஸ்ரம் ஜாதத்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம்,
க்ஷீணசக்திபலாரோக்யம் கேவலம் க்லேசஸம்ச்ரயம். (6)


ஸம்தப்தம் விவிதைர் து:க்கை: துர்வசைரேவமாதிபி:,
தேவராஜ! தாயஸிந்தோ! தேவதேவ! ஜகத்பதே! (7)

த்வதீக்ஷண ஸுதாஸிந்து வீசிவிக்ஷேபசீகரை:.
காருண்யமாருதாநீதை: சீதலீரபிஷிஞ்ச மாம். (8)

திருக்கச்சி நம்பிகள் திருவடிகளே சரணம்:



I G P ENGINEERS P. LTD.
134, Angappa Naicken Street, Madras-1





ஸ்ரீ :

தேவப்பெருமாளும் திருக்கச்சி நம்பிகளும்

ஸ்ரீ. உ.வே. K. B. தேவராஜன்



த்யாகமண்டபமாம் ஸ்ரீ காஞ்சியில் தேவப்பெருமாளுக்கு ஆலவட்டமும் கையுமான அந்தரங்கர் திருக்கச்சிநம்பிகள் ஆவார். பேரருளாளன் பெருமைபேசக்கற்றவர்களுள் இவர்க்குத் தனிச்சிறப்புண்டு, இவருடைய பெருமைகளையும் தேவப்பெருமாளுக்கும் இவர்க்கும் உள்ள ஸம்பந்தத்தையும் ''தேவப்பெருமாளும் திருக்கச்சிநம்பிகளும்'' என்கிற தலைப்பில் ஈண்டு சிறிது அனுபவிப்போம்.

ஸ்ரீ காஞ்சீ பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே
அதீதார்ச்சாவ்யவஸ்த்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்.

என்று ஸ்ரீ மணவாள மாமுனிகள் தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு பாடுகிறார். இதன் பொருளாவது ''அர்சாவதார ஸமர்தியைக்கடந்து திருக்கச்சி நம்பிகளுடன் பரம ப்ரீதியுடன் வார்த்தையாடிய தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு'' என்பதாம். எம் பெருமான் அர்ச்சாவதாரத்தில் யாரோடும் பேசுவதில்லை என்று ஸங்கல்பம் கொண்டுள்ளான். அந்த நியமத்தை மீறி திருக்கச்சி நம்பிகளோடு வார்த்தையாடியருளினார் தேவப்பெருமாள். இது மற்றையோர்க்கில்லாத அஸாதாரணப் பெருமையாகும்.

தேவப்பெருமாளுக்கு அந்தரங்கமாகத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்து கொண்டிருந்தவர் திருக்கச்சி நம்பிகள். எம்பெருமானுரை ஆளவந்தார் தேவப் பெருமாள் திவ்யாஸ்தானத்தில் ''ஆமுதல்வனிவன்'' என்று கடாக்ஷித்து அனுக்ரஹிக் கப் பெரிதும் காரணமாயிருந்தவர் திருக்கச்சி நம்பிகளே. மேலும் எம்பெருமானுர்க்கு தேவப்பெருமாள் அனுக்ரஹித்தருளின ஆறு வார்த்தைகளும் திருக்கச்சி நம்பிகள் மூல மாகவிறே அனுக்ரஹித்தது.

எம்பெருமானுக்கு திருவுள்ளத்தில் திருக்கச்சி நம்பிகள் விஷயத்தில் ப்ரஸாத ப்ரதிபத்தி பிறந்தது. திருக்கச்சிநம்பிகள் அமுதுசெய்தருளின ப்ரஸாதத்தைப பெற வேண்டுமவற்றைச் செய்தும் கூட ப்ரஸாதோத்ச்யம் நிறைவேறிற்றில்லை, 'இனி செய்ய வேண்டுவதென்?' என்று தம் திருவுள்ளத்தில் விசாரித்து, நம்பிமடத்தேறவெழுந்தருளி "அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்; அவையெவையென்று தேவரீர் தேவப் பெருமாளுக்கு விண்ணப்பம் செய்து, அவர் அருளிச்செய்வதை அடியேனுக்குத் தேவரீர் அருளிச்செய்யவேணும்" என்று பிரார்த்தித்தார். நம்பிகளும் அன்றிரவு பெருமாளுக்கு அந்தரங்கமாகத் திருவாலவட்ட கைங்கர்யம் பண்ணுகிறவளவில், தேவப்பெருமாள் தாமே, "நம்பி! நம்முடன் சிலவார்த்தை சொல்லுவான்போலேயிருந்தாயீ!" என்று திருவாய்மலர்ந்தருள, நம்பிகளும் பெருமாளுடனே "இவையாழ்வார் சில நினைவுகள் நினைத்திருக்கிறார்; அவை எவை என்று தேவரீரை கேட்டுச் சொல்ல வேணும் என்று மிகவும் ஆதரவாயிராநின்றார். அவற்றை அருளிச்செய்யவேணும்" என்று விண்ணப்பம் செய்தார்.பெருமாளும் (1) ப்ரத்வம் நாமே (2) பேதமேதர்சநம் (3) உபாயமும்ப்ரபத்தியே (4) அந்திமஸ்ம்ருதியும் வேண்டா (5) சரீராவஸாநத்தில் மோக்ஷம் (6) பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது—என்று இவ்வாறு வார்த்தைகளையும் தேவப்பெருமாள் திருவுள்ளமாயருளினார். இவற்றைத் திருக்கச்சிநம்பிகளும் விடிவோரை. இளையாழ் வாருக்குக்கூறி, 'இவையோ உம் நினைவு?' என்று கேட்க "ஆம்" என்றருளினார் ப்ரீதி யுடன் இளையயாழ்வாரும். இதனையே பின்புள்ளாரும்,

அஹமேவ ப்ரம்தத்வம், தர்சநம்பேதஏவச மோக்ஷோபாய :
ப்ரபத்திஸ்யாத் அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம்
தேஹாவஸாநே முக்திஸ்யாத் பூர்ணசார்ய ஸமாச்ரய :
வார்த்தாஷட்கமிதம் லேபே காஞ்சீபூர்ண முகாத்குரு:

என்று வடமொழியிலருளினார்.

வடிவழகிய நம்பிதாசர் என்பவர், இவ்விஷயத்தையே,

செப்புகின்ற ப்ரதத்வம்யானே யென்னச் செப்புதி, வே
ரொப்பிலாதாய் ! தரிசனமும் பேதமென்றே யுரைத்திடுக
தப்பிலாதவுவாயமதும் ப்ரபத்தியென்றே சாற்றிடுக,
அப்ப! புகல்க இவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்
இந்தச்சரீரவவதாரந்தன்னிலிசையும் மோக்கமது
அந்தமில்லாக் குணத்தினனுக்கு ஆசார்யனும் பெரியநம்பி
சிந்தைதன்னுளிவையெல்லாம் சிந்தித்திருந்தான் இளையாழ்வான்
முந்தியிவை நீ மொழியென்று மொழிந்தருள்வானருளாளன்

என்று தமது 'எம்பெருமானார் வைபவம்' என்றும் செய்யுட்காவியத்தில் தமிழ்ப் படுத்தினார்.

இதனால், ஸம்ப்ரதாயத்தின் உயிரான அர்த்தங்கள், தேவப்பெருமாளுக்கும் திருக் கச்சிநம்பிகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தால்தான் நிலைபெற்றன என்று தேறிற்று,

திருக்கச்சிநம்பிகள் தேவப்பெருமாளுக் கைங்கர்யம் புரிய இழிந்தது பற்றி கீழ் கண்டவாறு ரஸமாக அனுபவிப்பதுமுண்டு. ஸ்ரீ உ.வே காஞ்சி ஸ்வாமி இவ்விஷயத்தில் அருளியதை அப்படியே இங்குத் தரலாகிறது.

இவர் (திருக்கச்சிநம்பிகள்) திருவரங்கம் பெரியகோயிலில் ஆளவந்தாருடைய திருவடி நிழலிலே யொதுங்கி ஸாமான்ய விசேஷ சாஸ்த்ரங்களையெல்லாம் கற்று உணர்ந்து, எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ணுவதே பரமபுருஷார்த்தமென்று கடைப்பிடித்தார். அர்ச்சாவதார எம்பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்வதில் இவர்க்கு இயற்கையான குதூஹலமிருந்தது. கோயிலில் அழகிய மண வாளனுக்கு அந்தத்திருத்தொண்டு செய்யத்தொடங்கினார். உபயகாவேரி மத்யத்தில் சயனித்திருக்கின்ற அப்பெருமானுக்குத் தாபம் சிறிதுமில்லாமையாலே திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர் பொன்னி திரைக்கையாலடி வருடப்பள்ளி கொள்ளா நின்ற நமக்கு இத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே! என்று அப்பெருமாள் அருளிச்செய்ய, அவ்விடம் விட்டுத் திருவேங்கடமலையேற வந்து சேர்ந்து அங்கே திருவேங்கடமுடை யானுக்கு அந்தக் கைங்கர்யத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

அந்தப்பெருமானும் "குளிரருவி வேங்கடத்தில் குளிர நிற்கும் நமக்கு இந்தத் திருத்தொண்டு அபேக்ஷிமாக இல்லையே; அத்திகிரியருளாளப்பெருமாள் நான்முகன் செய்த அயமேத வேள்வியில் தீயினில் தோன்றியவராதலால் அவர்க்குத்தாபம் மிக் கிருக்கும்; இக்கைங்கர்யம் அவர்க்கு அபேக்ஷிதமாயிருக்கும்; அங்கேறச்சென்று தொண்டு செய்து வாழ்வீராக" என்று நியமிக்க, அந்த நியமனத்தைச் சிரமேற் கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதனை பேரருளாளனுடைய திருவடிவாரத்திலே விடைகொண்டு திருவாலவட்டமும் கையுமாய் 'ஒழிவில் காலமெல்லா முடனுய்மன்னி வழுவிலாவடிமை' செய்துவந்தார். இக்கைங் கர்யம் பேரருளாளனுக்குப் பரமப்ரீதிகரமாக இருந்தபடியாலே அர்ச்சாவதார ஸமாதி யைக் குலைத்துக்கொண்டும் நம்பியோடு வார்த்தையாடுவதென்கிற முறை ஏற்பட்டது. 'தேவப்பெருமாள் திருக்கச்சிநம்பியோடு வார்த்தையாடுகிறார்' என்கிற பிரஸித்தி ஊரெங்கும் பரவியது.

ஆக, இவ்வளவும் ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகள் இதி
லிருந்து தேறும் அர்த்தம் 'அவனுக்கந்த அடிமையே பரமபுருஷார்த்தம்' என்பதாகும்.
இதுவே ஸாரார்த்தமும். சாஸ்த்ரார்த்தமுமாம். ஆகையிறே பெரியாழ்வாரும், கிருஷ்ண
வதாரத்தில் அவனுகந்து ஸ்வீகரித்த மாலாகாரருடைய புஷ்ப கைங்கர்யத்தை
ஸ்மரித்துத் தாமும் அக்கைங்கர்யத்தையே செய்யலானார்.

இனி, தேவராஜ அஷ்டகம் என்கிற ஸ்தோத்ரத்தைச் சிறிது அனுபவிப்போம்.

தேவப்பெருமாள் விஷயமான எட்டுச்லோகங்களே, தேவராஜ அஷ்டகமாகும்.
இதில் முதல் ச்லோகத்தால், தேவப்பெருமாளே வணங்கும் முகத்தால் பரத்வாதி
பஞ்சகங்களையும் அனுபவிக்கிறார் என்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியின் நிர்வாகம்.

எம்பெருமானுக்கு பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி என்று ஐந்து
நிலைகள் உள்ளன. ஹஸ்திசைலேச! என்றவிளியினால் அர்ச்சாவதாரம் கூறப்படுகிறது
என்பது ஸ்பஷ்டம். ஸ்ரீமந்! என்கிற விளியினால் பரத்வம் சொல்லப்படுகிறது. அது
எங்ஙனேயென்னில், எப்பெருமான் பரமபதத்தில், பிராட்டியுடனும் நித்யமுக்தர்
களுடனும் எழுந்தருளியிருக்கிறான். இதற்குப் பிரமாணம்

'வைகுண்டேது பரேலோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதிः
ஆஸ்தே விஷ்ணுः அசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ்ஸதா'

என்கிற ச்லோகமாகும். இங்கு 'ச்ரியாஸார்த்தம்' என்கிற பிராட்டி ஸம்பந்தம் நோக்கற்
பாலது. இங்கு,

''தமஸः பரமோதாத்தா சங்கசக்ர கதாதர:
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீः அஜய்ய; சாச்வதோத்ருவः''

என்கிற மந்தோதரி வசநமும் அநுஸந்திக்கவுரியது. இந்த பிராட்டியுடன் கூடியிருக்கும்
நிலையான பரத்வத்தைத்தான் ஸ்ரீமந் என்கிற விளியினால் அருளினார்.

அம்புஜலோசந! என்கிறவிளி எம்பெருமானின் விபவாவதாரங்களை நோக்கிய
தாகும். அழகிய திருமேனிபரிக்ரஹம் பண்ணி இந்நிலவுலகில் ராமக்ருஷ்ணாதிரூபேண
வந்தருளிய நிலையிறேவிபவம். அம்புஜலோசந! (தாமரைக்கண்ணனே) என்றது திரு
மேனி சௌந்தர்யமனைத்துக்கும் உபலக்ஷணம். உலகோரைக்கவர எம்பெருமானின்
உபாயம் அழகிய திருமேனியே. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் ஸூஷேணः என்றொரு
திருநாமமுள்ளது. இதன் பாஷ்யத்தில் பட்டர் அருளிச்செய்வதாவது :

சோபநः, சுத்தஸத்வமயீ பத்தமுக்தநித்ய விஜயோபகரணத்வாத் ஸேநைவ பஞ்சோப
நிஷத் காயோऽஸ்யேதி ஸூஷேணः'' என்பதாம். 'நல்ல ஸேனையை உடையவன்' என்பது
இத்திருநாமத்தின் பொருள். ஸேனையாவது மற்றையோரைத் தோற்பிப்பதாம். எம்
பெருமானும், பத்தமுக்தநித்யரூபர்களான த்ரிவித சேதநவர்க்கங்களையும் வசப்படுத்தச்
சேனைபோலச் சிறந்த கருவியான பஞ்சோபநிஷந்மயமான திருமேனியையுடையவன்.
ஆக, ஸர்வரையும் வசப்படுத்துவது திருமேனியைக்கொண்டிறே. இந்தத்திரு நாமம்
வராஹவதாரப்ரகரணத்தில் வருமதிறே. ஆகவே, 'அம்புஜலோசந!' என்கிறவிளி
விபவாவதாரத்தைக் கூறுமதாம்.

ப்ரணதார்த்திஹர! என்கிற விளி வ்யூஹவாஸூதேவனைக் குறிப்பதாம். எம்பெருமான்
திருப்பாற்கடலில் எழுந்தருளியிருக்கும் இருப்பு வ்யூஹம் எனப்படுகிறது தேவர்களின்
கூக்குரல் கேட்பதற்காகவே எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். க்ஷீராப்தியில்
கூப்பீடு கேட்குமிடம்'' என்றே நம் ஆசார்யர்கள் வ்யவஹரிப்பர்கள் வ்யூஹத்தை.
ஆச்ரிதர்கள் துன்பத்தினால் கூப்பிடும்பொழுது உடனே அவர்களுடைய ஆர்த்தியைப்
போக்குகிறபடியால் ப்ரணதார்த்திஹரன் எனப்படுகிறான். வ்யூஹம் அவதாரகந்தம்
எனப்படுகிறது. வ்யூஹவாஸூதேவன்தான் அவதாரங்களைப் பண்ணியவன் என்றபடி.
இதற்குச்சேரவே ''ஏஷநாராயணः ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதநः நாகபர்யங்கமுத்ஸ்
ருஜ்ஜிஹ்யாகதோ மதுராம்புரீம்'' என்கிற ப்ரமாணமும் அமைந்துள்ளது. இந்நிலையை
ஆண்டாளும்'பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்' என்று திருப்பாவையில் இரண்டாம்
பாட்டில் அருளி, இந்திரனின் ஆர்த்தநாதம் கேட்டு வாமநாவதாரம பண்ணிய சரித்
திரத்தினை ''ஓங்கியுலகளந்த'' என்றருளினாள். ஆக ஆர்த்தர்களின் ஆர்த்திஹரணத்
துக்காகவே வ்யூஹவாஸூதேவனாகிலை. இதுவே ப்ரணதார்த்திஹர! என்றும் விளியின்
பொருள்.

அச்யுத! என்பது அந்தர்யாமித்வத்தைக் குறிப்பதாம். ஓரிடத்தையும் நழுவ
விடாதவன் என்று பொருள். உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துள்ளமையே
அந்தர்யாமித்வமாம். அதுவே அச்யுத நாமத்தால் கேறுமர்த்தம். ஆக ஸ்தோத்ரத்
தொடக்கத்திலேயே பரத்வாதிபஞ்சகமும் அநுபாவ்யம்.

மேலுள்ள ச்லோகங்களையும் ஆசை பற்றி அறையலாமாயிருக்க விரிவுக்கஞ்சி நிறுத்திக்
கொள்கிறேன்.குற்றங்களை பெரியவர்கள் பொருத்தருளவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

With best compliments from :



THE GUINDY MACHINE TOOLS PRIVATE LTD.,
PALLIKKARANAI
MADRAS - 601 302

WITH BEST COMPLIMENTS FROM :



LEO FILMS CIRCUIT
No 15, MEERAN SAHIB STREET,
MOUNT ROAD,
MADRAS - 600 002

Phone : 844920

With best compliments from :

ARJUNA FINANCE & CHITS (Regd)
5, Kanniamman Koil Street,
Shenoy Nagar,
MADRAS-600030



AUCTION CHIT PROMOTERS

Rebuilds Petrol & Diesel Engines
Automobile As Well As Stationery Engines

★

For More Particulars
Contact

SUPER ENGINEERS LIMITED
'MOTOR HOUSE' TRICHY ROAD,
COIMBATORE - 641018

The widest sales and service network in auto electricals...



Lucas-TVS

Lucas-TVS auto electricals are always within easy reach. That's because they are distributed by Lucas Indian Service Limited and T V Sundram Iyengar and Sons Limited who have, over the past 70 years, built up the most extensive sales and service network in India.


Lucas Indian Service and T V Sundram Iyengar and Sons do not merely distribute Lucas-TVS auto electricals through their large network of depots and retail outlets. They provide the most comprehensive after-sales service. Lucas Indian Service even conducts courses for mechanics to acquaint them with Lucas-TVS products.

Lucas-TVS

Current with the times


Lucas-TVS Limited Padi Madras 600 050

SAA/LTVS/3910/1302



தென்னகியூபர் கழிலிலைக்கீழ் பூண்ட அன்பாளன்

காலத்திற்கேற்ற



அயர்வுமரர்கள் அதிபதி துயரறு சுடரடி தொழுவன்

அந்தராப்



ஸ்ரீ :

தேவப்பெருமாளும் எம்பெருமானும்

ஸ்ரீ உ. வே. திருமலை
அனந்தாண்பிள்ளை
வரதாசாரியார்



நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாணம். ப்ரமாதா, ப்ரமேயம் என்கிற பதத்தைச் சேர்த்தே கூறிவருகிறோம். ப்ரமாணங்களில் தலையானது திவ்ய ப்ரபந்தம், ப்ரமாதாக்களில் தலைவர் திவ்யஸூரிகள், ப்ரமேயங்களில் தலையானவை திவ்ய தேசங்கள் மொத்தம் 108. அவைகளில் கோயில் திருமலை, பெருமாள் கோயில் என்கிற மூன்றும் முதன்மையானவை இவற்றுள், பெருமாள் கோயில் தனிச்சிறப்புற்றது. 'நகரீஷ்வஞ்சஸர்வாஸாம்புரீ காஞ்சீ விசிஷ்யதே ! கிரீஷ்வஞ்சபிஸர்வேஷாம் ஸ்ரேஷ்டோ ஹஸ்திகிரீஸ் ஸ்ம்ருத: ! வேகவத்யுத்தரே தீரே புண்யகோட்யாம் ஹரிஸ் ஸ்வயம்: வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே, என்று சொல்லுகிறபடியே வேகவதியின் வட கரையிலே, உத்தமமான கச்சிமா நகரத்திலே, கிரிகளில் வைத்துகொண்டு சிறந்ததான ஹஸ்திகிரியின் மேலே, புண்ணியகோடி விமாநத்தின் நடுவே யெழுந்தருளியிருப்பவர் தேவப்பெருமாள் என்று போற்றப்படும் பேரருளாளப் பெருமாள் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள் புரியும் திவ்யதேசமாகும் இது.

கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் முதலான எல்லாதிவ்ய தேசத்து எம்பெருமான்களிடத்தும், ஸ்வாமி எம்பெருமானார் அன்பு பூண்டிருந்தாலும் பெருமாள் கோயில் (ஸ்ரீ காஞ்சீ) தேவப்பெருமாள் திருவடியிணைகளில் அஸாதாரண மான அன்பு கொண்டிருந்தாரென்பது ஸுப்ரஸித்தம். இராமாநுச நூற்றந்தாதியில் திருவரங்கத்தமுதனார் இவ்விஷயத்தை நன்கு காட்டியுள்ளார். அப்பாசுரம் வருமாறு :-

"ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்கால மெல்லாம் மனமே
ஈண்டு பல்யோனிகள் தோறுழல்வோம் இன்றே ரெண்ணின்றியே
காண்டகு தோளண்ணல் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப்
பூண்ட அன்பாளன் இராமாநுசனைப் பொருந்தினமே"

ஸ்ரீ ஹஸ்திகிரியின் மேல் எழுந்தருளியிருக்கும் தேவப் பெருமாளுடைய திருநாமமே ''தென்னத்தியூரர்'' என்பதாகும், பூதத்தாழ்வார் தேவப்பெருமாளை துதிக்கும் போது ''உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்'' என்றும் ''அத்தியூரான் புள்ளூர்வான்'' என்றும் அருளியுள்ளார். அவரை அடியொற்றியே திருவரங்கத்தமுதனாரும் தேவப் பெருமாளை ''தென்னத்தியூரர்'' என்று பணித்துள்ளார்.

எம்பெருமானார் தேவப்பெருமாளையே திருவாராதனப் பெருமாளாகக் கொண்டிருந் தார். இவர் தேவப்பெருமாள் திருவடியிணையில் மிக்க அன்பு கொண்டிருந்தமைக்குக் கீழ்க்காணும் காரணங்கள் முக்கிய நிகழ்ச்சிகளாக அமைகின்றன:-

1 எம்பெருமானார் பரமாசார்யரான ஆளவந்தாரால் ''ஆமுதல்வனிவன்'' என்ற விசேஷ கடாக்ஷம் பண்ணப்பெற்றது தேவப் பெருமாள் திருவருளினாலேயாம். ஆளவந் தார் திருவரங்கம் பெரியகோயிலில் தர்சனப்ரவர்த்தக்ராய் வாழ்ந்தபோது காஞ்சீபுரியில் வாஸம் செய்து வந்த இராமாநுசனின் பெருமைகளை கேட்டு இவரைக் காணவேண்டு மென்று காஞ்சீக்கு எழுந்தருளினார். பெருந்தேவித்தாயாரை ஸேவித்து பிரதக்ஷிணமாக திருப்புற்றின் சமீபத்திலே திருவனந்தாழ்வானையும் அதற்குக் கிழக்காக கரியமாணிக் கப் பெருமாளையும் ஸேவித்து நின்றபோது, யாதவப்பிரகாசரும் தன் சிஷ்யர்களுடன் அங்கு வாரா நின்றார். யாதவப்ரகாசருடைய சிஷ்யர்கள் திரளிலே இளையாழ்வார் (இரா மாநுஜரும்) இருந்தார். ''இவர்களில் இளையாழ்வார் ஆர்'' என்று தமது பக்கத்திலே நின்ற திருக்கச்சிநம்பியை ஆளவந்தார் வினவினார். அதற்கு நம்பிகள் ''அதோ! ஆஜாநு பாஹுவாய் நடுவே வருகிறார் என்று பதிலளித்தார். இளையாழ்வார் அருகில் சென்று ஒரு நல்லவார்த்தை சொல்ல அவஸரம் காணுமையாலே, ஆளவந்தார் தாமிருந்த இடத் திலேயே மிக்க சந்தோஷத்துடன் இளையாழ்வாரை பார்த்தருளி தமது உட்கண்ணாலே ''ஆம் முதல்வனிவன்'' என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளினார். நம் தர்சனத்தை நடத் திச்செல்ல இவன் முதல்வன் ஆகவேண்டும் என்பது இதன் பொருளாகும். தாம் பண்ணின விசேஷ கடாக்ஷம் பலிப்பதற்காக தேவப்பெருமாளை நோக்கி, ''யஸ்ய ப்ரஸாதகலயா பதிரஸ்ருணோதி பங்கு:பரதாவதி ஜமேநச வக்திமூக: அந்த:ப்ரபச்யதி ஸுதம் லபதேச வந்த்யா தந்தேவமேவ வரதம் சரணங்க தோஸ்மி'' என்றும் 'தாம் வேண்டும் காமமே காட்டுங்கடிது' என்றும் சொல்லுகிறபடியே அவரவர்களுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்தருளுகிறவர் நீர். ஆகையாலே அடியேனுக்கும் இளையாழ் வாரை (இராமாநுசரை) நம் தர்சனப்ரவர்த்தகராகும்படி விசேஷ கடாக்ஷம் பண்ணியருள வேணும் என்று தேவரீர் திருவடிகளில் சரணம் புகுந்தேன்' என்று தேவப்பெருமாள் திரு வடிகளிலே விண்ணப்பித்தார். பின்பு அத்திகிரியின் மேலேறித் தேவப்பெருமாளை ஸேவித்து மீண்டும் திருவரங்கம் பெரியகோயில் சேர்ந்தார். ஆக ராமாநுசர் நம் தர்சனப்ரவர்த்தகாசார்யராக ஆகும்படி அருள்செய்தவர் நம் தேவப்பெருமாளே ஆவார்.

(2) ஸ்வாமி எம்பெருமானார் சிறு வயதில் பூர்வபக்ஷ க்ரந்தங்களை யாதவ ப்ரகாசர் என்னும் அத்வைதியிடம் வாசித்துக் கொண்டிருக்கும்போது, ஒருநாள் இராமா நுஜர் யாதவப்ரகாசனுக்குத் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தார். அப்போது யாதவர் ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ'' என்கிற ச்ருதி வாக்யத்திற்கு தாழ்ந்ததான பொருளுரைக்க, அது கேட்டு இளையாழ்வார் மிக்க சோகம் அடைந்து, கண்ணீர் பெருக்க அந்த சோகக் கண்ணீர் யாதவருடைய தொடையிலே 'சுரீர்' என்று நெருப்புப் பட்டாற்போலே விழுந்தது. அதனைக் கண்ட யாதவப்ரகாசர் நிமிர்ந்து பார்த்துப் பரபரப்படைந்தார். ''உனது கண்ணில் கண்ணீர் வருவது எதனாலே?'' என்று கேட்டார் யாதவர். அதற்கு இவர் ''சூர்யனால் மலர்ந்த பருத்த தண்டை உடைய, ஆழமான நீரில் முளைத்த தாமரை போன்ற கண்ணையுடையவன் பரமபுருஷன்'' என்ற அழகான பொருளாலே எம்பெருமானது திருக்கண்களை விவரித் திருக்கும் சாந்தோக்ய உபநிஷத் வாக்யத்திற்கு, தேவரீர் தாழ்ந்ததாக உள்ள குரங்கின் ஆஸனமாகிற உதாரணத்தைச் சொன்னதாலே என் மனம் மிக வருத்தமடைந்துள்ளது. இதனால் கண்ணீர் விட்டேன்'' என்று கூறினார். இதனைக்கேட்ட யாதவப்ரகாசருக்கு உடையவரிடம் மிக்க கோபம் ஏற்பட்டது. இதிலிருந்து யாதவப்ரகாசருக்கு இராமாநுசர் மீது வெறுப்பு அதிகமாகி இவரால் தம் அத்வைத ஸித்தாந்தம் சிறுத்துப் போகும் என பயந்தார். இராமாநுசரை முடித்திடல் வேண்டும் என்றும் திட்டமிட்டார். கங்கா யாத்திரை என்கிற வ்யாஜத்தாலே யாதவப்ரகாசர் தம் சீடர்களையும் இராமாநுசனையும் அழைத்துக் கொண்டு யாத்திரை கிளம்பினார். உடையவரைக் கங்கையில் தள்ளி வீழ்த்திடவேண்டும் என்பது யாதவப்ரகாசரின் திட்டம். கங்கையில் விழுந்து மரண மடைகிறவன் மோக்ஷம் செல்கிறான்; அதே சமயம் கங்கையில் தள்ளுகிறவனுக்கும் பாபம் கிட்டாது. யாத்திரை செல்லும் வழியில் யாதவப்ரகாசருடைய கெட்ட எண்ணம் இராமாநுசருக்கு தம்முடைய தம்பியான ''எம்பார்'' மூலம் தெரியவந்தது. இதனையறிந்த இராமாநுஜர், யாதவப்ரகாசரும் மற்றவர்களும் இருந்த கூட்டத்தை விட்டு நடுக் காட்டில் தனியே நின்றுவிட்டார். இராமாநுசனை எங்கு தேடியும் காணுததால் யாதவ ப்ரகாசர் தம் எண்ணம் ஈடேறியதாக நினைத்து மற்ற சீடர்களுடன் தம் பயணத்தைத் தொடர்ந்து மேலே கங்கையை நோக்கிச் செல்லலுற்றார், இராமாநுஜர் தனியே நின்ற இடம் நிர்ஜனமும் நிர்ஜலமுமாயிருக்கிற விந்திய மலையின் காட்டுப் பிரதேசமாக இருப் பதை எண்ணித்திகைத்தார். அங்கிருந்து காஞ்சிக்கு எப்படி மீளுவது என்று வழி தெரியாமல் திகைத்து நின்றார். அப்போதுதான் அந்த ஆச்சரியம் நடந்தது. தேவப் பெருமாளும் பெருந்தேவித்தாயாரும், வில்லி வேடத்திலும், வில்லியின் மனைவி வேடத் திலும் அக்கொடிய காட்டுப் பிரதேசத்திலே இராமாநுசர் முன்பு தோன்றினார்கள். ஸ்வாமிக்குத் துணையாக வழிகாட்டி அக்காட்டுப் பிரதேசத்திலிருந்து ஒரே ராத்திரியில் காஞ்சி க்ஷேத்திரத்திற்கு இராமாநுசனைக் கொண்டு சேர்த்தனர். காலை பொழுது

புலரும் சமயம் வில்லியும், வில்லியின் மனைவியும் காஞ்சிக்கு அருகாமையில் உள்ள சாலக்கிணற்றில் இருந்து இராமாநுசர் திருக்கையால் தீர்த்தம் வாங்கிப் பருகி தாகம் தீர்ந்து மறைந்தனர். ''வில்லியின் வேடத்தில் வந்தது யாராக இருக்கும்'' என ஆச்சரியப்பட்ட இராமாநுசருக்கு அந்த விடியற்காலை வேளையிலே அத்திகிரியின் புண்யகோடி விமானம் மிக அருகில் தெரிவதைக் கண்டு, தீர்த்தம் வாங்கிப் பருகிய திவ்ய தம்பதிகள் ''பேரருளாளனும் பெருந்தேவித் தாயாருமே'' என அறுதியிட்டு மகிழ்ந்தார். இச்சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு அறிகுறியாக, இராமாநுசர் அன்று முதல் தினந்தோறும் சாலக்கிணற்றில் இருந்து தீர்த்தம் கொணர்ந்து தேவப்பெருமாளுக்கும், பெருந்தேவித்தாயாருக்கும் ஸமர்ப்பித்து வந்தார்.

3) தேவப்பெருமாள் எம்பெருமானுருக்குச் செய்தருளிய மற்றொரு கிருபை, ''அருளாளன் ஆறு வார்த்தை'' யாகும். தேவப்பெருமாள் திருக்கச்சி நம்பிகளுடன் அர்ச்சாவதார சமாதியைக் கடந்து பேசுவது வழக்கம். அப்படி பேசுங்கால் தேவப் பெருமாள் அருளிய ஆறு வார்த்தைகளை திருக்கச்சிநம்பிகள் பெற்று உடையவருக்கு அறிவித்தார். இவைகள் எம்பெருமானுருக்குத் தாம் கொண்ட சித்தாந்தப் பொருளை நிலை நிறுத்துவனவாக அமைந்தன. தேவப்பெருமாள் பிரம்மாவின் யாக குண்டத்தில் நின்றும் அவதரித்தவர். ஆதிசேஷனுல் திருவாராதானம் செய்யப்பெற்றவர். ஆதி சேஷனே எம்பெருமானுராகத் திருவுருக்கொண்டு பின் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்தார்.

4) எம்பெருமானுர் தேவப்பெருமாளிடம் அன்பு பூண்டிருந்தாப்போலே அபராவதாரமான மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்தபோதும் நம் தேவப்பெருமாளிடம் மிக்க அன்பு பூண்டிருந்தார் என்பதனை மணவாள மாமுனிகள் விஷயமான வடிவழகு கட்டியத்தில் காணலாம். ''தேவபிரான் அடியிணையில் அன்பு பூண்ட பெருமாள்'' என்பதாகும். அது மணவாள மாமுனிகள் தேவப்பெருமாள் விஷயமாக அருளியுள்ள ''தேவராஜமங்களம்'' எண்னும் ஸ்தோத்திர நூலில் பெருமாள் திருக்கச்சி நம்பிகளுடன் வார்த்தையாடுவது உண்டு என்பதனைக் காட்டியுள்ளார். அந்த ஸ்லோகம் வருமாறு :

''ஸ்ரீ காஞ்சீ பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபி பாஷிணே.
அதீத அர்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்''

5) எம்பெருமானுருக்கும் யஜ்ஞமூர்த்தி என்னும் ஒரு மாயாவாதி ஸன்யாசிக்கும் வாதப்போர் வெகுநாள் (17 நாட்கள்) வெற்றி தோல்வியின்றி நடந்தது. யஜ்ஞமூர்த்தியை பூரண வெற்றி கொள்ள மனக்கலக்கத்துடன் இராமாநுசர் பதினேழாம் நாள் இரவு அமுது செய்யாமலே சயனித்தார். அன்றிரவு இவர் கனவிலே தேவப்பெருமாள் தோன்றி 'மாயாவாதியின்' வாயடங்கும்படியான சில அர்த்த விசேஷங்களைச் சொல்லி மறைந்தார். மறுநாள் காலை இவர் யஜ்ஞமூர்த்தியைத் திருத்திப் பணிகொண்டார் என்பது சரித்திரம் தேவப்பெருமாளுடைய திருவருளினுலேயே இவரால் யஜ்ஞமூர்த்தியை ஆட்கொள்ள முடிந்தது. யஜ்ஞமூர்த்தியே பின்பு 'அருளாளப்பெருமாளெம் பெருமானுர் என்ற திருநாமம் சாற்றப்பெற்று விளங்கினுர்.

6) மேற்கூறியவற்றுல், தேவப்பெருமாளிடத்தில் ஸ்வாமி எம்பெருமானுர் மிக்க அன்பு பூண்டிருந்தாரென்பதும் தேவப்பெருமாள் ஸ்வாமியிடத்துத் தம்முடைய கிருபா கடாக்ஷத்தை விசேஷமாகச் செய்தருளினன் என்பதையும் அனுபவித்தோம்.

''ஜய ராமாநுஜ ஹஸ்திதாம்நி நித்யம்''

இப்படிப்பட்ட பெருமை மிக்க பெருமாள் கோயிலில் அருளிச்செயல் கைங்கர்யத்திற்கு உசாத் துணையாக விளங்க இருக்கும் ஸ்ரீபேரருளாளன் அருளிச்செயல் கைங்கர்ய சபை பொலிக ! பொலிக !! பொலிக !!!



D. JAYARAM & SONS

Customs/Shipping/Clearing & Forwarding Agents

AIR FRIEGHT / INSURANCE /

WAREHOUSING / TRANSPORT ETC.,

B. O. 42, MOORE STREET,

H. O. **10, Second Line Beach,**

MADRAS – 600 001. *S. India*

PHONE : 23382 / 27678

Resi : 446511

Telex : 41-6249

Grams : " BAGJAYS "

PHONE : Offi : 516672, 512321

Res : 447043, 418561

A. Ramamurthy

(Customs House Agent)

M/s. A. RAMAMURTHY

SHIPPING CLEARING FORWARDING.

TRANSPORTING AGENT (L. No. R-120)

259, THAMBU CHETTY STREET,

3rd Floor, MADRAS - 600 001.

With Best Compliments From :

GORDON WOODROFFE LTD

36, Rajaji Salai,

MADRAS 600 001

With Best Compliments From :

P. S. AUTHITHAN

Stockist :

CHETTINAD CEMENT

548, T. H. Road,

Madras-600 021

Phone : 552271

A. S. NISAR AHMED & CO.,

Tanners & Exporters of Semi Chrome Aniline Uppers, Linings, Suede Mesh and all Sorts of Finished Leathers.

No 7, Nabikhan Subedar Street,

Periamet, MADRAS - 600 003 (INDIA)

Cable : " SHAMEECO "

Telex : 41-6956 ASNA IN

PHONES : 37520, 33600.

Tannery at : AMBUR N A. Dt.'

Ou well Reputed Marks : " SHAMEEL " & " ASNA "


With best compliments from

DR. NALLAM-V.

CLINIC NALLAM

74, EASWARAN KOVIL STREET,

PONDICHERRY.



With best compliments form

UNITED INDIA SHIPPING SERVICES

87/1, FIRST FLOOR. THAMBU CHETTY STREET, MADRAS-1

ஸ்ரீ:



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்
கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.

கூரத்தாழ்வான் திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சஸ்தவத்தில்

நான்காவதான

வரதராஜஸ்தவம்

தனியன்

ஸ்ரீ வத்ஸ சிஹ்நமிச்ரேப்ய: நம உத்திமதீமஹே
யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம்.

ஸ்வஸ்தி ஹஸ்திகிரிமஸ்தசேகர: ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி:
நிஸ்ஸமாப்யதிகமப்யதத்த யம் தேவமௌபநிஷதீ ஸரஸ்வதீ. (1)

ஸ்ரீ நிதிம் நிதிமபாரமர்த்திநாம் அர்த்திதார்த்த பரிதாநதீக்ஷிதம்
ஸர்வபூதஸுஹ்ருதம் தயாநிதிம் தேவராஜமதிராஜமாச்ரயே. (2)

நித்யமிந்த்ரியபதாதிகம் மஹ: யோகிநாமபி ஸுதூரகம் திய:
அப்யநுச்ரவசிரஸ்ஸு துர்க்ரஹம் ப்ராதுரஸ்தி கரிசைலமஸ்தகே. (3)

வல்லிகா ச்ருதிமதல்லிகாமயீ யேந பல்லவிதவிச்வசாகயா
ஸ்வச்ரியா கரிகிரேரநுக்ரியாம் வஷ்டி ம்ருஷ்டவரதம் தமாச்ரயே. (4)

யம் பரோக்ஷமுபதேசதஸ் த்ரயீ நேதி நேதி பரபர்யுதாஸத:
வக்தி யஸ் தமபரோக்ஷமீக்ஷயதி ஏஷ தம் கரிகிரிம் ஸமாச்ரயே. (5)

ஏஷ ஈச இதி நிர்ணயம் த்ரயீ பாகதேயரஹிதேஷுநோ திசேத்
ஹஸ்திதாமநி ந நிர்ணயேத க: தேவராஜமயமீச்வரஸ் த்விதி. (6)

ஹை குத்ருஷ்ட்யபிநிவிஷ்டசேதஸாம் நிர்விசேஷஸவிசேஷதாச்ரயம்
ஸம்சயம் கரிகிரிர் நுதத்யஸௌ துங்கமங்கலகுணஸ்பதே ஹரௌ. (7)

ந்யாயதர்க்கமுநிமுக்ய்யபாஷிதை: சோதிதைஸ் ஸஹ கதஞ்சந த்ரயீ
ஜோஷயேத்தரிமநம்ஹஸோ ஜநாந் ஹஸ்திதாம ஸகலம் ஜநம் ஸ்வயம். (8)

அத்புதம் மஹதஸீமபூமகம் கிஞ்சிதஸ்தி கில வஸ்து நிஸ்துலம்
இத்யகோஷி யதிதம் ததக்ரத: தத்த்யமேவ கரிதாம்நி த்ருச்யதே. (9)

ஸம்வதேத கில யத் ப்ரமாந்தரை: தத் ப்ரமாணமிதி யே ஹி மேநிரே
தந்மதேபி பத மாநதாம் கதா ஹஸ்திநாத்ய பரவஸ்துநி த்ரயீ. (10)

குணயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்கலபதம்
விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புந:
குணஸ் ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா
சுபீபூயம் யாதா இதி ஹி நிரஜ்ணஷ்ம ச்ருதிவசாத். (11)

நிராபாதம் நித்யம் நிரவதி நிரம்ஹோ நிருபமம்
ஸதா சாந்தம் சுத்தம் ப்ரதிபடமவத்யஸ்ய ஸததம்
பரம் ப்ரஹ்மாம்நாதம் ச்ருதிசிரஸி யத் தத் வரத தே
பரம் ரூபம் ஸாக்ஷாத் ததிதமபதம் வாங்மநஸயோ:. (12)

ப்ரசாந்தாநந்தாத்மாநுபவஜமஹாநந்தமஹிம-
ப்ரஸக்தஸ்தைமித்யாநுக்ருதவிதரங்கார்ணவதசம்
பரம் யத் தே ரூபம் ஸ்வஸத்ருசதரித்ரம் வரத தத்
த்ரயீ பிஸ்ப்ரக்ஷந்தீ பரநிரஸநே ச்ராம்யதி பரம். (13)

ந வக்தும் ந ச்ரோதும் ந மநிதுமதோபாலிஸிவிதும்
ந ச த்ரஷ்டும் ஸ்ப்ரஷ்டும் ததநு ந ச போக்தும் ஹி ஸுசகம்
பரம் யத் வஸ்தூக்தம் நநு வரத ஸாக்ஷாத் ததஸி போ:
கதம் விச்வஸ்மை த்வம் கரிகிரிபுரஸ் திஷ்டஸ இஹ. (14)

ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைச்வர்யமகிலம்
விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபி ச
பரம் தேஜச்சேதி ப்ரவரகுணஷட்கம் ப்ரதமஜம்
குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ: (15)

குணஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்திஸ்தவ பபௌ
ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகஸீர் ஹி த்ரிபிரபு:
வ்யவஸ்தா யா சைஷா நநு வரத ஸாவிஷ்க்ருதிவசாத்
பவாந் ஸர்வத்ரைவ த்வகணிதமஹாமங்களகுண:. (16)

இயம் வையூஹீ வை ஸ்திதிரத கிலேச்சாவிஹ்ருதயே
விபூதீநாம் மத்யே ஸுரநரதிரச்சாமவதரந்
ஸஜாதீயஸ் தேஷாமிதி து விபவாக்க்யாமபி பஜந்
கரீச! த்வம் பூர்ணை வரகுண கணைஸ் தாந் ஸ்தகயஸி. (17)

பரோ வா வ்யூஹோ வா விபவ உத வார்ச்சாவதரண:
பவந் வாந்தர்யாமீ வரவரத யோ யோ பவஸி வை
ஸ ஸ த்வம் ஸந்நைசாந் வரகுணகணைந் பிப்ரதகிலாந்
பஜத்பயோ பாஸ்யேவம் ஸததமிதரேப்யஸ்த்விதரதா. (18)

தயாக்ஷாந்த் யௌதார்யம்ரதிமஸமதாஸௌஹ்ருதத்ருதி-
ப்ரஸாதப்ரேமாஜ்ஞாச்ரிதஸுலபதாத்யா வரகுண:

ததா ஸௌந்தர்யாத்யாஸ் தவ வரதராஜோத்தமகுண:
விஸீமாநோஸங்க்யா: ப்ரணதஜநபோகம் ப்ரஸுவதே. (19)

அநந்யாதீநத்வம் தவ கில ஜகுர் வைதிககிர:
பராதீநம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே
உபாலம்போயம் போ: ச்ரயதி பத ஸார்வஜ்ஞ்யமபி தே
யதோ தோஷம் பக்தேஷ்விஹ வரத நைவாகலயஸி. (20)

பாணிபாதவதநேக்ஷணசப்தை: அம்புஜாந்யபதிசந் வரத த்வம்
பாஹுபிஸ் த்வதிவிசாலதமாலாந் ஆஞ்ஜநம் கரிகிரேரஸி ச்ருங்கம். (21)

த்வாமுதாரபுஜமுந்நஸமாயத்கர்ணபாசபரிகர்மஸதம்ஸம்
ஆ யதாக்ஷமபிஜாதகபோலம் பாரணீயதி வரப்பத த்ருங் மே. (22)

நீலமேகநிபமஞ்ஜநபுஞ்ஜ ச்யாமகுந்தளமநந்தசயம் த்வாம்
அப்ஜபாணிபதமம்புஜநேத்ரம் நேத்ரஸாத்குரு கரீச ஸதாமே. (23)

த்வக் சக்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ
நாஸிகா த்வயி கரீச ததேதி ப்ராப்நுயாம் கதமிமாம் ஸ்விதவஸ்தாம். (24)

ஆதிராஜ்யமதிகம் புவநாநாம் ஈச தே பிசுநயந் கில மௌலி:
சூலிகாமணிஸஹஸ்ரமரீசே: ஹஸ்திபூஷண பவத்யுதயாத்ரி: (25)

உத்தரத்யுபரி பக்தஜநாநிதி ஊர்த்வதாச்ரயணஸுசிதசக்திம்
ஊர்த்வபுண்ட்ரதிலகம் பஹுமாநாத் கிம் பிபர்ஷி வரத ஸ்வலலாடே. (26)

கர்ணிகா தவ கரீச கிமேஷா கர்ணபூஷணமுதாம்ஸவிபூஷா
அம்ஸலம்ப்யலகபூஷணமாஹோ மாநஸஸ்ய மம வா பரிகர்ம. (27)

பாரிஜாதவிடபாநபிதோ யா புஷ்பஸம்பதுதியாத் கரிநாத
தாம் விடம்பயதி தாவகபாஹுஷு ஆததா து கடகாங்கதலக்ஷ்மீ: (28)

மத்த்யமாநசலபேநிலஸிந்து ப்ரோத்திதிக்ஷணதசாம் கமிதௌ தே
வக்ஷஸி ஸ்புரிதமௌக்திகஹாரே கௌஸ்துபச் ச கமலா ச கரீச. (29)

அஞ்ஜநக்ஷிதிப்ருதோ யதி நாம உபத்யகா வரத ஹேமமயீ ஸ்யாத்
தாத்ருசீ தவ விபாதி து லக்ஷ்மீ :ஆம்பரீ பத விடம்பிதவித்யுத். (30)

பரபாகமியாத் ரவேஸ் தமிஸ்ரா வரதாத்ய த்வயி தந்நிசாமயாம:
கமிதா தவ வக்த்ரசித்ரபாநோ: பரபாகம் நநு கௌந்தலீ தமிஸ்ரா. (31)

உபயோரபி பக்ஷயோஸ் திதிர் யா விஷமீபாவநிராஸதாஷ்டமீதி
உபமாநஜஸம்பதே ஹி ஸேந்தோ: வரதாபூத் பவதோ லலாடலக்ஷ்ம்யா. (32)

அலகாலிசிகீர்ஷயா கிலாத்தா
ஸுபரீசிக்ஷிஷயா லலாடபட்டே
ஸுமஷீ நிகஷீக்ருதா ப்ருவௌ தே
வரத ஸ்யாத் அக்ருதத்வதஸ் து நைவம். (33)

ச்ரவஸச் ச த்ருசச் ச சப்தரூபக்ரஹணே தே ந ஹி ஜீவவத் வ்யவஸ்த்தா
உபயோரகிலேக்ஷண க்ஷமத்வாத் வரதாத: ச்ரவணச்ரயே த்ருசௌ தே. (34)

கருணரஸவாஹிவீக்ஷணோர்மே: வரத ப்ரேமமயப்ரவாஹபாஜ:
தததீரவநாவலீ ப்ருவௌ த்ருக் சலஸிந்தோஸ் தவ நாஸிகேவ ஸேது:. (35)

விபவம் விவ்ருணோதி விஸ்த்ருணீதே ருசமாவிஷ்குருதே க்ருபாமபாராம்
அபிவர்ஷதி ஹர்ஷமார்த்ரபாவம் தநுதே தே வரதைஷ த்ருஷ்டிபாத:. (36)

அருணதரபல்லவே லஸந்தீ வரதாஸௌ த்விஜசந்த்ரசந்த்ரிகா தே
அதிவித்ருமமஸ்தநிஸ்தலாலீருசம், ஆவிஷ்குருதே ஹி புஷ்கராக்ஷ. (37)

ஸ்மிதநிர்ஜ்ஜரிகா விநிஷ்பதந்தீ தவ வக்ஷஸ்ஸ்தலபூதலே விகீர்ணா
வரத ப்ரபிபர்த்தி ஹாரலக்ஷ்மீம் அபி முக்தாவலிகா நதீவ தஜ்ஜா. (38)

பரிமண்டிதராஸமண்டலாபி: வரதாக்ராதமபீஷ்ட கோபிகாபி:
அநுவர்த்திததாதநப்ரஹர்ஷாத் இவ புல்லம் ஹி கபோலயோர் யுகம் தே. (39)

முகமுந்நஸமாயதாக்ஷமுத்யத்ஸ்மிததந்தம் ருசிராதரம் நதப்ரு
லஸதம்ஸவிலம்பிகர்ணபாசம் மயி தே நிச்சலமஸ்து ஹஸ்திநாத. (40)

பத்மாயா: ப்ரணயரஸாத் ஸமாஸஜந்த்யா:
ஸ்வம் பாஹும் ஹுபாஹுமதோபுஜேந தேந
காம் நாமாந்வபவதஹோ தசாம் ததாத்வே
கண்டஸ் தே கரிகிரி நாத! கம்புகாந்த:. (41)

ஸாயாமா த்ருதபரிணத்தயோப்தயோ வா
தாத்ருச்யஸ் ஸ்புடமத வா திசச்சதஸ்ர:
சத்வாரோ வரத வரப்ரதாஸ் த்வதீயா:
பாஸந்தே புஜபரிகாஸ் தமாலநீலா:. (42)

ஆச்லேஷே வரத புஜாஸ் தவேந்திராயா:
கோபீநாமபிமதராஸபந்தநே வா
பந்தே வா முதமதிகாம் யசோதயாஹோ
ஸம்ப்ராப்தாஸ்தவ நவநீதமோஷதோஷாத். (43)

ஸாலீயா இவ விடபாஸ் ஸபல்லவாக்ரா:
கல்லோலா இவ ஜலதேஸ் ஸவித்ருமாக்ரா:
போகீந்த்ரா இவ ச பணமணீத்தவக்த்ரா:
பாஸந்தே வரத புஜாஸ் தவாருணக்ரா:. (44)

அம்போதேஸ் ஸ்வயமபிமந்தநம் சகர்த்த
க்ஷோணீத்ரம் புநரபிபச் ச ஸப்தராத்ரம்
ஸப்தாநாம் விவலயஸிஸ்ம கண்டமுஷ்ணம்
அம்லாநா வரத ததாபி பாணயஸ் தே. (45)

நிங்காதோ வ்ரஜஸ்தநாங்கணேஷுகிம் தே
கோயஷ்டிக்ரஹணவசாந்நு கோபகோஷ்ட்யாம்
ஆலம்பாத்தயநய ஸுத்ரதோத்ரயோர் வா
பாணீநாம் வரத தவாருணத்வமாஸீத். (46)

ஸர்வஜ்ஞாஸ் ஸமுசிதசக்தயஸ் ஸதைவ
த்வத்ஸேவாநியமஜுஷஸ் த்வதேகபோகா:
ஹேதீநாமதிபதயஸ் ஸதா கிமேதாந்
சோபார்த்தம் வரத பிபர்ஷி ஹர்ஷதோ வா. (47)

கிம் தாதுர் ககநவிதாநமாத்ருகாபூத்
வக்ஷஸ் தே வரத வரேண்ய யத்ர நாம
பத்மாயா முகமத கௌஸ்துபச்ச ஜாதௌ
சந்த்ரார்க்காவுடுநிகராயதே து ஹார:. (48)

அண்டாநாம் த்வதுதரமாமநந்தி ஸந்த:
ஸ்தாநம் தத் வரத கதம் நு கார்ச்யமஸ்ய
மாஹாத்ம்யம் ஸ்வத இஹ யேஷுநூநமேஷாம்
ருத்திஸ் ஸ்யாந்மஹிமகரீ ந ஹீதரேஷாம். (49)

ஸௌந்தர்யாம்ருதரஸவாஹவேகஜஸ் ஸ்யாத்
ஆவர்த்த ஸ்தவ கில பத்மநாபநாபி:
தத்பத்மம் வரத விபாதி காந்திமய்யா:
லக்ஷ்ம்யாஸ் தே ஸகலவபுர்ஜுஷோநு ஸத்ம. (50)

யா தாமோதர இதி நாமதா தவாஸீத் ஸா தாமா கில கிணகாரிணீ பபூவ
தந்நூநம் வரத வலித்ரயச்சலேந த்வந்மத்யப்ரதமவிபூஷணீபபூவ. (51)

யாத்ருக்பீஜாத்யுஷிதபுவி யத் வஸ்து ஹஸ்தீச ஜாதம்
தத் தாத்ருக்ஷம் பலதி ஹி பலம் த்வய்யபீக்ஷாமஹே தத்
யஸ்மாதண்டாத்யுஷித உதரே தாவகே ஜாயமானம்
பத்மம் பத்மாநந நில பலத்யண்டஷண்டாநகண்டாந். (52)

அஜ்ஞே யஜ்ஞேச்வர கில ஜநே க்வாப்யதர்சம் விமர்சம்
விச்வாதீச: கதம இதி தந்நிர்ணயம் வர்ணயாம:
வ்யாவக்ரோசீ ந்ருஷு ஸமுதிதா யாநுபாச்ரித்ய தேபி
ப்ரஹ்மாத்யாஸ் தே வரத ஜநிதாஸ் துந்தகந்தாரவிந்தே. (53)

முஷ்ணந் க்ருஷ்ண: ப்ரியநிஜஜநைர் ஜய்யஹையங்கவீநம்
தாம்நா பூம்நா வரத ஹி யயா த்வம் யசோதாகராப்யாம்
பத்தோ பந்தக்ஷபணகரணீம் தாம் கிலாத்யாபி மாது:
ப்ரேம்ணு காத்ராபரணமுதராபந்தநாக்க்யம் பிபர்ஷி. (54)

ஸௌந்தர்யாக்க்யா ஸரிதுரஸி விஸ்தீர்ய மத்யாவருத்தா
ஸ்தாநால்பத்வாத் விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபி:
ப்ராப்ய ப்ராப்தப்ரதிமஜகநம் விஸ்த்ருதா ஹஸ்திநாத
ஸ்ரோதோபேதம் பஜதி பவத: பாததேசாபதேசாத். (55)

ரம்பாஸ்தம்பா: கரிவரகரா: காரபாஸ்ஸாரபாஜ:
வேஷாச்லேஷா அபி மரகதஸ்தம்பமுக்யாஸ்துலாக்யா:
ஸாம்யம் ஸம்யக் வரத ந ததுஸ் ஸர்வமுர்வோஸ்த்வதூர்வோ:
ந ஹ்யைச்வர்யம் தததி ந ததா யௌவநாரம்பஜ்ரும்பா:. (56)

யா தே காத்ரே வரத ஜநிதா காந்திமய்யாபகாபூத்
தஸ்யாஸ் ஸ்ரோதோ த்விதயமிஹ யத் யாதி பாதப்ரவாதம்
தஜ்ஜாதோர்த்வப்ரமியுகமிவோத்பாநுநீ ஜாநுநீ தே
ஸ்யாதுக்ஷ்ணோர் வா ககுதயுகளம் யௌவநைச்வர்யநாம்நோ:. (57)

ப்ரேம்ணுக்ராதும் கரிகிரிசிரோதோமுகீபாவபாஜோ:
அங்க்ரித்வந்த்வாஹ்வயகமலயோர்தண்டகாண்டாயமாநே
அத்ரிஸ்பர்சோத்பவஸுகத உத்கண்டகே ரோமஹர்ஷாத்
த்ரஷ்டுர் த்ருஷ்டிர் வரத கிமலம் லங்கிதும் ஜங்கிகே தே. (58)

பக்தாநாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம்
யச்சாம்லாநம் வரத ஸததாத்யாஸநாதாஸநாப்ஜம்
ஆம்நாயாநாம் யதபி ச சிரோ யச்ச மூர்த்தா சடாரே:
ஹஸ்த்யத்ரேர் வா கிமதிஸுகதம் தேஷுபாதாப்ஜயோஸ் தே (59)

பத்யாஸ்வத்யாங்குளிஷு வரத ப்ராந்தத: காந்திலிந்தோ:
வீசீவீதீவிபவமுபயீஷ்வம்பஸோ லம்பிதாஸு
விந்தந்நிந்து: ப்ரதிபலநஜாம் ஸம்பதம் கிம் பதம் தே
சாயாச்சத்மா நகவிததிதாம் லம்பித: சும்பிதஸ் ஸந். (60)

சம்போரம்போருஹமுக ஸகா ஸந் ஸஹாங்கச்சசாங்க:
குர்வந் ஸேவாம் வரத விகலோ வ்ருத்தஹீநஸ் ஸுவக்ர:
த்வத்பாதாப்ஜே ப்ரியமக நகச்சத்மநாச்ரித்ய நித்யம்
ஸத்வ்ருத்தோபூத் ஸ ச தசகுண: புஷ்கலோ நிஷ்கலங்க:. (61)

த்வத் பாதாப்ஜே ப்ரஜாதா ஸுரஸரிதபவத் ப்ராக் சதுர்த்தா ததஸ்தாஸு
ஏகாம் தத்தே த்ருவஸ் ஸா த்ரிபுவநமபுநாத் த்ரீந் பதோ பாவயந்தீ
தத்ரைகா கம் வ்ரஜந்தீ சிவயதி து சிவம் ஸா புநஸ் ஸப்ததாபூத்
தாஸ்வேகா காம் புநாநா வரத ஸகரஜஸ்வர்கஸர்கம் சகார. (62)

பரிஜநபரிபர்ஹா பூஷணந்யாயுதாநி
ப்ரவர குணகணஸ்ச ஜ்ஞாநசக்த்யாதயஸ்தே
பரமபதமதாண்டாந்யாத்மதேஹஸ் ததாத்மா
வரத ஸகலமேதத் ஸம்சரிதார்த்தம் சகர்த்த. (63)

அநாப்தம் ஹ்யாப்தவ்யம் ந தவ கில கிஞ்சித் வரத! தே
ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரலயவிதயோ தீவிலஸிதம்
ததாபி க்ஷோதீயஸ் ஸுரநரகுலேஷ்வாச்ரிதஜநாந்
ஸமாச்லேஷ்டும் பேஷ்டும் ததஸுகக்ருதாம் சாவதரஸி. (64)

விவேகதியமேகதோ ஹ்யபிநிவேசலேசோ ஹரேத்
மஹத்த்வபிநிவேசநம் கிமுத தந்மஹிம்நஸ் தவ
அஹோ விஸத்ருசே ஜகத்யவததர்த்த பார்த்தாதிகம்
நிஜம் ஜநமுதஞ்சயந் வரத தம் ஸமாச்லேஷக:. (65)

ஸம்ச்லேஷே பஜதாம் த்வராபரவச: காலேந ஸம்சோத்ய தாந்
ஆநீய ஸ்வபதே ஸ்வஸங்கமக்ருதம் ஸோடும் விலம்பம் பத
அக்ஷாம்யந் க்ஷமிணும் வரோ வரத ஸந்நத்ராவதீர்ணே பவே:
கிம் நாம த்வமஸம்ச்ரிதேஷு விதரந் வேஷம் வ்ருணீஷே து தாந். (66)

வரத யதி ந புவ்யவாதரிஷ்ய: ச்ருதிவிஹிதாஸ் த்வதுபாஸநார்ச்சநாத்யா:
கரணபதவிதூரகே ஸதி த்வயி அவிஷயதாநிக்ருதா: கிலாபவிஷ்யந். (67)

யதபராதஸஹஸ்ரமஜஸ்ரஜம் த்வயி சரண்ய ஹிரண்ய உபாவஹத்
வரத தேந சிரம் த்வமவிக்ரிய: விக்ருதிமர்ப்பகநிர்ப்பஜநாதகா:. (68)

த்வாமாமநந்தி கவய: கருணம்ருதாப்தே
ஜ்ஞாநக்ரியாபஜநலப்யமலப்யமந்யை:
ஏதேஷு கேந வரதோத்தரகோஸலஸ்தா:
பூர்வம் ஸதூர்வமபஜந்த ஹி ஜந்தவஸ்த்வாம். (69)

பஜத்ஸு வாத்ஸல்யவசாத் ஸமுத்ஸுக: ப்ரகாமமத்ராவதரேர் வரப்ரத
பவேச்சதேஷாம் ஸுலபோ த கிம்ந்விதம் யதங்க தாம்நா நியத: புராருத:. (70)

நரஸிம்ஹதநூரகௌணீ ஸமஸமயஸமுத்பவச்ச பக்தகிர:
ஸ்தம்பே ச ஸம்பவஸ் தே பிசுநயதி பரேசதாம் வரத. (71)

தாபத்ரயீமயதவாநலதஹ்யமாநம்
முஹ்யந்தமந்தமவயந்தமநந்த நைவ
ஸ்தாதும் ப்ரயாதுமுபயாதுமநீசமீச
ஹஸ்தீச த்ருஷ்ட்யம்ருதவ்ருஷ்டிபிராபஜேதா:. (72)

நாநாவிருத்தவிதிசாஸ்ரு திசாஸ்ரு சாஹோ
வந்த்யைர் மநோரதசதைர் யுகபத் விக்ருஷ்ட:
த்வத்பாதயோரநுதிதஸ்ப்ருஹ ஏஷ ஸோஹம்
ந ஸ்வஸ்தி ஹஸ்திகிரிநாத நிசாமயாமி. (73)

ஹை நிர்ப்பயோஸ்ம்யவிநயோஸ்மி யதஸ் த்வதங்க்ரௌ
லிப்ஸாமலப்தவதி சேதஸி துர்விநீதே
துஷ்கர்மவர்மபரிகர்மித ஏஷ ஸோஹம்
அக்ரே வரப்ரத தவ ப்ரலபாமி கிஞ்சித். (74)

ஸவ்யாதிராதிரவிதுஷ்டிரநிஷ்டயோக:
ஸ்வாபீஷ்டபஞ்ஜநமமர்ஷகரோ நிகர்ஷ:
க்ருந்தந்தி ஸந்ததமிமாநி மநோ மதீயம்
ஹஸ்தீச ந த்வதபிலாஷநிதிப்ரஹாணி:. (75)

வித்வேஷமாநமதராகவிலோபமோஹாதி
ஆஜாநபூமிரஹமத்ர பவே நிமஜ்ஜந்
நிர்த்வந்த்வ நித்யநிரவத்ய மஹாகுணம் த்வாம்
ஹஸ்தீச க:ச்ரயிதுமீக்ஷிதுமீப்ஸிதும் வா. (76)

புத்ராதய: கதமமீ மயி ஸம்ஸ்திதே ஸ்யு:
இத்யப்ரதிக்ரியநிரர்த்தகசிந்தநேந
தூயே ந து ஸ்வயமஹம் பவிதாஸ்மி கீத்ருக்
இத்யஸ்தி ஹஸ்திகிரிநாத விமர்சலேச:. (77)

சம்பாசலம் பஹுலதுக்கமநர்த்தஹேது:
அல்பீய இத்யபி விம்ருஷ்டிஷு த்ருஷ்டதோஷம்
துர்வாஸநாத்ரடிமதஸ்ரு கமிந்த்ரியோத்தம்
ஹாதும் ந மே மதிரலம் வரதாதிராஜ. (78)

புத்த்வா ச நோ ச விஹிதாகரணோர் நிஷித்த
ஸம்ஸேவநைஸ் த்வதபசாரசதைரஸஹ்யை:
பக்தாகஸாமபி சதைர்பவதாப்யகண்யை:
ஹஸ்தீச! வாக்தநுமநோஜநிதைர் ஹதோஸ்மி. (79)

த்வத்தாஸ்யமஸ்ய ஹி மம ஸ்வரஸப்ரஸக்தம்
தச்சோரயந்நயமஹம் கில சஸ்க்கல ப்ராக்
த்வம் மாமகீந இதி மாமபிமந்யஸே ஸ்ம
ஹஸ்தீச ஸம்சமய நஸ் தமிமம் விவாதம். (80)

போகா இமே விதிசிவாதிபதம் ச கிஞ்ச
ஸ்வாத்மாநுபூதிரிதி யா கில முக்திருக்தா
ஸர்வம் ததூஷஜலஜோஷமஹம் ஜுஷேய
ஹஸ்த்யத்ரிநாத தவ தாஸ்யமஹாரஸஜ்ஞ: (81)

விஷயவிஷதரவ்ரஜவ்யாகுலே ஜநநமரணநக்ரசக்ராஸ்பதே
அகதிரசரணே பவாப்தௌ லுடந் வரத சரணமித்யஹம் த்வாம் வ்ருணே. (82)

அக்ருதஸுக்ருதகஸ் ஸுதுஷ்க்ருத்தர: சுபகுணலவலேசதேசாதிக:
அசுபகுணபரஸ்ஸஹஸ்ராவ்ருத: வரதமுருதயம் கதிம் த்வாம் வ்ருணே. (83)

சரணவரணவாகியம் யோதிதா ந பவதி பத ஸாபி தீபூர்விகா
இதி யதி தயநீயதா மய்யஹோ வரத தவ பவேத் தத: ப்ராணிமி. (84)

நிரவதிஷு க்ருதேஷு சாகஸ்ஸ்வஹோ மதிரநுசயிநீ யதி ஸ்யாத் தத:
வரத ஹி தயஸே ந ஸம்சேமஹே நிரநுசயதியோ ஹதா ஹை வயம். (85)

சரணவரணவாகியம் யாத்ய மே வரத தததிகம் ந கிஞ்சிந் மம
ஸுலபமபிமதார்த்ததம் ஸாதநம் ததயமவஸரோ தயாயாஸ் தவ. (86)

விஷயவிஷயிணீ ஸ்ப்ருஹா பூயஸீ தவ து சரணயோர் ந ஸால்பாபிமே
வரத நநு பரஸ் தவைவ த்வயம் யதுத தவ பதஸ்ப்ருஹாஜந்ம மே. (87)

வரத யதிஹ வஸ்து வாஞ்சாம்யஹம் தவ சரணலபாவிரோதஸ் தத:
யதி ந பவதி தத் ப்ரதேஹி ப்ரபோ ஜடிதி விதர பாதமேவாந்யதா. (89)

ததபி கிமபி ஹந்த துர்வாஸநா சதவிவசதயா யதப்யர்த்தயே
ததநுலதய ஸார்வ ஸர்வப்ரத ப்ரவிதர வரத க்ஷமாம்போநிதே. (90)

ப்ரியமிதரததாபி வா யத் யதா விதரஸி வரத ப்ரபோ த்வம் ஹி மே
ததநுபவநமேவ யுக்தம் ஹி மே த்வயி நிஹிதபரோஸ்மி ஸோஹம் யத: (91)

யதாஸி யாவாநஸி யோஸி யத்குண:
கரீச யாத்ருக்விபவோ யதிங்கித:
ததாவிதம் த்வாஹமபக்ததுர்க்ரஹம்
ப்ரபத்திவாசைவ நிரீக்ஷிதும் வ்ருணே. (92)

அயே தயாளோ வரத க்ஷமாநிதே விசேஷதோ விச்வஜநீந விச்வத
ஹிதஜ்ஞ ஸர்வஜ்ஞ ஸமக்ரசக்திக ப்ரஸஹ்யமாம் ப்ராபய தாஸ்யமேவ தே. (93)

ஸ்வகைர் குணைஸ் ஸ்வைச் சரிதைஸ் ஸ்வவேதநாத்
பஜந்தி யே த்வாம் த்வயி பக்திதோத வா
கரீச தேஷாமபி தாவகீ தயா
ததாத்வக்ருத் ஸைவ து மே பலம் மதம். (94)

யதி த்வபக்தோப்யகுணேபி நிஷ்க்ரிய:
நிருத்யமோ நிஷ்க்ருததுஷ்க்ருதோ ந ச
லபேய பாதௌ வரத ஸ்புடாஸ் தத:
க்ஷமாதயாத்யாஸ் தவ மங்களா குண:. (95)

விலோகநைர் விப்ரமணைரபி ப்ருவோ:
ஸ்மிதாம்ருதைரிங்கிதமங்களைரபி
ப்ரசோதிதஸ் தே வரத ப்ரஹ்ருஷ்டதீ:
கதா விதாஸ்யே வரிவஸ்யநம் தவ. (96)

விவிச்ய விச்வேந்த்ரியதர்ஷகர்ஷணீ:
மநஸ்ஸ்தலே நித்யநிகாதநிச்சலா:
ஸுதாஸகீர் ஹஸ்திபதே ஸுசீதலா:
கிரச் ச்ரவஸ்யா: ச்ருணுயாம தாவகீ:. (97)

அசேஷதேசாகிலகாலயோகிநீஷு அஹம் த்வவஸ்தாஸ்வகிலாஸ்வநந்யதீ:
அசேஷதாஸ்யைகரதிஸ் ததாசரந் கரீச வர்த்தேய ஸதா த்வதந்திகே. (98)

இமம் ஜநம் ஹந்த கதாபிஷேக்ஷ்யதி த்வதக்ஷிநத்யோர் வரத ச்ரமாபஹா
அக்ருத்ரிம ப்ரேமரஸப்ரவாஹஜா விஸ்ருத்வரீ வீக்ஷணவீசிஸந்ததி:. (99)

ஸதாதநத்வேபி ததாதநத்வவத்
நவீபவத்ப்ரேமரஸப்ரவாஹயா
நிஷேவிதம் த்வாம் ஸததோத்கயா ச்ரியா
கரீச பச்யேம பரச்சதம் ஸமா:. (100)

ஸமாஹிதைஸ் ஸாது ஸநந்தநாதிபி: ஸுதுர்லபம் பக்தஜநைரதுர்லபம்
அசிந்த்யமத்யத்புதமப்ரதர்க்கணம் வரப்ரத த்வத்பதமாப்நுயாம் கதம். (101)

ராமாநுஜாங்க்ரிசரணேஸ்மி குலப்ரதீப:
த்வாஸீத் ஸ யாமுநமுநேஸ் ஸ ச நாதவம்ச்ய:
வம்ச்ய: பராங்குசமுநேஸ் ஸ ச ஸோபி தேவ்யா:
தாஸஸ் தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய:. (102)

———

செந்தமிழ் பாடுவார்



பொய்கை ஆழ்வார்

ஸ்ரீ காஞ்சி யதோக்தகாரி எம்பெருமான்
ஸன்னிதி திருவவதாரஸ்லதம்

ஸ்ரீரஸ்து

கூரத்தாழ்வான் அருளிச்செய்த

பஞ்சஸ்தவத்தினுள் ஐந்தாவது ஸ்தவமாகிய

ஸ்ரீஸ்தவம்

ஸ்வஸ்தி ஸ்ரீர்திசதாதசேஷஜகதாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ:
ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி:
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத் தயா. (1)

ஹே ஸ்ரீர்தேவி ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநாம் தியம்
பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜநம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம். (2)

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்யதீயாந் குணந்
அந்யத்ர த்வஸதோதிரோப்ய பணிதிஸ் ஸா தர்ஹி வந்த்யா த்வயி
ஸம்யக் ஸத்யகுணாபிவர்ணநமதோ ப்ரூயு: கதம் தாத்ருசீ
வாக் வாசஸ்பதிநாபி சக்யரசநா த்வத்ஸத்குணர்ணேநிதௌ. (3)

யே வாசாம் மநஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா குணஸ் தாவகா:
தாநேவ ப்ரதி ஸாம்புஜிஹ்முதிதா ஹை மாமிகா பார்தீ
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே ந ஹி சகோர்யேகாகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநாமாஸீத ஸத்யாம் த்ருஷி. (4)

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்ஸ்நேஹோப்யநீஹோபி தே
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் ந ச பிபேம்யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச
துஷ்யேத் ஸா து ந தாவதா ந ஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேத் ச்வாபி ந லஜ்ஜதே ந ச பிபேத்யார்த்திஸ் து சாம்யேச் சுந:. (5)

ஐச்வர்யம் மஹதேவ வால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோபி நாராயண:
தந்யம் மந்யத ஈக்ஷணத் தவ யத: ஸ்வாத்மாநமாத்மேச்வர: (6)

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி யதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ:
ரூபம் யச்ச ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே
தத் ஸர்வம் த்வததீநமேவ யதத: ஸ்ரீரித்யபேதேந வா
யத்வா ஸ்ரீமதிதீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்நுதே. (7)

தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணம் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோயமித்யுச்யதே. (8)

லோகே வநஸ்பதிப்ருஹஸ்பதிதாரதம்யம்
யஸ்யா: ப்ரஸாதபரிணாமமுதாஹரந்தி
ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ
தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம:. (9)

யஸ்யா: கடாக்ஷம்ருதுவீ க்ஷணதீக்ஷணேந
ஸத்யஸ் ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ
விச்வம் விபர்யயஸமுத்தவிபர்யம் ப்ராக்
தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம:. (10)

யஸ்யா: கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷம் லக்ஷிதா மஹோசாஸ்ஸ்யு:
ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ:. (11)

———

அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய பூர்வே
மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:,
ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம்:.
யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாத:.

கூரத்தாழ்வான் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

———

Total reliability in Fasteners from TVS fasteners from Sundram Fasteners

The 'TVS' name assures total reliability in quality high tensile bolts, screws and nuts.

Precision engineered cold forged and heat treated, these fasteners are Manufactured to meet a variety of applications. From buses to motorcycles. From industrial engines to earth moving equipment. Also powder metallurgy. used in other non-automotive engineering applications.

Sundram Fasteners use cold extrusion to give a 60% material saving. This advanced technology replaces conventional metal removal by metal forming.

Another factor to contribute to considerable material economy and precision of intricate components is the usage of powder metallurgy.

TVS

SUNDRAM FASTENERS LIMITED
PADI, MADRAS - 600 050.
Krishnapuram, Aviyur-626160. Ramnad Dt.

As your
Responsibilities increase
So does
Your need for Saving

Long range plan of your needs, long range Savings plans, Start saving in Lakshmi Vilas Bank Ltd., to build up a Bright future to provide education for your children Marrying them off and more to keep you financially independent.

Come and have a chatwith our Manager of your nearest branch He'll guide you to formulate a suitable savings plan for you.

DIAMOND JUBILEE 1926-1986

THE LAKSHMI VILAS BANK LTD.

Regd. & Admn. Office: **KARUR-639 001**

L V. B. Young enough to serve you old enough to know

" Authorised Dealers in Foreign Exchange"

V. Panduranga Rao
Chairman

All Services under one Roof

"SERVICE THY NAME SANCO TRANS"

For all your requirements of,
Steamer Agents-Chartering Vessels
Customs, Clearing, Forwarding
Handling of Bulk, ODCs' etc,,

Hiring of Forklift, Cranes upto 75 MTs
Modern Warehousing with cold storage
Container Handling Repairing Stuffing / Destuffing,
Fabrication of all Structurals / Ducting
Erection of Equipment and Piping Works
Marketing and Servicing.

CONTACT:

SANCO GROUP

90, Moore Street, P. B. 1962, MADRAS-600001
Phone: 513621 / 513630 Telex: 041-591 SATH IN

Branches at:

NELLIKUPPAM * VILLUPURAM * TRICHY
COIMBATORE * PONDICHERRY * BANGALORE
RANIPET & VISAKHAPATNAM.

Super Power

REGAL


TOUGH ON DIRT - SOFT ON CLOTHES

Marketed by :

Shaw Wallace & Company Limited

3, CLUB HOUSE ROAD,
MOUNT ROAD, MADRAS-600 002.

பரமேச்சுர விண்ணகரம்



பார் மன்னு தொல்புகழ் பல்லவர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம்

Compliments from

SRI T. T. V. THIRUMALAI

Kancheepuram



ஸ்ரீ :

பேரருளாளனும் கூரத்தாழ்வானும்

(வரதராஜஸ்தவத்தில் ஓர் அனுபவம்)

ஸ்ரீ உ.வே. திருமலை அனந்தாண்பிள்ளை
கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி,
திருப்பதி



நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் த்வயமந்த்ரத்திற்கு மிகவும் ஏற்றம் கருதப்பட்டிருக்கிறது. ப்ரபந்நஜனகூடஸ்தரான நம்மாழ்வார் தமது திவ்யப்ரபந்தங்களில் ச்ரேஷ்டமான திருவாய்மொழியால் த்வய மந்திரத்தையே விவரித்தருளினர், 'நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வயவிவரணம் பண்ணுகிறர்' என்னும் ஈடு இரண்டாம் ச்ரியப்பதி (அவதாரிகா) ஸ்ரீஸூக்தியும் பிள்ளை லோகாசார்யர் அருளிய ஸாரஸங்க்ரஹரஹஸ்யமும் இதற்கு ப்ரமாணங்களாக நினைத்தற்குரியனவாம்.

அந்த நம்மாழ்வாரையே எல்லாவுறவுமுறையாகக் கொண்டு 'மாதா பிதா யுவதய:' என்ற ச்லோகத்தை அருளிச்செய்த ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ரரத்னத்தை த்வய விவரணரூபமாகவே அருளிச்செய்தார். இதற்கு 'இப்படி ப்ராப்ய ப்ராபகங்களை நிஷ்கர்ஷித்து இவற்றை ஸ்தோத்ர ரூபத்தாலே ஸர்வேச்வரனை நோக்கி ப்ரார்த்திக்கிறர்' என்ற பெரிய வாச்சான்பிள்ளையின் வ்யாக்யாநாவதாரிகா ஸ்ரீஸூக்தியும், 'யாமுநாசார்ய: த்ரய்யந்தரஹஸ்யபூதம் த்வயார்த்தகர்ப்பம் ஸ்தோத்ரம் சிகீர்ஷு:' (ஆளவந்தார் வேதாந்தரஹஸ்யமாய் த்வயமந்திரார்த்தத்தைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்ட ஸ்தோத்ரத்தை அருளிச் செய்ய விரும்பியவராய்) என்றுள்ள வேதாந்தாசார்யரின் ஸ்தோத்ரபாஷ்ய நிகமநஸ்ரீஸூக்தியும் அத்தாட்சியாக அனுஸந்திக்கத் தக்கனவாம்.

அவ்வாளவந்தாருடைய திருவடிகளை த்யாநம் செய்தே தாம் ஸத்தை பெற்றதாக 'யத்பதாம் போருஹ' என்ற தனியை அருளிச் செய்த எம்பெருமானார்தாமும் கத்யத்ரயத்தை த்வயத்தின் விவரணமாகவே நம் பெருமாளெதிரில் விண்ணப்பம் செய்தருளினர். இதற்கு 'உபாயோபேயபரம் த்வயம் விசதீகரியதே, (உபாயமான எம்பெருமானையும் உபேயமான கைங்கர்யத்தையும் கூறும் த்வயம் விசதமாக்கப்படுகிறது) என்ற ச்ருதப்ர காசிகாவதாரிகா ஸ்ரீஸூக்தியும், 'இதுதான் த்வயத்துக்கு வ்யாக்யாநமா யிருக்கிறது' என்ற பெரிய வாச்சான்பிள்ளையின் முதல் சூர்ணவ்யாக்யா நாவதாரிகா ஸ்ரீஸூக்தியும், 'அத: க்ருத்ஸ்நமிதம் கத்யம் த்வய விவரணமிதி ஸாதீயாந்ஸம்ப்ரதாய:' (ஆகையால் இந்த கத்யம் முழுவதும் த்வய மந்திரத்தின விவரணரூபமென்பது மிக நல்லதோர் ஸம்ப்ரதாயம்) என்று வேதாந்ததேசிகர் அருளிய கத்யபாஷ்யத்தின் அவதாரிகா ஸ்ரீஸூக்தியும் சான்றுகக் கொள்ளத்தக்கனவாகும்.

ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிக்குமிடங்களான அர்ச்சாவதாரவெம்பெருமான்களே ப்ரபத்தி மந்த்ரமாகிய த்வயத்திற்கு ப்ரதிபாத்யதேவதைகள் என்று கொண்டனர் நம்பெரியோர்.

நம்மாழ்வார் த்வயார்த்தமான ப்ரபத்தியையும் கைங்கர்யப்ரார்த்தனையையும் முறையே உலகமுண்ட, ஒழிவில்காலம் என்கிற பதிகங்களால் திருவேங்கட முடையான் திறத்தில் அருளிச்செய்து அப்பெருமானே த்வயப்ரதிபாத்யராகக் காட்டியருளினர்.

ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்நத்தைப் பரமபநாதன் விஷயமாக அருளிச் செய்தாரென்னும் விஷயம், 'ஹதாகிலக்லேசமலை:' 'பவந்தமேவாநுசரந்' முதலான ச்லோகங்களைக்கொண்டு அறுதியிடலாமாயினும், அழகிய மணவாளனும் பேரருளாளனும்கூட அதற்கு விஷயமாகக்கூடும். 'லப்த்வா குலதநம் ராஜாலங்காம் ப்ராயாத் விபீஷண:, (ராமா யுத்த-131-90) 'ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகு குலதைவதம்' (ராமா-உத்தர-108-31) என்ற இவ்விரண்டிடங்களிலும் முறையே குலதனமாகவும் குலதேவதையாகவும் பெரியோர்களால் கருதப்பட்ட அழகியமணவாளனை, யந்மூர்த்நி மே' என்ற (ஸ்தோத்ரரத்நம்-6) ச்லோகத்தில் 'ஸ்தோஷ்யாமி ந: குலதநம் குலதைவதம் தத்' என்று அதே குலதன குலதைவத சப்தங்களையிட்டுக் குறிப்பிட்டுள்ளாரென்று கொள்ளக் குறையில்லையாகையால் ஸ்தோத்ரரத்நம் அழகியமணவாளன் விஷயமென்பதும், 'ஆளவந்தாரும் கேட்டருளி உகந்து பேரருளாளர் நம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கியருளினார் என்று பெரிய ப்ரீதியோடே பேரருளாளன் பெருமையைப் பேச வல்லவராய்க் கொண்டு ஸ்தோத்ர (ரத்ன)த்ததை விண்ணப்பம் செய்து ஸ்வாமி மாநாந்தர்ப்பூதரான பெரியநம்பிதிருக்கையிலே கொடுத்து' (ஆருயிரப்படி குருபரம்பராப்ரபாவம்-யமுனைத்துறைவர்வைபவம்) என்ற ஸ்ரீஸூக்தியின் ப்ராமாண்யத்தாலே பேரருளாளன் விஷயமென்பதும் பெறப்படுதல் காண்க.

எம்பெருமானார் அர்ச்சாவதாரவெம்பெருமான்களுக்குள் முக்கியரான அழகிய மணவாளனை நேரில் கண்டு த்வயார்த்தகர்ப்பமான கத்யத்தை விண்ணப்பிக்குமவர் அழகியமணவாளனை 'ஆச்ரிதவாத்ஸல்யைகஜலதே' என்றும் 'ப்ரணதார்த்திஹர' என்றும் முறையே திருவேங்கட முடையானையும் பேரருளாளனையும் குறிக்கும் திருநாமங்களாலே ஸம்போதித்து இம்மூவர்க்குமுள்ள ஐக்யத்தையும் இம்மூவரும் த்வயமந்த்ரப்ரதிபாத்யர்கள் என்பதையும் காட்டியருளினர்.

'ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே' என்று எம்பெருமானார் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றியவராய் ஸகலசாஸ்த்ரங்களையும் கையிலங்கு நெல்லிக்கனிபோல் கண்ட கூரத்தாழ்வானும், திருவேங்கடமுடையான் விஷயமாய் த்வயார்த்தவிவரணமான திருவாய்மொழிபோலவும் அழகியமணவாளன் விஷயமாய் த்வயார்த்தவிவரணமான கத்யம்போலவும், பெரியநம்பிகளால் த்வய ப்ரமேய பூதராக எம்பெருமானார்க்கு உபதேசிக்கப்பட்டவரும் திருக்கச்சி நம்பிகள் மூலமாக எம்பெருமானார்க்கு ஆறு வார்த்தை அருளிச் செய்தவரும் வழி தீகைத்து அலமந்த எம்பெருமானாரை வில்லியாய் விந்தியமலைக் காட்டிலிருந்து காஞ்சிக்கு அழைத்து வந்தவரும் 'தேவராஜார்ச்சந' ரத: (ராமாநுஜாஷ்டோத்தரம்) என்றபடியே எம்பெருமானார்க்குத் திருவாராதனப் பெருமாளும் அருளாளப் பெருமாளெம் பெருமானாரை எம்பெருமானார்க்குச் சிஷ்யராக ஆக்கித் தந்தவருமான பேரருளாளப் பெருமாள் விஷயமான வரதராஜஸ்தவத்தை த்வயார்த்த விவரணரூபமாகவே அருளிச் செயதார்.

இந்த வரதராஜஸ்தவம் த்வயார்த்த விவரணரூபமென்னும் விஷயம்-இதற்கு பாரீநமாக ஏற்பட்டுள்ள ஸ்ரீமத் ஸேஷாசலநிவாஸரஸிகரான ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அருளிய ஸம்ஸ்க்ருதவ்யாக்யானத்தின்படியும் ஸ்ரீ உ.வே. காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் மகாவித்வான் அண்ணங்கராசார்யஸ்வாமி பணித்த மணிப்ரவாள வ்யாக்யானத்தின்படியும் சிறிது விண்ணப்பிக்கப்படுகிறது. குற்றங் குறைகளைப் பெரியோர் தம்மியற்கையின்னருளால் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இதன்கண் 'ஸ்வஸ்தி ஹஸ்திகிரி' என்று தொடங்கும் முதல் ச்லோகம் மங்களச்லோகமாகும்.

இரண்டாம் ச்லோகத்தின் முதலிலுள்ள 'ஸ்ரீநிதிம்' என்னும் பதம்-த்வய பூர்வ கண்டத்தின் முதலிலுள்ளதாய், நமக்குப் புருஷகாரபூதையான (நம்மைப் பற்றி எம்பெருமானிடம் பரிந்து பேசுமவளான) பிராட்டியோடு எம்பெருமானுக்குள்ள நித்யஸம்பந்தத்தைக் கூறுகின்ற ஸ்ரீ:த் பதத்தின் விவரணமாக அமைந்துள்ளது. ஸ்ரீ: என்பது-ச்ரீயதே, ச்ரயதே என்னும் இரண்டு வ்யுத்பத்திகளின் மூலமாக, முறையே, புருஷகாரமாவதற்காக நம்மால் தஞ்சமடையப்படுகிறவள் என்றும், நமக்குப் புருஷகாரம் செய்வதற்காக எம்பெருமானே ஆச்ரயித்திருப்பவள் என்றும் பொருள்படும். ஸ்ரீ: நிதீயதே அஸ்மிந் (= இவனிடம் பிராட்டி திருமார்பில் எப்போதும் இருத்தப்படுகிறாள்) என்ற வ்யுத்பத்தியினால் புருஷகாரமான பிராட்டியோடு பெருமானுக்குண்டான நித்யஸம்பந்தத்தைக் கூறும் ஸ்ரீநிதி சப்தம் ஸ்ரீமத்பத ஸமாநார்த்தமாவது காண்க.

இனித் தஞ்சமடையப்படும் எம்பெருமானிடம் முக்கியமாக இருக்கவேண்டிய ஸௌலப்யத்துக்கு (நம் கண்ணுக்கிலக்காகும் தன்மைக்கு) ஜ்ஞாபகமான ஹஸ்திகிரியின் பெருமை மூன்றாவது முதலாகப் பத்தாவது ச்லோகம் வரையில் பேசப்படுகிறது. எம்பெருமானே எவ்விதஸந்தேகத்திற்கும் இடமில்லாதபடியாகப் பரம்பெருளாகக் காட்டித்தரும் ஹஸ்திகிரியானது வேதங்களைவிட உயர்ந்ததென்பது அந்த ச்லோகங்களின் ஸாரமாகும். இத்திருமலை த்வயத்திலுள்ள நாரபதத்தின் பொருள். அண்டத்துக்குட்பட்ட தேவமநுஷ்ய திர்யக்ஸ்தாவரங்களெல்லாம் நாரபதார்த்தமாகையாலே ஸ்தாவரத்தில் சேர்ந்த ஹஸ்திகிரி நாரபதார்த்தமாவது காண்க. இங்ஙனம் நாரபதார்த்தமான ஹஸ்திகிரியை அயனமாக-இருப்பிடமாக உடையவன் பேரருளாளன் என்க. இப்பொருளில் நாராயணபதத்திற்கு பஹுவ்ரீஹி ஸமாஸம் கொள்க.

இங்குள்ள நாராயண சப்தத்திற்கு நற்குணமுடையவனென்னும் பொருள் மிக முக்கியமானது. அக்குணங்கள் பிராட்டியின் புருஷகாரபலத்தினால் எம்பெருமானிடம் தலையெடுப்பனவாகும். அவையாவன-பாபியான ஜீவாத்மா ஆச்ரயித்தற்கு உதவிசெய்யும் வாத்ஸல்யாதிகளும், ஆச்ரயித்த ஜீவாத்மாவினுடைய காரியத்தை நிறைவேற்றுதற்கு உரியஜ்ஞாந சக்த்யாதிகளுமாகும். இத்தகைய பல நற்குணங்களின் பூர்த்தியே பதினேராவது முதலாக இருபதாவது ச்லோகம் வரையில் வருணிக்கப்படுகிறது. 'நாரங்களாவன..... ..... ஜ்ஞாந சக்த்யாதிகளும் வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும்' என்ற முமுக்ஷுப்படிசூர்ணை (96,97)களினால் இக்குணங்களும் நாரபதார்த்தமென்பது விளங்கும்.

இனி நாரங்களாவன.....திருமேனியும் காந்திஸௌகுமார்யாதிகளும் திவ்யபூஷணங்களும் திவ்யாயுதங்களும்,என்ற முமுக்ஷுப்படி (96,97) சூர்ணியின்படி காந்திஸௌகுமார்யாதிகுண திவ்யபூஷண திவ்யாயுதஸஹித மான திருமேனியும் நாரபதார்த்தமாகும். அப்படிப்பட்ட திருமேனிஸம்பந்தமும் நாராயணசப்தார்த்தமாகையாலும் மேற்கூறப்படும் சரணங்கள் திருமேனியிருந் தாலன்றிப் பெருந்தமாட்டாவாகையாலும், இதில் இருபத்தொன்றும் ச்லோகம் தொடங்கி அறுபத்திரண்டாம் ச்லோகமீருக்குத் திருமேனியும் அதன் ப்ரத்யவயவ ஸௌந்தர்யாதிகளும் திவ்யபூஷண திவ்யாயுதங்களும் வருணிக்கப்படுகின்றன. முற்கூறிய பிராட்டிக்கு இருப்பிடமாகவும் வாத்ஸல்யாதி குணப்ரகாசகமாகவும் உள்ள திருமேனியின் ஸம்பந்தம் இங்கு அவச்யம் சொல்லித் தீரவேண்டுமன்றே? குணஸம்பந்தமும் திருமேனிஸம்பந்தமும் சொல்லும் போது நாரங்களான குணங்களுக்கும் திருமேனிக்கும் எம்பெருமான் ஆதாரமாகையால், நாரங் களுக்கு அயநம் நாராயணன் என்று ஷஷ்டீதத் புருஷஸமாஸம் கொள்க.

திருமேனி வர்ணநத்தின் இறுதியில் திருவடிகளும் வர்ணிக்கப்பட்டுவிட்ட படியால் இதுவரையில் ஸ்ரீமந்நாராயண சரணௌ என்னும் முதற்பதத்தின் விவரணம் முடிவு பெற்றதென்க.

இங்ஙனம் அர்ச்சாவதார வடிவழகை அநுபவித்தவர் ஸௌலப்யத்தில் இது தன்னோடு சிறிது ஒப்புமையுடைய விபவாவதாரம் தம் நினைவுக்கு வர நரஸிம்ஹ ராம கிருஷ்ணவதாரங்களின் பெருமையை அறுபத்து நாலாவது முதல் எழுபத்தோராவது ச்லோகம் வரையில் பேசப் புகுந்து நடுவிலுள்ள அறுபத்து மூன்றாவது ச்லோகத்திலும், முற்கூறிய திருக்குணங்கள், திருமேனி, திவ்ய பூஷணங்கள் திவ்யாயுதங்கள் பிற் கூறப்படும் அவதாரத் திருமேனி மற்றும் பரமபதம், நித்யஸூரிகள், சத்ரசாமராதிகள், அண்டங்கள், தனது திவ்யாத்ம ஸ்வரூபம் ஆகிய இவற்றையெல்லாம் தனக்கென்றில்லாமல் தன்னைத் தஞ்சமடை பவர்களின் அனுபவத்திற்கே உறுப்பாக்கி வைத்த எம்பெருமானுடைய ஔதார் யாதிசயத்தைப் பேசுகிறார்.

இப்படி விபவாவதாரப் பெருமையை எழுபத்தோராம் ச்லோகத்தோடு பேசித் தீர்க்கட்டிவிட்டு, எழுபத்திரண்டாவது ச்லோகம் தொடங்கி எழுபத்தொன்பதா வதீறுக—தாபத்ரயம் எம்பெருமானைப் பற்றிய ஆசையின்மை ராகம் த்வேஷம் முதலிய துர்க்குணங்கள் புத்ராதிகளைப் பற்றிய பயனற்ற சிந்தனை விஷயஸுகத் தை விடாமை பகவதபசார பாகவதாபசாராதிகள் முதலிய தமக்குள்ள குற்றங் களின் நிறைவை எம்பெருமானிடம் விண்ணப்பிக்கிறார். சரணாகதி செய்யும் அதிகாரி தன்னுடைய தோஷங்களை வெளிப்படையாகச் சொல்லியன்றே சரணாகதி செய்யவேண்டும்.

இத்தகைய தமக்கு எம்பெருமான் தாஸ்யரஸத்தை (தனக்கடிமையாயிருப்ப திலுள்ள சுவையை) அறிவித்தானென்றும் அதன் விளைவாகத் தமக்கு இஹபரஸுகமென்னும் ஐச்வர்யத்திலும் ஆத்மானுபவமாகிற கைவல்ய மோக்ஷத் திலும் வைராக்யம் விளைந்ததென்றும் அருளிச் செய்கிறார். 80, 81ம் ச்லோகங் களால் பகவத் கைங்கரியத்திற்காகச் சரணாகதி செய்யுமவனுக்கு அடிமைச்சுவை யறிவும் இதர புருஷார்த்தவைராக்யமும் இன்றியமையாதனவன்றே?

இனி 82, 83ம் ச்லோகங்களில் த்வயத்தில் 'சரணம் ப்ரபத்யே' என்றதன் பொருளை விவரிக்கிறார். அதாவது முற்கூறிய தோஷபூர்த்தியையும் வேறு ரக்ஷகர் வேறு உபாயங்கள் இவையில்லாமையையும் முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனை பேரருளாளப் பெருமாளை (அவர் திருவடிகளை) உபாயமாகப் பற்றுகிறேனென்றபடி. தோஷ பூர்த்தியும் வேறு ரக்ஷகர் வேறு உபாயம் இவை யில்லாமையும் த்வயத்தில் ப்ரபத்யே என்பதற்கு எழுவாயாகத் தருவித்துக் கொண்ட 'அஹம்' என்பதன் விசேஷணங்களாகையால் இவையும் த்வயார்த்த விவரணங்களே யாகும்.

(இனி ஸ்ரீமதே நாராயணாய என்பதன்கண் உள்ள ஸ்ரீமந்நாராயண சப்தார்த்தம் பூர்வகண்டத்திற் கூறிய படியே கொள்க. அங்கு அதன் பொருளான லக்ஷ்மீ குண விக்ரஹஸம்பந்தம் எம்பெருமான் உபாயமாவதற்கு உபயோகப்படும தென்றும் இங்கு அ:து அனுபவகைங்கர்யங்களுக்கு உபயோகப்படுமதென்றும் வாசி காண்க. இங்குள்ள நாராயணசப்தம், கைங்கர்யப்ரார்த்தனையைத் தெரி விக்கும் ஆய என்ற சதுர்த்தீ விபக்திக்கு ப்ரக்ருதியாகையாலே கைங்கர்யத்தைக் கொள்வதற்குத் தக்க சேஷியை முக்கியமாகக் குறிக்குமென்பதும் நோக்கத் தக்கதாகும்).

இனிமேல் 84 முதல் 91 வரையில் நம: என்பதனை விவரித்தருளுகிறார். பகவத் ப்ராப்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியின் நிவ்ருத்திதான் நம: பதத்தின் பொருள். அதாவது எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையினால் அவனையடை வதற்குத் தடையான தன் முயற்சியில்லாமை என்றபடி.

பேரருளாளப்பெருமானே, செய்த பாவங்களுக்குப் பச்சாத்தாபப்படுதல் ப்ரபத்தியை புத்திபூர்வமாக அனுஷ்டித்தல் லௌகிக விஷயங்களில் பற்றின்மை தேவரீர் திருவடிகளில் சிறிதாவது ஆசை ஆகியவை அடியேனிடம் இருந்தால் இவற்றின் மூலமாக தேவரீருடைய (ஸஹேதுக) க்ருபையைப் பெற்று உய்ந்து போகலாம். இவையேதும் அடியேனிடம் சிறிதுமில்லை. 'வரத முருதயம் கதிம் த்வாம் வ்ருணே' என்று சொன்ன சரணாகதி வாக்யமும் தேவரீர் நிர்ஹேதுக க்ருபையினால் சொல்லுவிக்க வாயால் மட்டும் சொன்னதித்தனையே. நெஞ்சில் அத்யவஸாய லேசமும் இல்லை. ஆகையால் 'இவனுக்கு உய்ய வழியேதுமில்லாமல் இவன் தவிக்கிறானே. ஐயோ பாவம்' என்று இரங்கி, (நிர்ஹேதுக க்ருபையை அடியேனிடம் பெருகச் செய்து) பாவங்களை கூமித்தும் பிறவற்றில் பற்றினை நீக்கியும் தேவரீரிடம் பற்றினை உண்டாக்கியும் அடியேனைக் கைக்கொள்ள வேணும். அடியேன் வேண்டும் ஒர் பொருள் (இழந்த கண்கள்) தேவரீர் திருவடிகளை தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையாலே பெறுவதற்குத் தடையாக இல்லாதிருக்குமானால் அதையும் தந்தருளவேண்டும். தடையாக இருக்குமானால் உடனே திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேண்டும். துர்வாஸனையினால் தூண்டப்பட்டு, தடையாயிருந்தாலும் அடியேன் வேண்டும் அப்பொருளை (எம்பெருமானுக்காக) கந்தருளி, இதை வேண்டிய அடியேனை கூமித்தருள

வேண்டும். அது நிற்க. அடியேனுக்கு ப்ரியமானதோ (கண்களோ) ஹிதமான தோ (தேவரீர் திருவடிகளோ) எதைத் தேவரீர் (உகந்து) தந்தருளுகிறதோ அதைப் பெற்று அனுபவிப்பதே அடியேனுக்குத் தகுதியாகும். தேவரீர் திறத்தில் பாரத்தைப் போகட்டுச் சரணாகதி செய்த அடியேன் இதைக் கொடுத்தருளும், அதைக் கொடுக்கவேண்டாம் என்று நிர்ப்பந்திக்கக் கூடாதல்லவா? என்று விண்ணப்பித்து, அவனது நிர்ஹேதுக க்ருபையால் அவனைப் பெறுவதற்குத் தடையாகத் தம்மிடம் ஆசையோ முயற்சியோ ஏதுமில்லாமையாகிற நம:பதார்த் தத்தை விவரித்தருளினராயிற்று.

இனி 92ம் ச்லோகத்திலுல் ஹஸ்திகிரிநாதனே தேவரீரை ஸ்வரூப ரூபகுண பரிமாண சேஷ்டித விபூதிகளோடு நேரில் காண, ப்ரபத்தியை வாயால் மட்டும் அனுஷ்டித்த அடியேன் ஆசைப்படுகிறேன்' என்று அனுபவத்தை ப்ரார்த்திக்கிறார். அனுபவித்த மகிழ்ச்சி துண்டக் கைங்கர்யம் செய்ய வேண்டியிருப்பதால் கைங்கர்ய ப்ரார்த்தனைக்கு முன்பாக அனுபவ ப்ரார்த்தனை அமைந்துள்ளதென்று கொள்க.

தயையுடைய பேரருளாளனே! ஸ்ரீமந்நாராயணனுகிய தேவரீர்க்குச் செய்யும் முக்கிய பலமான கைங்கர்யத்தையே செய்யும்படி நிர்ப்பந்தமாக அருள் புரியவேணுமென்று 93ம் ச்லோகத்திலுல், ஸ்ரீமதே நாராயணாய என்ற விடத்திலுள்ள ஆய என்னும் சதுர்த்தீ விபக்தியின் அர்த்தமான கைங்கரியப்ரார்த் தனையைச் செய்கிறார். இங்கு 'நிர்ப்பந்தமாக' என்பதற்கு, 'தேவரீர்க்குச் செய்யும் கைங்கர்யம் அடியேனுடைய உகப்புக்காகச் செய்யப்படுகிறது என்னும் புத்தியைத் தவிர்த்து' என்பது பொருளாகும். இதுதான் இங்கு முக்கியமான நம : பதார்த்த மாகும். 'உனக்கே நாமாட்செய்வோம்' என்று கைங்கர்யத்தை ப்ரார்த்தித்த ஆண்டாள், அந்தக் கைங்கர்யத்தில் ஸ்வப்ரயோஜநத்வபுத்திநிவ்ருத்தியை 'மற்றை நம் காமங்கள் மாற்று' என்று ப்ரார்த்தித்ததை இங்கு நினைக்க.

அதற்கு மேல் 94, 95 ச்லோகங்களிலுல்—'ஹஸ்திகிரீசனே, கர்ம ஜ்ஞாந பக்திகளை உபாயமாகக் கொண்டவர்களுக்கும் கைங்கர்யத்தைப் பெறுவிக்கும் தேவரீருடையதயையே சாணகதிவாக்யம் மட்டும் விண்ணப்பித்த அடியேனுக்கும் உபாயமென்று அறுதியிடுகிறேன். ஒன்று மில்லாத அடியேன் தேவரீர் திருவடிகளை அடைந்தாலன்றே தேவரீருடைய தயை முதலிய குணங்கள் நிறம் பெறுவது என்று தயையைக் கொண்டாடி, 96 முதல் 100 வரையிலுள்ள ச்லோகங்களால்- 'வரதப்ரபோ ! தேவரீருடைய கடாக்ஷம் விலாஸம் புன்சிரிப்பு இங்கிதம் முதலிய வற்றுல் தூண்டப்பெற்று அடியேன் தேவரீருக்குக் கைங்கர்யம் செய்வது எப்போதோ?,'ஆழ்வானே, க்ஷேமமா, வாரும், இன்னின்ன தொண்டுகளைச் செய்யும்' என்று தேவரீர் அருளும் மதுரமான ஸ்ரீ ஸூக்திகளைக் கேட்டனுபவிக்கவேணும். ஒழிவில் காலமெல்லாம் உடனுய் மன்னி வழுவிலாவடிமைகளைச் செய்து கொண்டு தேவரீர்க்கு அருகிலேயே அடியேன் இருக்கப்பெறவேணும். தேவரீர்

திருக்கண்களென்னும் நதியிலிருந்து உண்டான கடாக்ஷமாகிற அலைகள் அடியேனை நனைத்து குளிரச் செய்யப் போகின்றனவோ? எப்போதும் தேவரீரை அனுபவிக்க ஆசை கொண்ட பிராட்டியாலே நித்யம் அனுபவிக்கப் பெற்ற தேவரீரை, கைங்கர்யம் செய்வதற்காக இடைவிடாமல் கண்டு கொண்டிருக்கவேணும்' என்று முற்கூறிய அனுபவ கைங்கர்யங்களைப் பற்றிய பாரிப்பு ருசி த்வரை இவற்றை விண்ணப்பிக்கிறார்.

கடைசியில் 101, 102ம் ச்லோகங்களால்- 'வரத ராஜனே! தன்முயற்சியாலே பெறவிருக்கும் ஸநகஸநந்தநாதிகளால் அடைய முடியாதவையும் பக்தஜனங் களால் அடைய வெளியவையுமான தேவரீர் திருவடிகளை, கர்மஜ்ஞானபக்திகளில் அந்வயமில்லாதவனும் ப்ரபத்தியையும் மனமார அனுஷ்டியாதவனுமான அடியேன் எங்ஙனே அடையப் போகிறேன் என்று சற்றுப் பின்வாங்கி, பின்பு எம்பெருமா னார் ஸம்பந்தத்தை நினைத்துத் தேறியவராய், 'தேவப்பெருமாளே! எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிருக்கிற அடியேனைக் கடாக்ஷித்தே தீரவேணுமென்று ப்ரார்த்தித்து ஸந்தோஷத்துடன் ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டியருளுகிறார்.

இங்ஙனம், எம்பெருமானாரின் நியமனத்திலுல் கூரத்தாழ்வான் பேரருளாள னைப்பற்றி அருளிச்செய்த வரதராஜஸ்தவம் த்வயார்த்தவிவரணமாய் அமைந்துள் ளதென்பதை அந்த வியாக்யானங்களை ஸேவித்துத் தெரிந்தவரையில் விண்ணப் பித்துக் கொண்டேன். குற்றங்குறைகளைப் பெரியோர் பொறுத்தருள வேணுமென்று மறுபடியும் வேண்டிக்கொண்டு விடைபெறுகிறேன்.



பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்

With best compliments from

VIJAYAKUMAR AGENCIES

DISTRIBUTORS FOR INDANE GAS

AND

DEALERS FOR

HOT PLATE

PAMMAL

MADRAS-600071

திருப்பாடகம்



கச்சிமேய களிறு

Compliments from

SRI P. A. VENKATAKRISHNAN


Madras 1



ஸ்ரீ :

தேவப்பெருமாளும் பிள்ளைலோகாசாரியரும்

Dr. V.V. ராமானுஜன், M.A., M Sc., Ph.D.
ஓய்வு பெற்ற பேராசிரியர்,
சென்னை லர்வகலாசாலை;
ஆசிரியர், யதிராஜ பாதுகா.



ஸகல வைதிக தரிசனங்களுக்கும் வேத வேதாந்தங்கள், ஸ்ம்ருதிகள், தர்மசாஸ்த்ரங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள் இவை ப்ரமாணங்களாக விளக்குகின்றன. வேதவேதாந்தங்களை ஸ்மரித்துச் (நினைவில் கொண்டு) செய்யப் பட்ட நூல்கள் ஸ்ம்ருதிகள். ஸ்ரீபகவத் கீதை 'உபநிஷத்' என்று குலாவக்கூடிய அளவுக்கு உயர்ந்த ஸ்ம்ருதி நூலாகும். மநுஸ்ம்ருதி முதலான தர்ம சாஸ்த்ரங் களும் ஸ்ம்ருதிகளே. இவைகளையெல்லாம் குறையறக்கற்றவனே சாஸ்த்ரஜ்ஞன் என்னலாம். கடல் போன்ற இந்த நூல்களையெல்லாம் கடைந்து நமது ஆசாரியர்கள் சாஸ்த்ரஸாரத்தைப் பலபடியாக உபதேசித்தனர். சாஸ்த்ர ஸாரத்திலும் சிறப்புற்றது ஸாரதமமெனப்படுகிறது. சாஸ்த்ரஸாரத்திலும் ஸாரமாய் இதை ஆசாரியர்களிடம் உபதேசமாகப் பெற்று பகவதநுபவமான பேற்றைப் பெற்றனர் பெரியோர். இந்த ஸாரதம ஜ்ஞானம் மிகமிகத் தகுதி பெற்றவருக்கே பெரியோர்களால் ரஹஸியமாக உபதேசிக்கப்பட்டு வந்தது "ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்" என்று மாமுனிவன் திருவாக்கு.

அனைத்துலகும் வாழப்பிறந்த யதிராஜமாமுனிவர் ஸ்ரீகீதையில் கண்ணன் அருளிய சரமச்லோகத்தின் அகப்பொருளை திருக்கோட்டியூர் நம்பியிடம் உபதேசமாகப் பெற திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு 18 முறை நடந்தது உலகறிந்த சரித்திரமாகும். இது போதாதென்று திருக்கோட்டியூரில் ஸௌம்யநாராயணன் ஸன்னதியில் ஒரே வேளை பெருமாள் தீர்த்தத்தை மட்டும் பருகி ஒரு மாதம் உபவாஸமிருந்து தமது ஆர்வத்தையும் தகுதியையும் நிரூபித்து நம்பியிடம் அந்த ரஹஸ்யத்தை உபதேசமாகப் பெற்றார்.

நமது ஆசாரியர்களை அநுவ்ருத்திப்ரஸன்னாசாரியரென்றும் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசாரியரென்றும் இருவகைப்படுத்திக் கூறுவதுண்டு. திருக்கோட்டியூர் நம்பி முதல் வகையைச் சேர்ந்தவர். பல தடவை கிட்டி வேண்டினாலும் எளிதில் உபதேசம் நல்கார். கடுமையாகச் சோதித்துப் பிறகே உபதேசிப்பர். எம்பெருமானார் அப்படிப்பட்டவரல்லர். 'காரேய் கருணை இராமானுசன்' என்று அமுதனாராலும், 'தயைகலிந்து' என்று கூரத்தாழ்வானாலும் போற்றப்படும் இவர் தம்மையண்டியவருக்கு அவர் காட்டுமாசையையே பற்றுசாகக்கொண்டு ரஹஸ்யப் பொருள்களை-ஸாரதம அறிவை - உபதேசித்தார். வந்தவரை கடுஞ்சோதனைக்குட்படுத்த அவரின் கருணையுள்ளம் இடம் தரவில்லை. இவரையே க்ருபா மாத்ர ப்ரஸன்னாசாரியர் என்பது. ஆசாரியர் ''மிகவும் தகுதியுடையவர்க்கே உபதேசிப்பீர்'' என்று இட்ட கட்டளையை மீறி, ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுமல் தான் ஆத்மநாசமடைந்தாலும் உபதேசம் பெற்ற இவர்கள் பேறு பெறுவார்களே என்று ஸம்ஸாரிகளுக்கு உபதேசித்து எம்பெருமானார் என்ற பெயரைப் பெற்றார். தம்முடைய இயல்பான இன்னருளால் பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வதையே விரதமாகக் கொண்டவர் இவர். ஸீதாபிராட்டி, பிரஹ்லாதாழ்வான், நம்மாழ்வார் போல இவரும் கருணைமுகிலாக இருந்தார்.

இப்படிப்பட்ட கருணையுள்ளம் படைத்தவரும் ஸாரதமமான ரஹஸ்ய உபதேசங்களை நூல் வடிவில் ஏடுபடுத்தவில்லை. ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் முதலிய தமது நூல்களில் ஆங்காங்கு சேமவைப்பாகக் காட்டினாலும், கையிலங்கு நெல்லிக்கனியாக வெளிப்படுத்தவில்லை. இக்குறை ஸர்வஜ்ஞ ஸார்வபௌமராய் பரமகாருணிகர் என்று கொண்டாடப்படும் பிள்ளைலோகாசாரியரால் நிவர்த்திக் கப்பட்டது. நாராயணன், வ்யாஸாவதாரமாய் வேதாந்தங்களை வகைப்படுத்தி ஸாரமான சாரீரகமீமாம்ஸை என்னும் நூலை அருளினார். இமையோர் தலைவன் (தேவப்பெருமாள்) பேரருளாளனுக்குக் கச்சியம்பதியில் இராமானுசனை உருவாக்கியவன், லோகாசாரியராகத் திருவவதரித்து த்ராவிடஸூத்ரங்களாக வேதாந்தஸாரதமப் பொருள்களை வெளியிட்டருளினான். வியாஸஸூத்ரங்களுக்கு பாஷ்யமிட்டருளிய எம்பெருமானாரும் லோகாசார்யஸூத்ரங்களுக்கு தெளிவான பாஷ்யமருளிச் செய்ய மணவாள மாமுனிகளாக வந்தவரித்துத் தமது மாபெருங் கருணையால் இவற்றை உலகோற்கு கையிலங்கு நெல்லிக்கனியாக்கியருளினார்.

சாஸ்த்ரம், சாஸ்த்ரஸாரம், ஸாரதமம் இவைகளின் வேறுபாட்டை ஸ்ரீராமாயணத்திலிருந்து மேற்கோள் காட்டித் தெளிவு படுத்திவிட்டு மேல் விஷயத்துக்குச் செல்வோம். திருவடி (அநுமான்) முதன் முதலில் பெருமானை

(ராமபிரானை) ஸேவித்து அளவாளாவியபோது, பெருமாள் திருவடியின் சாஸ்த்ரஜ்ஞானத்தை இலக்குமனிடம் வெகுவாகக் கொண்டாடினார். (ஸ்ரீரா-கிஷ்-3-26). திருவடியின் சாஸ்த்ரஜ்ஞானம் பெற்ற பரிசு கொண்டாட்டம். 'ஐந்த்ரவ்யாகரணபண்டிதர்' என்று சாஸ்த்ரஜ்ஞானத்தை யிட்டுப் போற்றப்படும் திருவடி இதற்குப் பின்னர் ராமதூதனாய் இலங்கையில் அசோகவனத்தில் பிராட்டியை ஸேவித்து அவள் ராவணனுக்குச் செய்த உபதேசத்தைக் கேட்டார். பெருமானைப் பற்றிய பல உண்மைகள் அநுமானுக்கு பிராட்டியினருளால் புலனாயிற்று. பிராட்டியிடம் 'ராமதூதன்' என்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டவர், பின்னர் அரக்கர்கள் கேட்கும்படி பெருங்குரலில் ''தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய'' என்று முழங்கினார். (ஸ்ரீரா-ஸுந்-2-34). பிராட்டியினருள் சாஸ்த்ரஜ்ஞரை ஸாரஜ்ஞராக மாற்றிவிட்டது. இதன் விசேஷ பலன் யாது? என்னில்; பிராட்டிமாருக்குக் கிடைக்கும் பரிசான பெருமானின் ஆலிங்கனம் இவருக்குக் கிடைத்தது. இதனால் பெருமானை இவ்வுலகிலேயே பெற்றுவிட்ட திருவடி, அவதாரஸமாப்தியில் பெருமாள் ''ஸ்ரீ வைகுண்டம் கொண்டு போகிறேன். வாரு''மென்றழைத்தபோது, ''பாவோ நான்யத்ர கச்சதி'' (என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே) என்று மறுத்துவிட்டார்.

சாஸ்த்ரஸார ஸாரதமங்களை உபதேசமாகவே பெறவேண்டுமாயினும் இவை க்ரந்தஸ்தமானது பேரருளாளனுடைய பெருங்கருணையாலே என்பது மேலே விளங்கும். இக்கருணை பிள்ளைலோகாசாரியர் மூலமாகப் பெருக்கெடுத்ததைப் பின்னர் அநுபவிப்போம். பிள்ளைலோகாசாரியர் வடக்குத்திருவீதிப்பிள்ளை என்னும் ஆசாரியருக்கு அவரின் ஆசாரியரான நம்பிள்ளையின் அநுக்ரஹத்தால் பிறந்தவர். இவர் அவதரித்தது ஸ்ரீரங்கத்தில் ஒரு குரோதன ஆண்டில் (1205 AD) ஐப்பசி மாதத் திருவோணத்தில். இவருடன் பிறந்த இளையவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர். இருவரும் திருமணம் செய்து கொள்ளாமல் பிரமசரிய ஆசிரமத்திலேயே நிலைத்திருந்தனர். நமது ஓராண்வழி ஆசாரிய பரம்பரை எம்பெருமானாரையடுத்து எம்பார், பராசரபட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் என்ற க்ரமத்தில் அமைந்துள்ளது. நம்பிள்ளையின் இயற்பெயர் வரதாசாரியர் எனபது. அன்புடையோர் சாத்து திருநாமங்களான நம்பெருமாள், நம்மாழ்வார், நம் ஜீயர், நம் பிள்ளை என்ற திருநாமங்கள் அவரவர் தம் ஏற்றத்தால் பெறப் பட்டவை. நம்பிள்ளையைத் துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பர் 'உலகாரியனே!' என்று அழைக்க, நம்பிள்ளைக்கு 'உலகாரியன்' என்றும் பெயராயிற்று. ஆசாரியனின் திருநாமத்தையே வடக்குத் திருவீதிப்பிள்ளை தமது மைந்தர்க்குச்

சாத்தினர். இவரும் லோகாசாரியர் பிள்ளை - பிள்ளைலோகாசாரியர் என்று அழைக்கப்படுவாராயினர். இவர் தமது ஒப்பற்ற கருணையினால் நாம் அறிய வேண்டிய ஸார, ஸாரதமமான அர்த்தங்களையெல்லாம் 18 ரஹஸ்யங்களாக அருளிச்செய்துள்ளார். இவற்றுள் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசன பூஷணம் என்ற மூன்றும் ஸூத்ரஸரணியில் அமைந்துள்ளன. இவை மூன்றுக்கு மட்டும்யதிபுனரவதாரரான மணவாளமாமுனிகள் 'விசதவாக்சிகாமணி' என்ற தமது பிருதுக்கேற்ப தெளிவான வியாக்கியானங்களை அருளிச் செய்துள்ளமையால் இவற்றின் முக்கியத்துவம் விளங்கும்.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூனவே
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:

என்பது இவரது தனியன். ''கிருஷ்ணபாதருடைய (இப்பெயர் வடக்குத் திருவீதிப்பிள்ளையைக்குறிக்கும்) குமாரரான லோகாசார்ய ரெனும் ஆசாரியரை வணங்குகிறேன்'' என்கிறது. இவர் தன்மை யாது? எனில்; ஸம்ஸாரம் என்னும் விஷப்பாம்பால் கடியுண்டவரைப் பிழைப்பிக்கும் அருமருந்தாம். அதாவது இந்த ஆசிரியர் தமது கிரந்தங்களின்மூலம் ஸம்ஸாரமாகிற விஷத்திற்கு நிச்சயமான மருந்தை உபகரித்தவர் என்பது கருத்து. இவ்விருள்தருமா ஞாலத்துள் மக்களின் அகவிருளை (அறியாமையை) அறவே அழிக்கவல்ல உயர்ந்த நூல்களைத் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாக அருளியவர் இம்மஹாசாரியர், இவருடைய ஸர்வஜ்ஞத்வமும், பரமகாருணிகத்வமும் பரமப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைத்துத் தலைக்கட்டப் போகாது. எந்த ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமில்லாமல் ஆசார்யபரம்பரா ப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாகவும் மனதில் வாங்கித்தரிக்கும்படியும் அமைத்திருக்குமழகு இவருடைய நூல்களுக்குத் தனிச்சிறப்பெனலாம்.

முன்பு குறிப்பிடப்பட்ட முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசன பூஷணம் என்ற மூன்றினுள் ஸ்ரீவசனபூஷணத்தின் பெருமை அளவிடமுடியாததென்று மணவாளமாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில் பலபாசுரங்களால் கொண்டாடியுள்ளார். ''ஸர்வஜ்ஞ லோக குருநிர்மித மார்யபோக்யம் வந்தே ஸதா வசநபூஷண திவ்யசாஸ்த்ரம் ''- இந்த மிகவுயர்ந்த நூலை ஒரு ''திவ்யசாஸ்த்ரம்'' என்றே நம் பெரியோர்கள் வழங்கியுள்ளனர். இந்த திவ்யக்ரந்தத்திற்கு மணவாளமாமுனிகள் இட்டருளிய வியாக்கியமான அவதாரிகையில் இந்த திவ்யசாஸ்த்ரம் அவதரித்த க்ரமத்தை வெளியிட்டருளியுள்ளார். இக்கட்டுரைத் தலைப்புக்கு மிகவும் யுக்தமான அவ்விஷயங்களாவன :

ஸம்ஸாரி சேதனரிழவு ஸஹிக்கமாட்டாத பரமக்ருபையால் அவர்கள் உய்யும் பொருட்டு பல ப்ரபந்தங்களை யருளிச் செய்த பிள்ளைலோகாசாரியர், ஆசார்யபரம்பரை மூலமாக கிடைத்த அர்த்தங்களில், அவற்றின் மிகுந்த கௌரவத்திற்கேற்ப ரஹஸ்யமாக உபதேசித்துப் போந்தவையாய், அருமை பெருமைகளைப்பற்ற இதற்குமுன்புதாமும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையான அர்த்தவிசேஷங்களையெல்லாம் பின்பு வருபவர்கள் இழக்க வொண்ணுதென்கிற பரமகிருபாதிசயத்துக்குமேலே பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே ஸ்ரீவசநபூஷணமாகிய இந்த ப்ரபந்தத்தின் வாயிலாக வெளியிட்டருளுகிறார். முன்பே கச்சி பேரருளாளப்பெருமாள் தம்முடைய நிர்ஹேதுக கிருபையாலே மணல்பாக்கத்திலேயிருப்பாரொரு நம்பியாரை (இவருக்கு 'மணல்பாக்கத்துநம்பி' என்றே திருநாமமாயிற்று) விசேஷகடாக்ஷம் பண்ணியருளி தஞ்சமாயிருப்பன சில அர்த்தவிசேஷங்களைத் தாமே அவர்க்குக் கனவில்தோன்றி அருளிச் செய்து, ''நீர் போய் இரண்டாற்றுக்கு நடுவே (திருவரங்கத்தில்) வாழ்ந்திரும்; இன்னமுமக்கு இவ்வர்த்தங்களையெல்லாம் விசதமாக (விளக்கமாக) நாம் அங்கே சொல்லுகிறோம்'' என்று திருவுள்ளமாயருளுகையாலே, அந்த நம்பி திருவரங்கம் வந்து பெரியபெருமாளை ஸேவித்துக்கொண்டு தமக்குமுன்பு தேவப் பெருமாளருளிச் செய்த அர்த்தங்களைப் பிறரறியாதபடி அநுஸந்தித்துக் கொண்டு தனியிடமான ஒரு கோயிலிலே இருந்து கொண்டிருக்கையில், பிள்ளைலோகாசாரியர் தமது ஸ்ரீபாதத்துக்கந்தரங்கரான முதலிகளும் தாமுமாக அந்த கோயிலுக்கு தற்செயலாக வெழுந்தருளி அவ்விடம் ஏகாந்தமா யிருக்கையாலே (பிறர் நடையாடாத தனியிடம்) ரஹஸ்யார்த்தங்களை சிஷ்யர்களுக்கு அருளிச்செய்துகொண்டு எழுந்தருளியிரா நிற்க, அங்கு தனியிருந்த நம்பியார் அவ்வர்த்தங்கள் தமக்குப் பேரருளாளப்பெருமாளருளிச் செய்த அர்த்தவிசேஷங்களாயிருக்கையாலே போரவித்தராய் (மிகவும் அதிசயமுற்று) உள்ளில் நின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீபாதத்தில் விழுந்து 'அவரோ நீர்?' (கச்சி தேவப்பெருமாள் தானே தேவரீர்?) என்ன, 'ஆவதேது?' (ஆம், ஏன் கேட்டது?) என்று பிள்ளை கேட்டருள; நம்பியாரும், பேரருளாளப்பெருமாள் தமக்கு இவ்வர்த்தங்களை ப்ரஸாதித்தருளின படியையும், இத்தேசத்திலே (உபயகாவேரீமத்யே) போக நியமித்தருளின படியையும், 'இன்னும் உமக்கங்கே விசதமாகச் சொல்லுகிறோம்' என்றருளிச் செய்தபடியையும் விண்ணப்பம் செய்ய, பிள்ளை கேட்டருளி மிகவும் மகிழ்ந்து அவரை அபிமானித்தருளினர். நம்பியாரும் பிள்ளை திருவடிகளுக்கந்தரங்கராய் வாழும் நாளிலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே, 'இவ்வர்த்தங்கள் மறைந்துபோகாதபடி இவற்றையொரு ப்ரபந்தஸ்தமாக்கச் சொன்னோம்

என்று நீர் பிள்ளைக்குச் சொல்லும்' என்று திருவுள்ளமாக, அவரும் பிள்ளையிடம் பெருமாள் இப்படித் திருவுள்ளமாயருளினர்'' என்று விண்ணப்பஞ்செய்தார், பிள்ளையும், 'ஆனல் அப்படியே செய்வோம்' என்று திருவுள்ளம்பற்றி பிறகு இந்த ஸ்ரீவசநபூஷணத்தையிட்டருளினர். மணவாள மாமுனிகளின் இந்த திவ்யஸூக்திகளாலே, கச்சி தேவப்பெருமாளே பிள்ளை உலகாரியனுக வந்தவதரித்து ஸ்ரீவசநபூஷணத்தையும் மற்றைய ரஹஸ்யக்ரந்தங்களையும் அருளிச்செய்து சாஸ்த்ரஸார ஸாரதமங்களை உபகரித்திருளினன் என்பது தெளிவாகிறது.

மணவாளமாமுனிகள் தமது ஜன்மபூமியான ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரியகோயிலுக்கெழுந்தருளி பெரியபெருமாளருளால் பல்லவராயன் மடத்தைப் பரிசாகப்பெற்று 'திருமலையாழ்வார்' என்ற பெயரால் காலக்ஷேப கூடமமைத்தபோது, பிள்ளைலோகாசாரியர் திருமாளிகை யிலிருந்து ரஹஸ்யம் விளைந்த மண் என்ற மிகுந்த கௌரவபுத்தியுடன் மண்ணைக்கொண்டு சேர்த்து அதன்மேலமர்ந்து சிஷ்யர்களுக்கு அர்த்த விசேஷங்களை யருளிச்செய்வர் என்பது ப்ரஸித்தமான வரலாறு. அவ்விடத்தை மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் இன்றும் ஸேவிக்கலாம்.

''லோகாசாரியர் ஸ்ரீவசனபூஷணம் அருளிச்செய்து நமது தர்சனத்தை யெல்லாம் வ்யர்த்தமாக்கினர்'' என்று சில அஸூயாளுக்கள் நம்பெருமாளிடம் கோள் சொல்ல, அத்தைப் பெருமாள் கேட்டுச் சீறிபிள்ளையையழைத்தருள, அவருக்குப்பதில் திருத்தம்பியாரான நாயனர் பெருமாளிடம் சென்றவாறே பெருமாள் ''நாம் தர்மஸம்ஸ்தாபனார்த்தமாகவன்றே அவதாரம் பண்ணுவது; அத்தை ரஹஸ்யக்ரந்தமிட்டு வ்யர்த்தமாக்கலாமோ?'' என்றுபருஷோக்திகளைச் சொன்னதாக ''யதீந்த்ரப்ரவணப்ரபாவம்''(சென்னை-ஆனந்தா பிரஸ், 1907, பக், 9) நூலில் காணப்படுகிறது அஸம்பாவிதம். கொள்ளத்தக்கதல்ல.

பிள்ளை லோகாசாரியரின் வாழ்க்கை வரலாறுபற்றிய குறிப்புகள் அதிகமாகக் கிடைக்கவில்லை. திருத்தகப்பனரான வடக்குத் திருவீதிப்பிள்ளை யிடமும் பரமாசாரியரான நம்பிள்ளையிடமும் இவர் ஸகலக்ரந்தங்களையும் அதிகரித்ததாகத் (பயின்றதாக) தெரிகிறது. ஸ்ரீ ரங்கநாதனிடம் அளவற்ற பக்தியுடையவரிவர். வடக்குத் திருவீதிப்பிள்ளைக்குப் பின்னர் இவரே ஓராண்வழியாசாரியராகபோற்றப்படுகிறார். இவருடைய வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் துலுக்கர்கள் தென்தேசத்தில் பரவியதால் நாடு கொந்தளித்தது. மாலிக்கபூர் என்னும் படைத்தலைவன் தனது படையுடன் திருசிராப்பள்ளி ஸ்ரீ ரங்கம் முதலான இடங்களைத் தாக்கியது இக்காலத்தில் தான். துலுக்கர் படையெடுப்பில் திருவரங்கத்தில் ஆயிரக்கணக்கில் ஸ்ரீவைஷ்ணவர்கள்

கொல்லப்பட்டனர். பெரிய பெருமாள் ஸன்னிதிக்குமுன் கல்லால் சுவரெடுத்து மறைத்துவிட்டு, ஸ்ரீ ரங்கநாச்சியாரை வில்வமரத்தடியில் பூமிக்குள் சேமவைப்பாய் எழுந்தருளப்பண்ணி வைத்து, நம்பெருமாளை நாச்சியாருடன் ரஹஸ்யமாக எழுந்தருளப்பண்ணிக் கொண்டு லோகாசாரியர் மிகவும் நம்பத்தக்க சிலருடன் திருமேனிக்காப்பாக எழுந்தருளினர்.

பெருமாளை மதுரையை நோக்கி எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகையில் வழியில் கள்ளர்பற்றுன காட்டு வழியே செல்லும் போது ஆயுதபாணிகளான கள்ளர்கள் வந்து பெருமாளைத் தாக்க, உலகாரியர் தமது சிஷ்யர்களுடன் அவர்களுக்குத் தாமே இரையாகி, விரைவில் பெருமாளை மேலே எழுந்தருளச் செய்து போகும்படி பண்ணினர். அவர்கள் செய்த கொடுமை தாங்காது ஜோதிஷ்குடி என்னுமிடத்தில் தமது 105வது பிராயத்தில் (1310 A. D) பரமபதம் சேர்ந்தார். அப்போது சிறு பிராயத்தில் தம்மை யாச்ரயித்து, தற்சமயம் மதுரையில் ராஜஸேவை பண்ணியிருந்த திருமலையாழ்வார் (திருவாய்மொழிப்பிள்ளை) என்பவரைத் திருத்தித்தமக்குப் பின் தர்சநப்ரவர்த்தகாசார்யராக ஆக்கும்படி நியமித்து விட்டு ஜ்யேஷ்ட சுத்தத்வாதசியன்று திருநாட்டுக் கெழுந்தருளினர்.

பிள்ளைலோகாசாரியரும் திருத்தம்பியாரான அழகியமணவாளப் பெருமாள் நாயனரும் இளமையே தொடங்கி பெருமாளையும் இளையபெருமாளையும் போல நெருங்கிய அன்புள்ள அண்ணன் தம்பிகளாக வளர்ந்து வந்தனர். நாயனர் உலகாரியனுக்கே முன்னமே பரமபதமெய்தினர். பிள்ளைலோகாசாரியருடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில், கூரகுலோத் தமதாஸர், மணற்பாக்கத்து நம்பி, கொல்லிகாவலதாஸர் (அழகியமணவாளப் பெருமாள் பிள்ளை,) கோட்டூரிலண்ணர், விளாஞ்சோலைப்பிள்ளை இவர்கள் முக்கியமானவர்கள். தமது இளமையில் லோகாசாரியரிடம் ஆச்ரயித்தவர்கள் திருமலையாழ்வார் (ஸ்ரீசைலேசர், திருவாய்மொழிப்பிள்ளை,) திருநாவீறுடைய பிரான் தாதரண்ணன் என்பவர்கள். இவர்களில் பின்னவர் மணவாளமாமுனிகளின் தந்தையார். முன்னவர் மணவாளமாமுனிகளின் ஸாக்ஷாதாசாரியன். இவரை கூரகுலோத்தமதாஸர் திருத்தி தர்சநப்ரவர்த்த கராக்கியருளினர் திருநாவீறுடைய பிரான் சிக்கில் கிடாரம் எனனுமூரில் கொல்லிகாவல தாஸரிடத்தில் சிஷ்யராயிருந்து கற்கவேண்டியவையெல்லாம் கற்று, அவர் குமாரத்தியை மணந்தார். ஆக, மணவாளமாமுனிகளுக்கு லோகாசாரியரின் ஆத்மஸம்பந்தம் தமது ஆசாரியரான பிள்ளை, தகப்பனரான அண்ணர், பாட்டனரான கொல்லிகாவலதாஸர், மூவர் மூலமாகவும் பெருஞ்செல்வமாகக் கிடைத்தது என்று அறியவேணும்

பிள்ளைலோகாசாரியர் அருளிச்செய்துள்ள 18 ரஹஸ்யங்களாவன ;

1. முமுக்ஷுப்படி : திருமந்த்ரம். த்வயம், சரமச்லோகம் இவற்றின் விவரணம். இதற்கு மாமுனிகளின் வியாக்கியானம் திருமந்த்ரார்த்தம் என்றழைக்கப்படும். உயர்ந்த காலக்ஷேபக்ரந்தமிது.

2. யாத்ருச்சிகப்படி : இதுவும் மேற்சொன்ன ரஹஸ்யத்ரயார்த்தங்களைச் சுருக்கமாக விளக்குவது 3. பரந்தபடி : ரஹஸ்யத்ரயார்த்தங்களை மிக விரிவாக விளக்குவது 4. சரிய:பதிப்படி: இதுவும் ரஹஸ்யத்ரயார்த்த விவரணமே. 5, 6, 7, தனிப்ரணவம் தனித்வயம், தனிசரமம், ரஹஸ்யத்ரயத்தையும் தனித்தனியே விவரிக்குமவை. இந்த மூன்று ரஹஸ்யங்களை உலகாரியர் தாமே பல நூல்களில் விவரித்துள்ளமை கொண்டு இந்த மூன்று மந்த்ரங்களின் பெருமைகளை ஒருவாறு அறியலாம். இவற்றை முறையே குருமுகமாய் ஸேவித்து இவற்றின் வாசியறியலாம்.

8. ஸ்ரீவசநபூஷணம் - பூர்வாசாரிய வசனங்களைப் பெருமளவில் சேர்த்து ஒரு பூஷணமாகவமைத்து ஸ்ரீவசநபூஷணமென்று அமைத்துள்ள மிகவுயர்ந்த நூல். இதை உள்ளபடி அறிவதும் அநுட்டிப்பதும் மிக அரிது. ஒரொருவர் தவிர்த்து எல்லார்க்கும் அண்டாததிது. இதில் அருளப்பட்டுள்ள விஷயங்கள் (அ) பிராட்டியின் புருஷகாரவைபவமும் சரண்யனை சரிய பதியின் உபாயவைபவமும் (ஆ) சரண்யனை எம்பெருமானே பேற்றுக்குபாயமென்பது. (இ) சரணம் பற்றிய ப்ரபந்நனின் நிஷ்ட்டாக்ரமம் (ஈ) அறியாதன அறிவிக்கும் ஆசாரியன் லக்ஷணம். அறிவு பெறும் ஸச்சிஷ்ய லக்ஷணம் (உ) எம்பெருமானின் நிர்ஹேதுகக்ருபை (ஊ) ஆசாரியாபிமானமே உத்தாரகம் (பேற்றைத்தவருமல் அடைவிப்பது) என்ற சரமோபாய நிஷ்ட்டை.

9 அர்த்தபஞ்சகம் - இறைநிலை, உயிர் நிலை, உபாயமான நெறி, தடையான ஊழ்வினை, வாழ்வு என்ற ஐந்து முமுக்ஷு அவசியம் அறியவேண்டுவனவற்றை விவரிப்பது; 10. தத்வசேகரம் அர்த்த பஞ்சகத்தை வேதாந்த ப்ரக்ரியையில் விரிவாக உரைப்பது.

11. தத்வத்ரயம் - சித் (ஜீவாத்மா), அசித் [ப்ரக்ருதங்கள்], ஈச்வரன் [இவற்றைத் தனக்கு ப்ரகாரமாகக்கொண்டு நியமித்து நடத்தும் பரமாத்மவான ஸர்வேச்வரன்], இப்படியான மூன்று தத்வங்களை விவரிப்பது. இதை குட்டிபாஷ்யம் என்பர் பெரியோர்

12 அர்ச்சிராதி - முக்தனான ஜீவன் பரமபதம் செல்லும் மார்க்கமும் அவன் பெறும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தின் படியையும் விளக்குவது.

13. ப்ரமேயசேகரம் - நிர்ஹேதுக பகவத்கடாக்ஷமடியாக ஜீவாத்மா படிப்படியாக அடையும் பேறுகளை விவரிப்பது.

14. நவவிதஸம்பந்தம் - ஜீவனுக்கும் பரமனுக்குமுள்ள ஒன்பது உறவு முறைகள்.

15. ப்ரபந்நபரித்ராணம் - ப்ரபன்னனை எம்பெருமான் பேறு பெறுவிக்கும்படிகளை 'நயாமி' என்று விண்ணுடு சேர்ப்பிப்பதை விளக்குவது.

16. ஸாரஸங்க்ரஹம் - ஸர்வ வேத வேதாபப்ரம்ஹணங்களான த்வயமந்த்ரம் காட்டித்தரும் பத்து பொருள்களை திருவாய்மொழியின் பத்துப் பத்துக்களும் விவரிக்கின்றன என்பது.

17. நவரத்னமாலை - நம்மை, நமதுடலை, உடல்வழி உறவினரை, இதர சேதனரை, தேவதாந்தரங்களை, பாகவதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களை, எம்பெருமானை அடைவிக்கும் ஆசாரியனை, புருஷகாரபூதையான பிராட்டியை, ஸ்வாமியான எம்பெருமானை - இப்படி ஒன்பது விஷயங்களில் நம் நினைவு எப்படி இருக்க வேணும் என்று காட்டித் தருவது

18. ஸம்ஸார ஸாம்ராஜயம் - ஸம்ஸாரத்தின் கொடுமையையும் எம்பெருமான் ஸம்ஸாரியை எப்படி படிப்படியாக உயர்த்தி பேறு பெறுவிக்கிறான் என்பதையும் சொல்லுவது.

ஆக அஷ்டாதச ரஹஸ்யங்களிலடங்கிய 18 ரஹஸ்யங்களில் பேசப்பட்ட விஷயங்கள் மிகச் சுருக்கமாகக் காட்டப்பட்ட தாயிற்று.

மணவாளமாமுனிகளின் பூர்வாச்ரமத்திருப்பேரனாரான ஜீயர் நாயனார் லோகாசாரியர் விஷயமாகப்பல துதிநூல்களை இயற்றியுள்ளார் வேதாந்தேசிகர் 'லோகாசார்ய பஞ்சாசத் என்ற துதிநூலை அருளியுள்ளார் ஜீயர் நாயனார் அருளியுள்ள பின்னை விஷயமான த்யான ச்லோகம் ;

ப்ரணதார்த்தி ஹராம்சாய ப்ரக்ருஷ்டகுணசாலிநே |
வீலயோத்ருத லோகாய லோகாசார்யகுரவே நம : ||

ப்ரணதார்த்தி ஹரன் - என்பது அர்த்திதார்த்தபரிதாந தீக்ஷிதனான பேரருளாளனின் ஒரு திருநாமமாகும். தேவப்பெருமாளின் அம்சாவதாரமாய் உயர்ந்த குணக்கடலாய், அவலீலையாய் உலகத்தவரை உயர்த்தும் லோகாசார்ய குருவை வணங்குகிறேன்.


பிள்ளை லோகாசாரியர் திருவடிகளே சரணம்.

With best Compliments from

RAM PRIYA ENTERPRISES

9/2, KRIPA COMPLEX
SAFILGUDA, HYDERABAD - 500 566.

பவழவண்ணன்



Compliments from
SRI JAYAM ENTERPRISES
Madras-33

ஸ்ரீ:



ஸ்ரீ வேதாந்தாசாரியர் பணித்தருளின

வரதராஜ பஞ்சாசத்

தனியன்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிககேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

த்விரதசிகரிஸீம்நா ஸத்மவாந் பத்மயோநே:
துரக ஸவந வேத்யாம் ச்யாமளோ ஹவ்யவாஹ:
கலச ஜலதிகந்யா வல்லரீ கல்ப சாகீ
கலயது குசலம் ந: கோபி காருண்ய ராசி:. (1)

யஸ்யாநுபாவ மதிகந்து மசக்நுவந்த:
முஹ்யந்த் யபங்குர தியோ முநிஸார்வ பௌமா:
தஸ்யைவ தே ஸ்துதிஷு ஸாஹஸ மச்நுவாந:
க்ஷந்தவ்ய ஏஷ பவதா கரிசைலநாத. (2)

ஜாநந்நநாதிவிஹிதாந் அபராதவர்காந்
ஸ்வாமிந் பயாத் கிமபி வக்து மஹம் ந சக்த:
அவ்யாஜ வத்ஸல ததாபி நிரங்குசம் மாம்
வாத்ஸல்ய மேவ பவதோ முகரீ கரோதி. (3)

கிம் வ்யாஹராமி வரத ஸ்துதயே கதம் வா
கத்யோதவத் ப்ரலகு ஸங்குசித ப்ரகாச:
தந்மே ஸமர்ப்பய மதிம் ச ஸரஸ்வதீம் ச
த்வாமஞ்ஜஸா ஸ்துதிபதைர் யதஹம் திநோமி. (4)

மச்சக்தி மாத்ரகணநே கிமிஹாஸ்தி சக்யம்
சக்யேந வா தவ கரீச கிமஸ்தி ஸாத்யம்
யத்யஸ்தி ஸாதய மயா ததபி த்வயா வா
கிம் வா பவேத் பவதி கிஞ்சிதநீஹமாநே. (5)

ஸ்தோத்ரம் மயா விரசிதம் த்வததீநவாசா
த்வத்ப்ரீதயே வரத யத் ததிதம் ந சித்ரம்
ஆவர்ஜயந்தி ஹ்ருதயம் கலு சிக்ஷகாணும்
மஞ்ஜுநி பஞ்ஜர சகுந்தவிஜல்பிதாநி. (6)

யம் சக்ஷுஷா மவிஷயம் ஹயமேதயஜ்வா
த்ராகீயஸா ஸுசரிதேந ததர்ச வேதா:
தம் த்வாம் கரீச கருண பரிணமதஸ் தே
பூதாநி ஹந்த நிகிலாநி நிசாமயந்தி. (7)

தத்தத் பதைருபஹிதேபி துரங்க மேதே
சக்ராதயோ வரத பூர்வமலப்த பாகா:
அத்யக்ஷிதே மகபதௌ த்வயி சக்ஷுஷைவ
ஹைரண்ய கர்பஹவிஷாம் ரஸ மந்வபூவந். (8)

ஸர்க்க ஸ்த்திதி ப்ரளய விப்ரமநாடிகாயாம்
சைலூஷவத் விவித வேஷ பரிக்ரஹம் த்வாம்
ஸம்பாவயந்தி ஹ்ருதயேந கரீச தந்யா:
ஸம்ஸார வாரிநிதி ஸந்தரணிக போதம். (9)

ப்ராப்தோதயேஷு வரத த்வதநுப்ரவேசாத்
பத்மாஸநாதிஷு சிவாதிஷு கஞ்சுகேஷு
தந்மாத்ர தர்சந விலோபித சேமுஷீகா:
தாதாத்ம்யமூடமதயோ நிபதந்த்யதீரா:. (10)

மத்யே விரிஞ்சி சிவயோர் விஹிதாவதார:
க்யாதோஸி தத்ஸமதயா ததிதம் ந சித்ரம்
மாயாவிவேந மகராதி சரீரிணம் த்வாம்
தாநேவ பச்யதி கரீச யதேஷ லோக:. (11)

ப்ரஹ்மேதி சங்கர இதீந்த்ரஇதி ஸ்வராடிதி
ஆத்மேதி ஸர்வமிதி ஸர்வ சராசராத்மந்
ஹஸ்தீச ஸர்வ வசஸாமவஸாநஸீமாம்
த்வாம் ஸர்வகாரண முசந்த் யநபாய வாச:. (12)

ஆசாதிபேஷு கிரிசேஷு சதுர்முகேஷ்வபி
அவ்யாஹதாவிதிநிஷேதமயீ தவாஜ்ஞா
ஹஸ்தீச நித்யமநுபால நலங்கநாப்யாம்
பும்ஸாம் சுபாசுபமயாநி பலாநி ஸூதே. (13)

த்ராதாSSபதி ஸ்த்திதி பதம் பரணம் ப்ரரோஹ:
சாயா கரீச ஸரஸாநி பலாநி ச த்வம்
சாகாகத த்ரிதச ப்ருந்த சகுந்தகாநாம்
கிம் நாம நாஸி மஹதாம் நிகமத்ருமாணம். (14)

ஸாமாந்ய புத்தி ஜநகாச் ச ஸதாதிசப்தா:
தத்த்வாந்தர ப்ரம க்ருதச்ச சிவாதி வாச:
நாராயணே த்வயி கரீச வஹந்த் யநந்யம்
அந்வர்த்த வ்ருத்தி பரிகல்பிதமைக கண்ட்ட்யம். (15)

ஸஞ்சிந்தயந்த் யகில ஹேய விபக்ஷ பூதம்
சாந்தோதிதம் சமவதா ஹ்ருதயேந தந்யா:
நித்யம் பரம் வரத ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்
நிஷ்பந்த நந்தது மயம் பவத: ஸ்வரூபம். (16)

விச்வாதிசாயி ஸுகரூப யதாத்மகஸ் த்வம்
வ்யக்திம் கரீச கதயந்தி ததாத்மிகாம் தே
யேநாதிரோஹதி மதிஸ் த்வதுபாஸகாநாம்
ஸா கிம் த்வமேவ தவ வேதி விதர்க்கடோலாம். (17)

மோஹாந்தகார விநிவர்த்தந ஜாகரூகே
தோஷா திவாSபி நிரவக்ரஹ மேதமாநே
த்வத்தேஜஸி த்விரத சைலபதே விம்ருஷ்டே
ச்லாக்யேத ஸந்தமஸ பர்வ ஸஹஸ்ர பாநோ:. (18)

ரூடஸ்ய சிந்மயதயா ஹ்ருதயே கரீச
ஸ்தம்பாநுகாரி பரிணம விசேஷ பாஜ:
ஸ்த்தாநேஷு ஜாக்ரதி சதுர்ஷ்வபி ஸத்த்வவந்த:
சாகா விபாக சதுரே தவ சாதுராத்ம்யே. (19)

நாகாசலேச நிகிலோபநிஷந்மநீஷா
மஞ்ஜுஷிகா மரகதம் பரிசிந்வதாம் த்வாம்
தந்வீ ஹ்ருதி ஸ்ப்புரதி காSபி சிகா முநீநாம்
ஸௌதாமநீவ நிப்ருதா நவ மேக கர்ப்பா. (20)

ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே
ச்லாக்யே ச திவ்ய ஸதநே தமஸ: பரஸ்தாத்
அந்த: களே பரமிதம் ஸுஷிரம் ஸுஸூக்ஷ்மம்
ஜாதம் கரீச கத மாதரணஸ்பதம் தே. (21)

பாலாக்ருதே ர்வட பலாசமிதஸ்ய யஸ்ய
ப்ரஹ்மாண்ட மண்டல மபூ துதரைகதேசே
தஸ்யைவ தத் வரத ஹந்த கதம் ப்ரபூதம்
வாராஹ மாஸ்த்திதவதோ வபு ரத்புதம் தே. (22)

பக்தஸ்ய தாநவ சிசோ: பரிபாலநாய
பத்ராம் ந்ருஸிம்ஹ குஹநா மதிஜக்முஷஸ் தே
ஸ்தம்பைக வர்ஜ மதுநாsபி கரீச நூநம்
த்ரைலோக்ய மேத தகிலம் நரஸிம்ஹ கர்ப்பம். (23)

க்ராமந் ஜகத் கபட வாமநதாமுபேத:
த்ரேதா கரீச ஸ பவாந் நிததே பதாநி
அத்யாபி ஜந்தவ இமே விமலேந யஸ்ய
பாதோதகேந வித்ருதேந சிவா பவந்தி. (24)

யேநாசல ப்ரக்ருதிநா ரிபு ஸம்க்ஷயார்த்தீ
வாராம் நிதிம் வரத பூர்வ மலங்கயஸ் த்வம்
தம் வீக்ஷ்ய ஸேது மதுநாsபி சரீரவந்த:
ஸர்வே ஷடூர்மி பஹ்ளம் ஜலதிம் தரந்தி. (25)

இத்தம் கரீச துரபஹ்நவ திவ்ய பவ்ய-
ரூபாந்விதஸ்ய விபுதாதி விபூதி ஸாம்யாத்
கேசித் விசித்ர சரிதாந் பவதோsவதாராந்
ஸத்யாந் தயா பரவசஸ்ய வதந்தி ஸந்த:. (26)

ஸௌசீல்ய பாவித தியா பவதா கதஞ்சித்
ஸஞ்சாதிதாநபி குணந் வரத த்வதீயாந்
ப்ரத்யக்ஷயந்த்யவிகலம் தவ ஸந்நிக்ருஷ்டா:
பத்யுஸ் த்விஷா மிவ பயோத வ்ருதாந் மயூகாந். (27)

நித்யம் கரீச திமிராவில த்ருஷ்டயோsபி
ஸித்தாஞ்ஜநேந பவதைவ விபூஷிதாக்ஷா:
பச்யந்த் யுபர்யுபரி ஸஞ்சரதா மத்ருச்யம்
மாயா நிகூடமநபாய மஹாநிதிம் த்வாம்:. (28)

ஸத்யஸ்த்யஜந்தி வரத த்வயி பத்த பாவா:
பைதாமஹாதிஷ்ண பதேஷ்வபி பாவ பந்தம்
கஸ்மை ஸ்வதேத ஸ்ணகஸஞ்சரணைத்ஸ்ணகாய
காராக்ருஹே கநக ச்ருங்க்கலயாsபி பந்த:. (29)

ஹஸ்தீச து:க்க விஷ திக்த பலாநுபந்தி (நி)
ஆப்ரஹ்ம கீட மபராஹத ஸம்ப்ரயோகே
துஷ்கர்ம ஸஞ்சயவசாத் துரதிக்ரமே ந:
ப்ரத்யஸ்த்ர மஞ்ஜலிரஸௌ தவ நிக்ரஹாஸ்த்ரே. (30)

த்வத்பக்தி போத மவலம்பிது மக்ஷமாணும்
பாரம் பரம் வரத கந்து மநீச்வராணும்
ஸ்வைரம் லிலங்கயிஷதாம் பவவாரிராசிம்
த்வாமேவ கந்துமஸி ஸேது ரபங்குரஸ் த்வம். (31)

அச்ராந்த ஸம்ஸரண கர்ம நிபீடிதஸ்ய
ப்ராந்தஸ்ய மே வரத போகமரீசிகாஸ்ண
ஜீவாதுரஸ்து நிரவக்ரஹ மேதமாநோ
தேவ த்வதீய கருணம்ருத த்ருஷ்டி பாத:. (32)

அந்த: ப்ரவிச்ய பகவந்நகிலஸ்ய ஜந்தோ:
ஆஸேதுஷஸ்தவ கரீச ப்ருசம் தவீயாந்
ஸத்யம் பவேய மதுநாsபி ஸ ஏவ பூய:
ஸ்வாபாவிகீ தவ தயா யதி நாந்தராய:. (33)

அஜ்ஞாத நிர்கம மநாகம வேதிநம் மாம்
அந்தம் ந கிஞ்சி தவலம்பந மச்நுவாநம்
ஏதாவதீம் கமயிது: பதவீம் தயாளோ:
சேஷாத்வலேசநயநே க இவாதிபார:. (34)

பூயோsபி ஹந்த வஸதிர்யதி மே பவித்ரீ
யாம்யாஸ்ண துர்விஷஹவ் ருத்தி ஷ்ண யாதநாஸ்ண
ஸம்யக் பவிஷ்யதி தத: சரணாகதாநாம்
ஸம்ரக்ஷிதேதி பிருதம் வரத த்வதீயம். (35)

பர்யாகுலம் மஹதி து: க்க பயோநிதௌ மாம்
பச்யந் கரீச யதி ஜோஷ மவஸ்த்திதஸ்த்வம்
ஸ்ப்பாரேக்ஷணேபி மிஷதி த்வயி நிர்நிமேஷம்
பாரே கரிஷ்யதி தயா தவ துர்நிவாரா. (36)

கிம் வா கரீச க்ருபணே மயி ரக்ஷணீயே
தர்மாதி பாஹ்ய ஸஹகாரி கவேஷணேந
நந்வஸ்தி விச்வ பரிபாலந ஜாகரூக:
ஸங்கல்ப ஏவ பவதோ நிபுண: ஸஹாய:. (37)

நிர்யந்த்ரணம் பரிணமந்தி ந யாவதேதே
நீரந்த்ர துஷ்க்ருதபவர் துரித ப்ரரோஹா:
தாவந்ந சேத் த்வமுபகச்சஸி சார்ங்கதந்வா
சக்யம் த்வயாऽபி ந ஹி வாரயிதும் கரீச. (38)

யாவந்ந பச்யதி நிகாமமமர்ஷணோமாம்
ப்ரூபங்க பீஷண கராள முக: க்ருதாந்த:
தாவத் பதந்து மயி தே பகவந் தயாளோ:
உந்நித்ர பத்ம கலிகா மதுரா: கடாக்ஷா:. (39)

ஸ த்வம் ஸ ஏவ ரபஸோ பவதெளபவாஹ்ய:
சக்ரம் ததேவ சித தாரமஹம் ச பால்ய:
ஸாதாரணே த்வயி கரீச ஸமஸ்த ஜந்தோ:
மாதங்க மானுஷ பிதா ந விசேஷ ஹேது:. (40)

நிர்வாபயிஷ்யதி கதா கரிசைல தாமந்
துர்வார கர்ம பரிபாக மஹாதவாக்நிம்
ப்ராசீந து:க்கமபி மே ஸுகயந்நிவ த்வத்-
பாதாரவிந்த பரிசார ரஸ ப்ரவாஹ:. (41)

முக்த: ஸ்வயம் ஸுக்ருத துஷ்க்ருத ச்ருங்க்கலாப்யாம்
அர்ச்சிர்முகை ரதிக்ருதை ரதிவாஹிதாத்வா
ஸ்வச்சந்த கிங்கரதயா பவத: கரீச
ஸ்வாபாவிகம் ப்ரதிலபேய மஹாதிகாரம். (42)

த்வம் சேத் ப்ரஸீதஸி தவாஸ்மி ஸமீபதச்சேத்
த்வய்யஸ்தி பக்திரநகா கரிசைல நாத
ஸம்ஸ்ருஜ் யதே யதி ச தாஸ ஜநஸ்த்வதீய:
ஸம்ஸார ஏஷ பகவந்நபவர்க ஏவ. (43)

ஆஹார்யமாந மநபாய விபூதி காமை:
ஆலோக லுப்த ஜகதாந்த்யம் அநுஸ்மரேயம்
ஆலோ ஹிதாம்சுகம் அநாகுல ஹேதி ஜாலம்
ஹைரண்யகர்ப்ப ஹயமேத ஹவிர்ப்புஜம் த்வாம். (44)

பூயோ பூய: புலக நிசிதை ரங்ககை ரேதமாநா:
ஸ்த்தூலஸ் தூலாந்நயந முகுளீர்பிப்ரதோ பாஷ்ப பிந்தூந்
தந்யா: கேசித் வரத பவத: ஸம்ஸதம் பூஷயந்த:
ஸ்வாந்தைரந்தர் விநயநிப்ருதை: ஸ்வாதயந்தே பதம் தே. (45)

வரத தவ விலோகயந்தி தந்யா:
மரகதபூதர மாத்ருகாயமாணம்
வ்யபகத பரிகர்ம வாரவாணம்
ம்ருகமத பங்க விசேஷ நீலமங்கம். (46)

அநிப்ருத பரிரம்பை ராஹிதா மிந்திராயா:
கநக வலய முத்ராம் கண்ட்டபாகே ததாந:
பணிபதி சயநீயா துத்திதஸ் த்வம் ப்ரபாதே
வரத ஸதத மந்தர் மாநஸம் ஸந்நிதேயா:. (47)

துரக விஹகராஜ ஸ்யந்தநாந் தோளிகாதி(ஷு)
அதிக மதிக மந்யா மாத்ம சோபாம் ததாநம்.
அநவதிக விபூதிம் ஹஸ்திசைலேச்வரம் த்வாம்
அநுதிந மநிமேஷைர் லோசநைர் நிர்விசேயம். (48)

நிரந்தரம் நிர்விசதஸ் த்வதீயம்
அஸ்ப்ருஷ்ட சிந்தாபத மாபிரூப்யம்
ஸத்யம் சபே வாரணசைலநாத
வைகுண்ட வாஸேऽபி நமேऽபிலாஷ:. (49)

வ்யாதந்வாநா தருண துளஸீ தாமபி: ஸ்வாமபிக்ஷ்யாம்
மாதங்காத்ரௌ மரகதருசிம் புஷ்ணதீ மாநஸே ந:
போகைச்வர்ய ப்ரிய ஸஹசரை: காபி லக்ஷ்மீ கடாக்ஷை:
பூய: ச்யாமா புவந ஜநநீ தேவதா ஸந்நிதத்தாம். (50)

இதி விஹிதமுதாரம் வேங்கடேசேந பக்த்யா
ச்ருதி ஸுபகமிதம் ய: ஸ்தோத்ர மங்கீகரோதி
கரிசிகரி விடங்க ஸ்த்தாயிந: கல்பவ்ருக்ஷாத்
பவதி பலமசேஷம் தஸ்ய ஹஸ்தாபசேயம். (51)

அருளாளனும் அருளாளர்களும்

தர்சநப்ரதரான தேவப்பெருமாள் (கண் கொடுக்கும் அருளாளன்)

''அஹமேவ பரம் தத்த்வம்''

—திருக்கச்சி நம்பியாறு வார்த்தையில்

தரிசனத்தை வளர்த்த எம்பெருமானுர்

''ப்ரணதார்த்திஹர'' (சரணாகதி கத்யம்)

தரிசனத்துக்காகத் தரிசனம் நல்கிய கூரத்தாழ்வான்:

ஹஸ்திசைலநிலயோ பவந் பவாந் ஸாம்ப்ரதம் வரதராஜ ஸாஹ்வய:
இஷ்டமர்த்த மநுகம்பயா ததத் விச்வமேவ தயதே ஹி ஸுந்தர.

—ஸுந்தர பாஹுஸ்தவம் 118

ஷட்தர்சநாதீச குருவான ஸ்ரீபராசர பட்டர்

வடதளதேவகீஜடரவேதசிர: கமலாஸ்தந
சடகோபவாக்வபுஷி ரங்கக்ருஹே சயிதம்
வரத முதாரதீர்க்கபுஜலோச நஸம்ஹநநம்
புருஷ முபாஸிஷீய பரமம் ப்ரணதார்த்திஹரம்.

—ஸ்ரீரங்கராஜஸ்தவம் 1-78

ஸ்ரீஸுதர்சந பட்டர்

வரதம் த்விரதாத்ரீசம் ஸ்ரீ நிதிம் கருணாநிதிம்
சரண்யம் சரணம் யாமி ப்ரணதார்த்திஹரம் ஹரிம்

—சுருதப்ரகாசிகையின் மங்கள ச்லோகம்

வரதம் த்விரதாத்ரி சேகரம்
கமலாயா தயிதம் தயாநிதிம்
ஸகலார்த்திஜநார்த்தித ப்ரதம்
ப்ரணமாமி ப்ரணதார்த்தி ஹாரிணம்

—தாத்பர்ய தீபிகையின் மங்கள ச்லோகம்

தெரிசந கற்பகமான பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்
திருளாசை சிந்தித் திராதே —யருளாளன்
கச்சித் திருப்பதியா மத்தியூர்க் கண்ணன்ருள்
இச்சித் திருப்பதியா மென்று.

—நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி


———



ஸ்ரீ :

"தேவாதிராஜனும் வேதாதிராஜனும்"

ஸ்ரீ. உ. வே. வேளுக்குடி
K வரதாசாரியார் ஸ்வாமி.



[தேவாதிராஜன் காஞ்சீ தேவப்பெருமாள் ; வேதாதிராஜன் வேதாந்த தேசிகன் ; இவ்விருவரைப் பற்றிய ஓர் அனுபவம் இக்கட்டுரையாக அமைகிறது.]

சரிய : பதியான ஸர்வேச்வரன் சேதநோஜ்ஜீவநார்த்தமாகப்பரிக்ரஹித்த திவ்ய மங்களவிக்ரஹங்கள் ஐந்து வகை என்று சாஸ்த்ரம் கூறுகிறது- ''இதம் பூர்ணம், அத: பூர்ணம், பூர்ணத் பூர்ணம் உத்ரிச்யதே, பூர்ணஸ்ய பூர்ணம் ஆதாய, பூர்ணமேவ அவசிஷ்யதே-ஸர்வம் பூர்ணம் ஸஹோம்'',''அம்பஸ்யபாரே புவநஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந். சுக்ரேண ஜ்யோதீம்ஷி ஸமநுப்ர விஷ்ட: ப்ரஜாபதி: சரதி கர்பே அந்த:''என்று ஸம்ஸ்க்ருத வேதாந்தமும், ''விண்மீதி ருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய் மண் மீதுழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்'' என்று த்ராவிடவேதாந்தமும். ''ஏவம் பஞ்சப்ரகாரோ ஹரி ஆத்மநாம் பததாமத: பூர்வஸ்மாதபி பூர்வஸ்மாத் ஜ்யாயாந் சைவ உத்தரோத்தர:'' என்றுஸ்ரீபாஞ்சராத்ரமும்இவ்விஷயத்தைமுதலிக்கின்றன. பகவானுடைய பஞ்சப்ர காரங்களாவன- பரரூபம், வ்யூஹரூபம், ஹார்தரூபம், விபவரூபம், அர்ச்சாரூபம் என்பவை. இவற்றுள் அர்ச்சாவதாரமான பகவானே ஸர்வதா ஸர்வோபஜீவ்ய மானவன் என்பதுவும் சாஸ்த்ரஸம்ப்ரதாய ஸித்தமே. ''ஆவரண ஜலம் போலே பரத்வம், பூகதஜலம் போலே அந்தர்யாமித்வம், பாற்கடல் போலே வ்யூஹம், பெருக்காறு போலே விபவங்கள், அதிலேதேங்கின மடுக்கள் போலே அர்ச்சா வதாரம்'' என்று இதுதன்னை ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர் ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தில் அறுதியிட்டருளினர். திருமங்கையாழ்வாரும் ''உலக மேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினர் உய்யலல்லால் மற்றையார் உய்யலாமே?'' என்று அர்ச்சா ப்ராவண்யமே ஸர்வாத்ம க்ஷேமங்கரம் என்று வேதாந்த ஸாரார்த்த நிஷ்கர்ஷம் செய்தருளினர்.

கோயில் திருமலை பெருமாள் கோயில் தொடக்கமான திவ்ய தேசங்கள் அவன் தானுகந்த ஊர்களாயினும் பெருமாள் கோயிலுக்குத் தனிச் சிறப்புண்டு-திருவரங்கம் பெரிய கோயிலுக்கு ஏற்றம் ஆழ்வார்கள் பதின்மரும் மங்களாசாஸநம் செய்தமையாலாகும்-திருவேங்கடமான திருமலைக்கு ஏற்றம்மண்ணோர்க்கும் விண்ணோர்க்குமாகத் திருமலையப்பன் ஆங்கே உகந்து எழுந்தருளியிருப்பதாலாகும். ''இரட்டை ப்ரஜை பெற்ற மாதாவானவள் இருவர்க்கும் முலைகொடுக்கப்பாங்காகநடு வேகிடக்குமாபோலே, நித்ய ஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகம் கொடுக்கைக்காகத் திருமலையிலே நின்றருளிய நீர்மை'' என்று நம் பிள்ளை ஈட்டிலே இ.:துவ்யக்தம். பெருமாள் கோயிலுக்கு ஏற்றம் ஸுப்ரஸித்தம். 'நகரீணும்ச ஸர்வாஸாம் புரீ காஞ்சீ விசிஷ்யதே. கிரீணும் சாபி ஸர்வேஷாம் ச்ரேஷ்டோ ஹஸ்திகிரி: ஸ்ம்ருத:'', ''வேகவத்யுத்தரேதீரே புண்ய கோட்யாம் ஹரி: ஸ்வயம். வரத: ஸர்வ பூதாநாம் அத்யாபி பரித்ருச்யதே'' என்றும் புராண ப்ரஸித்தம்: ஆங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனே தேவாதிராஜன்-தேவராஜன் தேவாதிராஜன் ஸ்ரீவரதராஜன் அருளாழியம்மான் என்றும் அருளாளப் பெருமாள் என்றும் பேரருளாளன் என்றும் துதிக்கப்படுமவன், ''இமையோர் தலைவா'' என்றும் ''அயர்வறும் அமரர்கள் அதிபதி'' என்றும் ''வானவர் கண்ணன்'' என்றும், ''வரந்தரும் மாமணி வண்ணன்'' என்றும், ''பேரணிந்து உலகத்தவர் தொழுதேத்தும் பேரருளாளன்'' என்றும் ''வானவர்கோன்'' என்றும் ''திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சகம் கோயில் கொண்ட பேரருளாளன்'' என்றும் ''என்னை மனம் கவர்ந்த ஈசன் வானவர் தம்முன்னவன்'' என்றும் ''ஆழியான் அத்தியூரான்புள்ளூர்வான்'' என்றும் திவ்யஸூரிகளாலே கொண்டாடப்பட்டவன். திருமங்கையாழ்வாருக்கு நிதி காட்டிக் கொடுத்த பெருமாள் பேரருளாளப் பெருமாள். விந்த்யாடவியிலே வழிதிகைத்தலமருகின்ற இளையாழ்வாருக்கு மார்கதர்சியான பெருமாள் பேரருளாளப் பெருமாள். பரமாசார்யரான ஆளவந்தார் இளையாழ்வாரைக்கடாக்ஷித்து தர்சநப்ரவர்த்தகராக ஆக்கினவிடம் பேரருளாளன் ஸந்நிதியே. மஹாவித்வானான யஜ்ஞமூர்த்தியைத் திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி மண்டபத்தில் ஸ்வாமி ராமாநுசன் வாதப் போர் நடத்தி ஜயித்து அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஆக்கியது பேரருளாளன் காட்டிக்கொடுத்த விசேஷார்த்தங்களை கொண்டே என்னுமிதுவும் ''அருளாளப்பெருமாள்'' என்று நாமகரணம் கொண்டேயறியலாம்.

நம்மாழ்வாரவதாரமோ கலியன் அவதாரமோ என்று கொண்டாடப்படுகிறது ஸ்வாமி நம்பிள்ளை செப்பு நெறிதன்னை வள்ளல் வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலைகொண்டார். அதுவே ஈடு முப்பத்தாறாயிரம். அது தன்னை இவ்வுலகில் ப்ரசாரத்துக்கு அமைத்தவனே காஞ்சி தேவப்பெருமாள் என்பதுவும் குருபரம்பராப்ரபாவஸித்தம் ''அன்னபுகழ் முடும்பை அண்ணல் உலகாசிரியன் இன்னருளால் செய்தகலியாவையினும் உன்னில் திகழ்வசநபூடணத்தின்சீர்மை ஒன்றுக்கில்லை, புகழல இவ்வார்த்தை மெய்யிப்போது'' என்று கொண்டாடப்படும் ஸாங்காகில த்ரமிடஸம்ஸ்க்ருத ரூப வேத ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸ வாக்யஜாதமான ஸ்ரீவசந பூஷண திவ்ய சாஸ்த்ரத்தை அருளிச்செய்த ஸ்வாமி பிள்ளை

உலகாரியனே காஞ்சிதேவப்பெருமாள் என்றும் ப்ரஸித்தம். ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநாவதாரிகையில் இவ்விஷயத்தை திருநாராயணபுரம் ஜநந்யாசார்யரும் மணவாளமாமுநிகளும் நிரூபித்துள்ளார்கள். பிள்ளை உலகாரியன் திருநக்ஷத்திரம் திருவோணம். அத்தத்திலே திருவவதரித்த தேவாதிராஜன் திருவோணத்தையும் தன் அவதாரத்திரு நக்ஷத்திரமாகவே கொண்டு உத்ஸவம் கண்டருள்வது ஸகலலோக விதிதம்.

இப்படி அஸாதாரண வைபவம் பொருந்திய தேவாதிராஜனை மங்களாசாஸநம் செய்து அநுபவித்தவர்கள் பலபலர் - அவர்களிலே பாரம்யம் வேதாதிராஜகுரு ஸ்வாமி தேசிகனுக்கே என்பது ஸர்வ லோகஸாக்ஷிகம். பேரருளாளன் தேவாதிராஜன் என்று கொண்டாடப்படுமாபோலே நம் தேசிகனும் வேதாதிராஜகுரு கக் கொண்டாடப்படுகிறார். ''வேதாந்த தேசிகபதே விநிவேச்ய பாலம்'' என்று தயாசதகத்தில் ஸ்வாமியே கூறிக்கொள்கிறார். காஞ்சியிலேதிருவவதாரம் செய்த தேசிகனை அவர் வைபவம் பற்றிப் பலவாறாகப் புகழ்வர் பெரியோர். நம்மாழ்வாருடைய பெருமையை உற்று நோக்குங்கால் ''யுகவர்ண க்ரமாவதாரமோ வ்யாஸாதிவத் ஆவேசமோ முதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவரோ என்றும் சங்கிப்பர்கள்'' என்று பலபடிகளாக வர்ணித்தருளுகிறார் ஆசாயஹ்ருதயத்திலே அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் - ஸ்வாமி எம்பெருமானார் வைபவத்தை நோக்குங்கால் ''சேஷோவாஸைந்ய நாதோவா ஸ்ரீபதிர்வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய மங்களம்'' என்றும் படியாயிருக்கும். அவ்வோபாதி நம் தேசிகன் வைபவத்தை நோக்குங்கால் ''வேங்கடேசாவதாரோsயம் தத்கண்டாம் சோsதவா பவேத். யதீந்த்ராம் சோsதவா இத்யேவம் விதர்க்யாயாஸ்துமங்களம்'' என்றும் படியாயிருக்கும்: ''பாத்ரபதமாஸகத விஷ்ணு விமலர்க்ஷே வேங்கட மஹீத்ரபதி தீர்த்த திநபூதே ப்ராதுரபவத் ஜகதீதைத்யரிபுகண்டாஹ்வந்த கவிதார்க்கிம்ருகேந்த்ர குருமூர்த்தயா'' என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவ நக்ஷத்திரமாகிய திருவோணத்திலே திருவேங்கடமுடையான் மஹோத்ஸவம்கண்டருளும் புரட்டாசி மாதத்தில் காஞ்சியில் திருவவதாரம் செய்தவர் நம் ஸ்வாமி, 'காஞ்சீபுரீயஸ்ய ஹீஜநம பூமி: விஹாரபூ: வேங்கடபூதரேந்த்ர: வாஸஸ்த்தலீ ரங்கபுரீ தமீட்யம் ஸ்ரீவேங்கடேசம் குரும் ஆச்ரயாம:' என்கிறபடியே காஞ்சியில் அவதரித்து திருவேங்கட்த்தில் விஹரித்துத் திருவரங்கத்திலே தென்னரங்கன் கழல் சென்னி வைத்து நித்யவாஸமாகவெழுந்தருளியிருந்தவர் நம் தேசிகன். திருவேங்கடவனே கச்சியிலே அவதரித்து திருவரங்கத்திலே பிரபு பெற்றார்- ''வேதாந்த தேசிகபதம் யஸ்மை ஸ்ரீரங்கசாயிநா. தத்தம் தஸ்மை நமஸ்குர்ம: வேங்கடேச விபச்சிதே'' என்பர் நம் பெரியோர். பொன்னை மாமணியை அணியார்ந்ததோர் மின்னை

வேங்கடத்துச்சியிற் கண்டு போய் என்னையாளுடையீசனை யெம்பிரான்தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே'' என்று இவராவிர்பாவம் கலியும் கெடும் போலே ஸுசிதம் என்பர் ஸஹ்ருதய ரஸிகர்கள். ஏதாத்ருச வைபவசாலியான நம் தேசிகன் திருக்கச்சி தேவாதிராஜனை துதித்துள்ள ஸ்ரீ வரதராஜபஞ்சாசத்தை சற்றே ஈண்டு அநுபவிப்போம்.

தேவாதிராஜனை பேரருளாளனை வேதாதிராஜனை வேதாந்தாசாரியர் பரமாத்புதமாக அநுபவித்திருப்பதனை நாமும் சற்று அநுபவிப்போம்.

ஜன்ம பூமியில் ஈடுபாடு ஸார்வஜநீநமன்றே! கூரத்திலே திருவவதரித்த ஆழ்வான் தேவப்பெருமாளிடத்தில் ஈடுபட்டு ஸ்ரீவாதராஜஸ்தவம் அருளிச் செய்தாரன்றே - அந்தச்சாயையிலே தேசிகனும் ஸ்ரீவரதராஜபஞ்சாசத் அருளிச் செய்துள்ளார் - இந்த ஸ்த்தோத்ரம் ஸகல வேதாந்த ஸாரார்த்த கர்பிதம். தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்பூண்ட வன்பாளன் இராமாநுசன். இராமாநுசன் ஈடுபட்ட இராமனை ஸ்ரீ வால்மீகி பகவானும் ''வவந்தே வரதம் வந்தீ'' என்று கூறினர். உஷ: காலத்தில் சுமந்திரன் அந்த: புரத்தில் ஸ்ரீராமனை ஸேவித்தான் என்னுமிடத்தில் ஸ்ரீராமனை வரதசப்தத்தாலே வருணித்தது அத்திருநாமத்திலே அவருக்குண்டான ஈடுபாட்டைக்காட்டும். ஸ்ரீராமனைக் கம்பர் கண்ணனுகவே வர்ணிக்கிறார். ''வீதிவாய்ச் செல்கின்றன்போல் விழித்திமையாது நின்ற மாதரார் கண்களுடே செல்வான்.....தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே யோதிய பெயர்க்குத்தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்'' என்று க்ருஷ்ண நாமத்தில் கம்பருக்கு ஈடுபாடு-ஸ்ரீவால்மீகி பகவானுக்கு வரதநாமத்தில் உண்டான ஈடுபாடு இங்கே வ்யக்தம்.

''வரதனும் தேசிகனும்'' என்ற விஷயத்தை இனி அநுபவிப்போம்.

பரமாசார்யரான ஆளவந்தார் தொடக்கமான பூர்வாசார்யர்களெல்லோரும் தாங்களருளிச் செய்த ஸ்தோத்ரங்களால் வேதாந்த உபப்ருஹ்மணம் செய்தருளினர்களிறே. தத்வ ஹித புருஷார்த்தங்களிறே வேதாந்தார்த்தங்கள்-அவற்றை விசதமாகவும் விஸ்தரமாகவும் வர்ணிப்பவை பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள். ஸ்வாமி தேசிகனும் வரதராஜபஞ்சாசத்தில் தத்வ ஹித புருஷார்த்தங்களை உள்ளபடி நிரூபித்து, வேதாந்ததேசிக பிருதத்தை யந்வர்த்தமாக்குகிறார்-இந்த ஸ்துதியில் ஆதிமச்லோகம் ''த்விரதசிகரி ஸீம்நா'' என்பது. ஸ்வாமி திருக்கோவலூரில் எழுந்தருளியிருந்து, தேஹளீசனை மங்களா சாஸநம் செய்தருளி, அங்கு நின்றும் காஞ்சிக்கு எழுந்தருளுகிறார்-வருகிற வழியில் தேவாதிராஜனுடைய கல்யாண குண கீர்த்தநம் செய்து எழுந்தருளுகிறார்-பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்த

நாம்ருதமிறே-தானுகந்த ஊரெல்லாம் தன் தாள்பாடி என்றக் கடவதிறே. ''கோSபி காருண்ய ராசி: ந: குசலம் கலயது:'' என்று பரோக்ஷநிர்தேசமே இப்படிக் கூறக் காரணமாகிறது. இரண்டாவது ச்லோகம் தொடங்கி அபரோக்ஷநிர்தேசம் உளது. இரண்டாவது ச்லோகம் தொடங்கி ஆறுவது ச்லோகம் முடிய ஐந்து ச்லோகங்கள் இந்த ஸ்தோத்ரத்துக்கு உபோத்காதம். மயர்வறமதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களும் தேவாதிராஜனை துதிக்கமாட்டாமல் ''யதோவாசோ நிவர்த்தந்தே'' என்றிருக்க, தாம்துதிக்கவிழிந்த இந்த ஸாஹஸத்தை க்ஷமித்தருளவேணும், அடியேனுடைய குற்றங்களைக் காணக்கண்ணிட்டிருக்கவேணும். துதிக்கைக்கீடான ஜ்ஞாந சக்திகளைத் தந்தருளவேணும். அடியேன் அகிஞ்சநன். அடியேனுக்கு சக்யமொன்றுமில்லை, தேவரீருக்கு அசக்ய மொன்றுமில்லை. தேவரீரே இந்த ஸ்தோத்ரத்தை நடத்திக்தரவேணும்-அடியேனுடைய இந்த ஜல்பநத்தை சுகபாஷணமாகக் கொண்டு கடாக்ஷித்தருளவேணும் என முதற்கண் ப்ரார்த்திக்கிறார் தேசிகன். ஏழாவது ச்லோகம் தொடக்கமாக ஸ்தோத்ரம்-ஸ்துதி முகேந தத்வ ஹித புருஷார்த்தங்களை வெளியிடுகிறார் என்றபடி. ''யம்சக்ஷுஷாம் அவிஷயம் ஹயமேதயஜ்வாத்ராகீயஸா ஸுசரிதேந ததர்ச வேதா: தம்த்வாம் கரீச கருணா பரிணமதஸ்தே பூதாநி ஹந்த நிகிலாநி நிசாமயந்தி'' என்ற ஏழாவது ச்லோகத்தில் தேவாதிராஜனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை வர்ணிக்கிறார்-ஸகல மநுஜ நயநவிஷயதாம் கதனிறேயவன்-ஏதோ வொருகால விசேஷத்தில் பிரமன் ஹயமேதம் செய்தான்-தத்புண்ய பரிபாகமாக பகவான் ஸேவைஸாதித்தான். ஆயினும் இன்றும் என்றும் ஸகலதேசத்தாரும் ஸேவிக்கும்படி அத்திகிரியாளுக எழுந்தருளியிருப்பது கேவல கருணாதிரேகத்தாலேயன்றே-அருளாளனிறே.

இந்த ப்ரபந்தத்தில் திவ்ய விக்ரஹாநுபவமிறே நடப்பது-உபாயோபேயத்வே ததீஹ தவ தத்வம் என்கிறபடியே உபாயோபேயத்வங்கள் பகவதஸாதாரணதர்மங்கள்-உபபத்தே:ச என்றருளிச் செய்தார் சாரீரகத்திலே ஸ்ரீவேதவ்யாஸர் ''ப்ராப்யஸ்ய பரம புருஷஸ்ய ஸ்வப்ராப்தௌ ஸ்வஸ்யைவ உபாயத்வோபபத்தே: ''நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: நமேதயா நபஹுநா ச்ருதேந யமேவ ஏஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்'' இத்யநந்யோபாயத்வ ச்ரவணத்'' என்று ஸ்ரீபாஷ்யகாரரும் அருளிச்செய்தார். நாராயண சப்தார்த்தம் ஸ்வாமித்வம், வாத்ஸல்யம், உபாயத்வம், உபேயத்வம்-இந்நான்கு அர்த்தங்களையும் நாராயணசப்தார்த்தமாக நம்மாழ்வார் கொண்ட பெண்டிர் பதிகத்திலே அருளிச் செய்தார். தொண்டரோமாய் (9-1-1) என்று ஸ்வாமித்வத்தையும், ''ஏழ்மரமுமெய்த'' (9-1-2) என்றும் ''வண்புகழே'' (9-1-6) என்றும் வாத்ஸல்யத்தையும், ''கண்ணலல்லாலில்லை கண்டீர் சரணே (9-1-9) என்று உபாயத்வத்தையும் ''குற்றமில்சீர் கற்று வைகல் வாழ்தல் கண்டீர்

குணமே" (9-1-7) என்று உபேயத்வத்தையும் அருளிச் செய்துள்ளார். உபாயத்வ உபேயத்வங்களை திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனான அவனுக்குக் கூறுவது ஸம்ப்ரதாயஸித்தம் - நம்மாழ்வார் திருவாய்மொழி முதற்பத்தில் அவனுடைய உபாயத்வத்தையும் இரண்டாம்பத்தால் அவனுடைய உபேயத்வத்தையும் மூன்றும்பத்தால் திவ்ய விக்ரஹயோகத்தையும் அருளிச்செய்கிறார் - இதுதன்னை தேசிகன்-"ஆத்யே பச்யந்நுபாயம் ப்ரபுமிஹ பரமப்ராப்யபூதம் த்விதீயே கல்யாணைதார மூர்த்தே: த்விதயமி தமிதி ப்ரேக்ஷமாண: த்ருதீயே" என்று த்ரமிடோபநிஷத்ஸாரத்தில் அருளிச்செய்துள்ளார். பகவத்திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு அத்தனை ஏற்றமிறே ஸம்ப்ரதாய ஸித்தம். திவ்யாத்ம ஸ்வரூபத்திலும் குணதிகளிலும் தெளிவில்லாதார்க்கும் சுத்தஸத்வத்ரவ்ய மயமாய் ஸ்வவிஷய ஜ்ஞாநத்தாலே ஜ்ஞாநஸங்கோசத்துக்கு நிவர்த்தகமாய் பரத்வஸௌலப்ய வ்யஞ்ஜகமாயுமிருப்பது திவ்ய மங்கள விக்ரஹமேயாகும். இப்ராதான்யத்தைப்பற்றி கத்யத்தில் குணங்களுக்கு முன்னே திவ்ய மங்கள விக்ரஹத்தை யருளிச் செய்தார், திவ்யாத்மஸ்வரூபத்தில் தெளிவுடையரா யிருக்கச் செய்தேயும் "மூர்த்தம் ப்ரஹ்ம ததோSபிதத் ப்ரியதரம் ரூபம் யதத் யத்புதம்" என்னும்படி ஈச்வரன் தனக்கும் போக்யதமமான நித்ய விக்ரஹாநுபவத் தில் ஊற்றத்தாலே திருமங்கையாழ்வார் தம்மை ஈச்வரவிஷயத்தில் தேஹாத்மவாதிகளாக அருளிச் செய்வர்.

சித்தாலம்பந ஸௌகர்ய க்ருபோத்தம்பகதாதிபி :
உபாயத்வமிஹ ஸ்வாமி பாதயோ ரநுஸம்ஹிதம்.

தாஸபூதன் ஔசித்யாதிசயத்தாலும் "அநதிக்ரமணீயம் ஹி சரண க்ரஹணம்" என்கிறபடியே க்ருபோத்தம்பகத்வாதிசயத்தாலும் "தவாம் ருதஸ்யந்திநி" இத்யாதிகளிற்படியே போக்யத்வாதிசயத்தாலும் திருவடிகளை அவலம்பிக்கிறான்-திருவடிகளைச் சொன்னது திருமேனிக்கு உபலக்ஷணம். இவ்வர்த்தம் "ஸர்வதா சரணத்வந்த்வம்" "த்வத்பாத கமலாதந்யத்" "மமதே பாதயோ:ஸ்த்திதம்" "லோக விக்ராந்த சரணௌ சரணம் தேSவ்ராஜம் விபோ" "ஸ ப்ராது: சரணௌ காடம்" "தஸ்ய தாம்ரதலௌ தாத சரணௌ" "சரணௌ சரணம் யாத:" ப்ரபந்நாகௌக வித்வம்ஸி சரணௌ சரணம் கத:" "இத்யாதி களிலும் ப்ரசித்தம். இப்படிப்பட்ட திவ்ய விக்ரஹமிறே தேவாதிராஜன் திருமேனி. இதினுடைய அநுபவத்திலே யிழிகிறார் நம் தேசிகன். கலியனுரை குடிகொண்ட கருத்துடை யோனிறே நம் ஸ்வாமி. இந்த ஸ்தோத்ராரம்பத்திற்போலே முடிவிலும் "வரத தவ விலோகயந்தி தந்யா: மரகத பூதர மாத்ருகாயமாணம் வ்யபகத பரிகர்மவாரவாணம் ம்ருகமத பங்க விசேஷ நீலமங்கம்" என்னும் "அநிப்ருத பரிரம்பை: ஆஹிதாமிந்திராயா: கநகவலயமுத்ராம் கண்டபாகே ததாந. பணிபதி சயநீயாத் உத்தித: த்வம் ப்ரபாதே வரத ஸததம அந்தர் மாநஸம

ஸந்நிதேயா: " என்றும், "நிரந்தரம் நிர்விசித: த்வதீயம் அஸ்ப்ருஷ்ட சிந்தாபதம் ஆபிரூப்யம் ஸத்யம் சபே வாரணசைலநாத வைகுண்ட வாஸேSபி மமாபிலாஷ:" "காSபி லக்ஷ்மீ கடாக்ஷை: பூய: ச்யாமா புவநஜநநீ தேவதா ஸந்நிதத்தாம்" என்றும் திவ்ய மங்கள விக்ரஹாநுபவத்தோடேயே தலைக்கட்டுகிறார், தொண்டரடிப் பொடி ஆழ்வார் "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றருளிச் செய்தாப் போலவும், திருப்பாணழ்வார் "அமுதினைக் கண்ட கண்கள் மற்றென்றினைக் காணுவே" என்றுப்போலேயும், நம் ஸ்வாமியும் தம்முடைய வைராக்யாதிரேகத்தைவெளியிட்டபடி.செந்தமிழ்த்தூப்புல் திருவேங்கடவனிறே. "ஸத்ய: த்யஜந்தி வரத த்வயி பத்தபாவா: பைதாமஹாதிஷுபதேஷ்வபி பாவ பந்தம் கஸ்மை ஸ்வதேத ஸுகஸஞ்சரணைத்ஸுகாய காராக்ருஹே கநக ச்ருங்கலயாSபிபந்த:" என்று ஐச்வர்யாதிவைராக்யத்தைக் கூறியது வியப்பன்று. பரமபத ப்ராப்தியிலும் வைராக்யத்தைக்கூறியதன்றே வியப்பு, "த்வம்சேத் ப்ரஸீதஸி தவாஸ்மி ஸமீபத: சேத் த்வய்யஸ்தி பக்திரநகா கரிசைலநாத ஸம்ஸ்ருஜ்யதே யதிச தாஸஜந: த்வதீய: ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க ஏவ" என்று கச்சியருளாளனை யநுபவிக்குமிடமும் பேரருளாளன் பெருமை பேசும் அடியாருடன் கூடுமிடமுமே வைகுந்தம் என்றுமிறே யறு தியிட்டார் நம் தேசிகன். நம்புவார் பதி வைகுந்தமிறே.

தேவாதிராஜனுடைய வாத்ஸல்யத்தை வர்ணிக்கும் ச்லோகமிது: "ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே ச்லாக்யேச திவ்யஸதநே தமஸ: பரஸ்தாத்-அந்த. களேபரம் இதம் ஸுஷிரம் ஸுஸூக்ஷ்மம் ஜாதம் கரீச கதம் ஆதரணீஸ்பதம் தே" என்று. "அங்குஷ்டமாத்ர: புருஷ: மத்ய ஆத்மநிதிஷ்டதி ஈசாநோபூதபவ்யஸ்ய நததோ விஜு குப்ஸதே" என்று கடோபநிஷத் வாக்யம். "நததோ விஜு குப்ஸதே"—தத: பூதபவ்யேசாநத்வாதேவ வாத்ஸல்யாதிசயாத் தேஹ கதாநபி தோஷாந் போக்ய தயா பச்யதீத்யர்த்த:" என்று உபநிஷத் பாஷ்யம். "அற்றமுரைக்கில் அடைந்தவர்பால் அம்புயைகோன் குற்றமுணர்ந்து இகழும் கொள்கையதே—எற்றே தன் கன்றின் உடம்பின் வழுவன்றே காதலிப்பது அன்றதனை ஈன்றுகந்த ஆ" என்றிறே அருளாளப் பெருமாளெம் பெருமானுர் அருளிச் செய்தார். பெரியாழ்வாரும், "தனிக்கடலே தனிச்சுடரே தனியுலகே என்னென்று உனக்கிடமாயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே", என்றருளிச் செய்தார். தனிக்கடல்: பிராட்டி அவதரித்தவிடமான திருப்பாற்கடல்; தனிச்சுடர்: பெருமாள் அவதரித்த குலத்துக்கு குரு; தனியுலகு: பெருமானும் பிராட்டியும் கைகோர்த்து ஸஞ்சரிப்பதற்கநுகுணமான திருநாடு - இத்தனையும் காற்கடைக்கொண்டு இந்த ஆபாஸமான சரீரத்தை விரும்பிரூயே என்று பெரியாழ்வார் திருமலையப்பனை திருவேங்கடவனை வினவுகிறார். நம் தேசிகனும்

திருமலையப்பனை தேவப்பெருமாளை வினவுகிறார். "நததோ விஜு குப்ஸதே" என்று சுருதி வெறுப்பின்மையைக் கூறிற்று. நம் தேசிகன் "ஆதரணுஸ்பதம்" என்று, வெறுப்பில்லாமையோடு விருப்பமுமுண்டு என்றருளிச் செய்தார். இதிறே வாத்ஸல்யம்—இதிறே நிகரில் புகழ்—இதிறே வண்புகழ் (9-1-6). எம்பெருமானுர் தரிசனத்தில் ப்ரதிதந்த்ரார்த்தங்கள் பல-அவற்றிலே "வசஸாம் வாச்யம் உத்தமம்" என்கிறபடியே ஸர்வசப்த வாச்யத்வம் என்பது ஒன்று. நம்மாழ்வார் "புகழுநல்லொருவன்" என்ற பதிகத்தில் விபூதிவாசகமான சப்தங்கள் விபூதிமானை சொல்லி யல்லது நில்லாது என்றருளிச் செய்தார். "புகழொன்றுமால் எப்பொருள்களும் தானுய் நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க, மகிழ்மாறன் எங்கு மடிமை செய்ய இச்சித்து வாசிகமாய் அங்கடிமை செய்தான் மொய்ம்பால்" என்று திருவாய்மொழி நூற்றந்தாதி கூறுகிறது. "ஸர்வம் ஜகத் ஸமவலோக்ய விபோ: சரீரம் தத்வாசிந: ச ஸகலாநபி சப்தராசீந்" என்று த்ரமிடோபஷத் ஸங்கதி கூறுகிறது. "நிகல தநுதயா ஸம்ப்ரதுஷ்டாவதுஷ்ட:" என்று ரத்னவளி கூறுகிறது.

சாரீரகத்தில் "சராசரவ்ய பாச்ரய: துஸ்யாத் தத்வ்யபதேச: பாக்த: தத்பாவ பாவித்வாத்" (2-3-17) என்று ஸ்ரீ வேத வ்யாஸர் அருளிச்செய்தார். நம் தேசிகனும் தேவாதிராஜனுடைய ஸர்வசப்தவாச்யத்வத்தை "ப்ரவ்மேதி சங்கர இதி" என்ற ச்லோகத்திலும் "ஸாமான்ய புத்தி ஜநகா: ச ஸதாதிசப்தா:" என்ற ச்லோகத்திலும் அநுபவித்தருளுகிறார். வேதாந்திகள் ஜகத் காரண வஸ்து விசாரம் செய்கிறார்கள். மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவிறே. சிலர் அப்ரவ்மாத்மக ப்ரக்ருதி ஜகத் காரணம் என்கிறார்கள். சிலர் பரமாணுக்கள் ஜகத் காரணம் என்கிறார்கள். ஏக காரணவாதம், அநேக காரணவாதம், அசேதந காரணவாதம், சேதந காரணவாதம், அஸத் காரணவாதம், ஸத்காரண வாதம் என்றுப்போலே வாதங்கள் பல பல. வேதாந்தங்கள் "ப்ரவ்மம் ஜிஜ்ஞாஸ்யம் காரணம் உபாயம் உபேயம்" என்றறுதியிடுகிறது. ஜகத் காரணம் ப்ரவ்மம் என்று கூறினுற்போதாது. அது சேதநாசேதந விலக்ஷணம் என்று கூறவேண்டும். அவ்வளவும் போதாது. அது வேறுபட்டது மட்டுமன்று - வீறுடையதும் கூட என்று கூறவேண்டும். "வீற்றிருந்து" என்றருளிச் செய்தார் நம்மாழ்வார். அவனுக்குள்ள வீறுடைமை பரம சேஷித்வம், பரம காரணத்வம், பரமோபாயத்வம், பரமோபேயத்வம் முதலியனவையாகும்.

அஜ கஜங்களுக்கு வைலக்ஷணண்யம் உண்டு. கடபடாதிகளுக்கு வைலக்ஷண்யம் உண்டு. அவ்வோபாதி ஜகத் விலக்ஷணம் ப்ரவ்மம் என்பதன்று-

வைலக்ஷண்யம் வேறுபாடு—இதிற்காட்டிலும் வீறு ஏற்றம் ப்ரவ்மத்துக்குள்ளது அவச்யம் கூறப்பட வேண்டும். அசேதந வைலக்ஷண்யத்தை ஈக்ஷித்ருத்வாதிகரணத் தாலும், சித்வைலக்ஷண்யத்தை ஆனந்தமயாதிகரணத்தாலும், சித்விசேஷ வைலக்ஷண்யத்தை அந்தராதிகரணத்தாலும் ஸ்தாபித்தார் வேதவ்யாஸர். நம்மாழ்வார் இவையித்தனையையும் "மனனகம்" என்ற பாசுரத்தாலே ஸங்க்ரஹித் தருளினுர். த்ரிவித சேதநாசேதந விலக்ஷணனை பகவான் ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணனிறே. ஜகதேக காரண பூதனிறேயவன். சிதசித் த்ரய த்ரிவித காரணபூதனுமவனே. "வேர்முதலாய் வித்தாய்" என்றும், "முதற்தனி வித்தே" என்றும் ஆழ்வாரும், "ப்ருக்ருதி: ச" என்றும், "ஸாக்ஷாத் ச உபயாம் நாநாத்" என்றும், "யோநி . சஹிகீயதே" என்றும் வ்யாசரும் அருளிச் செய்தார். அவன் அமரர்களதிபதியிறே. அதிக : பதி : அதிபதி : என்றிறே வ்யத்பத்தி. பதி சப்தத்தாலே நிமித்தத்வத்தைக் கூறி ஆதிக்யத்தை அதி சப்தத்தாலே கூறினுறிறே. ஆதிக்யமாவது உபதாநத்வ ரூபமாகும். நிமித்த காரணம் என்னுமர்த்தம் அநுமாநத்தாலும் ஸாதிக்கப்படலாம். அவனுடைய ஜகதுபாதாநத்வம் சாஸ்த்ரைக ஸமதிகம்யம். தர்க பாதத்தில் வ்யாஸர் மதாந்தரஸ்தரின் தர்கஸித்தங்களான அர்த்தங்களையே கண்டிக்கிறார்.

அபிந்ந நிமித்தோபாதாநம் ப்ரவ்ம என்றிறே பரமவேதாந்திகள் மதம், வேதாந்தங்கள் ஜகத் காரண வஸ்துவை ஸத்ப்ரவ்ம ஆத்மாதி சப்தங்களாலும், ஹிரண்ய கர்ப சிவசம்பு இந்த்ராதி சப்தங்களாலும் கூறுகின்றன. இவை யித்தனையும் ஸ்ரீமந் நாராயணனையே குறிக்குமவை என்பர் நம் பெரியோர். ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தை யவலம்பித்தும், யோக வ்யுத்பத்தியைக் கொண்டும், அபர்யவஸாந வ்ருத்தியைக் கொண்டும் இவற்றை நிர்வஹிக்கிறார் கள் நம் பெரியோர். இவை ஆகாசாதிகரண இந்த்ர ப்ராணாதிகரண ந்யாஸ ஸித்தங்கள். இவை காசக்ருத்ஸ்ந ஜைமிநி பரப்ருதி மஹர்ஷி நிர்ணீதங்கள். "பரவித்யாஸு ஜீவோக்தி. நிருக்யாதே: பராச்ரயா. தல்லிங்காநந்யதா ஸித்தெள தத் விசிஷ்டா வலம்பிநீ" என்றருளிச் செய்தார் நம் தேசிகன். "யந்மூல காரணம் அபுத்யத ஸ்ருஷ்டிவாக்யை: ப்ரவ்மேதிவா ஸதிதிவா" என்றும். "ஸத் ப்ரவ்மாத்மபதை: த்ரயீசிரஸி" என்றும் கூரத்தாழ்வான் அநுபவித்த க்ரமத்திலே தேசிகனும் அருளிச் செய்கிறார் இந்த ச்லோகங்களிலே. ஸதாதி சப்தங்கள் ஸாமாந்ய புத்தி ஜநகங்கள்-சிவாதி பதங்கள் தத்வாந்த ப்ரம ஜநகங்கள்-ஸதாதி சப்தங்களும் சிவாதி சப்தங்களும் நாராயணைகாந்தங்கள் என்பர் நம் பெரியோர். எப்பதத்தாலும் நாராயணனைக் கூறலாம். நாராயண பதத்தாலே மற்ற யாரையும் கூறமுடியாது என்பதே மர்மம். நாராயண பதம் ஸாமாந்ய பதமன்று. இப்பதத்தை தத்வாந்தர வாசகமாக்க வ்யாகரணம்

கைகொடுக்காது.பத சக்தியுமில்லை-'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந: நேமே த்யாவா ப்ருதிவீ' என்று மஹோபநிஷத் ஐயந்திரிபுறக் கூறி விட்டது. ப்ரஹ்ம சிவாதிகளுக்கு நாராயண ஸாம்யம் இல்லை. த்யாவா ப்ருதிவீ ஸாம்யம் உண்டு என்று ச்ருதி அழகாகக் கூறுகிறது. ஆழ்வாரும் "நீராய் நிலனுய்" என்று கூறி "சிவனுய் அயனுனுய்" என்றருளிச் செய்ததும் இந்த தாத்பர்யத்தாலே யன்றே—ஸர்வ ஜகத் காரணமும் ஸர்வ சப்த வாச்யனும் தேவாதிராஜனே என்றருளிச் செய்தார் தேசிகன். "ஸர்வ வசஸாம் அவஸாந ஸீமாம் த்வாம் ஹஸ்தீச" என்ற பரம கம்பீரமான திருவாக்கை ஸேவித்தவர் களுக்கு இது வ்யக்தம். அவனே உபாயபூதன் என்பதனை "த்வத் பக்திபோதம்" என்ற ச்லோகத்திலே கூறி, அவனுடைய கடாக்ஷத்தை "அச்ராந்த" ச்லோகத் தாலே ப்ரார்த்தித்து, அவனுடைய ஸ்வாபாவிக தயா விசேஷத்தை "அந்த: ப்ரவிச்ய" ச்லோகத்திலே கூறி, ரக்ஷாபரம் அவனுடையது என்பதனை "அஜ்ஞாத" ச்லோகத்திலே கூறி, தன்னை ரக்ஷிக்காது போனால் "சரணுகத ஸம்ரக்ஷகன்" என்ற பிருதம் என்னுவது என்பதனை "பூயோऽபி" ச்லோகத்திலே கூறி, கஜேந்திர வாதனுன தேவரீர் மநுஷ்யன், ம்ருகம் என்ற வாசி பாராமல் அடியேனையும் ரக்ஷிக்க வேண்டும் என்பதனை "ஸ த்வம் ஸ ஏவ" என்ற ச்லோகத்திலே கூறி பகவத் கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்னும், அது ஸ்வாபாகவிகம் என்னும் அர்த்தத்தை "முக்த:" என்ற ச்லோகத்திலே கூறி விசிஷ்டாத்வைத ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரானுர் நம் வேதாந்த தேசிகன். ப்ரபாதஸமயத்தில் தேவப் பெருமாளை ஸேவிக்கும் பாக்யத்தை நித்யாநுபாவ்யமாக ப்ரார்த்தித்தார் நம் தேசிகன். ஒண்டொடியாள் திருமகளிறே பெருந்தேவி நாச்சியார். அவள் சங்குதங்கு முன்கை நங்கையிறே. அவள் கநகவலயங்கள் உறுத்தி தேவப் பெருமாள் திருக்கழுத்தினிலே தழும்பு அமைந்துள்ளது. "கநக வலயமுத்ராம் கண்டபாகே ததாந:" என்று வரதராஜ பஞ்சாசத்திலும், "பத்மாலயா வலய தத்த ஸுஜாதரேகே" என்று தேவநாயக பஞ்சாசத்திலும் நம் தேசிகன் அருளிச் செய்தார். "முற்றுமுண்ட கண்டம்" என்ற ஆழ்வார் திருவாக்கிற்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனுரும் "நாச்சியார் ஸாபரணமான தங்கள் கைகளாலே அணைக்கையாலே அவ்வாபரணங்களழுத்த அவற்றாலே முத்ரிதமான கண்டம்" என்று வ்யாக்யானம் இட்டருளினார்.


இப்படி வேதாந்த தேசிகன் பலபல வேதாந்தார்த்தங்களை பற்பல ஸ்தோத்ரங்களிலே விசதீகரணம் செய்தருளியிருந்தாலும் தேவதா ஸார்வபௌமனுன தேவாதிராஜனைப் பற்றின இவ்வரதராஜ பஞ்சாசத் அநிதரஸாதாரண வைபவ விசிஷ்டம். நம் தேவாதிராஜனே பரதத்வம். நம்

வேதாந்த தேசிகன் பரமப்ரகுமாதா. செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றுமே என்று அவர் பரமப்ரமாணமாகக் கொண்ட அருளிச் செயலே பரமப்ரமாணம்.

ஆழ்வார்கள் வாழி—அருளிச் செயல்வாழி—குரவர்தாம் வாழி என்று நாம் நிச்சலும் பல்லாண்டு பாடுகிறும்.

தேவாதிராஜன் ஸந்நிதியில் வேதாதிராஜன் அறுதியிட்ட ப்ராமாண்யாதி ரேகம் கொண்ட அருளிச் செயல் கோஷ்டியை யவிச்சிந்நமாக நடத்திவரும் கோயில் பெருமாள் அருளிச் செயல் கோஷ்டி வாழ்க! வாழ்க! வாழ்க!

பூதம் பேய் பொய்கை மாறன் மழிசையர்கோன்.....தொண்டர் துகள் பாணன் கோதை குல முனிவன் கூறிய நூல் ஓதி வீதி வாழியென வரும் திரளை வாழ்த்துவார் தம் மலரடி என் சென்னிக்கு மலர்ந்த பூவே என்று கூறியமைகிறேன்.



ப்ரமாணம் ச ப்ரமேயம் ச ப்ரமாதார: ச ஸாத்விகா: !
ஜயந்து கூபிதாரிஷ்டம் ஸஹ ஸர்வத்ர ஸர்வதா.
ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

With best compliments from :



MANICKAM & CO.,

SILK SAREES SPECIALIST

56-B, METTU STREET,

KANCHIPURAM - 631501

With best compliments from




PHONE: 2771


G. GOPALAKRISHNAN

FERTILIZER DEALER

96, KAMARAJ STREET, KANCHIPURAM-1.



மாற்றுற செம்பொன் மணவாளராயுனிகள்




முக்குறும்பாங் குடிலைக் கடத்தும் நம் கூரத்தாழ்வாள்

கூரத்தாழ்வாள்

With best compliments from

T. E. VASU, Kancheepuram

ஸ்ரீ :



தேவப்பெருமாளும் மணவாள மாமுனிகளும்

ஸ்ரீ.உ.வே.யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி



1- குடையும் கொடையும்

ஒய்யார நடை என்ற சொல்லைக் கேட்டவுடன் எல்லோருக்கும் ஸ்ரீரங்கத்தின் நினைவுதான் வரும் பகவானுக்கு 'சதுர்கதிः' என்று திருநாமம், 'நால்வகை நடையழகு கொண்டவன்' என்று பொருள். ஸிம்ஹம், புலி, யானை, வ்ருஷபம் (காளை) போன்று நடக்க வல்லவன். இந்நாளில் நடையழகை நம்பெருமாளிடம் காணலாம் என்று ஆசாரியர்கள் எழுதி வைத்துள்ளார்கள். நாமும் ஸேவித்து வருகிறோம். இந்த நடை யழகை ஒய்யார நடை என்கிறோம்.

ஸ்ரீ தேவப்பெருமாளிடம் குடையழகும் கொடையழகும் உண்டு. தேவப்பெருமாளின் திருவீதிப் புறப்பாடு விலக்ஷணமானது. பெரிய குடைகளோடு நடைபெறும் வாஹனப் புறப்பாட்டினை வேறு எங்கும் ஸேவிக்க முடியாது.

தன்னை வந்து அடைபவர்களுக்கு எல்லாப் பலன்களையும் கொடுக்க வேண்டும் என்று பகவான் பரமபதத்தில் காத்திருக்கிறான். ஆனால் யாரும் அங்கு செல்வதில்லை. கொடுக்கும் பலன்களை ஒருவர் வாங்கிக் கொண்டால்தானே, ஔதார்யம் பிரகாசிக்கும். கொடுப்பவன் மட்டும் இருந்து பயனில்லை என்பது எம்பெருமானின் திருவுள்ளம். அதனால் பிரம்மாவின் யாக குண்டத்தில் தோன்றி ஹஸ்திகிரியின் சிகரத்தில் வந்து நிற் கிறான். "யாராவது வருகிறார்களா" என்று வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறான். "ஒருவர் வந்தாலும் எல்லாப் பலன்களையும் அவனுக்கே கொடுத்து விடலாமே என்று நினைக்கின்றான். இல்லை என்றால் கொடுப்பவர்களைக் கொண்டாடாமல் வாங்கிக் கொள்பவர்களை 'உதாராः ஸர்வ ஏவைதே' என்று கூறி

'உதாரர்கள் என்று சொல்லி இருப்பானு? எம்பெருமானைத்தவிர வேறு யாரேனும் இவ் வாறு சொல்லமுடியுமா!, சொன்னால்தான் உலகம் ஏற்குமா? 'கொடுப்பவனின் ஔதார்யம் வாங்கிக் கொள்பவனால்தான் விளங்குகிறது' என்ற நுட்பத்தை உணர்ந்துள் ளானே! நான்கு கைகளால் நால்வகைப் புருஷார்த்தங்களையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், கொடுத்தது போதும் என்ற மன நிறைவு அவனுக்கு ஏற்பட வில்லையே!. ஆம்! உத்தம புருஷர்களுக்குத்தான் இப்படி இருக்கும். இவன் புருஷோத்தம னுயிற்றே! தோன்றுமல் இருக்குமா? எம்பெருமானர் கைங்கர்யம் செய்ய ஆசைப் பட்டார். கைங்கர்யத்தின் சுவையறிந்தவர்.

திவ்யதம்பதிகளின் சேர்த்தியில் பல கைங்கர்யங்களைச் செய்ய நினைத்தார். எல் லாக் கைங்கர்யங்களையும் தானே செய்யவேண்டும் என்ற ஆசை வளர்ந்தது. தான் ஒருவராகவே ஒரே சமயத்தில் கைங்கர்யம் செய்யப் பாரித்தார். 'அசேஷ சேஷதைகரதி ரூப நித்யகிங்கராக' இருக்க எண்ணினார். ஒரு கையாலே திருவெண்கொற்றக் குடை யும், ஒரு கையாலே திருவெண்சாமரத்தையும் ஏந்தி அடிமை செய்ய நினைத்தார். இரண்டு கைகளாலும் அளவுக்கு மீறிய கைங்கர்யங்களைச் செய்தாலும் திருப்தி ஏற்பட வில்லையே! மஹான்கள் இப்படித்தான் இருப்பார்கள்! தேவப்பெருமாள் மிகப்பெரியவன். ஆண்டாள் 'பெரியாய்!' என்று பகவானை விளித்தாள். 'வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்' என்றது வேதம். அதனால்தான் எவ்வளவு கொடுத்தாலும், 'என்ன கொடுத்துவிட்டோம்' என்று தன்னை நினைத்துக் கொள்கிறான். தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் அதற்குண்டான பலனைக் கொடுத்து வந்த நோக்கத்தையும் ஆராய்ந்து அருள்புரியக் காத்திருப்பதை நம் மணவாளமாமுனிகள் உணர்ந்து மகிழ்ந் தார். தம்மிடம் வந்தவர் மீது கருணை கொண்டால்தான், விரும்பியதைக் கொடுக்க எண்ணம் தோன்றும்! வரந்தருமா மணிவண்ணனிடம் கிருபையும் நிரம்பியுள்ளது. தைரியமும் கொடைத் தன்மையும் விளங்குகின்றன என்பதை,

> மங்களம் வேதஸோவேதி மேதிநீக்ருஹ மேதிநே !
> வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்.

என்ற அருளிச்செயலால் தேவப்பெருமாளிடம் நம்மை ஆட்படுத்துகிறார் மணவாள மாமுனிகள்.!

2. அருளாளன் மலையாளன் :-

மன்வந்தரங்கள் பதினான்கு, அவற்றுள் இப்போது நடைபெறுவது ஏழாவது மன்வந் தரம். பகவானைப்போல் மஹாலக்ஷ்மியின் அவதாரமும் சிறப்பாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு மன்வந்தரத்தின் தொடக்கத்திலும் மஹாலக்ஷ்மி அவதரிப்பதாக சொல்லப் படுகிறது. 1. ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் ப்ருகு மஹரிஷியின் புத்ரியாக அவதரித் தாள். 2. ஸ்வாரோசிஷத்தில் – அக்னியில் தோன்றினாள். 3. ஔத்தம மன்வந்தரத் தில் –(ஜலத்தில்) தீர்த்தத்தில் தோன்றினாள். 4. தாமஸ மன்வந்தரத்தில்—பூமி யிலிருந்து தோன்றினாள். 5. ரைவத மன்வந்தரத்தில்—வில்வ மரத்தில் தோன்றினாள். 6 சாக்ஷுஷ மன்வந்தரத்தில் – செந்தாமரையில் தோனறினாள். 7. ஏழாவது மன்வந்தர மாகிய வைவஸ்வத (இந்த) மன்வந்தரத்தில்—பாற்கடலில் தோன்றினாள். இக்காரணம் பற்றித்தான் ஆண்டாளும்,புருஷகாரத்தைச் செய்யும் பெரிய பிராட்டியாரைக் கொடுத்த 'வங்கக்கடல் கடைந்த சரித்திரத்தை' நினைவு கூர்ந்தாள். இதிலிருந்து மஹாலக்ஷ்மி அக்னியில் தோன்றியதை அறிந்தோம். பகவான் யாககுண்டத்தில் (அக்னியில்) தோன்றியதையும், அதுவும் அர்ச்சாவதார எம்பெருமான் யாக குண்டத்திலிருந்து தோன்றியதையும் சிறிது சிந்திக்குமிடத்து 'தேவப்பெருமாளின் பெருமை இணையற்றது' என்பது விளங்கும்.

யார் எந்த பலத்தை விரும்பினாலும் பலத்தை அனுபவிக்கும் இடங்கள் (லோகங்கள்) பல உள்ளன. ஆனால் பலத்தை விளைவிக்கும் இடம் பூமிதான். வேதத்தில் எத்தனையோ வகையான யாகங்கள் கூறப்படுகின்றன. சுவர்க்கத்தை விரும்புகிறவன் யாகத்தைச் செய்து அதை அடைந்து இன்புறுகிறான். அச்வமேதம் என்பது ஒருயாகத்தின் பெயர். நூறு அச்வமேதம செய்து இந்திரபதவியை அடைந்ததாகவும் ஓரிரு சரித்திரங்கள் கூறப்படுகின்றன. அச்வமேத யாகத்தை ஸ்ரீ ராமாயணம் சிறிது விவரித்துக் கூறுகிறது. அச்வமேதம் பலநாட்கள் செய்யவேண்டிய யாகம் என்றும், கல்பஸூத்ரங்களில் சொல்லியபடி முதல் மூன்று நாட்கள் விசேஷம் என்றும் அறியப்படுகிறது. முதல்நாள் சதுஷ்டோமம், இரண்டாம் நாள் உக்ய்ம், மூன்றும் நாள் அதிராத்ரம். இன்னும் சில யாகங்களும் ஜ்யோதிஷ்டோமம், ஆயுஷ்யம், அபிஜித், விச்வஜித், அப்தோர்யாமம் முதலியவையும் இதில் அடங்குகின்றன என்று அறியப்படுகிறது.

'எம்பெருமானிடமிருந்து வேதங்களை உபதேசமாகப் பெற்று ஜ்ஞான பூர்த்தியைப் பெற்ற நான்முகனே அச்வமேதத்தைச் செய்தான்' என்றால் இதற்குறிய சிறப்பு வேறு எதற்கும் இருக்க இயலாது. தேவப்பெருமாளின் ஸங்கல்பம் ஸத்ய ஸங்கல்பம்! அவன் இருக்குமிடமோ ஸத்யவ்ரத க்ஷேத்ரம்! அங்கு இருப்பவர்களோ ஸத்யவாதிகள் (அந்த இடத்தில்) ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதற்குரிய

பலன் கிடைப்பதும் ஸத்யம்! பிரஹ்மா ஹஸ்திகிரியையே உத்தரவேதியாகக் கொண்டு யாகத்தை நடத்தும்போது, பசுவின் வபையை எடுத்து ஹோமம் செய்தவுடன் எதிர்பாராதவகையில் வியப்பை அளித்துக் கொண்டு யாககுண்டத்திலிருந்து தேவப் பெருமாள் ஸௌந்தர்ய வடிவாகத் தோன்றினார். அவர் அருளாளன் மட்டுமல்லன்; அத்திகிரிமலையாளுகவும் ஸேவை ஸாதிக்கிறான் என்பதை

> வாஜிமேதே வபாஹோமே தாதுருத்தர வேதித :
> உதிதாய ஹரிதாதக்நே: உதாரங்காய மங்களம்.

என்று கூறி நம் மணவாளமாமுனிகள் மங்களாசாஸனம் செய்கிறார்.

3. எல்லாம் அவனே!

நாம் செய்யும் ஒவ்வொரு நற்செயலும் பகவத் கைங்கர்யமாகவே இருக்கவேண்டும் கைங்கர்யத்தினுலல்லது பகவானுடைய திருவுள்ளத்தை மகிழ்விக்க முடியாது என்பது பெரியோர்களின் துணிபு. ஆதலால் யாகமும் (பகவதாராதன) பகவானை ஆராதிக்கும் செயலே. அதனுல் மகிழ்ந்து எம்பெருமான் பயனளிக்கின்றான் என்பர். ஆனுல் பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்பதங்களும், பதங்களின் பொருளும் அவனே! எம் பெருமானே யாகம், அவனை ஆராதித்தவர்கள் செய்த வேள்வியர்! யாகத்திற்கு உரிய பொருள்களும், யாகத்தினுல் ஆராதிக்கப்படுபவனும், அதற்குரிய பலனைத்தருபவனும் அவனே!.

வபா பரிமளோல்லாஸம் வாஸிதாதர பல்லவம்
முகம் வரதராஜஸ்ய முக்தஸ்மிதம் உபாஸ்மஹே

என்பது சிலர் கூறும் சுலோகம். பிரம்மாவின் அச்வமேதத்தினுல் ப்ரீதியடைந்த தேவப்பெருமாள் 'ஸுப்ரீதஸ்ஸுப்ரஸன்னனுகப் பிரம்மாவை அருள் கொண்டு நோக்கினான். கண்ணுக்கு அணிகலன் கணக்கேட்டம். அருட்பார்வை கொண்டவன் அவன்; மருட்பார்வை கொண்டவர் நாம் அவன் அருளுடன் நோக்குவதற்கு அவனே யல்லாது அறியாத நம்மீது கொண்ட வாத்ஸல்ய குணமே காரணம்! இராமனை யார் ஸேவிக்கவில்லையோ, இராமனுல் யார் பார்க்கப்படவில்லையோ (ராம கடாக்ஷத்தைப் பெறவில்லையோ) அவர்கள் பாக்யஹீனர்கள் என்பர். இங்கு தேவப்பெருமானை ஒரு முறையாவது ஸேவிப்பதும், அவனுடைய கடாக்ஷத்தைப் பெறுவதும் பெரும் பாக்யம் என்று நினைக்கவேண்டும் ஒருநாள் ஸேவித்தாலும், தினந்தோறும் ஸேவிப்பதனுல் உண்டாகும் பலனை (நித்ய ஸேவாபலத்தை) கொடுப்பவன் அவனே! பிரம்மாவும் அவனுடைய குழந்தைதான்; நாமும் அவனுடைய குழந்தைகள். பிரம்மாவின்பால் காட்டிய புன்முறுவலும் அருள்நோக்கும் இன்றும் நம்மீது தொடர்கிறது என்பதைக்கூறி

> யஜமானம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமான முகச்ரியே
> தயமானத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம்,

என்றருளினார் நம்மணவாள மாமுனிகள்.

4. தாமரைக்கண்ணை :- ஓ!

'உருவம் இல்லாத ஒரு பொருளை உபாஸிக்கவேண்டும், தியானிக்க வேண்டும்' என்கிறது ஒரு மதம். இது நடைமுறைக்கு ஒவ்வாது! ஒருவரை திருவரங்கனிடம் அழைத்துச் செல்கிறோம். அவர் திருவரங்கனை 'ஆபாத சூடம்' நன்கு ஸேவிக்கிறார். திருவேங்கடமுடையானிடமும் தேவப்பெருமாளிடமும் அவரை அழைத்துச் செல்லும் போது நின்ற திருக்கோலத்தில் இருக்கும் அந்த எம்பெருமானை ஸேவிக்கிறார். பிறகு ஒரு காலத்தில் 'ரங்கனுதர்' என்று சொன்னவுடன் 'சயனத்திருக்கோலம்' நினைவுக்கு வருகிறது. ஆதலால், திருவுருவம் என்று ஒன்றிருந்தால்தானே அந்த உருவத்தை தியானிக்கமுடியும்! இல்லாத உருவத்தை எப்படி மனத்துள் கொண்டு வருவது?

எம்பெருமானார் இளையாழ்வாராக இருந்த காலத்தில் பூர்வபக்ஷக்ரந்தங்களை வாசிக்கும் போதும் தினந்தோறும் ஸ்ரீ தேவப் பெருமாளை ஸேவிக்க வருவார் என்று அறியப்படுகிறது. பெருமாளின் கண்ணழகு அவரை ஈர்த்திருக்கிறது! அழகு வெள்ளம் திருவுள்ளத்தில் பாய்ந்து தங்கியது. பகவானின் கண்ணழகு வேறு யாருக்குமே இல்லை. அவனுடைய கண்ணழகில் மனதைப்பறிகொடாதவர் எவர். அவன் எந்த அவதாரத்தை மேற் கொண்டாலும் அவனுடைய கண்ணழகே அவனை ஸ்ரீ மந் நாராயணன் என்று காட்டிக் கொடுத்துவிடும். தேவப் பெருமாளின் கண்ணழகிலே மிக்க ஈடுபாடு கொண்டிருந்தபடியால்தான், யாதவப்ரகாசன் கூறியகப்யாஸச்ருதியின் அபார்த்தத்தை கண்டித்து 'கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸும்ருஷ்டநாள ரவிகர விகஸித புண்டரீக தளாமலா யதேக்ஷணன' என்கிற தத்வார்த்தத்தை இளையாழ்வாரால் தைரியமாகச் சொல்ல முடிந் தது. கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய அல்லிக் கமலக்கண்கள் யாரைத்தான் பேதமை செய்யாது!

'நதேரூபம் நசாகாரம் நாயுதானி நசாஸ்பதம்' என்கிறது ஜிதந்தே ஸ்தோத்திரம். அவனுடைய அழகும் வடிவும் அவனுக்கு அன்று; நமக்குதான். 'இந்தளூர் எம் பெருமானே! உன்னுடைய அழகை அனுபவித்துக்கைங்கர்யம் செய்ய நாட்டங்கொண்டு ஓடி வந்தேன்; ஆனுல் நீ உன்னை மறைத்துக் கொள்கிறாய்! இதனுல் என்னபயன்! கதவை மூடிக் கொண்டு உன் அழகை நீயே பார்த்து ரசித்துக்கொண்டிரு' என்ற பொருளை உணர்த்தும் வகையில் 'வாசிவல்லீர்! இந்தளூரீர் வாழ்ந்தே போம் நீரே! என்றார் திருமங்கை ஆழ்வார். தேவப்பெருமாளுடைய திருமேனியோ நீலமேகத்தின் நிறம்போன்று நிறமுடையது. அவனது திருவரையில் பீதக ஆடை! கண்களோ செந் தாமரைக்கண்கள்! கருமுகில்போல திருமேனி நிறத்தைக் காட்டி விமுகர்களையும் தன்னிடம்அழைக்கிறான். பீதாம்பரத்தினுல் தானே 'மங்களானும் ச மங்களம்' என்பதை உணர்த்துகிறான். திருக்கண்களால் குளிரக் கடாக்ஷிக்கிறான்! ஒருவரையும் விடுவதற்கு அவனுக்கு மனமில்லை. எப்படியாவது ரக்ஷித்தேதீர வேண்டும் என்ற கருணையுள்ளம்

கொணடவணல்லவோ அவன். இது தேவப்பெருமானின் அலகிலா விளையாட்டு! அவனுடைய பேரருளை அறுதியிட்டுச் சொல்லவும் முடியுமா!

வாரிதச்யாமவபுஷே விராஜத் பீதவாஸஸே
வாரணுசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம்.

5. பிரணதார்த்தி ஹரவரதன் :

சயனத் திருக்கோலம் ஓய்வைக் குறிக்கும்; வீற்றிருந்த தசை முயற்சியின் ஆரம்பத்தைக் குறிக்கும்; நின்ற திருக்கோலம் செயலைச் செய்யத் தயாராக இருப்பதைக் குறிக்கும், தேவப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி இருக்கிறாரே! தோன்றிய நாள் தொடங்கி நின்றிருக்க வேணுமோ! அத்திதிரியின்மீது நிற்பதற்கும் காரணம் உண்டே!

திருக்கச்சிநம்பிகள், பகவானின் ஐந்து நிலைகளையும் ஒரே ஸ்லோகத்தால் கூறுகிறார். 'பரநிலை, வியூகநிலை, விபவநிலை, அந்தர்யாமிநிலை, அர்ச்சாவதாரநிலை' என ஐந்து நிலைகள் 'ஹஸ்திசைலேச'! என்பது அர்ச்சாவதாரத்தை உணர்த்துகிறது. 'ஸ்ரீமந்' என்பது ஸ்ரீவைகுண்டத்தில் திருமகளோடு இருக்கும் நிலையை அறிவிக்கிறது. இது பரநிலை. 'அம்புஜலோசன!' என்பது ஸௌந்தர்யத்தின் வடிவாய் அனைவரையும் கண்ணழகைக்காட்டி ஆட்கொண்ட விபவத்தைக் கூறுகிறது. 'பிரணதார்த்தி ஹர' என்பது ஆச்ரிதர்களின் ஆர்த்தியைக் கேட்டு உடனே ரக்ஷிப்பதற்காகப் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் வியூக நிலையைச் சொல்லுகிறது. 'அச்யுத' என்பது ஓரிடத்தையும் நழுவவிடாமல் எங்கும் நிறைந்திருகும் அந்தர்யாமித்வத்தை விவக்ஷிக்கிறது இந்த ஐந்து நிலைகளையும் நம்பிகள் தேவப்பெருமாளிடம் காட்டினார்:

நமஸ்தே ஹஸ்திசைலேச ஸ்ரீமந்நம்புஜலோசன
சரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்தி ஹராச்யுத''

என்று. ஆச்ரித ரக்ஷண ஊற்றத்தைக் குறிப்பதற்காகவே 'பிரணதார்த்தி ஹரன்' என்று குறிப்பிட்டார்.

ப்ரஹ்மா அச்வமேத யாகத்தைச் செய்தார். தன்னைவிட்டு யாகத்தைச் செய்யும் ப்ரஹ்மா மீது சரஸ்வதி சினம் கொண்டாள். யாகத்தை அழிக்க வேகவதி நதியாக பேரிறைச்சலோடு சீறி வந்தாள். திருவெஃகா எம்பெருமானே ஆற்றுக்குக் குறுக்கே அணையாகப் படுத்து வேகவதியின் கோபத்தைத் தணித்தார். அவளும் லஜ்ஜையடைந்து பெருமானின் திருவடி நிழலில் தங்கிவிட்டாள். யாகமும் நிறைவேறியது. உத்தரவேதியிலிருந்த ஹோம குண்டத்திலிருந்து தேவப்பெருமாள் அவதரித்தார்.

நான்முகனுக்கு அபீஷ்டங்களைக் கொடுத்து மகிழ்வித்தார். இது எப்போதோ நடந்த நிதழ்ச்சியைச் சொல்லும் கதைதானே! என்று நினையாதீர்! ரக்ஷிக்க வேண்டியவர்கள் இன்னும் இருப்பதால் அவர்கள் நம்மை நாடிவருவார்களா! என்று எதிர்பார்த்து நிற்கிறான். அவர்களுக்கு அநிஷ்டத்தை நீக்கி இஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டு இன்றும் நிற்கிறான் என்பதை,

அத்யாபி ஸர்வபூதானாம் அபீஷ்ட பலதாயிநே
ப்ரணதார்த்தி ஹராயாஸ்து பிரபவே மம மங்களம்

என்று நம்மணவாள மாமுனிகள் அருளிச்செய்யும் பாங்கு மறக்கவொண்ணாதிறே ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதிக்ஷதே என்பதற்கேற்ப ஆச்ரித ரக்ஷணத்தையே எதிர்பார்க்கிறான் என்ற கருத்தை உணர்த்த திருக்கச்சி நம்பிகள் அருளிய 'ப்ரணதார்த்தி ஹரன்' என்ற வார்த்தையை மணவாள மாமுனிகள் அருளியிருப்பது சுவைக்கப் பாலது.

6. திவ்யமாக இருக்கிறதே !

ஆழ்வார்களை நித்யஸூரிகள் என்கிறோம். அவர்களுடைய அருளிச்செயல்கள் திவ்யப்பிரபந்தம். அவர்கள் மங்களாசாஸனம் செய்த இடங்கள் திவ்ய தேசங்கள். அங்கு இருக்கும் எம்பெருமான்கள் திவ்ய தேசத்து எம்பெருமான்கள். இவை எல்லாரும் சொல்லக்கூடிய வார்த்தைகளாம். மணவாளமாமுனிகள், இவற்றோடு மேலும் சில வற்றை தேவப்பெருமாளிடம் சேர்க்க வேண்டும் என்பதைக்காட்டி இருக்கிறார். அவனுடைய அவயவஸௌந்தர்யம்திவ்யம்! அவனுடைய பஞ்சாயுதங்களாகிற திருவாபரணங்கள் மேலும் திவ்யம்! கேட்டதைக் கொடுக்கும் கற்பகமரம். இந்தக் கற்பகம் தன்னையே கேட்டாலும் தன்னைத்தானே கொடுக்கும். நமக்குக் கொடுப்பதோடு நில்லாமல் தேவர்களுக்கும் கொடுக்கக்கூடிய சக்தி அவர்களைக் காட்டிலும் மேம்பட்டவனான தேவாதிராஜன் தேவபெருமாளுக்கே உண்டு என்பதை உணர்த்தி இருப்பது மிகவும் திவ்யம்! அவ்வளவு என்ன? எல்லாமே திவ்யம் என்றாலும் அது தேவப்பெருமாளுக்கு மிகவும் பொருத்மானதேயாம்.

திவ்யாவயவ ஸௌந்தர்ய திவ்யாபரண ஹேதயே
தந்தாவல கிரீசாய தேவராய மங்களம்.

7. புண்யகோடி விமானம் :

தேவப்பெருமாள் எழுந்தருளியிருக்கும் இடமே புண்யகோடி விமானம் தான். ஒவ்வொரு திவ்யதேசத்திலும் எழுந்தருளியுள்ள விமானத்திற்கு தனித்தனிப் பெயருண்டு.

தேவப்பெருமாள் ஸன்னதியில் ஒவ்வொரு வாகனப் புறப்பாட்டுக்கும் ஓர் ஏற்றமுண்டு. தீர்த்தவாரியன்றுராத்திரி புண்யகோடி விமானத்தில் எழுந்தருளி மஹோத்ஸவம் கண்ட ருள்கின்ருன். அன்றைய தினம் திருவீதிப் புறப்பாட்டிலேயே பெரிய திருமொழி ஆயிரம் பாசுரங்களையும் திருச்செவி சாற்றுகின்ருன். ஸன்னதிக்குத் திரும்பியதும் 'மின்னுமா மழைதவழும் மேக வண்ணு விண்ணவர்தம் பெருமானே அருளாய்' என்று அனுஸந்திக்கும் இடம் கேட்டார் பிணிக்கும் தகையவாய், கண்களில் நீர் மல்கவைத்துப் பல மெய்ப்பாடுகளை ஏற்படுத்தவல்லது. புண்ணியம் கோடி செய்தால்தான் புண்யகோடி விமான ஸேவை கிடைக்கும் என்பர். புண்யகோடி விமானச் சாயையில் வாழ்வது பெரும்பேருகும்.

ராமாநுஜர் விந்தியாடவியிலிருந்து காப்பாற்றப்பட்டு தப்பிப் பிழைத்து வந்ததே பேரருளாளனின் மஹோபகாரத்தினுல்தான்! இரவில் விந்திய மலைக்காட்டில் வழி தெரியாமல் திகைத்த இராமாநுஜர் உதயமாகும்போது காஞ்சிக்கு வந்துவிட்டார். அதனுல் எங்கு இருக்கிறேம் என்பதை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை வேடனும், வேடுவச்சியும் மறைந்தவுடன், ஒருவர் புண்யகோடி விமானத்தைக் காட்டி 'தேவப் பெருமாளிடம் (காஞ்சியில்) இருக்கிறீர்' என்ருர். புண்யகோடி விமான ஸேவையும், அதனுள் இருக்கும் பெருமாள் ஸேவையும் எளிதில் கிடைக்குமா என்ன? பிறருடைய புருஷகாரத்தினுல்தான் கிடைக்கும். தேவப்பெருமாள் அநாதி ஸித்த புருஷர். புராண புருஷராக இருந்தாலும் அழகு குறையாதவர்; அழகுக்கு அழகு தருபவர்

> புருஷாய புராணுய புண்யகோடி நிவாஸிநே
> புஷ்பிதோதார கல்பத்ரு கமநீயாய மங்களம்.

அழகுக்கு ஒரு பல்லாண்டு!

8. காஞ்சி கருடஸேவை:

'பெரியதிருவடியை வாஹனமாகக் கொண்டவன்' என்பது எம்பெருமானுக்குரிய தனிப்பெருமையாகும். பக்ஷிகளிலேயே சிறந்தது கருடன். 'வேதாத்மா விஹகேச்வர:' என்ருர் ஆளவந்தார். பெரியதிருவடி வேதஸ்வரூபி. உத்ஸவங்களிலேயே கருடோத்ஸவத்திற்கு தனி ஏற்றம்! லக்ஷக்கணக்கானவர்கள் ஸேவித்து மகிழும் உத்ஸவம். 'ஒரு நாள் காணவாராயே' என்று வேண்டிய நம்மாழ்வாரின் திருவவதார (சாற்றுமறை) நன்னுள். அயர்வறுமமரர்கள் அதிபதியான தேவப்பெருமாளின் 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!' என்று உபதேசித்த நம்மாழ்வாரை தேவப்பெருமாள் அனுக்ரகிக்கும் நன்னுள். தொட்டையாசாரியருக்கு ஸேவை ஸாதித்த நாள்! கருடன் மீது

தேவப்பெருமாள் எழுந்தருளியிருக்கும் அழகை அனுபவியாதவர் யார்! தேவாதிதேவன் மோக்ஷபலப்ரதன் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். பெருமாள் எழுந்தருளியிருப்பது பெரிய திருவடியின் தோளுக்கே ஓரழகு! பொன்மலையுச்சியிலே காளமேகம் திகழ்வது போன்ற உணர்ச்சி. முதலாழ்வார்களுள் நடு நாயகமாக விளங்கும் கடல் மல்லைப் பூதத்தார் மற்ற வாஹனங்களை விட்டு 'அத்தியூரான் புள்ளூர்வான் . . . . இறையாவான் எங்கள் பிரான்' என்றருளிச் செய்தார். அத்தியூரான் என்பது அத்திகிரி அருளாளனுகிற தேவப்பெருமாளையே குறிக்கிறது. வையத்தெவரும் வணங்கும் இந்த மஹோத்ஸவத்தின் சிறப்பைக்கொண்டே,

> காஞ்சநாசல ச்ருங்காக்ர காளமேகாநுஸாரிணே
> ஸுபர்ணும் ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம்.

என்று நம் மணவாளமாமுனிகள் பல்லாண்டு பாடுகிறார். 'காய்சினப்பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போல்' என்ற பாசுரார்த்தத்தை இந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தோடு சேர்த்து அனுபவிப்பது பேரின்பம் அளிக்கும்.

9. அருள்பொழியும் அருளாளன்:—

மேகம் வானில் இருக்கும்; கடலில் இருக்கும்; மலைச்சிகரங்களில் தங்கி இருக்கும். கார்முகிலாகிற எம்பெருமான் பரமபதத்தில் இருப்பவன். மேகம் கடல் நீரைப்பருகக் கடல்நீர் மேல் தங்கி இருக்கும். முகில்வண்ணனுகிற எம்பெருமானும் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறான். மேகம் மலைச்சிகரங்களைச் சுற்றியிருந்து காண்போரின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்விக்கும். அதுபோல் திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் கருணைக் கடலாகிய எம்பெருமான், திருவேங்கடமலைச் சிகரத்தில் அருள்மழை பொழியத் தயாராக இருக்கும் காளமேக ஸேவை ஸாதித்து, தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு எல்லாம் கொடுத்து மகிழும் (கற்பகமாக) நிலைநின்று, அவரவர் விரும்புமவற்றையெல்லாம் தந்து ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதமாக இப்போதும் விளங்குகிறான்.

போகம் இருவகைப்படும். இருள் தருமாஞாலமாகிற இவ்வுலகில் அநுபவிக்கும் போகம் ஒன்று. நலமந்தமில்லாதோர் நாடாகிய பரமபதத்தில் அநுபவிக்கும் போகம் மற்றொன்று. ஐஹிகத்தை விரும்புவர் சிலர்; ஆமுஷ்மிகத்தை விரும்புகிறவர் சிலர். தன்னை நாடியார் எதைக்கேட்டாலும் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறான் பேரருளாளன். தன்னுடைய அபேக்ஷையை உணர்த்தும் வகையில் அவனெதிரில் நின்றாலே போதும்! கருத்தறிந்து நிரவதிகமாக அருளக்கூடியவன். அபேக்ஷையை

வெளியிட்டால் கேட்கவும் வேணுமோ? அவன் அருள்புரியத் தொடங்கினால் யாராலும் அதற்குத்தடை செய்ய முடியாது. அருள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் இயலாது.

திருவடி இராமதூதனாக இலங்கை சென்று, பிராட்டியை ஸேவித்து அவளுடைய கடாக்ஷம் பெற்று இராமதாஸனாகத் திரும்பி வந்து இராமனிடம் 'த்ருஷ்டாஸீதா' என்று கூறினார். பிராட்டி சொல்லியனுப்பிய செய்தியையும் செவிக்கினிய செஞ்சொல்லாகச் சொல்லிச் சூடாமணியையும் கொடுத்தார். திருவடி செய்த உதவி இராமனுடைய திருவுள்ளத்தைப் பெரிதும் மகிழ்வித்தது! 'அனுமனே! உன் பக்திக்கும் உதவிக்கும் நான் என்ன கொடுக்க முடியும். நீ செய்தது பேருதவி! எல்லா உலகங்களையும் உனக்குக் கொடுத்தாலும் போதாது; அதற்கும் மேலானதாக என் திருமேனி ஸம்பந்தத்தையே உனக்குத் தருகிறேன் என்று கூறிக் குளிரக் கடாக்ஷித்து அனுமனை ஆலிங்கனம் செய்து கொண்டான். யாருக்குக் கிடைக்கும் இப்படிப்பட்ட பரிசு!.

எம்பெருமானை நாடி போகத்தை விரும்பினாலும் அவன்தான் கொடுக்க வேணடும். மோக்ஷத்தைக் கேட்டாலும் அவன்தான் கொடுக்க வேண்டும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிற நால்வகை புருஷார்த்தங்களையும் வரையாது கொடுத்துக் கொடுத்து தான் எம்பெருமான் ஆஜானுபாஹுவானான் என்று பெரியோர்கள் சுவையாகக் கூறுவார்கள்.

ஸ்ரீ தேவப்பெருமாள் எதையும் கொடுக்கவல்லவர். அவன் திருவடிவார த்தில் 'போகம் அபவர்கம்' இரண்டனுள் போகத்தை அபேக்ஷித்தாலும், போகத்தையும் கொடுத்து அனுபவிக்கச்செய்து, அந்த அனுபவத்தினாலேயே அவனுக்கு விரக்தியை ஏற்படுத்தி, அவனுக்கு மோக்ஷத்தையும் கொடுக்கிறார். ஏதாவது ஒன்று கேட்டாலும் போதுமே! 'ஸர்வத்தையும் கொடுத்து அருள் மழை பொழியும் பேரருளாளர் தேவப் பெருமாள் ஒருவரே! என்பதை நம்மணவாள மாமுனிகள்

> போகாபவர்க்க யோரேகம் வாஞ்சத்யோ தததே த்வயம்
> ஸ்ரீமத் வரதராஜாய மஹோதாராய மங்களம்.

என்று அருளிச் செய்து நம்மைத் தெளிவிக்கிறார். ஸ்ரீ தேவப்பெருமானை வரதன் என்று நினைத்தால் உதாரன் என்று கூறலாம்; வரத ராஜனாக இருந்து கொண்டு அவன் செய்யும் செயல்களில் ஔதார்யத்தைப் பார்த்தால் அவனை (மஹோதாரன்) பரமோதாரன் என்று சொல்லி மகிழ்வதைவிட வேறென்ன சொல்லிக் கொண்டாட முடியும் திருக்கச்சிநம்பிகளுக்கு ஆறு வார்த்தை அருளினார்; தனக்குக் கைங்கரியம் செய்து

வந்த நம் இராமநுசனையே திருவரங்கப்பெருமாள் அரையர் கையிலே ஒப்படைத்தார். தான் கேட்டு இனிது உகக்கும்படி அருளிச்செயலோதும் சிறந்த புருஷார்த்தமான கைங்கர்யத்தை தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்தருக்கே உரிமையாக்கி அருள் செய்திருக்கிறானே! அவனுடைய பேரருளுக்கும் இணையுண்டோ! தன்னேரில்லாப் பேரருள்!

10. பெருமாளுக்குரிய பெருமை :-

எம்பெருமான் ஸ்ரீய:பதி கல்யாண குணநிதி க்ருபையின் இருப்பிடம். ஸர்வசக்தன். எல்லோரையும்விட மேலானவன், வேத ப்ரமாண ஸித்தன்; பற்றுடை அடியவர்க்கு எளியவன். இவையெல்லாம் அவனுக்குப் பெருமைகளே! ஆயினும் 'அடியவர்களை ரக்ஷிப்பதையே ஸங்கல்பமாகக் கொண்டவன்' என்பது இணையற்ற பெருமை! பகவான் ரக்ஷகன்; அவன்தான் நம்மை ரக்ஷிப்பான்! நமக்கு அவனைத்தவிர வேறு புகலிடமில்லை. அவனையே நாம் ஆச்ரயிக்க வேண்டும். அவன் நம்மை ரக்ஷித்தே தீருவான் என்ற நம்பிக்கையூட்டுவதற்காகவே முதுநூல்கள் பல ப்ரமாணங்களைக் காட்டுகின்றன.

அடியார்களை ரக்ஷிக்கும் போது தனக்கு ஏற்படும் ஆபத்துகளை அவன் லக்ஷ்யம் செய்வதில்லை. ஒருமுறை ரக்ஷித்தபிறகு அதோடு அவன் திருப்தி அடைவதில்லை. ரக்ஷித்து விட்டோம் என்று தற்பெருமை கொள்வதில்லை. அடியார்களுக்கு மேலும் என்ன நன்மை செய்யலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டே நிற்கிறான். யார் குறுக்கிட்டாலும் ரக்ஷண வேகம் குறைவதில்லை. யார் தடுத்தாலும் தடைபடுவதில்லை. ரக்ஷிப்பதிலே (ஜாகரூகனாக) விழிப்புடையவனாக இருக்கிறான்! ஏன்தெரியுமா? அவனுடைய கிருபை தான் காரணம்! துன்பப்படுகிறவனை 'வருந்தாதே, வருந்தாதே' என்று ஆறுதல் கூறிக் கொண்டு இரக்கத்தோடு ரக்ஷிப்பவர் தேவப்பெருமாள்தான். 'மாசுச:' என்று கூறிக் கொண்டு 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று எம்பெருமானைத்தவிர வேறுயார் தான் தைரியமாகக் கூறமுடியும்.

> மதங்கஜாத்ரி துங்காக்ர ச்ருங்கச்ருங்கார வர்ஷ்மணே
> மஹாக்ருபாய மத்ரக்ஷா தீக்ஷிதாயாஸ்துமங்களம்"

11. ஆசை அவனையும் விடவில்லையே! :—

திருக்கச்சி நம்பி பூவிருந்தவல்லி என்னும் ஊரில் பிறந்தார். முதலில் இவருக்கு கஜேந்திர தாஸர் என்று பெயர். இவரது குடும்பம் செல்வக் குடும்பம். ஸ்ரீ தேவப் பெருமாள், தன் கனவில் நியமித்தபடி தனக்குரிய செல்வத்தைக் கொண்டு அழயகி

நந்தவனத்தை நிர்மாணித்தார். மலர்ச் செடிகளை வளர்த்தார். தூயமாமாலை கட்டிக் காஞ்சீபுரம் வந்து அதனைப்பெருமாளுக்கு ஸமர்ப்பிப்பார். செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி முதலிய எண்பகர் பூக்களால் தொடுத்தமாலைகளை ஸமர்ப்பிப் பார். தேவப்பெருமாள் எதிர்பார்த்துக்கொண்டிருந்து இவற்றை விரும்பி ஏற்று அணிந்து கொள்வாராம். பிறகு காஞ்சியிலே நம்பிக்கு இடத்தைக்கொடுத்து இருக்கச்செய்தார். பிறகு ஆலவட்டம் வீசும் கைங்கர்யத்தைக் கொடுத்து நம்பியை தன்னோடு இருக்கச் செய்தார்' என்று வரலாறு கூறுகிறது. நம்பிகள் ஆளவந்தாரிடமிருந்து அர்த்த விசே ஷங்களை அறிந்து தெள்ளிய ஞானத்தவராய் விளங்கினார். அர்ச்சாவதார எம்பெருமான் கள் ஸமாதியைக் கடந்து சிலரோடு உரையாடி இருப்பதை சரித்திரங்கள் வாயிலாக அறிகிறோம். இராமானுசர் இளையாழ்வாராக இருந்த காலத்தில் திருக்கச்சி நம்பியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

திருக்கச்சி நம்பிகள், (பெருமாளும் பிராட்டியுமாக இருக்கும் சேர்த்தியிலும், தனியாக இருக்கும் போதும் ஆலவட்டம் ஸமர்ப்பிக்கும் போது தேவப்பெருமாள் உரையாடத் தொடங்குவார். பல சமயங்களில் நடந்த உரையாடல்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. இளையாழ்வார், தன் உள்ளத்தில் தோன்றிய ஐயங்களுக்கு திருக் கச்சி நம்பி வழியாகத் தேவப் பெருமாளிடமிருந்து விடைகளைப் பெற எண்ணினார். நம்பி களிடமும் பிராத்தித்தார்.

நம்பிகள் வழக்கம் போல் திரு ஆலவட்டம் ஸமர்ப்பிக்கும் போது, 'நம் இராமனு சனின் உள்ளத்தில் சில ஐயங்கள் தோன்றியுள்ளன; அவற்றைத்தீர்த்தருளப் பிரார்த்திக் கிறேன்' என்று பெருமாளிடம் விண்ணப்பித்தார்.

உடனே, 'அஹமேவ பரம் தத்வம், என்று தொடங்கி பூர்ணசார்ய:' என்று தேவப்பெருமாள், உய்யும் ஆறு வார்த்தைகளை அருளிச் செய்தாரே! நம்பிகளைக்கண்டால் தன் நிலையையும் (அர்ச்சாவதார ரூபத்தில் இருக்கும் நிலையையும்) மறந்து உரையாடினாரே! தன்னை நம்பி இருக்கும் அடியாரைக் கண்டால் உரையாடுவதில் ஏன் அவ்வளவு ஆசை! அடியார்கள், பகவான் திருவாய் மலர்ந்தருளும் சொல்லைக் கேட்க விரும்புவது போல், அவனுக்கு அடியார்களோடு உரையாடுவதிலும், அவர்களது வார்த்தையைக் கேட்பதிலும் ஆசையோ! ஆசை யாரை விட்டது? ஆசையை நீக்கும் அவனையும் விடவில்லையே!

திருக்கச்சி நம்பிகள் வாயிலாக விசிஷ்டாத்வைதத்திற்கே (எம்பெருமானார் தரிசனத் திற்கே) அடிப்படையாக ஆறு வார்த்தைகளாகிற தத்துவத்தை ஸ்ரீ தேவப்பெருமாள் வெளியிட்டு உதவிய மஹோபகாரத்தை,

ஸ்ரீ காஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யாஸர்வாபிபாஷிணே
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்

என்ற சுலோகத்தினால் வெளிப்படையாகக் கூறி நம் மணவாளமாமுனிகள் மனமுவந்து மங்களாசாஸனம் செய்வதை நாம் எண்ணி மகிழ வேண்டும்.

12. கஸ்தூரி வரதன் :-

திருவரங்கனைக் 'கஸ்தூரி ரங்கன்' என்று சிலர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம் ஆனால், கஸ்தூரிவரதன் என்று இவரைக் கேட்டதில்லை; சொன்னாலும் தவறுஇல்லை. பகவானை ஸர்வகந்த: ஸர்வரஸ: என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். வாசனைக்கே வாசனை தருபவன் எம்பெருமான்! 'மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள் தனத் துள்ளான் தண்துழாய் மார்வன்' என்று ஆழ்வார் பகவானின் இருப்பிடங்களாகக் கூறு கிறார். பிராட்டிக்குபகவானின் திருமார்பிலே மோஹம்! வங்கக்கடல் கடைந்தகாலத்தில் பாற்கடலில் நின்றும் பிராட்டி அவதரித்ததால் எல்லா தேவர்களும் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே எம்பெருமானின் திருமார்பை வந்தடைந்து 'அகலகில்லேன்இறையும்' என்று கூறிக்கொண்டு (நமக்காக) அவனை விட்டுப் பிரியாது இருக்கிறாள். பகவானுக் குப் பிராட்டியின் திருமார்பில் வ்யாமோஹம். அதனால்தான் கிருஷ்ணன் நப்பின்னையை விட்டுச்சிறிதும் பிரியாமல் பெரிதும் மோஹித்துக் கிடந்தான் என்கிறார்கள்.

ஆண்டாள் திருவேங்கடமுடையானிடம் மேகத்தை தூது விடுகிறாள். தன்னைப் பற்றிய நிலைகளை எல்லாம் அதனிடம் கூறித் திருவேங்கடமுடையானிடம் விண்ணப் பித்து உதவ வேண்டுகிறாள். 'கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஓர் நாள் தங்குமேல் என்னுவி தங்குமென்றுறையீரே!' என்று தன் பாரிப்பை வெளியிடு கிறாள். அவ்வாறு பாரிக்க வேண்டாதபடி பெருந்தேவித் தாயார் தம் மார்போடு தேவப் பெருமானை எப்போதும் அணைத்துக் கொண்டு மகிழ்கிறாள். அதனால், அவளுடைய திரு மார்பில் அணிந்திருந்த கஸ்தூரி காப்பின் வாசனை தேவப் பெருமாளிடம் விசேஷமாக வீசுகிறதாம்! இதைக் கொண்டே, பிராட்டியோடு அவன் கொண்டுள்ள நித்ய யோகத் தை அறியலாம். 'இல்லை; நான் தனியாகத்தான் நின்று கொண்டு இருக்கிறேன்' என்று 'வாக்மீ' யான தேவப்பெருமாள் கூறினாலும் அவனிடமுள்ள கஸ்தூரி வாசனையை மறைக்க முடியவில்லையே! பெருந்தேவிமணாளா! இப்படியே என்றென்றும் சேர்ந்திருந்து அடியார்களை ரக்ஷிக்கவேண்டும். உங்களுடைய இருவர் சேர்த்திக்கும் பல்லாண்டு.

அஸ்து ஸ்ரீ ஸ்தனகஸ்தூரி வாஸநா வாஸிதோரஸே
ஸ்ரீ ஹஸ்திகிரி நாதாய தேவராஜாய மங்களம்

என்ற மணவாளமாமுனிகளின் திருவாக்கு ஆராத இன்பம் பயக்கும் தெள்ளமுதம் அன்றே!.

13. ஆசாரியர்களுக்கு ஒரு பல்லாண்டு:-

அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு மங்களாசாஸனமே ரக்ஷகம் என்று கூறி விட்டார்கள் பெரியோர்கள். மங்களாசாஸனத்தால் பொலிவு பெற்றவர் தேவப் பெருமாள். இதில் ஏற்படும் அமைதியும், மகிழ்ச்சியும் வேறு எதனலும் அவருக்கு ஏற்படுவதில்லை. ஆளவந்தார் எம்பெருமானுர் முதலான எத்தனை மஹாசாரியர்கள் தேவப்பெருமானே மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள்!. அவர்களுடைய மங்களா சாஸனம் எல்லாம் உள்மதில்களாக அமைந்துள்ளனவோ! அந்த மதில்களுக்கு வெளியில் அமர்ந்துகொண்டு அவர்களுக்கும் சேர்த்து நம் மணவாளமாமுனிகள் மங்களாசாஸனம் செய்துகொண்டிருக்கிறார்.

மங்களாசாஸனபரைர் மதாசார்ய புரோகமை:
ஸர்வைஸ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

என்று. இவரது மங்களாசாஸனம் வெளிமதில்களாக (ரக்ஷகமாக) அமைந்துவிட்டன போலும்! இப்போது மங்களாசாஸனபரர்களான ஸ்ரீவைஷ்ணவமணிகள் 'பல்லாண்டு பல்லாண்டு' என்று அவருக்கும் சேர்த்துப் பல்லாண்டு பாடுகிறார்கள்.

ஆழ்வார்கள் வாழி!
அருளிச் செயல் வாழி!
மணவாள மாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டிரும்.!



ஸ்ரீரஸ்து.



பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்
விசதவாக் சிகாமணிகளான
மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

ஸ்ரீ தேவராஜ மங்களம்

தனியன்

யச் சக்ரே தேவராஜஸ்ய மங்களாசாஸநம் முதா
தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் விசதவாக்வரம்.

மங்கலம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே
வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம். (1)

வாஜிமேதே வபாஹோமே தாதுருத்தரவேதித:,
உதிதாய ஹுதாதக்நேருதாராங்காய மங்களம். (2)

யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாநமுகச்ரியே,
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம். (3)

வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே,
வாரணசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம். (4)

அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே
ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம். (5)

திவ்யாவயவஸௌந்தர்யதிவ்யாபரணஹேதயே,
தந்தாவளகிரீசாய தேவராஜாய மங்களம். (6)

புருஷாய புராணாய புண்யகோடி நிவாஸிநே,
புஷ்பிதோதாரகல்பத்ருகமநீயாய மங்களம். (7)

காஞ்சநாசலச்ருங்காக்ர காளமேகாநுஸாரிணே,
ஸுபர்ணம்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம். (8)

போகாபவர்க்கயோரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம்,
ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம். (9)

மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்கச்ருங்காரவர்ஷ்மணே,
மஹாக்ருபாய மத்ரக்ஷாதீக்ஷிதாயாஸ்து மங்களம். (10)

ஸ்ரீகாஞ்சீபூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே,
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம் (11)

அஸ்து ஸ்ரீ ஸ்தநகஸ்தூரீ வாஸநாவாஸிதோரஸே,
ஸ்ரீ ஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம் (12)

மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:,
ஸர்வைச் ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம். (13)

ஜீயர் திருவடிகளே சரணம்!

ஸ்ரீ:



சோளஸிம்ஹபுரம் தொட்டயாசார்ய ஸ்வாமி
தேவப்பெருமாளுடைய பெரிய திருவடி மஹோத்ஸவ
விஷயமாகப் பணித்த

தேவாதிராஜ பஞ்சகம்

———


ப்ரத்யூஷே வரத: பரஸந்நவதந: ப்ராப்தாபிமுக்யாந் ஜநாந்
ஆபத்தாஞ்ஜலிமஸ்தகாந் அவிரலாந் ஆபாலமாநந்தயந்'
மந்தோட்டாயிதசாமரோ மணிமயச்வேதாதபத்ரச் சநை:
அந்தர்கோபுரமாவிராஸ பகவாந் ஆருடபக்ஷீச்வர: (1)


முக்தாதபத்ரயுகளோபயசாமராந்தர்
வித்யோதமாநவிநதாதநயாதிரூடம்,
பக்தாபயப்ரதகராம்புஜமம்புஜாக்ஷம்
நித்யம் நமாமி வரதம் ரமணீயவேஷம். (2)

கேசித் தத்வவிசோதநே பசுபதௌ பாரம்யமாஹு:பரே
வ்யாஜஹ்ரு:கமலாஸநே நயவிதாம் அந்யே ஹரௌ ஸாதரம்,
இத்யேவம் சலசேதஸாம் கரத்ருதம் பாதாரவிந்தம் ஹரே:
தத்வம் தர்சயதீவ ஸம்ப்ரதி ந்ருணம் தார்க்ஷ்ய: ச்ருதீநாம் நிதி:, (3)

யத் வேதமௌலிகணவேத்யமவேத்யமந்யை:
யத் ப்ரஹ்மருத்ர ஸுரநாயகமௌலிவந்த்யம்,
தத் பத்மநாபபதபத்மமிதம் மநுஷ்யை:
ஸேவ்யம் பவத்பிரிதி தர்சயதீவ தார்க்ஷ்ய: (4)

ப்ரத்யக்கோபுரஸம்முகே திநமுகே பக்ஷீந்த்ரஸம்வாஹிதம்,
ந்ருத்யச்சாமரகோரகம் நிருபமச்சத்ரத்வயீபாஸுரம்,
ஸாநந்தம் த்விஜமண்டலம் விதததம் ஸந்நாஹசிஹ்நாரவை:
காந்தம் புண்யக்ருதோ பஜந்தி வரதம் காஞ்ச்யாம் த்ருதீயோத்ஸவே (5)





நிலாத்திங்கள் துண்டத்தான்

Compliments from
A WELL WISHER



ஸ்ரீ :

தேவப்பெருமாளும் தொட்டயாசார்யரும்

ஸ்ரீ.உ.வே. கோயில் கந்தாடை சண்டமாருதம்

பெரியப்பங்கார் ஸ்வாமி

ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமரான ஸ்வாமி எம் பெருமானுர் ஸ்யஸிக்கும் காலத்திலும் 'என் மருமான்' என்று பதமும் தண்டமும் ஆக்கிக்கொண்ட ஸ்ரீ முதலியாண்டான் திருவம்சத்தில் இன்றைக்கு 500 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய பெரியவர் ஸ்ரீஸ்வாமி தொட்டயாசார்யர். இந்த ஆசார்யபுருஷர் திருக்கடிகை என்னும் சோளசிம்மபுரத்தில் (இங்ஙாளில் சோளிங்கர்) மிகப் புகழ்வாய்ந்த வித்துவானுமாய் பக்திமானுமாய் விளங்கியவர், ஸ்ரீஸ்வாமி எம்பெருமானுரின் தரிசனத் திற்கு உசாத்துணையாய் ஸ்ரீ வேதாந்த தேசிகரின் 'சத தூஷணி' என்னும் வாத கிரந் தத்திற்கு சண்டமாருதம் எனும் பெயரில் உரை எழுதியும், பாராசர்ய விஜயம் முதலான வேறு பிற நூல்களை அருளியும் விசிஷ்டாத்வைத தரிசனத்தை வீறுபெறச் செய்தார்.

இவருக்கு ஸ்ரீநிவாஸன் என்பதே இட்ட பெயராயினும், 'தொட்டயாசார்யர்' என்றே வழங்கினர். தொட்ட எனும் கன்னடப் பெயருக்கு பெரிய என்பது பொருளாகும். அதனை ஒட்டியே வடமொழியிலும் மஹார்யர், மஹாசார்யர் என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. மஹாசக்யர் என்ற விருதுப் பெயராலே அழைக்கப்பெறும் பேறு பெற்ற பெரியவர் இவர்.

எம்பெருமானிடத்துப் பொங்கும் பரிவாலே மங்களாசாஸனம் (பல்லாண்டு பாடுதல்) செய்து வில்லிபுத்தூர் பட்டர்பிரான் "பெரியாழ்வார்" என்ற பெயர் பெற்றுப் போல், பேரருளாளன் பெருங்கருணைக்கு இலக்காகி இவ்வாசார்யர் மஹாசார்யர் ஆனார் என்றால் அது மிகப்பொருந்தும்.

ஸ்வாமி தொட்டயாசார்யர் ஒவ்வோர் ஆண்டும் வையம் கண்ட வைகாசித் திருநாளுக்கு திருக்கச்சி மாநகர்க்குச் செல்வது வழக்கம். ஒருமுறை காஞ்சிப் பேரருளாளனின் பெருமைமிகு விழாவிற்கு செல்லமுடியாது போயிற்று. அதிலும் மூன்றும் திருநாளான கருடவாஹன சேவைக்குச் செல்லமுடியாது போயிற்று. சோளசிம்மபுரத்தில் தக்கான்குளம் எனும் பிரம்மதீர்த்தத்தில் மூன்றும் திருநாளின் வைகறைப் போழ்தில் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பேரருளாளனின் பெரிய திருவடிமேல் சேவையை இழந்த வருத்தத்துடன் அவனையே கட்கண்ணால் காணுதபோது நெஞ்சென்னும் உட்கண்ணால் காண தியானம் செய்து கொண்டிருந்தார். திருக்கச்சி மாநகரில் அயனார் கற்பித்த வைகாசித் திருநாளில் மூன்றும் திருநாள் காலையில் ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் கருடவாகனம் ஏறி வையத்தெவரும் வணங்க அணங்கெழுமாமலை போலே தெய்வப்புள் ஏறிப்புறப்பாடு கண்டருள்பவனாய் மேலைக் கோபுரவாசல் அளவில் எழுந்தருளிவிட்டார்.

கண்டார் வணங்கும் நிலையில் தன் பரம பக்தனைக்காணமல் அவரது தியானம் ஈர்த்த நிலையில் அர்ச்சகர் வாயிலாகத் தான் சோளசிம்மபுரம் தொட்டயாசாரியருக்கு அருள் செய்யக் கருதியதை கூறி வரந்தரு மாமணிவண்ணனாகிய அருளாளர் அப் பொழுதே அக்கோலத்துடன் தொட்டயாசார்யார் முன் ஸேவை சாதித்தார் ஸ்ரீவால்மீகி பகவானது சோகம் சுலோகமாக மாறி ஸ்ரீ ராமாயணமாக வடிவெடுத்தாற் போன்று ஸ்ரீ ஸ்வாமி தொட்டயாசார்யரது நிர்வேதமே (மனத்துயரம்) 'ஸ்ரீ தேவராஜ பஞ்சகம்' என்னும் ஸ்தோத்ர நூலாக ஆயிற்று.

ஸ்ரீ காஞ்சி மாநகரில் வைகாசித் திருநாளின் அருணோதய காலத்தில் சாமரைக் குடைகளுடன் பெரிய திருவடி மேலேறிய பேரருளாளன் முகமலர்ச்சியுடன் தன்னைத் தொழவந்த பெருந்திரளான மக்கட்கூட்டத்தை—சிறுவன் முதல் முதியவர் ஈறாக அனைவரையும் தன் அற்புதக்காட்சியால் மனம் குளிரச் செய்து மகிழ்விக்க மேலைக் கோபுர வாசலளவு பறப்பாடு கண்டருளி நிற்கிறான். அவனைப் புண்ணிய புருஷர்கள், பாக்கியவான்கள் கண்ணாரக்கண்டு கையாரத் தொழுகின்றார்கள் என்று அருள்வதால் அக்காட்சியை இழந்த இவரது கையறுநிலை தெரிவிக்கப்பட்டதாகிறது. ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனைப் பிரிந்து அசோகவனத்தில் இருந்த சீதாப்பிராட்டியும் இராமனைப்பிரிந்த துயரம் மீதூர 'தன்யா: பச்யந்திமோதம் ராமம் ராஜீவலோசனம்"—கமலக் கண்ணனாகிய என் தலைவன் ராமனை அருகிருந்து காண்பவர் பாக்கியவான்கள் என்று கூறியது இங்கு ஒருபுடை ஒப்புநோக்கத் தக்கது.

நம் ஆசார்யர்கள் அருளிச்செய்த ஸ்தோத்திரங்கள் யாவும் ரஹஸ்யத்ரயார்த்தப் பொருளை விவரிப்பதாகவே இருக்கும். திருமந்திரப் பொருளை இந்த தேவராஜ பஞ்சகத்தில் தெளிவாகக் காணலாம்.

மூன்று, ஐந்து, எட்டு எனும் எண் பெயர்களுக்கு வைணவ மரபில் தனிச்சிறப்புண்டு. அர்த்த பஞ்சகம், பரத்வாதி பஞ்சகம் என்பவற்றைக் காண்க. 1. திருமாலே பரம்பொருள்; 2. அவனது உரிமையாய் அடிமையாய் இருப்பது ஆத்மாவின் இயல்பு 3. அவனுக்கு அடிமையாகிய கைங்கர்யம் செய்வதே சிறந்த புருஷார்த்தம்; 4. அஹங்கார மமகாரங்கள் ஆகிய யான் எனது எனும் நிலை விரோதி ஸ்வரூபம்; 5. ஆணவத்தை அழித்து கைங்கர்யஸ்ரீயில் புகுத்துவதற்கு ஸர்வேஸ்வரனின் திருவடியே உபாயம் என்று அர்த்த பஞ்சகம் கூறும். திருமால் வைகுண்டத்திலும், திருப்பாற்கடலிலும், இராம, கிருஷ்ணன் முதலிய அவதார நிலையிலும், நெஞ்சினுள் நினைப்பவர் நெஞ்சிலும், அடியவன் ஏறி அருளப் பண்ணின விக்ரஹவடிவாகிய அர்ச்சை நிலையிலும் இருக்கின்றான் என்பதை பரத்வாதி பஞ்சகம் கூறும்.

திருக்கச்சி மாநகரில் அத்திகிரியின் மீது நின்ற திருமாலோ அர்ச்சாவதார நிலையை மீறி திருக்கச்சிநம்பி எனும் அடியவருடன் உரையாடியவர் என்ற பெருமைக்கு உரியவர். எம்பெருமானுரின் சீடராகிய கூரத்தாழ்வானுக்கு அவர் வேண்டிய வரம் தந்த அருளாளர். அப்பெருமானின் திருநாமமே வரதன் என்பதாம். அருள் புரிகின்றவன் என்பதாம். 'வரதஸ் ஸர்வபூதானும் அத்யாபி பரித்ருஷ்யதே' என்றும் 'அர்த்தி தார்த்த பரிதான தீக்ஷிதன்' எனறும் பெரியோர்களால் போற்றப்பட்ட பெருமையுடையவன். எம்பெருமானுர்க்கு யாதவப் ப்ராகாசரால் நேரவிருந்த இடர் நீக்கி வேடன் வேடுவச்சியின் உருவில் நடுக்காட்டினின்று திருக்கச்சி மாநகர்வரை துணைவந்து காப்பாற்றி மறைந்த அருளாளன் அல்லவா அவன்! அம்முறையில் அவனடியார்க்காக திருக்காட்சி நல்கினதில் வியப்பேதுமில்லை.

நம் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் ப்ரமாதா, ப்ரமாணம், ப்ரமேயம் என்று மூன்று சிறப்புகள் உண்டு. ஆழ்வார்களும் ஆசார்யர்களுமே ப்ரமாதாக்கள். அருளிச் செயலும் ஆரணமும் ப்ரமாணம். ஸ்ரீமந் நாராயணனே ப்ரமேயம்.

'தூயானைத் தூய மறையானை தென்னுலிமேயானை' எனும் பெரிய திருமொழிப் பாசுரத்திற்கு உரை அருளும் பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை 'அல்லாத ஆச்ரயணீரில் இவனுக்கு வாசி (சிறப்பு) வேதப்ரதிபாத்யனுகை; அல்லாதவற்றிற் காட்டில் வேதத்துக்கு ஏற்றம் இவனையே ப்ரதிபாதிக்கை (கூறுவது). ப்ரமாணத்தில் கேட்டுப் போகாமே கண்ணுல் கண்டு அனுபவிக்கலாம்படி ஸுலபனுய் நின்றவன்' என்று அருளிச்செய்வர். மணவாளமாமுனிகளும் 'செய்ய பரத்துவமாய்' என்னும் பாசுரத்தில் 'எய்துமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றுன் பன்னுதமிழ் மாறன் பயின்று' என்றருளிச்செய்தபடி அர்ச்சாவதார எம்பெருமான் தொட்டயாசார் யருக்கு மிக அருள்புரிந்தான், அவனே பரம்பொருள்; அவனே வேத கீதச் சிகரத்தில் விளங்குபவன் அவன் திருவடியை பிரமனும் சிவனும் இந்திரனும் மற்றுமுள்ள தேவர் களும் தங்கள் தலைக்கு ஆபரணமாய்க் கொள்வர். அவன் திருவடியே மக்களுக்குத் தஞ்சம். அவன் திருவடிகளைப் பற்றி நல்வாழ்ச்சி பெறுக என்பான் போல் வேதஸ்வரூபமான கருடாழ்வார் தம் தோளில் திருமாலைச் சுமந்து, அவன் திருவடிகளைத் தம் கைகளில் ஏந்திப் பரம்பொருள் எது என்று அறியாது அலமாப்புறும் மக்கட்கு காட்டுகின்றுர். கண்டாவது ஐயம் தீர்ந்து திருமாலின் திண்கழலைப்பற்றுங்கள் என்று

இரண்டாவது ஸ்லோகம் முதல் நான்காவது சுலோகங்கள் வரை ரஹஸ்யார்த்த விவரணம் செய்கின்றுர் ஸ்வாமி தொட்டயாசார்யர்.

ஸ்ரீவேதாந்த தேசிகரின் சததூஷணிக்கு சண்டமாருதம் என்று வியாக்யானம் செய்தருளாநின்ற தொட்டயாசார்யர் திருக்கச்சி நகர தேவராஜனைக் கார்காலத்து எழும் மழைமுகிலாகத் திருமகளாம் மின்னற்கொடியாளுகத் தன்னை அடைந்தாற்கு அனைத்தும் பொழியும் இன்பமாரியாக நான்முகக் கடவுளின் வேள்விப்பயனுகக் குறிப் பதன் மூலமும் புராண வரலாறுகளையே சுட்டிக் காட்டுகிறுர்.

"ப்ரத்யூஷே வரத: ப்ரஸன்னவதன்" எனத் தொடங்குகின்றது தேவராஜ பஞ்சகம். இம்மஹா பக்தருக்கு இன்னருள் புரிந்தபின்தான் தேவாதிராஜனின் முகம் ஒளிகூடப் பெற்றதெனக் குறிக்கின்றுர்போலும்.

இன்றும் திருக்கச்சி மாநகரில் தேவப் பெருமாள் வைகாசித் திருநாள் காணும் மூன்றும் நாள் அருணேதய காலத்தில் பெரிய திருவடியில் பவனி எழுந்தருளும்போது கோபுர வாசலில் சிறிது போது தாமதித்துச் சோளசிம்மபுரம் தொட்டயாசார்யர் ஸ்வாமிக்கு சேவை சாதிக்கும் ஐதிஹ்யமாக வெண் கொற்றக் குடையால் எம்பெருமானின் திருமுக மண்டலத்தை மறைத்து (அங்கே மறைந்து சோளஸிம்மபுரத்தில் காட்சி தந்த ருளுமுகமாக) சுற்பூர ஆரத்தி கண்டருள்வது அனைவரும் அறிந்ததே.

இந்த வைபவத்தை விளக்குவதாய் சோளசிம்மபுரத்திலும் வைகாசி மாதத்தில் தேவப்பெருமாள் கருடவாகனம் கண்டருளும் நாளில், ஸ்ரீ தக்கான் கருடவாகனத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவதும், தொட்டயாசார்யர் ஸ்வாமிக்கு திருப்பரிவட்டம் திருமாலை ஸ்ரீசடகோபன் ஸாதிக்க மங்களாசாஸனம் நடப்பதை இன்றும் காணலாம்.

PHONE : 653365, 653566
653466

GRAMS : PRESSINGS

With Best Compliments From :

MADRAS RADIATORS AND PRESSING LIMITED

129, AVADI ROAD, AMBATTUR,
MADRAS - 600 098.

Manufacturers of deep drawn sheet metal Components as original equipment for

AUTOMOBILES, TRACTORS, POWER TILLERS,
EARTHMOVING EQUIPMENT AND
ALLIED INDUSTRIES.

PRABHU AND COMPANY

"ROSEWOOD OFFICES"

132, Nungambakkam High Road,

MADRAS - 600 034.

Telegram : "WINDOWKING" Telephone : 476572
478633

Selling Agents in South India for :

"AGEW" Steel Windows - with Solid fused welded joints adopting Flash Butt welding as per ISS. "AGEW" Steel Door Frames. "P. P. Industries" Aluminium Sandy Louvres.

Phone : { Office : 431960
Resi : 432342

National Asbestos Cement Products

MANUFACTURERS OF A. C. PIPES

83, M. K. N. Road,
Alandur, Madras-600 032.

With best compliments from

ASSAM BENGAL ROADWAYS LTD.,
104, Armenian Street,
MADRAS - 600 001

திருப்புட்குழி



புட்குழியெம்போரேறு

Compliments from
SRI T. E. VIJAYARAGHAVACHARIAR
Kancheepuram

ஸ்ரீ :

அருளிச்செயல்

ஸ்ரீ. உ. வே. T. C. A. ஸ்ரீனிவாஸவரதன், I. A. S. (RETD.,)
(Former Home Secretary to the Government of India)

உலகத்தில் பரவியுள்ள பல மதங்கள் வெவ்வேறு நூல்களை தம் மூலநூலாக மதித்துப் பாராட்டி, அவற்றை அடிப்படையாக வெவ்வேறு கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் வாழும் வழிகளாக கொண்டிருக்கின்றன. எம்பெருமானர் தர்சனத்தை சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் வடமொழி, தென்மொழி வேதங்களை, உபய வேதாந்த மெனப்படும் திரளை, தம்முடைய நிதியாகக் கொண்டாடி வருகிறார்கள். பல மதங்களில், ஊர்வலங்கள், கூட்டங்கூடி தொழுதல் முதலிய வழக்கங்களிருந்தாலும், யாவரும் தங்கள் மூல மதநூல்களை தேவாலய ஊர்வலங்களில், கூட்டமாய் முறையாய் யாவருக்கும் கேட்கும்படி பாராயணம் செய்வதென்ற வழக்கத்தை கடைப்பிடித்து வருவதாகத் தெரியவில்லை. ஆனல் வடமொழி வேதங்களை பாராட்டும் நாமெல்லோரும், காஷ்மீரத்திலிருந்து குமரிவரை, த்வாரகையிலிருந்து காமரூபம்வரை, பாரதமெங்கும், வேதபாராயணமென்ற வழக்கத்தை இன்றும் காண்கிறோம். வேதகோஷம் வைதிக மதத்தின் மாருத சின்னமாய் இருந்து வருகிறது. வடமொழி வேதத்திற்கொப்ப தென்மொழி வேதபாராயணம் தென்னாட்டில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மூலம், ப்ரபலமாக நடத்தப்படுகிறது. இந்த வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது? ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்திலிருந்து, அவர்தம் ஏற்பாட்டினல், ஆயிரம் வருஷங்களுக்கு மேலாகவும் பிரபலமாயிற்று என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

தென்மொழி வேதம், தமிழ் வேதமெனப்படுவது எது? ஆண்டாள், மதுரகவி உட்பட ஆழ்வார்கள் பன்னிருவருடைய நாலாயிரம் பாடல்களைத்தான் ஸ்ரீவைஷ்ணவர்கள், எம்பெருமானர் தர்சனத்தை சேர்ந்தவர்கள், தென்மொழி வேதமென பாராட்டுகின்றனர். அந்த நாலாயிரம் பாடல்களை, திவ்யபிரந்தமென்றும், நாதமுனிகள் காலந் தொடங்கி, அருளிச்செயலென்றும், வடமொழி வேதங்களைக் கூட்டி, உபய வேதாந்த மென்றும் வழங்குகிறார்கள். "ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி... செய்ய மறைதன்னுடனே சேர்ந்து" என்று மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் கூறின வாழ்த்து, தென்னாசார்ய சம்பிரதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு வேதவாக்கு.

வைதிகர்கள் பல நூல்களை தினப்படி பாராயணம் செய்கிறார்கள். வால்மீகிரிஷி இயற்றிய ஸ்ரீராமாயணம், வ்யாஸரிஷியின் பாரதத்திலிருந்து ஸ்ரீமத் பகவத்கீதை முதலியவைகளும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் போன்ற துதிநூல்களும் இப்படி பாராயணம் செய்யப்படுகின்றன. அவற்றை ஆசார்யன்மூலம் முறையே காலக்ஷேபம் செய்வ தென்றும் வழக்கமிருந்து வருகிறது. ஆனால் இவற்றை, சந்தை சொல்லி, உருப் போட்டு மனப்பாடமாக்கி, அவற்றை ஓதும் முறையும், க்ரமமும் ஸ்வரமுமறிந்து, சேவிப் பது, கோஷ்டியாய் தேவாலய ஊர்வலங்களிலும், கோயில்களிலும் தினப்படியாக வும் விசேஷங்களிலும் நாற்திசையிலும் யாவரும் கேட்கும்படி, உரக்க ஸேவிப்பதென்பது இந்த உபய வேதாந்தங்களுக்குமட்டும் ஒரு பெருமை தென்னாட்டில் முக்கியமாக ஏற்பட் டிருக்கிறது. இப்பெருமைதான், தென்னாட்டு முறையில் நடக்கும் விஷ்ணு கோயில் களின் தனிப்பெருமை. இப்பெருமை குறையாமல் ஆயிரமாண்டுகளாக நடந்து வரும் தொடர்பு விடாமல் நடத்திவரவேண்டிய பொறுப்பு பெரிய பொறுப்பு; அதை நிறைவேற்றி வைப்பவர்களெல்லோரும் போற்றுதற்குரியவர்கள்.

இந்தத் தொடர்பு தென்னாட்டில் தமிழகத்தில் சிறப்பாக அமைந்திருந்தாலும், தமிழ் அறியாத ப்ராந்தியங்களிலும், ஸ்ரீ வைஷ்ணவக் கோயில்களிலும், திருமாளிகைகளிலும் பரவியிருக்கின்றன. தெலுங்கு, கன்னட தேசங்களில் அந்தந்த மொழிகளால் அருளிச் செயல்களை மனப்பாடமாக்கி சேவிப்பது ஒருபுறம். மார்வாடம், மத்யபிரதேசங்கள் போன்ற ஹிந்தி பேசுமிடங்களிலும், இந்த தொடர்பைக்காணமுடியும். மத்யப்ரதேசத்தில் ரீவா நகரத்தில், நூறு நூற்றைம்பது வருஷங்களுக்குள் ஏற்படுத்திய ஒரு திருக்கோயி லில் இன்றும், ஹிந்திமூலம் அருளிச்செயலை அதிகரித்து தமிழே தெரியாவிட்டாலும், பிரதிதினம் அருளிச்செயல்களை சேவிப்பதை கேட்கும்போது, நம்மாழ்வார் "எங்களை சொல்லினுமின்பம் பயக்குமே' என்று(திருவா 7-9-11) இத்தகையோரைத்தான் நினைத்து கூறினரென்று தோன்றும். அருளிச்செயல் எத்தகைய செல்வம்? உபயவேதாந்த ப்ரவீணர்களுக்கொரு திலகமான வேதாந்த தேசிகர் 'தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என அறுதியிட்டார். உபயவேதாந்தங் களையும் முறையே கற்றுணர்ந்தால்தான் வேதாந்த நுட்பங்கள் தெளிவுறுமென்பது அவருடைய முக்கிய கருத்து. "வேதமனைத்துக்கும் வித்தாகும்" என்று வேதப்பிரான் பட்டர் திருப்பாவையைப்பற்றி கூறினர். இவையெல்லாம் வடமொழி தமிழ் வேதங்களை, கற்றவல்லோர்களின் பேச்சு. நம்போன்றவர்கள் ஆழ்வார்களின் ஈரச்சொல் கேட்டுநெஞ்


சுருகி, நீர்ப்பண்டமாகி, மேலும் மேலும் கேட்க ஆசைத்தான்படலாம். "காப்பாருமில்லை கடல்வண்ணா உன்னை" (பெரியாழ்வார் 2-3-1) என்று பரமனிடம் காட்டிய பரிவு; தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுறைக்குமேல், என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்" (பெரியாழ்வார், 4-10-2) என்று அபார நம்பிக்கையும்; "எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றேமே யாவோமுனக்கே நாமாட்செய்வோம், மற்றைநங்காமங்கள் மாற்று" என்று வேதாந்தசாரத்தை சொன்ன ஆண்டாளுடைய ப்ரேமத்தை என்ன சொல்லுவது? "கள்ள மாதவா கேசவா உன் முகத்தன கண்களல்லவே" (நா. தி 2-5) என்றும் "ஏலாப் பொய்களுரைப்பான்" என்றும் (நா. தி. 14-3) "தருமமறியாக்குறும்பன்" என்றும் (நா. தி. 14-6) சொந்தத்தோடு பூசலிடுகிறாள். குலசேகராழ்வார் "வண்ணச் செஞ்சிறுகை விரலனைத்தும் வாரிவாய்க் கொண்ட வடிசிலின் மிச்சில் உண்ணப்பெற் றிலேன்" என்றும். (பெரு. தி 7-6) "வா போகுவா இன்னம் வந்தொருகால் கண்டுபோ" (பெரு தி. 9-4) என்றும் நம்மை கலக்குகிறார். ஒவ்வொருவரும் நெஞ்சத்தை நெகிழ வைக்கும்போது யாரை குறிப்பாக சொல்வது. நம்மாழ்வாரோ ப்ரபன்ன கூடஸ்தர். அவருடைய கிருபையால்தான் அருளிச்செயல் முழுவதும் ஸ்ரீமந் நாதமுனிகள் மூலமாகத் திரும்பக்கிடைத்தன. அவர் பாடத்தொடங்கின உடனே "பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும், இந்நின்ற நீர்மையினியாமுறுமை", என்று விண்ணப்பம் செய்தார். அவருடைய திருவாய்மொழிக்கு பகவத் விஷயமென்ற தனிச்சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. அவரோ பழுத்தஞானி; 'மயர்வறமதி நலம்" குடிகொண்டபூர்ணர்; எனதாவியுள் கலந்த பெருநல்லு தவிக்கைமாறு, எனதாவிதந்தொழிந்தேன்" என்று ஒருவாறு சுயசரிதையை ஆரம்பித்து அதே மூச்சில் ஈற்றடியில் 'எனதாவியார் யானோ தந்தீ கொண்டாக்கினையே' (திருவாய் 2-3-4) என்று ஸ்வரூப ஞானத்தெளிவுரைக்கிறார். மண்ணைத்துழாவி "வாமனன் மண்ணிது" வென்னும் (4-4-1) "தனக்கேயாகவெனைக் கொள்ளும்" என்றும் (2-9-4) கூறின மனப்பக்குவமுடையவர். இருந்தாலும் ரிஷிகளைப்போலன்றி, "அருளின பக்தியால் உள்கலங்கி சோகித்து மூவாறு மாசம் மோஹித்து வருந்தி ஏங்கித் தாழ்ந்தசொற்களாலே நூற்கிற இவர்" ஆவர் ஆழ்வார். (ஆசார்யஹ்ருதயம் முதல் ப்ரகரணம் சூத்திரம் 58). ஆசார்ய ஹ்ருதயத்தில் ஒவ்வொரு சூத்திரத்திலும்

ஒவ்வொரு பதத்திற்கும் ப்ரமாணமும் தனி; கருத்தும் தனி. இந்த மஹா வாக்யத்தை விவரிக்க இடமில்லை. ஆழ்வார் மூவாறு மாதங்கள் மோகித்த விடங்களைப் பார்த்தால் இவருடைய திருவுள்ளத்தை எவ்வாறு அறியமுடியும்? முதல் தடவை "எத்திறம் உரலினேடிணைந்திருந்தேங்கிய வெளிவே" என்று (திரு 1-3-1) கண்ணிநுண் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய கண்ணனின் ஏக்கத்தை நினைத்து, மறுதரம் பிறந்த வாறும் வளர்ந்தவாறும்" என்று (திரு 5-10-1) க்ருஷ்ணவதார ப்ரஸ்தாவம் வந்த போது, மூன்றாவது தடவை "கண்கள் சிவந்து பெரியவாய்" என்று (திரு 8-8-1) அவயவங்கள் ஒரு நிமிஷத்தில் வண்ணம் மாறும் வாய்ப்பைக் கண்டு, இது எப்படியோவென்று ஒவ்வொரு தடவையும் ஆறாறு மாதங்கள் மோகித்துக் கிடந்தா ரென்று தொன்மரபு. இத்தகைய திருவுள்ளத்தை ஆழங்காலிட கூரத்தாழ்வான் தவச் செல்வர் பட்டருக்கே முடியவில்லையென்றும் சொல்வர். "கங்குலும் பகலும்" என்று துவங்கும் திருவாய்மொழி (7-2) வ்யாக்யான ப்ரவேசம் ஈடு; "பட்டர் இத்திருவாய் மொழியருளிச்செய்யும் போதெல்லாம் 'ஆழ்வார்க்கு ஓடுகிற தசையறியாதே அவரு டைய பாவ வ்ருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாம் என் சொல்லுகிறோம்? என்று திருமுடி யிலே கையை வைத்துக் கொண்டிருப்பார்" ஆயிரமாண்டுகளாக ஆழ்வார்களின் அருளிச்செயல் செல்வத்தைக் கொடுத்தவர்கள் இன்றும அனுபவித்து வருகிறார்கள்.

இச்செல்வம் யாருக்கு சொந்தம்? யாருடைய சொத்து? இவற்றின் அதிகாரிகள் யார்? முறையே மனப்பாடம் செய்து நாலாயிரத்தையும் சொல்ல வல்லவர் இவற்றின் பெரிய பங்காளிகள். ஆனால் மனப்பாடம் மட்டும் போதாது. மறந்தும் போகும்; மறக் காவிடினும் நிறைக்காது, தங்காது. "சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே, மதிட் கச்சியூரகமே.....பேராயிரமும் பிதற்றி பெருந்தெருவே ஊராரிகழிலுமூராதொழியேன் நான்" என்று கலியன் சிறிய திருமடலில் அருளிச்செயல் செல்வம் மறவாது குறை யின்றி வளர வழி சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு திவ்ய தேசத்திலும், ஒன்றையும் விடாமல் "ஊராய எல்லாம் ஒழியாமே" நடுத்தெருவிலே பேரருளாளன் முன்னே ஆயிர மாயிரமாயிருக்கும் திவ்ய ப்ரபந்தங்களை சேவித்து (திருவாய்மொழி அமலனாதிபிரான் முதலிய ஸ்ரீஸூக்திகளை வீதிகளில் சேவிப்பதில்லை) மகிழ்வித்துதான் இந்த சொத்தை காப்பாற்றி வைத்தனர். இந்த சேவை முறையின் ஒரு முக்கிய சிறப்பையும்

ஒவ்வொரு ஆழ்வாரும் கூறியுள்ளனர். அருளிச்செயலில் முதல் ப்ரபந்தம் திருப் பல்லாண்டு. அதிலேயே பெரியாழ்வார் "சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே" என்று முடித்து இயல் கோஷ்டியை குறிப்பிட்டார். நம்மாழ்வார் ஸ்பஷ்டமாக தெளிவாகக் கூறுகிறார் (திரு 2-3-1)."ஆயிரத்துள் இவை பத்துமுடன்பாடி குழாங்களாயடியீருடன் கூடி நின்றூடுமினே" யென்று. பெருந்திரளாய் பெரிய கோஷ்டியாய் இயல் சேவிக்கப் படுமானால். அருளிச்செயல் செல்வம் தழைக்கும், மணக்கும், பெருகும்.

அருளிச்செயலை கற்றவர்கள் மட்டும்தான் உரிமை கொள்ளலாமென்பதில்லை. திருமழிசையாழ்வார் தம்முடைய பொழுதுபோக்கைப் பற்றி விவரமாக தம்முடைய நான்முகன் திருவந்தாதியில் (63) "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" என்று தெரிவிக்கும்போது ஒரு பாசுரம் கூட தெரியாத பாமரர்களுக்கு கேட்டு மகிழ்வதில் என்ன தடை யிருக்கக்கூடும். கேட்க சௌகர்யங்கள் மட்டும் ஏற்படவேண்டும். இயலோசை கேட்க கேட்க தன்னைத்தானே சுவைக்க வைக்கும். கேட்பதில் கொண்ட ஆசை—ஜிஞ்ஞாசை தானே அறிவுக்கு, ஞானத்திற்கு திறவுகோல். ஆதலால் அருளிச்செயல் கைங்கர்யம் பல்லாண்டு பல்லாயிரமாண்டுகள் வளரட்டும்.



ஊழிதொறும் ஊழிதொறும் உலகமுய்ய உம்பர்களும் கேட்டுய்ய அன்பினாலே வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன் மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன் கோழியர்கோன் தொண்டர் துகள் பாணன் கோதை குலமுனிவன் கூறிய நூலோதி வீதி வாழியென வருந்திரளை வாழ்த்துவார் தம் மலரடி என் சென்னிக்கு மலர்ந்தபூவே.

JARI TRADING AGENCY
&
K.S. RAJAPPA & SONS

Distributors and Dealers for

Hindustan CIBA - Geigy Ltd. Bombay.
Chander Dyechem Industries, ,,
The Atul Products & Bayer India Ltd, ,,

Sole Agent for **"MOTORCYCLE" and "SHIVAJI" brand Gold thread**

205-A, GANDHI ROAD, KANCHIPURAM
[Phone : Off. 2611 : : Res. 2125]

With best compliments from :

Poleyne General Industries Pvt. Ltd.

MADRAS

ஸ்ரீ பேரருளாளன் அருளிச்செயல் கைங்கர்ய சபா

9, கிழக்கு மாட வீதி, காஞ்சீபுரம்-631 503

மாதச் சாந்தா ரூ 5/

ஆயுள் சந்தா ரூ. 500/

With best compliments from

GEM STITCHERS

Quality Stitching and Printing of
HDPE BAGS



Plot No. 1007, 78th St,
12th Sector, K. K. NAGAR,
MADRAS - 600078

PHONE : 88754

P. M. SUBRAMANIAM & CO.,

28, Woods Road, Mount Road,
MADRAS - 600002.

CAR LINERS & UPHOLSTERERS
BUCKET SEAT SPECIALISTS

Sofa Upholsterers & Variety
Curtains Etc.

Prop: C. Venkateswar Rao.

THE HAPPY CYCLE OF TRUST

Your Trust Helps Us Grow, Our Growth Increases Your Trust

Yes, Sundaram Finance is surging ahead with your support-with its own funds (Capital and Reserves) increasing from Rs. 158 lakhs in 1972 to Rs. 870 lakhs in 1984. What's more, the assets of the company as at 31st December, 1984 exceeded Rs. 130 crores.

The Secret Is 'Service'

The reason for our phenomenal growth is not difficult to explain. The corporate policy of the company has always been service-oriented, which means, when the customer comes to Sundaram Finance, he gets not just hire-purchase finance or leasing facilities but service throughout the period of contract.

The Trust Increases

With the kind of service we offer, it's not surprising that the number of customers has grown. Today, Sundaram Finance has on its rolls 9000 customers and over 70000 depositors.

Sundaram Finance by entering into equipment leasing will be participating in the development of a number of industries, thus contributing to industrial production.

THE PEOPLE TO TRUST IN HIRE PURCHASE AND EQUIPMENT LEASING

Sundaram Finance Limited

Regd Office : 180, Mount Road, Madras-600 006
Central Office : 190, Mount Road, Madras-600 006

Phone: P. P. 77363

S. Raghunathan., B E.,

SURVEYOR [S. L. A. No. 6860]

A1, 3rd Floor,
Parsan Road Complex
265, Lloyds Road,
MADRAS - 600 086.

Phone : 565540

SELVAM & CO.,

Glass, Frames, Mirrors, Plywood
& Decorative

Laminated Sheets Merchants
[Wholesale & Retail]

194, Devaraja Mudali St,
Madras - 600 003.

செல்வம் அண்டு கோ

கண்ணாடி, சட்டம், சன்மைகா
வியாபாரம்

194, தேவராஜ முதலி தெரு,
சென்னை - 600 003

With best compliments from :

SESHADRI ASSOCIATES

30/1, NORTH BOAG ROAD,
P. B. NO. 4976, T. NAGAR,
MADRAS - 600017

Phone : 447122 Cable : SESHMEDIA

Branches : TRICHY - TRIVANDRUM & HYDERABAD

Marketing Agents - SOUTH INDIA
Windsor Foods Ltd, BARODA
Makers of Windsor Biscuits

ஸ்ரீ :

ஸ்ரீ பேருளாளன் அருளிச்செயல் கைங்கர்ய சபை தோன்ற முதற்காரணமான பேருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளிலும், ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளிலும், தலையல்லால் கைம்மாறிலோம்.

**

மங்களாசாஸனங்கள் மலர்ந்தருளிய மடாதிபதி களுக்கும், விஷயதானங்கள் அளித்தருளிய வித்வான்களுக்கும், மலரினைச் சீரிய முறையில் வெளிக் கொணர உதவிய ஸ்ரீ T.C.A. ராமானுஜம், அம்பத்தூர் டிவைன் சயின்ஸ் டிரஸ்டு மற்றும் ஸ்ரீ M.A. வெங்கடகிருஷ்ணன் ஸ்ரீ T.A. அக்காரக்கனி அனந்தாழ்வான், ஸ்ரீ T. A. பாஷ்யம், ஸ்ரீ D. V. பார்த்தசாரதி, ஆகியோர்களுக்கும் அடியோங்களது க்ருதஜ்ஞதையை தெரிவித்துக் கொள்கிறேம்.


மலருக்கு நன்கொடை அளித்து உதவியவர்களுக்கும், விளம்பரங்கள் தந்து ஆதரித்தவர்களுக்கும், மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டு, வெளியிட பேருதவி புரிந்த

டிசைன் பிரிண்டர்ஸ், சென்னை-1
அன்பு அச்சகம், காஞ்சீபுரம்-3
குரு அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5

ஆகியோருக்கும், எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

ஸ்ரீ பேருளாளன் அருளிச்செயல் கைங்கர்ய சபை
காஞ்சீபுரம்-631 503.

With best compliments from



E. S. MYDEEN & CO.

KUMBAKONAM

WITH BEST COMPLIMENTS FROM

TEH ENGLISH ELECTRIC COMPANY OF INDIA LTD.

Head Office :

PALLAVARAM, MADRAS-600 043.

Works :

MADRAS & HOSUR

BOMBAY CALCUTTA NEW DELHI
LUCKNOW MADRAS BANGALORE

WRAPPER PRINTED BY :
GURU ACHAGAM, TRIPLICANE, MADRAS-600 005. PHONE : 844371